உதயன்

www.onlineuthayan.com

60: பக்கங்கள் சுடர் 27 கதிர் 281 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 17 ஞாயிற்றுக்கிழமை (02/09/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 50.00



# மன்மோகன் சிங்கை சந்திக்கும் மஹிந்தவின் முயற்சி தோல்வி

## ஏமாற்றத்துடன் ஈரானிலிருந்து நேற்று நாடு திரும்பினார்

கொழும்பு,செப். 2

அணிசேரா நாடுகளின் தலைவர்களின் இரண்டு நாள் உச்சி மாநாட்டில் பங்கேற்க ஈரான் சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அங்கு இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கைச் சந்தித்துப் பேச மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிவடைந்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. மன்மோகன் சிங்கை ஜனாதிபதி மஹிந்த சந்தித்துப் பேசுவதற்கான அனுமதியை புதுடில்லி வழங்காமையினால் இந்தச் சந்திப்பு இடம்பெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியப் பிரதமரைச் சந்தித்துப் பேசும் பெரும் எதிர்பார்ப்புடன் இருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அது முடியாமல் போனதால் ஏமாற்றத்துடன் நேற்றுக் காலை கொழும்பு திரும்பியுள்ளார்.

இரண்டு நாள் உச்சி மாநாட்டுக்காக ஈரான் சென்றிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று அதிகாலை கொழும்பை வந்தடைந்தார்.

பார்க்க பக்கம் 4



**1**

வல்லிபுரத் தானே எப்படியாவது என்னை கொண்டு போய்ச் சேர்த்துப்போடு சிற்றிசன் கிடைச்சா உனக்கு பறவைக் காவடி எடுக்கிறன்.

சூரியகாந்தி

**12**

போரால் இழந்தவற்றை திரும்பப்பெற வேண்டும் என்ற சிந்தனையிலேயே மன நோயாளிகளாக மாற்றப்பட்டுள்ளனர்.

சூரியகாந்தி

**17**

அதிகாரத்தை கைப்பற்றிக் கொள்ள பெரும்பான்மை அரசியல் வாதிகள் சிறுபான்மையினரின் வாழ்வியல் உரிமைகளை வழங்க மறுத்தனர்.

சூரியகாந்தி

**27**

தமிழரின் உரிமைப் போராட்டம் புதிய திருப்பு முனைக்குள் சென்றுள்ளதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

சூரியகாந்தி

## புழல் சிறைக் கூண்டுக்குள் ஈழ மைந்தன் செந்தூரன்

### அஹிம்சைப் போராட்டத்துக்குப் 'பரிசு'



சென்னை, செப். 2

தமிழ் நாடு, பூந்தமல்லி சிறப்பு முகாமில் உண்ணாவிரதம் இருந்த இலங்கை அகதி செந்தூரன் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு திடீரென கைது செய்யப்பட்டார். தற்கொலைக்கு முயன்றார் என அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. தமிழக அரசின் இந்த அநீதியான நடவடிக்கைக்கு தமிழகக் கட்சிகள் பலவும் கண்டனம் தெரிவித்துள்ளன.

பூந்தமல்லி சிறப்பு முகாமில் உள்ளவர்களை விடுவிக்கக் கோரி இலங்கைத் தமிழர் செந்தூரன் கடந்த 6ஆம் திகதி முதல் உண்ணாவிரதம் இருந்து வருகிறார். அவரது நிலை கவலைக்கிடமானது. இவர் கடந்த மாதம் 6ஆம் திகதி உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினார். கடந்த 25ஆம் திகதி இவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மீண்டும் 27ஆம் திகதி முகாமில் அடைக்கப்பட்டார். எனினும் தனது உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடர்ந்த பார்க்க பக்கம் 4 புழல்

## இலங்கை இராணுவ அதிகாரிகளை உடன் திருப்பி அனுப்ப நடவடிக்கை

### மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் தெரிவிப்பு

சென்னை,செப். 2

வெலிங்டன் இராணுவ மையத்தில் பயிற்சி பெறும் இலங்கை இராணுவ அதிகாரிகளை உடனடியாகத் திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இந்திய மத்திய கப்பல் துறை அமைச்சர் ஜி.கே. வாசன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் பயிற்சி பெறும் இலங்கை இராணுவ அதிகாரிகளைத் திருப்பி அனுப்ப வேண்டுமென்று அனைத்துக் கட்சி தலைவர்களும் இந்திய மத்திய அரசை வற்புறுத்தி வருகின்றனர். மத்திய அரசின் இந்த நடவடிக்கைக்கு எதிராக போராட்டங்களும் நடந்து வருகின்றன.

இலங்கை இராணுவ அதிகாரிகள் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று மத்திய அமைச்சர் நாராயணசாமி ஏற்கனவே கூறியிருந்தார்.

இந்த நிலையில் மத்திய கப்பல் துறை அமைச்சர் ஜி. கே. வாசன் நேற்றுச் சென்னையில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

தமிழ்நாட்டில் பயிற்சி பெறும் இலங்கை இராணுவ

பார்க்க பக்கம் 4

## வீட்டார் சந்நிதி சென்றவேளை கதவு பிரித்து நகைகள் திருட்டு

### அச்சுவேலியில் சம்பவம்

யாழ்ப்பாணம், செப்.2

வீட்டுக்காரர் செல்வச் சந்நிதி கோயிலுக்குச் சென்றிருந்த வேளை வீட்டுக் கதவு உடைத்து உள்நுழைந்த திருடர்கள் 2 லட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளையும் 20 ஆயிரம் ரூபா பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர் என்று யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அச்சுவேலி ராஜ வீதி தோப்புப் பிரதேசத்தை அண்மித்துள்ள வீடு ஒன்றில் நேற்று முன்தினம் இந்தத் திருட்டு சம்பவம் இடம்பெற்றது என பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பார்க்க பக்கம் 4

## போர்க் காலத்தில் சுலபமாக ஆயுதம் வாங்கினர் புலிகள்

### சவேந்திர சில்வா கூறுகிறார்

ஜெனிவா,செப். 2

போர் இடம்பெற்ற காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் மிகச் சுலபமாக ஆயுதங்களைக் கொள்வனவு செய்தனர் என்று ஐ.நாவுக்கான இலங்கை பிரதி வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளிடமிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள்

பார்க்க பக்கம் 4

## வறட்சிக்கான நிவாரணத்தில் வடக்கைக் கைவிட்டது அரசு

யாழ்ப்பாணம், செப்.2

வடக்கு மாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களிலும் கடும் வறட்சியினால் மக்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்த நிலையில் வட மாகாணத்தை தவிர்த்து ஏனைய மாவட்டங்களுக்கு வறட்சி நிவாரணத்துக்கு 250 கோடி ரூபா தேவை என மதிப்பிட்டு அரசு ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு அவசர கால நிதியுதவிக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

பார்க்க பக்கம் 4

## சர்வதேசப் பங்களிப்பை பலவீனமாக்கவே கிழக்குத் தேர்தலை நடத்துகிறது அரசு

### திருமலையில் சம்பந்தன் குற்றச்சாட்டு

திருகோணமலை,செப் 2

ஒருமித்த நாட்டினுள் அதிக பட்சம் அதிகாரப் பகிர்வுடன் கூடிய அரசியல் தீர்வு ஒன்றை முன்வைக்க வேண்டும் என்ற சர்வதேச சமூகத்தின் கோரிக்கைக்கு பதில் சொல்ல வேண்டிய நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டுள்ளது. இந்த நிலையில் சர்வதேச சமூகத்தின் பங்களிப்பை பலவீனப்படுத்தவே இலங்கை அரசு கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலை அவசரமாக நடத்துகின்றது.

கிழக்குத் தமிழ் மக்கள் அரசின் இந்தத் தந்திரோபாயத்துக்குப் பலியாகிவிடக் கூடாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

மூதூர்ப் பிரதேசத்தின் உப்பூறல், பள்ளிக்குடியிருப்பு, லிங்கபுரம், ஆதியம்மன் கோயிலடி, கங்குவேலி, மேன்காமம் உட்பட பல பகுதிகளில் இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபைக்கான

பார்க்க பக்கம் 4

## அபிவிருத்தி இல்லை: நெடுந்தீவு உப தலைவர் பதவி விலகினார்

யாழ்ப்பாணம், செப்.2

நெடுந்தீவு பிரதேச சபையின் உப தலைவர் எஸ். கோபாலசிங்கம் தனது உப தலைவர் பதவியில் இருந்தும், உறுப்பினர் பதவியில் இருந்தும் ராஜினாமாச் செய்வதாகப் பிரதேச சபைத் தலைவருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று முதலாம் திகதி சனிக்கிழமை முதல்

பார்க்க பக்கம் 4

## யாழ். இளைஞர்கள் இருவர் சென்னையில் நேற்றுக் கைது

சென்னை,செப். 2

கொழும்பு விமான நிலையத்தில் இருந்து சென்னை சென்றடைந்த எயார் இந்தியா விமானத்தில் பயணம் செய்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர்கள் இருவரிடம் இருந்து 530 கிராம் தங்க நகைகள் கைப்பற்றப்பட்டுள்ளது. இதனையடுத்துச் சென்னை விமான நிலையத்தில் வைத்து இந்த இளைஞர்கள் இருவரையும் பொலிஸார் கைது

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மக்' மிதிவெடி அகற்றலில்

# 'டனிஷ்' பணியாளர்கள் குறித்து அதிக கவனம்

யாழ்ப்பாணம்,செப் 2

'மக்' நிறுவனம் யாழ்ப்பாணத்தில் மிதிவெடி அகற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது அதற்கு தேவையான பணியாளர்களை உள்ளீர்க்கும் நடவடிக்கைகளின் போது கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தில் பணிபுரிந்தவர்களுக்கும் முன்னுரிமை வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்று 'மக்' நிறுவன பிரதிநிதிகள் நேற்றையதினம் தெரிவித்ததாக யாழ். மாவட்ட மிதிவெடி செயற்பாட்டலுவலர் வ.முருகதாஸ் தெரிவித்தார்.

'மக்' நிறுவனம் மிதிவெடி அகற்றல் செயற்பாடுகளில் முன்னர் பணியாற்றிய ஊழியர்களை இணைத்துக் கொள்வதற்கு சம்மதித்திருப்பதாக நேற்றையதினம் 'உதயனில்' செய்தி வெளியாகியிருந்தது.

இதனடிப்படையில் பலர் நேற்றையதினம் 'மக்' நிறுவனத்துக்குச் சென்று தங்களைக் கட்டாயப் பணியில் இணைத்துக்கொள்ள வேண்டும் என்று முரண்பட்டுள்ளனர்.

'மக்' நிறுவனம் மிதிவெடி அகற்றல் செயற்பாடுகளில் முன்னர் பணியாற்றிய ஊழியர்களை முன்னுரிமை அடிப்படையில் இணைத்துக் கொள்வது குறித்துக் கவனம் செலுத்தப்படும் என்றே கலந்துரையாடலில் தெரிவித்ததாக வ.முருகதாஸ் தெரிவித்தார்.

மேலும் இந்த மாதம் 13 ஆம் திகதிக்கு பின்னரே கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கைகளில் பொறியியல் வளத்தை பாவிப்பதா அல்லது மனித வலுவைப் பாவிப்பதா என்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்று அவர் மேலும் கூறினார். (த-5)

# வடக்கு கிழக்கு இணைந்தால் தமிழர் தனித்துவம் பேணப்படும்

மட்டக்களப்பில் சுரேஷ் எம்.பி.

கொழும்பு, செப்.2

வடக்கும் கிழக்கும் இணைக்கப்படுமாக இருந்தால் தமிழ் மக்கள் தமது தலைவிதியை தாமே நிர்ணயிக்கக் கூடிய நிலை ஏற்படும். அத்துடன் தமிழர்களது தனித்துவமும் பாதுகாக்கப்படும். அதன் காரணமாகவே வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட வேண்டுமென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரி வருகிறது. இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமசந்திரன்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலை முன்னிட்டு மட்டக்களப்பு கல்லடியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஒரு நாட்டில் மக்களின் பலத்துடன் தான் ஓர் அரசு தெரிவு செய்யப்பட்டு, அதற்கென அமைச்சரவையும் உருவாக்கப்படுன்றது. அந்த அமைச்சரவைக்குத்தான் அதிகாரங்கள் போய்ச்சேரும். மாகாணத்தில் முதலமைச்சரும் அங்கிருக்கும் ஏனைய அமைச்சர்களும்தான் தமக்கிருக்கும் அதிகாரங்களைக் கொண்டு நிர்வாகத்தை நடத்துவார்கள். இதுதான் வழிமுறை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கிழக்கு மாகாணத்தில் ஆட்சியமைக்கும். அப்படி ஆட்சியமைத்தால் அபிவிருத்தியே எமது நோக்கமாக இருக்கும். இருக்கக் கூடிய அதிகாரங்களுக்குள் மக்களுக்கு என்னென்ன செய்ய முடியுமோ அதனைச் செய்தே தீருவோம். அதிகாரங்களை மேலும் மேலும் பெற்றுக் கொள்வதற்கு நீதிமன்றத்திலும் வீதிகளில் இறங்கியும் போராடுவோம்.

வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட்டால் தமிழ் பேசும் மக்கள் தமது தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கக்கூடிய சூழல் ஏற்படும். அத்துடன் அவர்களுடைய தனித்துவம் பாதுகாக்கப்படும். அதனால் தான் நாங்கள் ஒரே நிர்வாக அரசியல் அலகாக வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட வேண்டும்என்று கேட்கின்றோம்.

இலங்கை அரசு ஒன்பது மாகாணங்களை ஏழு மாகாணங்களாகக் குறைக்க இருக்கிறது. அந்த ஏழு மாகாணங்களின் அடிப்படை என்னவென்றால் கடலுடன் தொடர்பு இருக்க வேண்டும். அதன் அடிப்படையில் வடமத்திய மாகாணத்திற்கு கடலுடன் தொடர்பு இல்லை. வெலிஓயாவுடன் அனுராதபுரம், பொலன்னறுவை போன்ற மாவட்டங்களை இணைக்கும் போது வடக்குக்கும் கிழக்குக்குமான நிலத் தொடர்பு துண்டிக்கப்படும். இந்த நிலை ஏற்படும்போது வடக்கு வேறு, கிழக்கு வேறு என்ற நிலை உருவாகும்.

மத்திய மாகாணத்துக்கு ஒரு கடல் தொடர்பு கிடையாது. திருகோணமலை மாவட்டத்தை மத்திய மாகாணத்துடன் இணைப்பது என்ற திட்டமும் அரசாங்க நிகழ்ச்சி நிரலில் இருக்கின்ற விடயமாகும். திருகோணமலை மாவட்டத்தை கபளீகரம் செய்துவிட இவ்வளவு மோசமான கபடமான நிகழ்ச்சி நிரலை இந்த அரசு கொண்டு இயங்குகின்ற பொழுது தமிழ் மக்கள் இவர்களுடன் இணைந்திருக்க முடியாது.

யார் எவ்வாறு தலைகீழாக நின்றாலும் 17ஆசனங்கள் பெற்று நிச்சயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைக்கும். இத்துடன் நிறுத்திவிடாது முழுமையான தீர்வை நோக்கிய எமது போராட்டம் தொடர்ந்து நடக்கும். அதற்கு மாகாணசபையும் கைகொடுக்கும் - என்றார். (10 -5)

# நேற்று மட்டும் நயினாதீவுக்கு 80,000 சுற்றுலாப் பயணிகள்

யாழ்ப்பாணம், செப்.2

வேலணைப் பிரதேச சபைக்குட்பட்ட நயினாதீவுக்கு நேற்று சனிக்கிழமை மட்டும் 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் படையெடுத்துள்ளனர்.

நாடுதழுவிய ரீதியில் இருந்து சுற்றுலாப் பயணிகள் நயினாதீவு நாகவிகாரைக்கும், நயினாதீவு நாகபூஷணி அம்மனைத் தரிசிக்கவும் படையெடுத்து வருகின்றனர்.

கடந்த வாரத்தில் மட்டும் 4லட்சத்து 30 ஆயிரம் மக்கள் குறிகாட்டுவான் ஊடாக கடல் வழியாகப் படகு மூலம் நயினாதீவுக்குச் சென்றுள்ளனர்.

இதேவேளை நயினாதீவுக்கான படகுச் சேவைகளை அதிகரிக்குமாறும் நாகபூஷணி அம்மனைத் தரிசிக்க உரிய நேரங்களில் ஆலயத்துக்கு வருகை தரும் இந்துக்களுக்குப் பிறிதொரு வரிசையூடாகப் படகுகளில் பயணிக்கத் தக்கதாக இடம் ஒதுக்கிக் கொடுக்குமாறும் அத்துடன் குறிகாட்டுவானிலும் நயினாதீவிலும் பிரயாணிகள் உரிய நேரங்களில் படகுகளில் ஏறுவதற்கும் -இறங்குவதற்கும் நடவடிக்கை எடுத்து உதவ வேண்டும் எனவும் ஆலய பிரதம நிறைவேற்று அதிகாரி கே.தவராசா கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை நயினாதீவுக்கு வருகைதரும் தென்இலங்கை சுற்றுலாப் பயணிகள் அராலியில் அமைந்துள்ள அமரர் டென்சில் கொப்பேக்கடுவ நினைவுத் தூபிக்கும் சாட்டி வேலணை வெள்ளைக் கடற்கரைக்கும் சென்று வருகின்றனர். (த-50)

# இந்தோனேஷியப் பொலிஸாரின் பாதுகாப்பில் 50 இலங்கையர்

கொழும்பு,செப் 2

ஆஸ்திரேலியா நோக்கிச் சென்றுகொண்டிருந்த போது படகு இயந்திரம் பழுதடைந்ததால் கடலில் தத்தளித்த 50 இலங்கையர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாக இந்தோனேஷிய பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

9 நாள்களாக உணவின்றி கடலில் தத்தளித்த இந்த 50 பேரும் தற்போது இந்தோனோஷியப் பொலிஸாரின் பாதுகாப்பில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

# மிகப் பெரிய ஜெனரேற்றர் சுன்னாகம் வந்து சேர்ந்தது



யாழ்ப்பாணம்,செப் 2

இலங்கை மின்சார சபையின் சுன்னாகம் மின் நிலையத்துக்குப் பெரிய ஜெனரேற்றர் ஒன்று எடுத்துவரப்பட்டுள்ளது.

கப்பல்மூலம் எடுத்து வரப்பட்ட இந்த ஜெனரேற்றர் காங்கேசன்துறைமுகத்தில் இறக்கப்பட்டது. அங்கிருந்து சுன்னாகத்துக்கு தரை வழியாக எடுத்துச் செல்லப்பட்டது.

இந்தப் பெரிய ஜெனரேற்றரைக் கொண்டு செல்வதற்கு 72சில்லுகளைக் கொண்ட 'கெண்டெய்னர்' வாகனம் பயன்படுத்தப்பட்டது. இந்த ஜெனரேற்றரைச் சுன்னாகம் கொண்டு சென்று சேர்ப்பதில் இலங்கை மின்சார சபையின் பணியாளர்கள் பெரும் சிரமப்பட்டனர்.

ஜெனரேற்றர் அளவில் பெரியதாகவும் மிக உயரமானதாகவும் இருந்தமையால் வீதியால் அதனைக் கொண்டு செல்வதில் சிரமங்கள் எதிர்நோக்கப்பட்டன. வீதிகளுக்குக் குறுக்காகச் சென்ற மின்சார வயர்கள் அகற்றப்பட்டு மின் விநியோகம் நிறுத்தப்பட்டே ஜெனரேற்றர் எடுத்துச் செல்லப்பட்டது. (த-17)

கிளிநொச்சி, ஆனைவிழுந்தானில் ஆக்கிரமித்து வைத்துள்ள

# தொழில்நுட்பக் கல்லூரிக்குரிய பெரிய காணியை இராணுவத்துக்கே தாரைவார்க்க அதிகாரிகள் முயற்சி

கிளிநொச்சி,செப் 2

கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரியின் ஆனைவிழுந்தான் காணியை இராணுவத்துக்கு தாரைவார்ப்பதற்கு அதிகாரிகள் சிலர் முனைந்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பகுதியான ஆனைவிழுந்தான் கிராமத்தில், ஒரு உப தொழில் நுட்பக் கூடத்தை அமைத்து அங்கு கடந்த காலங்களில் தொழில் கற்கை நெறிகள் வழங்கப்பட்டிருந்தன. ஆனால் இந்தக் கூடம் 2009 ஆம் ஆண்டின் பின்னர் செயலிழந்துவிட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தொழில் வாய்ப்பு ஏதுமின்றி இருந்த பெரும் எண்ணிக்கையான இளைஞர், யுவதிகளுக்கு தொழில் திறனை விருத்தி செய்யும் நோக்குடன் பத்து வருடங்களுக்கு முன் கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரி உருவாக்கப்பட்டது. அங்கு ஆயிரக் கணக்கான இளைஞர், யுவதிகள் தொழில்சார் கற்கை நெறியைப் பெற்றிருந்தனர்.

இந்த கல்லூரிக்குரிய ஆனைவிழுந்தானில் உள்ள 3 ஏக்கர் காணி மற்றும் ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்துக்குரிய காணிகளை ஏற்கனவே இராணுவம் ஆக்கிரமித்து வைத்துள்ளது. அங்கு 652 ஆவது படைப் பிரிவு முகாமிட்டுள்ளது. அந்தக் காணிகளைத் தான் இராணுவம் கையகப்படுத்த முயற்சிக்கிறது. அதற்கான கோரிக்கையையும் தொடர்ச்சியாக முன்வைத்து வருகிறது. பிரதேச காணிப் பயன்பாட்டுக் கலந்துரையாடல்களிலும் அதனை வலியுறுத்தி வந்துள்ளது.

கடந்த மே 25 ஆம் திகதி கரைச்சிப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற காணிப் பயன்பாட்டுக் குழுக் கூட்டத்திலும் இராணுவத்தின் இந்தக் கோரிக்கையை பொது அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும் பிரதேச சபைத் தலைவர் உட்பட அனைவரும் (90 வீதமானோர்) ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் இதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து அடியோடு மறுத்தும் விட்டனர்.

இவ்வாறான நிலையில், எதிர்வரும் 6 ஆம் திகதி வியாழக்கிழமை குறித்த காணியை, இராணுவத்துக்கு இரகசியமான முறையில் வழங்குவதற்கு அதன் தற்போதைய நிர்வாகத்தின் முக்கிய பிரதிநிதிகள் முனைந்துள்ளனர் என்றும் - இந்தக் காணிக்கு மாற்றீடாக ஜெயபுரம் வீதியில் உள்ள - பொருத்தமற்ற காணி ஒன்றில் நூறு அடி நீளமான அரை நிரந்தரக் கட்டடம் ஒன்றை அமைத்துத் தொழில் நுட்பக் கல்லூரிக்கு தருவதாக இராணுவம் கூறியுள்ளது என்றும் அதன் அடிப்படையில் குறித்த காணியை அவர்களுக்குத் தாரை வார்க்கத் தயாராகி வருகின்றனர் என்றும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதற்குப் பலரும் எதிர்ப்புத் தெரிவித்துள்ள நிலையில் இயக்குநர் சபை ஏனைய நிர்வாக அலகுகள் என்பவற்றின் அனுமதியின்றி ஒரு சில அடிவருடிகளின் செல்வாக்குடன் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை, குறித்த ஆனைவிழுந்தான் காணி தொழில்நுட்பக் கல்லூரியின் பின் தங்கிய இளைஞர், யுவதிகள் தொழில் நுட்பத்தினை விருத்தி செய்யும் வகையில் உப தொழில்நுட்பப் பிரிவு ஒன்று அமைப்பதன் முக்கியத்துவம் உணரப்பட்டு அப்போதைய அரச அதிபரால் வழங்கப்பட்டு அதன் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-6)

# புலிக்கொடி காட்டியவர்கள் இதுவரை கைதாகவில்லை

யாழ்ப்பாணம்,செப் 2

நெல்லியடியில் நடைபெற்ற நில ஆக்கிரமிப்புக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் புலிக்கொடி காட்டியவர்கள் தொடர்பில் இதுவரை எவரும் அடையாளம் காணப்படவோ, கைது செய்யப்படவோ இல்லை. அது தொடர்பில் புலன்விசாரணை மேற்கொண்டு வருகிறோம் என்று யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

நில ஆக்கிரமிப்புக்கு எதிராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் கடந்த ஜூலை மாதம் நெல்லியடியில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது. பொலிஸாரின் கண்காணிப்புக்கு மத்தியில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் மோட்டார் சைக்கிள்களில் அங்கு தோன்றியவர்கள் புலிக்கொடியைக் காட்டியவாறு சென்று வயோதிபர் ஒருவரையும் மோதிவிட்டு அங்கிருந்து விலகிச் சென்றனர். பொலிஸார் இதனை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர்.

வந்தவர்கள் மோட்டார் சைக்கிள் இலக்கத்தை மறைக்க்வில்லை. அவர்கள் தலைக்கவசம் அணிந்திருந்தனர் என்று நேரில் கண்டவர்கள் தெரிவித்திருந்தனர்.

இதுதொடர்பில் தம்மிடம் போதிய ஆதாரம் இல்லை என்று பொலிஸார் தெரிவித்துவந்த நிலையில் சம்பவ இடத்தில் தோன்றிய மோட்டார் சைக்கிளின் இலக்கம் உள்ளிட்ட ஆவணங்கள் பருத்தித்துறை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவை நீதிமன்றினூடாக நெல்லியடிப் பொலிஸாருக்கு வழங்கப்பட்டு அது தொடர்பில் விசாரணை நடத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. அந்தச் சம்பவம் தொடர்பில் புலன் விசாரணை நடைபெற்று வருகின்றது என்று எரிக் பெரோரா தெரிவித்தார். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நகரில் நேற்று விழிப்புணர்வு பேரணி

**பொலிஸ் திணைக்களத்தின் 146 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு**





யாழ்ப்பாணம், செப்.2

**பொலிஸ் திணைக்களத்தின் 146 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாணம் பொலிஸார் மக்களுக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் வகையில் பேரணி ஒன்றை நேற்று நடத்தினர்.**

யாழ்.பொலிஸ் தலைமையகத்தில் இருந்து யாழ். சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் எரிக்பெரேரா தலைமையில் யாழ்.பிரதேசத்தில் உள்ள அனைத்து பொலிஸ் அதிகாரிகளும் பொதுமக்களும் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

பெருந்திரளான மக்கள் கலந்து கொண்ட ஊர்வலம் யாழ். ஆஸ்பத்திரி வீதியூடாக பஸ் நிலையத்தைச் சென்றடைந்தது.

அங்கிருந்து கஸ்தூரியார் வீதி, மின்சாரநிலைய வீதி, ஆஸ்பத்திரி வீதியூடாக மீண்டும் பொலிஸ் நிலையத்தைச் சென்றடைந்தது.

பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஊட்டும் வகையில் டெங்கு எனும் கொடிய நோயை விரட்டுவதற்கு நாம் அனைவரும் ஒன்று சேர்வோம்.

மது போதையற்ற சமுதாயத்தை உருவாக்குவோம், சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற செயல்களில் ஈடுபடுவோரை நீதியின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுக் கொடுப்போம், குற்றச் செயல்களை ஒழிப்போம் போன்ற சுலோகங்களைக் கொண்ட பதாகைகளும் இதன்போது எடுத்துச் செல்லப்பட்டன. (ம-7)

## நெல்லியடியிலும் பொலிஸ் நடைபவனி

வடமராட்சி, செப்.2

இலங்கைப் பொலிஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டு 146 ஆவது ஆண்டை ஒட்டி நேற்றுக் காலை 9.30 மணியளவில் நெல்லியடியில் பொலிஸாரும் நடைபவனி ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர்.

சமூக விரோதச் செயல்கள், விபத்து உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதை வலியுறுத்தி நடத்தப்பட்ட இந்நடை பவனியில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காமினி பெரேரா விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இந்நடை பவனியில் நெல்லியடியில் பொலிஸாருடன் ஏனைய பொலிஸ் நிலையங்களையும் சேர்ந்த பொலிஸார்கள், சிவில் பாதுகாப்புக்குழு உறுப்பினர்கள், வர்த்தக சங்கப்பிரதிநிதிகள், மாணவர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

நாவலர் மடத்துக்கு அண்மையில் உள்ள கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் இருந்து ஆரம்பமான இந்த நடைபவனி நெல்லியடி பஸ் நிலையச் சந்தி வரை வந்து, திரும்பி நெல்லியடிப் பொலிஸ் நிலையத்துடன் முடிவடைந்தது. (ம-8)

## வீதிகளில் வைத்து மீன்கள் வெட்டிக் கொடுக்கத் தடை

யாழ்ப்பாணம், செப்.2

மீன் வியாபாரிகள் வீதிகளில் வைத்து மீன்களை வெட்டிக் கொடுப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

நல்லூர் பிரதேச சபை, மீன் வியாபாரிகளிடமும் பாவனையாளர்களிடமும் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் இது தொடர்பாக உறுப்பினர்கள் கருத்துக் கூறியதாவது:-

மீன்களை வீடுகளுக்கு விற்பனைக்குக் கொண்டு வருபவர்கள் அவற்றை வீதிகளில் வைத்து வெட்டிக் கொடுக்கிறார்கள். இதனால் மீன் கழிவுகள், செதில்கள் வீதிகளை அசுத்தப்படுத்துகின்றன.

பறவைகள் அவற்றைக் கொத்திச் சென்று முக்கியமான இடங்களிலும் கிணறு மற்றும் நீர் நிலைகளிலும் போட்டு விடுகின்றன.

இதனால் அங்கு சுகாதாரச் சீர்கேடுகளும் ஏற்படுகின்றன. தொற்று நோய்களும் பரவக் கூடிய சாத்தியங்கள் உண்டு. இது குறித்து மீன் வியாபாரிகளும் பாவனையாளர்களும் உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும்.

மீன் கழிவுகளை வீட்டுக்காரர்கள் தமது வீட்டு வளவுகளில் புதைத்துவிட வேண்டும் என்று மேலும் கூறப்பட்டது. (ம-7)

## பதில் கடமை செய்வோர் நியமனத்தில் புறக்கணிப்பு

வடமராட்சி, செப்.2

யாழ்.மாவட்டத்தில் வெற்றிடமாகவுள்ள உப அஞ்சல் அதிபர் பதவிக்கு ஆள்களைத் தெரிவு செய்யும்போது பதில் கடமைக்காரர்கள் புறக்கணிக்கப்படுவதாக பாதிக்கப்பட்டோர் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

வெற்றிடமாக உள்ள உப அஞ்சல் அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்படும்போது, குறித்த உப அஞ்சல் அலுவலகத்தில் பதில் கடமையாற்றியவர் விண்ணப்பித்தால், தகுதிகள் இருந்தும் புறக்கணிக்கப்பட்டு புதியவர் ஒருவருக்கு நியமனம் வழங்கப்படுகிறது.

இதனால் உப அஞ்சல் அலுவலகங்களில் பதில் கடமையாற்றுவோர் விரக்தியும் கவலையும் அடைந்துள்ளனர்.

அஞ்சல் திணைக்களத்தின் இத்தகைய நடவடிக்கையினால் உப அஞ்சல் அலுவலகங்களில் உபஅஞ்சல் அதிபர்களுக்கு பதில் கடமை புரிய எவரும் முன்வராத நிலை காணப்படுகிறது.

இதன் காரணமாக உப அஞ்சல் அதிபர்கள் அவசர தேவைக்குக் கூட விடுமுறைகளைப் பெற்றுக் கொள்ள பதில் கடமைக்காரர்களை அமர்த்த முடியாமல் சிரமத்துக்குட்பட்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-8)

## நாகதம்பிரான் ஆலயத் திருவிழா 12 வருடங்களின் பின் இம்முறை

வடமராட்சி செப் 2.

சரித்திரப்புகழ் பெற்ற வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் நாகதம்பிரான் ஆலய வருடாந்த பெருந் திருவிழா 12வருடகால இடைவெளிக்குப் பின்னர் இவ்வாண்டு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகும் இந்தக் கோவில் பெருந்திருவிழாவில் ஒன்று கப்பல் திருவிழாவாகும்.

போர்த்துக்கேயர் வந்து இறங்கியதைப் பிரதிபலிக்கும் இந்தத் திருவிழா சிறப்பு மிக்கதாகும்.

இந்தத் திருவிழா எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

கடந்த கால போர் காரணமாக 2000ஆம் ஆண்டு இந்தப் பகுதி மக்கள் இடம் பெயர்ந்ததுடன் இப்பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக்கப்பட்டது. இதனால் ஆலயத் திருவிழாவும் தடைப்பட்டிருந்தது.

தற்போது போர் நிறைவடைந்துள்ள நிலையில் 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கோவிலுக்குச் செல்லவும், பூசை நடத்தவும் அனுமதி வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இக்குறுகிய காலத்தில் கோவில் புனரமைக்கப்பட்டு சில மாதங்களுக்கு முன்னர் கும்பாபிஷேகமும் நடத்தப்பட்டது.

தற்போது நாகர் கோவில் பகுதியில் சில கிராம சேவையாளர் பிரிவுகளில் மீள்குடியமர்வும் நடைபெற்றுள்ள நிலையில் இக் கோயில் வருடாந்தத் திருவிழா இம்முறை நடைபெறவுள்ளது.

பெருந்திருவிழாவை நடத்துவது தொடர்பாக நாகதம்பிரான் ஆலய பரிபாலனசபை அண்மையில் ஒன்று கூடி இதற்கான தீர்மானமும் எடுத்துள்ளது. (ம- 8)

## காணிகளில் குப்பை 6 பேருக்கு அபராதம்

வடமராட்சி, செப்.2

டெங்கு குடம்பிகள் உற்பத்தியாகும் விதத்தில் குப்பை கூளங்களை வைத்திருந்த 6 பேருக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் தலா 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

வல்வெட்டித்துறைப் பொலிஸார் நடத்திய திடீர் சோதனையின் போது, கவனவீனமாக குப்பை கூளங்களை வீடுகள், வளவுகளில் வைத்திருந்த 6 பேர் கண்டுபிடிக்கப்பட்டனர்.

இவர்கள் மீது பொலிஸார் தனித்தனியே வழக்குகளைத் தாக்கல் செய்து பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தினர்.

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் இந்த வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இதன் போது அனைவரும் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

இதனையடுத்து 6 பேருக்கும் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் மொத்தமாக 18 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ம- 8)

## முன்பள்ளி ஆசிரியருக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு



கைதடி, செப். 2

கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகத்தால் கைதடியில் இயங்கி வரும் முன்பள்ளிகளில் தெரிவு செய்யப்பட்ட முன்பள்ளிகளின் ஆசிரியைகளுக்கான ஊக்குவிப்பு க்கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு அண்மையில் கைதடி தெற்கில் உள்ள கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கழகத் தலைவர் ப.செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நான்கு முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப் பட்டது. லண்டன் வாழ் ஒன்றியத்தினால் இக்கொடுப்பனவு வழங்கப்பட்டது. (ம-288)

## நிகழ்வுகள் இன்று

**பொதுக்கூட்டம்**

வடமராட்சி,செப்.2

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க விசேட பொதுக் கூட்டம் முற்பகல் 10 மணிக்கு சங்கத்தலைவர் இரா.பூரணச்சந்திரன் தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சங்க அங்கத்தவர்கள்இந்தக் கூட்டத்தில்கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ம-8)

**ஆண்டு மலர் வெளியீடு**

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தின் காலாண்டு வெளியீடான "சக்கரம்" கலை, இலக்கிய ஆன்மீக ஆண்டு மலர் வெளியீட்டு விழா 10.30 மணிக்கு ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

வல்லிபுரக் கோயில் அறங்காவலர் சபைத் தலைவர் இ.அன்னலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ், திருமதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் பிரதம விருந்தினர் களாகக் கலந்து கொள்வர். சிறப்பு விருந்தினராகப் பருத்தித்துறை பிரதேச செயலர் இத.ஜெயசீலன் கலந்து கொள்வார். ஆசியுரையை பிரதமகுரு பிரம்மஸ்ரீ க.சுதர்சனக் குருக்கள் வழங்குவார். (ம-8)

**பொன்விழா**

பருத்தித்துறை, புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலை மன்றத்தின் பொன்விழா மாலை4 மணிக்கு மன்றத் தலைவர் கே.ரி.ஆனந்த நடேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் கலந்து கொள்வார். கௌரவ விருந்தினராக பருத்தித்துறை நகரசபைத் தலைவர் சபா.ரவீந்திரன் கலந்துகொள்வார். பொன் விழா மலரை தும்பளை சிவப் பிரகாச மகா வித்தியாலய அதிபர் கே.கே.யோகநாதன் வெளியிட்டு வைத்து உரை நிகழ்த்துவார். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (ம-8)

**மானிய உரப்பதிவுகள்**

நுணாவில் மேற்கு கமக்கார அமைப்பைச் சேர்ந்த நெற்செய்கையாளர்களுக்கான மானிய உரம் தொடர்பாக பதிவுகள் இன்று நடைபெறும் என்று அமைப்பின் செயலாளர் த.துரைராஜா கூறியுள்ளார். அமைப்புக் குட்பட்ட அனைத்து நெற்செய்கையாளர்களும் பதிவை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ம-9)

**கருத்தரங்கு**

இலங்கை வங்கியின் ஏற்பாட்டில் சிறிய நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கான திறன் அபிவிருத்திக் கருத்தரங்கும் எதிர்கால முதலீடு தொடர்பான ஆலோசனையும் காலை 8 மணிக்கு யாழ்.ரில்கோ விடுதியில் நடைபெறவுள்ளது. (ம-14)

**நினைவுதினம்**

மானிப்பாய் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் வி.தர்மலிங்கத்தின் 26ஆவது நினைவு தினம் காலை 7.30 மணிக்கு தாவடியிலுள்ள அன்னாரின் நினைவுத் தூபிக்கு மலர் அஞ்சலி செலுத்துவதுடன் ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தருமலிங்கம் சித்தார்த்தன், மன்னார் நாடாளுமன்ற உறுப்பினர் சூசைதாசன் உட்பட பலர் நினைவுரை நிகழ்த்துவர். (ம-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் படையினருக்கு சீனா மேலதிக ராணுவ உதவி

கொழும்பு,செப். 2

இலங்கைக்கு ஆயுதங்களை வழங்கும் பிரதான நாடான சீனா மேலதிக இராணுவ உதவிகளை வழங்குவதற்கு இணங்கியுள்ளது.

பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும், சீன பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் லியாங் குவாங்லிக்கும் இடையில் நேற்று முன்தினம் கொழும்பில் நடந்த நீண்ட பேச்சுக்களின் போதே இந்த இணக்கப்பாடு உருவானது.

பாதுகாப்பு அமைச்சில் நடந்த சீனப் பாதுகாப்பு அமைச்சர் தலைமையிலான குழுவினருடனான இந்தச் சந்திப்பில், கோத்தபாய ராஜபக்ஷ தலைமையிலான இலங்கைப் பாதுகாப்பு அதிகாரிகளைக் கொண்ட குழு பங்கேற்றது.

இதன்போது இலங்கை இராணுவத்துக்கு முழுமையான பயிற்சி மற்றும் ஆயுத உதவிகளை வழங்க சீனப் பாதுகாப்பு அமைச்சர் இணங்கியுள்ளார்.

அத்துடன் இராணுவப் பிரதிநிதிக் குழுக்களின் பரிமாற்றம், இராணுவ உதவித்திட்டங்களுக்கான உதவி, தனிநபர் பயிற்சிகளை விரிவாக்கல், கடல்சார் ஒத்துழைப்பை விரிவாக்கல், தீவிரவாத முறியடிப்பு, கண்ணிவெடிகளை அகற்றல், விளையாட்டு உள்ளிட்ட ஏனைய துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிக்கவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்திக் கொள்வது தொடர்பாக சுமார் ஒன்றரை மணி நேரத்துக்கும் அதிகமாகப் பேச்சுக்கள் நடத்தப்பட்டன.

அதேவேளை தியத்தலாவவில் உள்ள இலங்கை இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் அரங்கம் ஒன்றை நிறுவுவதற்கு 1564 மில்லியன் ரூபாவை இலங்கை இராணுவத்துக்கு வழங்கும் உடன்பாட்டிலும் சீன பாதுகாப்பு அமைச்சர் கையெழுத்திட்டுள்ளார். (த)

## மன்மோகன்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

ஈரானில் தங்கியிருந்த போது, அவர் பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி, பங்களாதேஷ் பிரதமர் சேக் ஹசீனா, ஈரான் ஜனாதிபதி மொகமட் அகமதி நிஜாத், லெபனான் ஜனாதிபதி ஜெனரல் மிசெல் சுலைமான், ஈரான் ஆன்மீகத் தலைவர் ஆயதுல்லா அலி கொமெய்னி ஆகிய அரபு உலகின் தலைவர்களைத் தனிப்படச் சந்தித்துப் பேசியிருந்தார்.

அவ்வாறே அவர் இந்தியப் பிரதமரையும் சந்திக்க எண்ணியிருந்தார். மன்மோகன்சிங்கை சந்தித்துப் பேசுவதற்கு அவர் விருப்பம் வெளியிட்டிருந்த போதிலும், புதுடில்லி அதற்கான நேரத்தை ஒதுக்கிக் கொடுக்கவில்லை என்று தெரியவருகிறது. அண்மைக்காலமாக ஐ.நா பொதுச்சபைக் கூட்டம், கொமன்வெல்த் மாநாடு, சார்க் போன்ற அனைத்துலக மாநாடுகளின் போதே இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை ஜனாதிபதி மஹிந்த் சந்தித்துப் பேசிவந்தார்.

எனினும் இவர்கள் இருவரும் அணிசேரா நாடுகளின் மாநாட்டில் ஒன்றாகப் பங்கேற்ற போதும், தனியாகச் சந்தித்துக் கொள்ளவில்லை. அனைத்துலக மாநாடு ஒன்றில் இவர்கள் இருவரும் தனிப்படச் சந்தித்துக் கொள்ளாத முதல் சந்தர்ப்பமாக இது கருதப்படுகிறது.

அதேவேளை அணிசேரா மாநாட்டில் கலந்து கொண்ட ஐ.நா பொதுச் செயலர் பான் கி மூனை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச சந்திக்கவுள்ளதாகச் செய்திகள் வெளியாகிய போதும் அவ்வாறு சந்திப்பு எதுவும் இடம்பெறவில்லை. (த)

## இலங்கை...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

அதிகாரிகளை விரைவில் திருப்பி அனுப்ப உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இனி இதுபோல் நடைபெறாமல் இருக்கவும் உரிய ஏற்பாடுகள் செய்யப்படும். மத்திய இராணுவ அமைச்சரை டில்லியில் சந்தித்து இதுகுறித்து விளக்கமாக எடுத்துக் கூறுவோம். இலங்கை இராணுவ அதிகாரிகளை திருப்பி அனுப்ப வேண்டும் என்பதில் தமிழக காங்கிரசும் உறுதியாக உள்ளது - என்றார். (த)

## போர்க்காலத்தில்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

மிகவும் எளிதில் ஆயுதங்களைக் கொள்வனவு செய்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறிய மற்றும் இலகு ரக ஆயுதப் பாவனை தொடர்பான ஐக்கிய நாடுகள் கூட்டத் தொடரில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். யுத்தத்தின் பின்னர் புலிகளின் ஆயுதக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலான தகவல்கள் திரட்டப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

யுத்தம் இடம்பெற்ற காலத்திலும் அதன் பின்னரும் தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட ஆயுதங்களின் மூலம், சர்வதேசத்தில் ஆயுதங்கள் எவ்வாறு மலிந்து கிடக்கின்றன என்பது தெளிவாகப் புலனாகியது என சவேந்திர சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே சட்டவிரோத ஆயுதப் பயன்பாட்டை தடுத்து நிறுத்த அனைத்து நாடுகளும் இணைந்து செயற்பட வேண்டியது அவசியமானது எனவும் உள்நாட்டு ரீதியில் சட்டவிரோத ஆயுதப் பயன்பாட்டை ஒடுக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (த)

## யாழ்.இளைஞர்கள்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

செய்துள்ளனர்.

கொழும்பில் இருந்து எயார் இந்தியா எக்ஸ்பிரஸ் பயணிகள் விமானம் நேற்று முன்தினமிரவு 11.30 மணியளவில் சென்னை சென்றது. அதில், தங்கம் கடத்தி வருவதாக விமான நிலையச் சுங்கத் துறை அதிகாரிகளுக்கு இரகசிய தகவல் கிடைத்தது. உடனடியாக விமானத்தில் வந்த பயணிகளை அதிகாரிகள் தீவிர சோதனை நடத்தினர்.

அப்போது, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நிஷாந்தன் (வயது-25), ரூபராஜன் (வயது-30) ஆகியோர் சுற்றுலா விசாவில் சென்னை சென்றனர். அவர்கள், சுங்க வரி செலுத்துவதற்கான பொருள்கள் எதையும் நாங்கள் எடுத்து வரவில்லை என்று கூறி வெளியே செல்ல முயன்றனர்.

அதிகாரிகளுக்கு அவர்கள் மீது சந்தேகம் ஏற்பட்டது. அவர்களை அழைத்து மீண்டும் தீவிரமாகச் சோதித்தனர். அவர்கள் வைத்திருந்த பைகளில் எதுவும் சிக்கவில்லை. இருவரும் கோட் அணிந்திருந்தனர்.

அதைத் தடவிப் பார்த்தபோது, அவற்றின் கழுத்துப் பகுதியில் ஏதோ ஒரு பொருள் தட்டுப்பட்டது. கோட்டைக் கழற்றி பார்த்த போது, கறுப்பு கார்பன் பேப்பரில் சுற்றப்பட்டிருந்த நீளமான பொதி இருந்தது. அதைப் பிரித்து பார்த்த போது 520 கிராம் புத்தம் புதிய தங்கச் சங்கிலிகள் இருந்தன.

இவற்றின் மதிப்பு 17 லட்சம் இந்திய ரூபா. இதையடுத்துப் பொலிஸார் இருவரையும் கைது செய்தனர். தங்கச் சங்கிலிகளைக் கொடுத்து அனுப்பியது யார், யாரிடம் கொடுக்கச் சென்னை வந்தனர், இதற்கு முன்பாக இதுபோன்ற கடத்தலில் ஈடுபட்டார்களா என்று பல்வேறு கோணங்களில் அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர். (த)

## அபிவிருத்தி...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

பதவியில் இருந்து விலகிக் கொள்வதாக அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமது பதவியை ராஜினாமாச் செய்வதற்கான காரணம் தனது சொந்த விருப்பம் என அவர் கூறியுள்ள போதும் கடந்த ஒரு வருடமாக அபிவிருத்தி நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறாத நிலையில் தான் தொடர்ந்தும் பிரதேச சபை உறுப்பினராகவோ, உப தலைவராகவோ இருப்பது ஏற்புடையதல்ல என்று அவர் கருதுவதாகவே தெரிகின்றது. (த-7)

## புழல் சிறைக்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

அவரை, நேற்றுமுன்தினம் இரவு 10மணிக்கு பொலிஸார் கைது செய்தனர்.

இந்த நிலையில் செந்தூரனுக்கு ஆதரவாகவும், அவரது உயிரைக் காப்பாற்றக் கோரியும் ம.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் தொடர் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்று வந்தது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற போராட்டத்தில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ பங்கேற்றார். இந்த நிலையில், செந்தூரனைக் கைதுசெய்துள்ள பொலிஸார் தற்கொலைக்கு முயன்றதாக அவர் மீது வழக்குப் பதிவு செய்தனர். இதனையடுத்து பூந்தமல்லி நடுவர் நீதிமன்ற நீதிபதி முகமது பரூக்கின் வீட்டில் ஆஜர்படுத்தப்பட்ட செந்தூரன், பின்னர் புழல் சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்த நிலையில் செந்தூரன் கைது செய்யப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்துள்ள ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, உரிய சிகிச்சையளிக்காமல் அவரை சிறையில் அடைத்ததாகவும், செந்தூரன் மயக்கமடைந்து இரண்டு மணி நேரம் ஆன பின்னரும் காவல்துறையினர் அவருக்கு உரிய சிகிச்சையளிக்கவில்லை என்றும் குற்றம் சாட்டியுள்ளார். (த-3)

## வீட்டார் சந்நிதி ...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

வீட்டுக்காரர் வீட்டுக் கதவைப் பூட்டிவிட்டு கோயிலுக்குச் சென்று விட்டனர். அதனை அவதானித்த திருடர்கள் வீடு புகுந்து கதவை உடைத்து நகைகளையும், பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர். சந்தேக நபர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை.

தவிர கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாடசாலை ஒன்றிலிருந்து தண்ணீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றைத் திருடர்கள் திருடிச் சென்று விட்டனர் என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட காளி கோயிலடியில் மோட்டார் சைக்கிளில் சென்ற பெண் ஒருவரிடமிருந்து 63 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலி ஒன்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 25ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றது. அதே தினத்தில் கோப்பாயிலும் 2 லட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலி ஒன்று கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு சம்பவத்துடனும் தொடர்பு பட்டவர் எனச் சந்தேகிக்கப்படும் நபர் நீதிமன்ற பிடியாணையில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

இது தவிர கோப்பாயில் கடந்த செவ்வாய்க்கிழமை வீட்டு ஜன்னல் கம்பியை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் 6 ஆயிரத்து 800 ரூபா பெறுமதியான கைத் தொலைபேசியைத் திருடிச் சென்றுள்ளனர். இது தொடர்பிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது - என்றார். (த-4-86)

## வறட்சிக்கான...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

வடக்கில் வறட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும் ஏனைய பிரிவினருக்கும் வறட்சி நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலி. மேற்கு பிரதேசசபை உறுப்பினரும் தொழில்நுட்பக்குழுத் தலைவருமான த.நடநேந்திரன் கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் வறட்சியால் பாதிக்கப்பட்ட ஒரு லட்சத்து 62 ஆயிரம் பேர் வறட்சி நிவாரணத்தை எதிர்பார்த்து தகுதி நிலையில் உள்ளனர்.

இந்த நிலையில் அரசு பொலனறுவை, அநுராதபுரம் உட்பட ஐந்து மாவட்டங்களில் கடும் வறட்சி நிவாரணமாக மக்களுக்கு உதவு தொகை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆனால் வடக்கிலுள்ள 5 மாவட்டங்களிலும் உள்ள அரச அதிபர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களினதும், விவசாயிகளினதும் விவரங்களை விலாவாரியாகத் தொகுத்து வைத்துள்ளனர்.

ஆனால் அரசு வடமாகாணத்தைத் தவிர்த்து ஏனைய தென்பகுதி மாவட்டங்களை மட்டும் கருத்தில் எடுத்து 27 லட்சம் மக்களுக்கு வரட்சி நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுத்து வருகின்றது.

எனவே வடக்கு மாகாண ஆளுநரும், மாவட்ட அரச அதிபரும் வடபகுதியில் வறட்சியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு வரட்சி நிவாரணம் வழங்க முன்வர வேண்டும்.

அத்துடன் வடபகுதியில் குடிதண்ணீர் தட்டுப்பாடு காரணமாக அனைத்து மாவட்டங்களும் 2012 இல் கடுமையான தாக்கங்களுக்கு உட்பட்டுள்ளன.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைச்சு என்பன வடபகுதிக்கான வறட்சி கால குடிதண்ணீருக்காக 2012இல் ஒதுக்கிய நிதி போதாமல் உள்ளது. 2013இல் இதற்காக கூடுதலான நிதியை ஒதுக்கி அபிவிருத்தி செய்வதுடன் வறட்சியால் பாதிக்கப்பட்ட வடபகுதி விவசாயிகளுக்கு இந்த வருடம் (2012) வறட்சி நிவாரணம் வழங்க முன்வரவேண்டும் - என்றார். (த-41)

## சர்வதேசப் பங்களிப்பை

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் பங்குபற்றி உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்வரும் தேர்தல் மூலம் கிழக்கு மாகாண சபை ஆட்சியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியவுடன் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் போரின் பின்னர் அரசினால் மேற்கொள்ளப்பட்ட அடாவடித்தனமான செயற்பாடு களை மாற்றியமைக்கும்படி சர்வ தேச சமூகத்தின் ஊடாக நாம் வலியுறுத்துவோம் என்று சம்பந்தன் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது -

இலங்கையில் சமாதானத்தையும் இனங்களுக்கிடையே சமத்துவத்தையும் ஏற்படுத்துவதற்காக அதிக பட்ச அதிகாரப்பகிர்வுடன் கூடிய அரசியல் தீர்வு கொண்டு வரப்பட வேண்டும். இறுதிக் கட்டப் போரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள், அடிப்படை உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் மீதான பொறுப்புக் கூறும் விசாரணையை பக்கச் சார்பின்றி நடத்த வேண்டும் என்று ஐ.நா.மனித உரிமைகள் சபை தீர்மானம் ஊடாக சர்வதேச சமூகம் இலங்கை அரசைக் கோரியுள்ளது. இவை தொடர்பான இலங்கை அரசின் செயற்பாட்டு அறிக்கையைச் சர்வதேச சமூகத்தின் மேற்பார்வையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் இலங்கைக்குக் கூறப்பட்டுள்ளது. ஐ.நா.மனித உரிமைகள் சபையின் இலங்கை தொடர்பான தீர்மானம் குறித்து இலங்கை அரசு எடுக்கப்போகும் முன்னேற்றகரமான நகர்வுகள் எவ்வாறு அமையும் என்பதைக் கண்டறியும் நோக்கிலேயே ஜப்பான் நாட்டு சிறப்புத் தூதுவர் யசூசி அகாஷி, தென்னாபிரிக்க அரச குழுவினர், பிரித்தானிய நாடாளுமன்றக் குழுவினர் கொழும்பு வந்து அரச தலைவர்களையும் எம்மையும் சந்தித்துச் சென்றனர். ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை விரைவில் கொழும்பு வந்து திரும்பிய பின் 2013 மார்ச்சில் ஜெனிவாவில் நடைபெற இருக்கும் சபையின் மாநாட்டில் இலங்கை தொடர்பான தீர்மானத்தின் முன்னேற்றம் பற்றிய தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கவிருக்கிறார்.

ஆனால், இலங்கை அரசு அகங்காரமாகவே இன்னும் பேசிக்கொண்டிருக்கிறது. உண்மையில் அரசு திண்றுகிறது. சர்வதேச சமூகம் தனது கருமத்தை முடிக்கும்வரை இலங்கைக்கு அழுத்தம் கொடுத்துக் கொண்டே இருக்கும். சர்வதேச சமூகத்தின் மேற்பார்வையில் இனப் பிரச்சினை விடயத்தில் செயற்பட வேண்டிய கட்டாயம் இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது. ஒருமித்த நாட்டினுள் அதிக பட்ச அதிகாரப் பகிர்வுடன் கூடிய அரசியல் தீர்வு ஒன்றை முன்வைக்க வேண்டும் என்ற சர்வதேச சமூகத்தின் கோரிக்கைக்கு பதில் சொல்ல வேண்டிய நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டுள்ளது. இந்த நிலையில் சர்வதேசப் பங்களிப்பைப் பலவீனப்படுத்தவே இலங்கை அரசு கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலை அவசரமாக நடத்துகின்றது. கிழக்கு தமிழ் மக்கள் அரசின் இத் தந்திரோபாயத்துக்கு பலியாகி விடக்கூடாது.

கிழக்கு தமிழ் வாக்காளர்கள் முன்பாக மூன்று கேள்விகள் உள்ளன. ஒன்று அதிக பட்ச அதிகாரப் பகிர்வு கொண்ட சுயாட்சி அலகுக்கு வாக்களிப்பதா? இரண்டு - இது குறித்து சர்வதேச சமூகத்தின் பங்களிப்பு தொடர வேண்டும் என்று கோரி வாக்களிப்பதா? அல்லது ஜனாதிபதி ராஜபக்ஷவை நம்புகின்றோம் என்று வாக்களிக்கப் போகின்றார்களா?

கிழக்குத் தமிழ் மக்கள் தங்கள் தீர்ப்பை தெளிவாக வழங்க வேண்டும். சர்வதேச பங்களிப்பின் மூலம் அதிகபட்ச அதிகாரப் பகிர்வுடனான அரசியல் தீர்வு கிடைக்க வேண்டுமென்றால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 90 சத வீதமானோர் வாக்களிக்க வேண்டும். இதன் மூலம் எமது தாயகத்தில் எமது எதிர்கால சந்ததி தம்மைத் தாமே தமது சொந்த மண்ணில் ஆளக் கூடிய அரசியல் தீர்வை கண்டு விட முடியும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# இன்று அவருக்கு, நாளை எனக்கு என்ற உணர்வு உதிக்கட்டும்!

வவுனியாவில் குடும்பப் பெண் ஒருவர் டெங்கு நோயினால் உயிரிழந்துள்ளார். இறந்தவர் டெங்குநோய் ஒழிப்புடன் தொடர்புள்ள சுகாதாரப் பரிசோதகர் ஒருவரின் மனைவி. வவுனியா வைத்திய சாலையில் நடத்தப்பட்ட பரிசோதனைகளின் போது இருவரும் டெங்குநோய்த் தாக்கத்தால் பாதிக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

அண்மைக் காலமாக, வவுனியா நகரம் உட்பட மாவட்டத்தின் பல பகுதிகளிலும் டெங்குநோய்த் தாக்கம் இருந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதுகுறித்துச் சுகாதாரப் பகுதியினர் மக்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கி வந்தனர். குறித்த உயிர் கொல்லிநோய் பரந்தளவில், பரவாமல் தடுக்கும்பொருட்டு கிராமசேவகர் பிரிவுகள் தோறும் நோய்த் தடுப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பல தசாப்தங்களுக்கு முன்னர் நுளம்புக் கடியால் பரவும் மலேரியா நோய், உயிர்கொல்லி நோயாக விளங்கியது. அதுவும் மிகக் குறிப்பாக காடார்ந்த பிரதேசங்களில், வன்னி மாவட்டங்களில், ஒரு கட்டத்தில் ஆயிரக் கணக்கான மக்களைக் காவுகொண்டது.

எனினும், காலப் போக்கில் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகளாலும் புதிய மருந்து வகைகளின் பயன்பாட்டாலும் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. அவற்றில் குறிப்பிடத்தக்கவை பிறிமாகுயின், குளோரக்குயின் என்று ஞாபகம்.

அந்த மருந்து வகைகளுடன் டிடிரி, மலத்தியோன் போன்ற தெளி மருந்து வகைகளும் நுளம்புப் பெருக்கத்தைத் தடுப்பதில் பெரிதும் உதவின.

இக்காலத்தில், குயினின், குவாட்டம் ஆகிய மருந்து வகைகள் மலேரியாவைக் குணப்படுத்துவதில் பெரியளவில் உதவுவதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முந்தைய மலேரியாத் தாக்கம் பெரியளவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு விட்டது. அதற்குப் பதிலான இப்போதைய உயிர்க்கொல்லித் தொற்று நோய்களில், இலங்கையில் முதலிடம் வகிப்பது டெங்கு எனக் கொள்ளலாம்.

தண்ணீர் தேங்கி நிற்கும் இடங்களில் பெருகும் ஒருவகை நுளம்பினால் டெங்கு நோய் உண்டாகிறது. டெங்குக் காய்ச்சலால் முதற் தடவை பாதிக்கப் படுபவர்கள் அதனைச் சாதாரண காய்ச்சலாகவே உணர்வர். நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்து இரண்டாவது, மூன்றாவது தடவைகளில் மீண்டும் நோய் காணும் போது தொற்றுத் தீவிரமடைவதால், பல சந்தர்ப்பங்களில் மரணத்தையும் உண்டாக்கும் ஆபத்து உண்டு. மேலும் டெங்கு நோய் ஒரு சதுர கிலோமீற்றர் பரப்பளவான பகுதியிலேயே விரைந்து தொற்றும், தாக்கும் என்று வைத்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் காடார்ந்த பிரதேசங்கள் பெருவாரியாக உண்டு. அங்கு மிகப் பல இடங்களில் பெரிய கிடங்குகள், பள்ளங்கள் உள்ளன. போர்க் காலத்தில் பொழியப்பட்ட குண்டுகளால் உண்டானவை அவற்றில் மிகப் பல எனலாம். அவை இன்னும் மண் நிரப்பி மேவப்படவில்லை. மற்றும் மக்களால், பிரதேச வாசிகளால் கைவிடப்பட்டு பயன்பாட்டில் இல்லாத காணிகளிலும் கிடங்குகள், பள்ளங்கள் நிறையவும் உண்டு. அவற்றிலும் டெங்கு நுளம்புகள் பெருகவும், அவற்றில் இருந்து நோய் பரவவும் வாய்ப்புகள் அதிகம்.

ஒப்பீட்டளவில் யாழ்ப்பாண மாவட்டத்தை விட 'புதிய' உயிர் கொல்லி நோயான டெங்கு வேகமாகவும் தீவிரமாகவும் பரவும் ஆபத்து உண்டு. எனினும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில், இப்போதைக்கு டெங்குநோய் பரவாமல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு விட்டதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

யாழ்ப்பாண மாவட்டத்திலும் டெங்குத் தொற்று இப்போது கட்டுப்பாட்டில் உண்டு என்றும், ஆயினும் கொழும்பு சென்று வருபவர்கள் மூலமாகப் பரவும் சாத்திய நிலை காணப்படுவதாகச் சுகாதாரப் பகுதியினர் தொட்டுக் காட்டுகின்றனர்.

சுகாதாரத் துறை வட்டாரங்களின் தகவல்களின் பிரகாரம், வவுனியா மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் ஆங்காங்கே காணப்படுகின்றது. நோய்த் தாக்கத்திற்குக் காரணமான நுளம்புப் பெருக்கத்தைத் தடுப்பதற்கான ஏற்பாடுகளைத் தாம் மேற்கொண்டு வருவதாவும் அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இப்போது வறட்சி நிலையே காணப்படுகின்றது. நீர் நிலைகள் மிகப் பலவும் வற்றிவிட்டன. வன்னி மாவட்டங்களில் குறிப்பாகக் குளங்கள் மற்றும் நீர்நிலைகள் வற்றி வறண்டு நீர்ப்பாசனத்துக்கு மட்டுமன்றி குடிதண்ணீருக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. நீர் நிலைகள் மட்டுமன்றி குடிதண்ணீர்க் கிணறுகளும் அதே நிலையில்.

ஆனால் குப்பை, கூளங்கள் மற்றும் கழிவுப் பொருள்கள் அகற்றப்படாமல், வளவுகளில் மட்டுமன்றி வீதிகளிலும் குவிக்கப்பட்டுள்ளன. அவற்றை அகற்றுவிப்பதிலும், அகற்றுவதிலும் உள்ளூராட்சி சபைகளும் அவற்றின் அலகுகளும் திட்டமிட்ட முறையில், உள்ளூர் பொது அமைப்புகள், சமூக அமைப்புகளுடன் இணைந்து செயற்பட வேண்டும்.

சுற்றாடல்சுகாதாரத்தைப் பேணுதல், அதனை நாடி ஒருங்கிணைந்து செயற்படுதல் என்பது நடைமுறைக்கு வரும்வரை, தொற்றுநோய் மற்றும் சுகாதாரச் சீர்கேடுகள் எல்லாப் பகுதிகளிலும் மலியவே செய்யும்.

வவுனியாவில் இப்போது ஆரம்பித்திருக்கும் ஆபத்து, ஏனைய மாவட்டங்களுக்கு, பிரதேசங்களுக்கு வராமல் தடுப்பதற்கு அரச அலகுகள் மற்றும் அவற்றின் பிரதேசப் பிரிவுகளின் பங்களிப்பை, செயற்றிட்டங்களை மட்டும் தங்கியிருக்காமல், சமூக மட்ட அமைப்புகள் தாமும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். அரச அலகுகளில் பணி புரியும் அதிகாரிகளுக்கும் மக்கள் சமூக அமைப்புகளுக்கும் பெரும் பொறுப்பு உண்டு. இரண்டு தரப்புகளும் இதனை ஊன்றி உணர்ந்து, இரு தரப்புகளும் கை கோர்த்துச் செயற்படுவதன் மூலமே, டெங்கு மரணங்கள் போன்ற கோர விளைவுகளைத் தரும் ஆபத்தான, துரதிர்ஷ்டமான விளைவுகளைத் தவிர்க்கலாம், தடுக்கலாம்.

ஒரு கை தனித்து ஓசை எழுப்ப முடியாது. இரண்டு கைகள் சேர்ந்து தட்டினாலே நாதம் எழுப்பலாம். மக்கள் வாழ்வியலில் எல்லாத்துறைகளுக்கும் இது பொருந்தும். மக்கள் உயிர்களைக் குடிக்கும்தொற்று நோய்களை, வருமுன் காக்கும் பொறுப்பு மக்களில் எல்லாத்தரப்பினரையும் சாரும். இன்று அவருக்கு, நாளை எனக்கு என்ற உணர்வு எல்லோரிடமும் உதிக்கட்டும்.

## கொடுக்கல் வாங்கலில் முரண்பாடு

# தாயையும், பிள்ளையையும் கடத்திய தம்பதியினர் பொலிஸாரால் கைது

வலி.வடக்கு, செப்.2

கொடுக்கல் வாங்கல் நடவடிக்கையில் ஏற்பட்ட முரண்பாட்டைத் தொடர்ந்து தாயையும், 2 வயதுப் பிள்ளையையும் கடத்திய தம்பதியினரை யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் வீதியில் இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

குறிப்பிட்ட தம்பதியினருக்குக் கடத்தப்பட்டவரின் கணவன் 80 ஆயிரம் ரூபா பணம் கொடுக்க வேண்டி இருந்துள்ளது.

கொடுத்த பணம் கிடைக்காமையால் ஆத்திரமுற்ற கணவனும் மனைவியும் இணைந்து குறித்த கடனாளியின் மனைவியையும், பிள்ளையையும் கடத்தி மறைத்து வைத்துள்ளனர்.

கடத்தப்பட்ட பெண்ணின் கணவர் இது குறித்து பொலிஸில் செய்த முறைப்பாட்டை அடுத்து, பொலிஸார் துரிதமாக நடவடிக்கையில் இறங்கினர். அதைத் தொடர்ந்து பிள்ளையும் தாயும் மீட்கப்பட்டனர். கடத்தியதாகக் கூறப்படும் தம்பதியினரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தொடர்ந்து விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று பிரதி பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டார். (ம-86)

# மக்கள் எமக்கு உதவினால் குற்றச்செயல் இடம்பெறாது

## யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபர்

வலி.வடக்கு, செப்.2

யாழ்.குடாநாட்டில் கடந்த காலங்களை விட குற்றச்செயல்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

பொதுமக்களும், சமூக ஆர்வலர்களும் உதவி செய்யும் பட்சத்தில் குற்றச் செயல்களை மேலும் கட்டுப்படுத்த முடியும் என்று யாழ்.மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக்பெரேரா குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் உயர்அதிகாரிகளுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் இடையேயான வாராந்த சந்திப்பு நேற்று இடம் பெற்ற போதே இந்த விடயம் சுட்டிக் காட்டப்பட்டது.

யாழ்ப்பாணம்பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் ஆள்கடத்தல், குழுச் சண்டை, மோசடிகள் இடம் பெற்றுள்ளன.

இதே போன்று காங்கேசன் துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் களவுகள் இடம்பெற்றுள்ளன.

இவற்றை விட சட்டவிரோதமான முறையில் மது விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பெயரில் 10 பேரும், கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட ஒருவரும், திருட்டுத்தனமாக மணல் ஏற்றிச் சென்ற ஒருவரும், சுற்றுச் சூழல் பாதிப்பை ஏற்படுத்திய 10 பேரும், மது போதையில் வாகனம் செலுத்திய 9 பேரும், மது போதையில் பொது மக்களுக்கு இடைஞ் சலான முறையில் நடந்து கொண்ட 29 பேரும், நீதி மன்றங்களினால் பிடியானை பிறப்பிக்கப்பட்ட 40 பேரும் கைது செய்யப்பட்டு நீதி மன்றங்களில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளனர்.

வீதிப் புனரமைப்புப் பணிகள் இடம் பெறும் இடங்களில் சாரதிகள் வேகக்கட்டுப்பாட்டுடன் செல்ல வேண்டியது அவசியம் என்று அவர் மேலும் கூறினார். (ம-86)

## தேவை என்றால் மட்டும் உணவில் உப்பு, சீனியைச் சேர்க்கலாம்

### விரைவில் வருகிறது சட்டம்

கொழும்பு, செப்.2

ஹோட்டல்கள் மற்றும் உணவுச்சாலைகளில் வழங்கப்படும் உணவுகள் மற்றும் தேநீருக்கு உப்பு மற்றும் சீனியைச் சேர்க்காது, நுகர்வோருக்கு அவசியமெனின் மாத்திரம் அவற்றைச் சேர்த்துக் கொள்வது தொடர்பான சட்டம் ஒன்று கொண்டு வரப்படவுள்ளது. சுகாதார அமைச்சு இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

உப்பு மற்றும் சீனிப் பாவனை காரணமாக உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு, இதய நோய்கள், திடீர் மயக்கத்தினால் அவயவ செயலிழப்பு போன்ற தொற்றாத நோய்கள் ஏற்படும் தன்மை அதிகரித்துக் காணப்படுகிறது.

நபரொருவருக்கு நாளொன்றுக்கு தேவைப்படும் உப்பின் அளவுப் பிரமாணம் 5 கிராமே. சாதாரணமாக ஒருவர் 15 கிராம் வரையில் உப்பைப் பயன்படுத்துகின்றார். ஒருவர் நாளொன்றில் 10 முதல் 15 தேக் கரண்டி சீனியையே பயன்படுத்த வேண்டியுள்ளதோடு, இந்த நாட்டின் பெருமளவு மக்கள் நாளொன்றில் 60-75 தேக்கரண்டிகள் வரையில் சீனியைப் பயன்படுத்துகின்றனர்.

சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வுகளில் இந்தத் தகவல்கள் பெறப்பட்டுள்ளன.

இந்த நிலையில் உப்பு மற்றும் சீனிப்பாவனை சம்பந்தமான சர்வதேச நிர்ணயத்துக்கு அமைய இது தொடர்பான சட்டங்கள் ஆக்கப்படவுள்ளன.

சீனிப்பாவனையை மூன்றாண்டு காலத்தில் 5 வீதமாகக் குறைத்துக் கொள்ளும் போது நீரிழிவை நூற் றுக்கு 20 வீதமாக குறைத்துக் கொள்ள முடியும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ம-22)

# மிளகாய் இறக்குமதியை முற்றாக நிறுத்தத் தீர்மானம்

## விவசாயத்துறை அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, செப்.2

உள்ளூர் விவசாயிகளைப் பாதுகாக்கும் நோக்குடன் மிளகாய் இறக்குமதி முற்றுமுழுதாக நிறுத்தப்படும்.

ஒரு கிலோ செத்தல் மிளகாயை 300 ரூபா வரையிலான உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்வதற்கு அரசு ஏற்கனவே தீர்மானித்துள்ளது.

விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தயாப்பா அபேவர்தன இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

மிளகாய்ச் செய்கை தொடர்பாக விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டாது உள்ளனர். எதிர்காலத்தில் மிளகாய் செய்கை குறித்து விவசாயிகளின் கவனத்தைத் திருப்புவதற்கு அரசு பல்வேறு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளது.

தற்போது இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு தொடர்பாக அரசால் வரிகள் விதிக்கப்பட்டுள்ளன.

பலரும் பல்வேறு கருத்துக்களை வெளிப்படுத்தினாலும் பெரிய வெங்காயத்தைக் கொள்முதல் செய்வதை அரசு இடைநிறுத்தி விடவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-22)

# வல்லிபுர ஆழ்வார், நாகர்கோவில் செல்லும் வீதிகளைத் திருத்துக

## பாவனையாளர்கள் கோரிக்கை

வடமராட்சி, செப்.2

சரித்திரப் பிரசித்தி பெற்ற வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா, நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் கோவில் வருடாந்த பெருந்திருவிழாக்கள் இரண்டு வார காலத்தில் ஆரம்பமாகும் நிலையில் இந்தக் கோவில்களுக்குச் செல்லும் பிரதான வீதிகள் இன்னமும் திருத்தியமைக்கப்படவில்லை.

மந்திகை-ஆனைவிழுந்தான் சந்தி-மருதங்கேணி வீதி, பருத்தித்துறை- தும்பளை வீதி மருதங்கேணி-புதுக்காட்டுச் சந்தி வீதி ஆகிய [illegible] வீதிகளையும் [illegible] வல்லிபுரக் கோயில், நாகர்கோவில் ஆகியவற்றுக்குச் செல்லப் பயன் படுத்தி வருகின்றனர்.

யாழ்.குடாநாட்டைச் சேர்ந்த பக்தர்கள் மந்திகை-மருதங்கேணி வீதி, பருத்தித்துறை தும்பளைவீதி ஆகிய வீதிகளையும், வன்னிப் பிரதேச மக்கள் புதுக்காட்டுச் சந்தி-மருதங்கேணி-பருத்தித்துறை வீதியையும் பெருமளவில் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த வீதிகள்யாவும் மோசமாகப் பழுதடைந்து நீண்ட காலமாகிய போதும் இன்னமும் திருத்தியமைக்கப்படவில்லை.

பெருந்திருவிழாக்காலத்துக்குள் இந்த வீதிகள் திருத்தியமைக்கப் பட்டால் தான் பக்தர்களின் போக்குவரத்து இலகுவாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த பல மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற பருத்தித்துறை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இந்த வீதிகள் திருத்தியமைக்கப்படும் என யாழ்.பிராந்திய வீதி அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்திருந்தது.

கோவில் திருவிழாக்களுக்கு முன்னதாக இந்த வீதிகள் திருத்தப்படுமா என்பது குறித்து நாளை மறுதினம் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நடைபெறும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவுகள் எடுக்கப்படுமா என்றும் கேள்வி எழுப்பப்படுகிறது. (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை மாணவர்கள் தமிழில் தேசியகீதம் இசைக்க வேண்டும்

### பூநகரிப் பிரதேச சபைத் தலைவர் வேண்டுகோள்

முழங்காவில், செப். 2

பாடசாலை மாணவர்கள் தமிழ் மொழியில் தேசிய கீதத்தை இசைக்க வேண்டுமெனப் பூநகரிப் பிரதேச சபைத் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாணவர்களால் பாடசாலைகளில் சிங்கள மொழியில் இசைக்கப்படும் தேசிய கீதத்தை அவர்கள் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தமிழ் மொழியில் இசைக்கப்படுவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறும் பூநகரிப் பிரதேசத்திலுள்ள அதிபர்களை அவர் கோரியுள்ளார்.

கடந்த காலங்களில் தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளில் தேசிய கீதம் தமிழ் மொழியில் மட்டுமே இசைக்கப்பட்டு வந்தது. மாணவர்களால் தேசிய கீதத்திலுள்ள கருத்துக்களை இலகுவாகக் கிரகிக்க முடிந்தது.

இந்த நிலையில், வடக்கின் ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்களால் அனைத்துப் பாடசாலைகளிலும் தேசிய கீதம் சிங்கள மொழியில்தான் இசைக்கப்பட வேண்டும் என்று கட்டாயப் படுத்தப்பட்டது. இதனால் தமிழ் பிரதேசங்களிலுள்ள சில பாடசாலைகளில் தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு சிங்கள மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டு வருகின்றது.

பாடசாலைகளில் சிங்கள மொழியில் தேசிய கீதம் இசைக்கப்படுவதால் தேசிய கீதத்திலுள்ள விடயங்களை மாணவர்கள் புரிந்து கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள பூநகரி பிரதேசசபைத் தலைவர், தமிழ் மொழியில் மட்டும் தேசிய கீதத்தை இசைப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு பூநகரிப் பிரதேச பாடசாலை அதிபர்களைக் கோரியுள்ளார். (க-115)

# மீள்குடியமர்த்துமாறு வலியுறுத்தி கேப்பாபுலவு மக்கள் போராடுவர்

## தொடர்ந்து நடத்தவும் தீர்மானம்

கிளிநொச்சி, செப்.2

முல்லைத்தீவு கேப்பாபுலவு மக்கள் தம்மை தமது சொந்தக் காணிகளில் மீள் குடியமர்த்துமாறு வலியுறுத்தி தொடர்போராட்டங்களை நடத்த முடிவு செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு கேப்பாபுலவுப் பகுதியில் பொது மக்களுக்குச் சொந்தமான சுமார் 2280 ஏக்கர் நிலப் பகுதியை இராணுவம் தன் வசம் வைத்துள்ளது.

குறித்த நிலப்பகுதிக்குள் கேப்பாபுலவு பகுதியில் வாழ்ந்த சுமார் நானூறுக்கும் மேற்பட்ட குடும்பங்களின் வீடுகள், பயன்தரு மரங்கள், விவசாய நிலங்கள், மருத்துவமனை, பாடசாலை, வழிபாட்டுத் தலங்கள், பொது நோக்கு மண்டபம் என்பன உள்ளடங்கிய வகையில் குறித்த பகுதி ஆக்கிரமிக்கப் பட்டுள்ளது.

பொதுமக்களால் அவர்களது வீடுகளில் கைவிடப் பட்டுச் சென்ற பொருள்கள், கால்நடைகளும் அதற்குள் அடங்கும்.

இந்த நிலையில் இப்பகுதி மக்கள் மீள்குடியமர்வுக்கு இதுவரை அனுமதிக்கப்படாத நிலையில் அப்பகுதி ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பல்வேறு கட்டுமானப் பணிகளையும் படையினர் இங்கு மேற்கொண்டுள்ளனர்.

எனவே இப்பகுதியில் உள்ள இராணுவம் வெளியேறி தமது மீள்குடியமர்வுக்கு அனுமதிக்க வேண்டும் என்று தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இதேவேளை, கடந்த மாதம் வற்றாப்பளை கண்ணகை அம்பாள் ஆலயத்துக்கு வருகைதந்த கேப்பாபுலவு மக்கள் தம்மை மீள்குடியமர்த்த வேண்டும் என கண்ணகை அம்பாளை வேண்டி 108 தேங்காய்களை அடித்து நேர்த்தியும் வைத்துள்ளனர்.

இந்த நிலையில் தாங்கள் மீள்குடியமர்த்தப்படாமை குறித்தும் தம்மை மீள்குடியமர்த்துமாறு வலியுறுத்தியும் தொடர்ச்சியான போராட்டங்களை நடத்தவும் அவர்கள் தயாராகி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-6)

## நீர்த்தேக்க வேலைகளை விரைவுபடுத்துமாறு வேண்டுகோள்

அக்கராயன்,செப்.2

வன்னேரிக்குளத்தையும், தேவன்கட்டையும் இணைத்து உருவாக்கப்படும் நீர்த்தேக்க வேலைகளை விரைவுபடுத்துமாறு வன்னேரிக்குளம் மற்றும் ஜெயபுரம் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அரச அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தற்போது இந்தப் பகுதியில் மிதிவெடிகளை அகற்றும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. ஆகவே நீர்த்தேக்க வேலைகளை விரைவு படுத்துவதற்கான தருணம் வாய்த்துள்ளதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

இந்த நீர்த்தேக்கம் உருவாக்கப்படுவதன் மூலமாக ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயத்தை மேற்கொள்ள முடியுமென தெரிவிக்கப் படுகின்றது. மேலும் தற்போது வயல் நிலமில்லாத ஜெயபுரம் கிராம மக்களுக்கும் வயல் நிலங்கள் கிடைக்கும்.

மேலும் வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் மக்கள் உவர் அபாயத்திலிருந்து தப்பிக்க முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-18)



பெண் தலைமைத்துவக் குடும்பமொன்றுக்கு 85 ஆயிரம் ரூபா பெறுமதியான தையல் இயந்திரம் மற்றும் உபகரணங்களை தொழிலாளர் திட்ட இணைப்பாளர் கி.அருள்ராஜ், சமூக சேவை உத்தியோகத்தர் செ.சிறிநிவாஸன், மெனிக்பாம் கிராம உத்தியோகத்தர் பாலசிறீதரன், பொஸ்கோ நிறுவன அலுவலர் செல்வி ஆகியோர் வழங்கி வைக்கின்றனர். (க-400)

## கிளிநொச்சி மகாதேவா இல்லத்தின் கட்டப் பணிகளுக்கு உதவுங்கள்

### யாழ்.வணிகர் கழகத் தலைவர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,செப்.2

போரினால் கடுமையாக பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மகாதேவா சிறுவர் இல்லத்துக்கு அமைக்கப்பட்டு வரும் கட்டடப் பணிகளுக்கு மேலதிக நிதி தேவைப்படுவதாகவும் அதனை வழங்குமாறும் யாழ்.வணிகர் கழகத் தலைவர் எஸ்.ஜெயசேகரம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சுமார் 350 சிறுவர்கள் தங்கியுள்ள இந்த இல்லத்தில் இடப்பற்றாக்குறை நிலவி வருகின்றது. இதனால் மேலதிகமாக ஒரு கட்டடம் அமைக்க வேண்டிய நிலையேற்பட்டது.

இதனடிப்படையில் புதிய கட்டடமொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. ஆனால் இந்தக் கட்டடத்தின் நிர்மாண வேலைகளைப் பூரணமாக செய்து முடிப்பதற்கு இன்னமும் மேலதிகமாக நிதி தேவைப்படுகின்றது.

நிதி பற்றாக்குறை காரணமாக இந்தக் கட்டடப் பணிகள் நிறுத்தப்படுமாயின் இங்குள்ள சிறார்கள் தொடர்ந்தும் நெருக்கடிக்குள் தள்ளப்படும் நிலை ஏற்படும்.

கடந்த ஜூன் மாதம் இரண்டாம் திகதி அடிக்கல் நடப்பட்டு யாழ். வணிகர் கழகத்தினரின் நிதியுதவியுடன் இடம்பெற்று வரும் இந்தக் கட்டடப் பணிகளுக்கான மேலதிக நிதியுதவியை வர்த்தகர்களும், நலன் விரும்பிகளும் வழங்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (க-4)

## வீதியும் சரியில்லை; வாகன வசதிகளும் இல்லை

# போக்குவரத்துக்குச் சிரமப்படும் தட்டுவன்கொட்டி கிராம மக்கள்

கிளிநொச்சி, செப்.2

கிளிநொச்சி தட்டுவன் கொட்டிக் கிராமத்துக்கான போக்குவரத்துப் பாதை சீரின்மை மற்றும் போக்குவரத்து வசதியின்மை ஆகியவற்றால் இங்குள்ள சாதாரண மக்கள் தொடக்கம் பாடசாலை மாணவர்கள் வரை நாளாந்தம் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் உள்ள கடற்றொழில் கிராமங்களில் ஒன்றான தட்டுவன்கொட்டிக் கிராமத்தில் 90 பாடசாலை மாணவர்கள் உள்ளடங்கலாக சுமார் 400 க்கும் மேற்பட்டவர்கள் வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலையில் இங்குள்ள மக்கள் மருத்துவ தேவைகளுக்கோ அல்லது அத்தியாவசிய தேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கோ கிளிநொச்சி நகருக்கு அல்லது தூரத்திலுள்ள ஏனைய இடங்களுக்குச் செல்லவேண்டிய நிலையிலுள்ளனர்.

ஆனால் இப்பிரதேசத்திற்கான பிரதான வீதி புனரமைப்புப் பணிகளைக்கண்டே கிட்டத்தட்ட 40 வருடங்களுக்கு மேலாகின்றது. இராமநாதபுரம் ஊரியான் ஊடாக ஆனையிறவு வரை வரும் பழைய கண்டி வீதியிலேயே இக்கிராமம் அமைந்துள்ளது. ஆனால் இந்தப் பிரதான வீதியில் உள்ள மூன்று பாலங்களும் சேதமடைந்து ஆபத்தான நிலையிலே காணப்படுகின்றன.

இதனால் இந்தப் பிரதான வீதியூடாக சாதாரணமாக சைக்கிள்களில் கூட பயணிக்க முடியாதநிலை காணப்படுகின்றது. இங்குள்ள மக்கள் தமது தேவையை நிறைவு செய்யும் பொருட்டு கால்நடையாகவே சுமார் ஐந்து கிலோமீற்றர் தூரம் நடந்து சென்று ஏ - 9 வீதியிலுள்ள தட்டுவன்கொட்டிச் சந்தியை அடைந்து, அங்கிருந்து தமது பயணத்தை மேற்கொள்ள வேண்டிய அவலநிலையில் உள்ளனர்.

எனவே இந்தக் கிராமத்துக்கான பிரதான வீதியைப் புனரமைத்துத் தருமாறும், போக்குவரத்து வசதியை ஏற்படுத்தித் தருமாறும் பல முறை பல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் இதுவரை எது வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென இந்தக் கிராம மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர். (க-6)

## திறந்த பல்கலைக்கழகத்தால் ஆங்கிலக் கற்கை நெறிகள்

கிளிநொச்சி, செப்.2

கிளிநொச்சியில் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் அடிப்படை ஆங்கிலம் மற்றும் தொழில்சார் ஆங்கிலக்கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கிளிநொச்சி 155 ஆம் கட்டைப்பகுதியில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினரால் முதன்முறையாக அடிப்படை ஆங்கில மொழித்திறனை விருத்தி செய்ய விரும்புபவர்களுக்கான அடிப்படை ஆங்கிலத் திற்கான சான்றிதழ் கற்கை நெறி மற்றும், தொடர்பாடல் திறன்களை விருத்தி செய்வதில் விசேட கவனம் செலுத்தும் வகையிலான தொழில்சார் ஆங்கில கற்கை நெறி போன்ற கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தக் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பப்படிவங்களையும் மேலதிக தகவல்களையும் 155ஆம் கட்டை, கிளிநொச்சியில் அமைந்துள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணிவரையான நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியும் எனக் கிளிநொச்சி இலங்கை திறந்த பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது. (க-6)

## இராணுவம் வெளியேறிச் சென்றது

# பூநகரி விக்னேஸ்வரா இயங்கத் தயார் பெற்றோர், மாணவர் மட்டற்ற மகிழ்ச்சி

முழங்காவில், செப். 2

பூநகரி விக்னேஸ்வரா வித்தியாலயம் மூன்றாம் தவணையிலிருந்து இயங்கவுள்ளமை தொடர்பாகப் பெற்றோர்கள் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டிருந்த போர்க்காலச் சூழ்நிலையைத் தொடர்ந்து பூநகரிப் பிரதேசத்திலுள்ள மன்னார் வீதியில் 4 ஆம் கட்டையடியில் அமைந்துள்ள விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் பாதுகாப்புப் படையினர் பெரிய முகாம் அமைத்து செயல்பட்டு வந்தனர்.

இராணுவ நடவடிக்கை காரணமாக பூநகரி பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து 2009 ஆம் ஆண்டு மீண்டும் அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதிச் சூழ்நிலையை அடுத்து பூநகரிப் பிரதேசத்திலுள்ள பல பாடசாலைகள் இயங்கிய போதிலும், மன்னார் வீதியில் இருந்த விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டிருந்ததால் இப்பாடசாலை இயங்கவில்லை.

இந்தப் பாடசாலையில் கல்வி கற்று வந்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் கடந்தமூன்று வருடங்களுக்கும் மேலாக தூர இடங்களிலுள்ள பாடசாலைகளில் போக்குவரத்துச் சிரமத்தின் மத்தியில் கல்வி கற்று வந்தனர். மாணவர்களின் நிலைப்பாடு குறித்தும் பாடசாலையை இயங்க வைக்க வேண்டிய அவசியம் குறித்தும் பெற்றோர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்திருந்தனர்.

இவர்கள் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளையடுத்து மாணவர்களின் கல்விக்கு இடையூறாகப் பல வருடங்களாகப் பாடசாலையில் இயங்கி வந்த இராணுவ முகாம் மூடப்பட்டு இராணுவத்தினரும் வெளியேறியுள்ளனர். இராணுவ முகாம் மூடப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி பாடசாலையை மூன்றாம் தவணையிலிருந்து இயங்க வைப்பதற்கான ஒழுங்குகளை கல்வித் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

பாதுகாப்புப் படையினர் பாடசாலையிலிருந்து வெளியேறியமை குறித்தும் மூன்றாம் தவணையிலிருந்து பாடசாலையை இயங்க வைப்பது குறித்தும் பெற்றோர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**CANADA | FRANCE | ITALY**
**SPAIN | SWISS | AUSTRALIA**

- போன்ற நாடுகளுக்கு விசாக்கள் பெற்றுக்கொள்ள தாமதமா?
- குறுகிய நாட்களில் பயணம் செல்லவேண்டுமா ?
- முற்பணம் எதுவும் தேவையில்லை

தரமான ஆலோசனைகளைப்பெற்று நீங்களும் வாழ்க்கையில் வெற்றிபெற Experience Consultant

உங்களது ஆவணங்களுடன் எமது கல்லூரிக்கு நேரில் வரவும்.

(சி/2684)

More Details Contact:
**0775 256 135 | ACAS** #27,St.Peter's Place, Colombo -04.

**THE SCIENCE CORNER**
**Clock Tower Lane - Jaffna.**

**2013 A/L Day Class**
(பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு)
ஆரம்பம் - 03.09.2012
திங்கள் காலை 6.30

(சி/3039)(3.6)

வழமையான ஆசிரியர் குழாம்

## அந்தியேட்டி,சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்
## மாணிக்கம் சிவசுப்பிரமணியம்

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் தொலைபேசி வாயிலாக ஆறுதல் கூறியோருக்கும் மற்றும் பல்வேறு வகைகளில் உதவிபுரிந்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் அவர்களது அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (03.09.2012) திங்கட்கிழமை இன்பர்சிட்டி அந்தியேட்டி மடத்தில் காலை 8.30 மணியளவில் நடைபெற உள்ளது. அதனைத் தொடர்ந்து அவரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வல்லிபுர பரியாரியார் ஒழுங்கை,
பருத்தித்துறை.

(சி/3045)(5.6)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### செல்வி துஷாந்தி சிறிசோமஸ்கந்தன்

(யாழ்/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை தரம் 7F,
யாழ். இந்து ஆரம்ப பாடசாலை பழைய மாணவி)



புதிய செங்குந்தா வீதி,திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி துஷாந்தி சிறிசோமஸ்கந்தன் கடந்த (30.08.2012) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சிறிசோமஸ்கந்தன் (சோமஸ் அரைக்கும் ஆலை, நாவலர் வீதி, ஆனைப்பந்தி), சறோயினி தம்பதியரின் அன்பு மகளும், திபாகர் (யா/இந்து ஆ.பா.தரம் 05), யதுஷகா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் சோதிமணியம்மா (டென்மார்க்), சுப்பிரமணியம் - மகேஸ்வரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சிறிபாலஸ்கந்தன் - அருள்மொழி (சுவீடன்), ஜெயசோதி - கலாநிதி (கொழும்பு) ஆகியோரின் பெறாமகளும், சிவகுமார் - சுலோசனா (டென்மார்க்), காந்தரூபன் - சுகுணா (சுவீடன்), கணேசலிங்கம் - கலாராணி, நாகநாதன் - நிர்மலாதேவி, குகநாதன் - தயாளினி, விசுவநாதன் - உஷாந்தினி ஆகியோரின் பாசமிகு மருமகளும், துஷாந், கிரிஷாந், நிரோசாந் (டென்மார்க்), சுஜிந்தன், இந்துஜன், அபிராமி (சுவீடன்), குகதர்சன் (ஓமான்), பிரகாசினி, பிரியதர்ஷன், நிரோஸ், அர்ச்சனா, கஜலக்ஷன், சயர்த்தனா, சங்கீர்த்தனா, சக்திகா, சதுர்த்திகன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் யுதிஷ்ரன், திவ்யா, விதுஷன் ஆகியோரின் பாசமிகு உடன்பிறவா சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.09.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புதிய செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

(22336)(3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## தேர்தல் சட்ட மீறல் சம்பவங்கள் 260

கொழும்பு,செப் 2

மாகாண சபைத் தேர்தல் சட்ட மீறல்கள் குறித்து 260 சம்பவங்கள் பதிவாகியுள்ள தாகப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக 50 பேர் கைதுசெய்யப்பட்டுள்ள தாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

தேர்தல்சட்ட மீறல்கள்தொடர்பில்கிழக்கு மாகாணத்திலேயே அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (த)

## நகை மோசடி செய்த நபர் தலை மறைவு

யாழ்ப்பாணம், செப். 2

திருமண வைபவத்துக்கு அணிந்துவிட்டுத் தருவதாகக் கூறி 2 லட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளை இரவல் வாங்கியவர் அவற்றைத் திருப்பித்தராது மோசடி செய்துள்ளதாகப் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

நாவற்குழி தச்சந்தோப்புப் பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கடந்த செவ்வாய்க்கிழமை முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

அந்த நகைகளை இரவல் வாங்கியவர் என்று குற்றஞ்சாட்டப்படும் சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார். அது தொடர்பில் விசாரணை இடம்பெற்று வருகிறது என்றார் பெரேரா.

(த-4)

## லஞ்சம் பெற்ற உயரதிகாரி கைது

கொழும்பு,செப் 2

ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தை லஞ்சமாகப் பெற்றுக்கொள்ள முயற்சித்த மத்திய மாகாணப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர், லஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக் குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

தனியார் பஸ் உரிமையாளர் ஒருவரிடம் குறித்த லஞ்சத் தொகையை பெற்றுக்கொண்ட போது கண்டி நகரில் வைத்து இவர் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த பஸ் உரிமையாளருக்கு வீதி அனுமதிப் பத்திரம் ஒன்றை வழங்க விசேட செயலாற்றவெனக் குறித்த லஞ்சம் பெறப்பட்டுள்ளது.

கிடைக்கப்பெற்ற முறைப்பாடு ஒன்றின் அடிப் படை யில் கைது செய்யப்பட்ட மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர், மேலதிக விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

(த)

### காணி விற்பனைக்கு

மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம், லோட்டஸ் வீதியில் 3 பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு.
குறிப்பு : மெயின் றோட் காணி. தொழில் செய்வதற்கு உகந்தது.
தொடர்பு: 077 8736777, 077 6617845
(22338)(8.14)

### கணினிகள் விற்பனைக்கு

Pentium -4 Computers
P4-2.8 GHz/512/40/CD Rs:11,250/=
P4-3.0 GHz/512/40/CD Rs:11,900/=
P4-3.0 GHz/1GB/80/DVD Rs:13,900/=
மேலதிகதொடர்பு: 075 904 4068
(22431)(5-6)

### வீடு வாடகைக்கு

யாழ். நகரப்பகுதியில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 3441 329
(22451)

### வீடு விற்பனைக்கு

கொக்குவில் மேற்கு, பூநாறிமரத்தடிக்கு அருகில் உள்ள இரண்டு பரப்பு காணியில் கிணறு, சுற்றுமதில் மற்றும் சகல வசதிகளுடன் கூடிய நல்ல நிலையிலுள்ள வீடொன்று உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 222 2537, 075 041 3579, 026 2220 259
(22341) (4.5.6.45)

### பிரத்தியேக வகுப்புக்கள்

தரம் A/L (2013, 2014) பொருளியல் பாட மாணவர்களுக்கான கடந்த கால பரீட்சை வினா விடைகளுடன் மற்றும் பாட அலகுகளுடன் சிறந்த முறையில் உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும், மேலும் தரம் 6,7,8, 9, 10, 11 ஆம் தர மாணவர்களுக்கான கணிதபாடமும் கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு ஆசிரியர் K. [illegible]
0771102916
(சி/3050)(3.8)

**Salon Aysha** வின் **Beauty Course.**

வகுப்புக்கள் ஆரம்பம்

மூன்று பிரிவுகளாக நடைபெறவுள்ளன

1 மாதம், 3 மாதம், 6 மாதம் பிரிவுகளாக வகுப்புக்கள் நடைபெறும்.

மணப்பெண் அலங்காரம் Facial, கண் இமை சீர் செய்தல் Hair-Style, Haircut போன்ற சகல Beauty Course பயிற்சி அளிக்கப்படும்.

மணப்பெண் அலங்கார ஓடர்களும், கேக் ஐசிங் ஓடர்களும் எடுக்கப்படும்.

தொடர்பு: 0778022844
Aysha Munawwar, 116A, கோப்பாய் வீதி, உரும்பிராய்.
(6.9.10)

- தபால் மூலம் -

## ஆறு மாத கால டிப்ளோமா

**Course Length - Six Month**

23

**SEPT.'2012 TO FEB.'2013**

*தமிழ் மொழி மூலம்*

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொன்டிசூரி டிப்ளோமா |

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

- கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம்
- வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு
- ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா (சி/2683)(6.8.14)

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**Mobile: 0777 140 844, 071 803 48 48**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

(சி/2683)

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.09.2012

## ஈர விழிகளின் நீங்காத சோக நினைவுகளுடன் 31 ஆம் நாளில்.....



தோற்றம்
1961 ★ 12 ★ 06

மறைவு
2012 ★ 08 ★ 04

## அமரர் முருகேசு நடராசா

(P.M. துரை)

நாள்கள் பல நகர்ந்தாலும் எம் துயரம் ஆறாதப்பா
ஆயிரம் உறவுகள் தான் உடனிருந்தாலும்
உன் அன்புக்கு ஈடாகுமோ ?
சிரித்த முகத்துடன் சிங்கார மொழி பேசி
எல்லோரது உள்ளங்களிலும் இடம் பிடித்த உந்தனிடம்
காலனுக்கும் கருணை இல்லையோ ?
அன்பே உன் இனிய நினைவுகளுடன்
ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து துயரில் பங்கு கொண்டவர்கள், தொலைபேசி, தந்தி, ஈ.மெயில் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்கள், பத்திரிகைகளில் மரணச்செய்திகள் பிரசுரித்தோர், கண்ணீர்அஞ்சலி பிரசுரங்களை வெளியிட்டோர் மற்றும் அஞ்சலிப் பிரார்த்தனை உரை நிகழ்த்திய அனைத்து உள்ளங்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாளை (03.09.2012) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் 31 ஆம் நாள் நினைவுப் பிரார்த்தனைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யா/இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை அருகில்,
இடைக்குறிச்சி, வரணி

(22331)(6.7.8)

மு. ஜெயராசா (சகோதரர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

கோப்பாயில் யாழ்-பருத்தித்துறை பிரதான வீதியுடன் 3 பரப்பு 6 குழி காணி விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு : 0722456298**

## வேலை ஆள்கள் தேவை

புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்கள் பழக விரும்புபவர்கள் ஆண், பெண் இருபாலாரும் தேவை. மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
22ஏ, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். (22326)(5-6)

## வாடகைக்கு

கோப்பாயில் யாழ்-பருத்தித்துறை பிரதான வீதியுடன் 3 1/2 பரப்பு காணியில் 3 படுக்கையறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. வங்கிகள், தனியார் நிறுவனங்களுக்கும் உகந்த இடம். யாழ்ப்பாணத்தில் இருந்து கோப்பாய் நோக்கி 5 கி.மீ தூரத்தில் வீடு அமைந்துள்ளது.

**தொடர்பு : 0722456298**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், அரியாலை திருமகள் வீதியில் 3 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

தொ.பே:077 789 7795 (ரி/2677)(5-6)

## Herbal Health Care Centre

யாழ்ப்பாணத்து சித்தமருத்துவமுறைகள், இந்தியா கேரளா ஆயுர்வேத, சித்த மருத்துவ முறைகளை உள்ளடக்கிய பக்கவிளைவற்ற முற்றிலும் மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட மருந்துகள் மூலம் சிகிச்சையளிக்கப்படுகிறது.

தலைமுடியுதிர்தல், முகப்பருக்கள் ஏற்படல், சோரியாசிஸ், வெண்குஷ்டம் (Leucoderma),குழந்தைகளுக்கு ஏற்படும் சளி, முட்டு, காய்ச்சல், கிரந்தி பசியின்மை போன்றவற்றுக்கு விசேட சிகிச்சையளிக்கப்படுகின்றது. மூட்டுக்களில் ஏற்படும் வீக்கம், நடக்கமுடியாத நிலைமை, முள்ளந்தண்டுப் பாதிப்பு, வாதரோகம், பாரிசவாதநோயாளிகள், நாள்பட்ட ஒற்றைத் தலைவலி, வயிற்றுப் புண், ஈரல்நோய்கள், நீரிழிவு நோயாளிகளில் ஏற்படும் கால், கை விறைப்புத்தன்மை, புறஸ்ரேற் பாதிப்புகள் போன்றவற்றுக்கு சிறப்பான சிகிச்சை வழங்கப்படுகிறது. மருத்துவக்குளியல், எண்ணெய்க்குளியல் போன்றவற்றுக்கு முன்பதிவு அவசியமாகும். இருதய பாதிப்புள்ளவர்கள், இதயபாதிப்பு வரக்கூடிய சந்தர்ப்பம் உள்ளவர்களுக்கும் முற்கூட்டியே வருமுன் பாதுகாப்புச்சிகிச்சையும் வழங்கப்படுகிறது.

சித்த ஆயுர்வேத, பாரம்பரிய மருத்துவ சேவையை தினமும் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 7 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இல. 021 222 2537, 075 041 3579

Herbal Health Care Centre
65, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில்.
(பூநாறி மரத்தடிக்கும் கொக்குவில் சந்திக்குமிடையில்) (22328)(45.7.6)


## பாடசாலைகள் திங்கள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 02

திட்டமிட்டவாறு பாடசாலைகள் மூன்றாம் தவணைக்காக மீண்டும் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகும் எனவும் ஆசிரியர்களின் 13 அம்சக்கோரிக்கைகளை வலியுறுத்திய பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நடத்துவது தொடர்பான முடிவுகள் பின்னர் கலந்தாலோசித்து எடுக்கப்படும் எனவும் இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

(16-4)


## CHEMISTRY CENTRE

அரலி வீதி(ஒட்டுமடச் சந்தி அருகில்)

**INORGANIC**

பிரிவு I Mon, Tue - 4.15 - 5.15 pm
பிரிவு II Wed, Thurs - 6.15-7.15 pm
பிரிவு III Sat, Sun - 4.30 - 5.30 pm
பிரிவு III கொக்குவில், மஞ்சவனப்பதி வடக்கு வீதியில்

**ORGANIC**

Sat, Sun - 6.30 - 7.30 pm

பரீட்சைக்குத் தோற்றிய (2012) மாணவர்களும் இணையலாம்.

By: அன்பு (22417)(5-6)





# மரண அறிவித்தல்

## திருமதி டோறா பிலிப்

(இளைப்பாறிய ஆசிரியர், யா/புனித மரியாள் வித்தியாலயம்- O.L.R)



திருமதி. டோறா பிலிப் (இளைப்பாறிய ஆசிரியர், யா/புனித மரியாள் வித்தியாலயம். O.L.R) அவர்கள் 31-08-2012 இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற P.A. பிலிப்அரசரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஜேக்கப்-பிலிப்பாச்சி தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னர் அந்தோனிப்பிள்ளை (கதிரவேலு) திருமதி அன்னம்மா அந்தோனிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும், அன்ரனி பிலிப் கிறேஷியன் (Australia) S.பீற்றர் (Swiss) ஆகியோரின் பாசமிகு சிறிய தாயாரும், T.தனுஷன் (Germany) அவர்களின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான குருசுமுத்து, செல்லையா, அந்தோனிப்பிள்ளை, ஆசீர்வாதம், அக்னஸ், செபஸ்ரியாம் பிள்ளை, ஆரோக்கியநாதர் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள், நாளை (03.09.2012) திங்கட்கிழமை இல. 17, டேவிற்வீதி (டோறாபவன்) யிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்.மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, நல்லடக்கத்திற்காக யாழ்ப்பாணம் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 17, டேவிற் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(22432) (6,9,10)

# மரண அறிவித்தல்

## திருமதி கந்தசாமி இரத்தினம்



நாவலடி, புலோலி மத்தி, பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி இரத்தினம் நேற்றுமுன்தினம் (31.08.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் கந்தசாமியின் மனைவியும், பரமேஸ்வரி, கமலாசனி, இராஜகோபால், இராசநாயகி, இராசலட்சுமி, அருந்தவராசா (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செலயகம் - தென்மராட்சி) ஆகியோரின் அன்புத் தாயும், சிவபாதசுந்தரம், மாணிக்கவாசகர், வாசுகி, சிவபாலு, தர்மராசா (யா/சிவகுரு வித்தியாலயம்- வல்வெட்டித்துறை), தசரதி ஆகியோரின் மாமியும், ஜெயரூபன் (கனடா), ஜெயரூபினி, ரேணுகா, பிரியங்கா, சேயோன், பிரதீபன், துர்க்கா, சோபனா, வேணுஜா, நிதுஷா, மிதுலா, தனுஷா, துஷ்யந்தன், ஜெனார்த்தனன், மதுரா, அஸ்மிலா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஜனுசன், அனுசிக்கா, ஜாகவி, ஆர்த்திகை ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (01.09.2012) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலடி,
புலோலி மத்தி,
பருத்தித்துறை.

தகவல்:
இராஜகோபால் (மகன்),
அருந்தவராசா (மகன்),
(சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்).

(18755) (45.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 80

# மலச்சிக்கலா? ஏன்...? எப்போது

**சந்தர்ப்பம் I**

**இடம்:** வெளிநோயாளர் பிரிவு
**வைத்தியர்:** என்ன பிரச்சினை அம்மா?
**தாய்:** பிள்ளைக்கு மலச்சிக்கல். இப்ப அஞ்சு வயதாகுது. பிறந்ததில இருந்து இந்தப் பிரச்சினை இருக்குது. அடிக்கடி 'பாமசியில மருந்து எடுத்துக் கொடுத்தாத்தான் கிரமமாப் போகும்.
**வைத்தியர்:** ஏன் இறுக்கமா, இரத்தம் கலந்து போறதா?
**தாய்:** இல்லை, அப்பிடி ஒண்டும் இல்லை. 'நோமலாத்' தான் போறது. ஆனால் இரண்டு மூன்று நாளைக்கு ஒருக்காத்தான் போகும். ஒவ்வொரு நாளும் போறத்துக்குத்தான் மருந்து கொடுத்தனான்.

**சந்தர்ப்பம் II**

**இடம்:** குழந்தை நல கிளினிக்
**வைத்தியர்:** பிள்ளைக்கு மலச்சிக்கல் இருக்கிறபடியால் தான் பசிக்குறைவு வளர்ச்சியின்மை எல்லாம் இருக்குது. ஏன் இவ்வளவு காலமும் வைத்திய ஆலோசனை எடுக்கேல்ல?
**தாய்:** இதால வேறு ஒரு பிரச்சினையும் இருக்கேல்ல. போற நாளில மட்டும் தான் கொஞ்சநேரம் அழுகையும் ஆர்ப்பாட்டமும். அதுவும் ஐந்து ஆறு நாளுக்கு ஒருக்காத்தானே... அதுதான் பிரச்சினையில்லை எண்டுட்டு விட்டுட்டம்.

'மலச்சிக்கல்' சில வேளைகளில் அதீதமான பிரச்சினையாகக் கருதப்படுகிறது. சில சந்தர்ப்பங்களில் அதன் தீவிரம் உணரப்படாமல் மிக எளிதாக எடுக்கப்படுகிறது மேலுள்ள இரு சந்தர்ப்பங்களை போலவே.

ஒழுங்காக மலங்கழித்தல் குழந்தையின் ஆரோக்கியத்தில் மிக இன்றியமையாத ஒரு விடயமாகும். ஒழுங் காக என்பது தினமும் என்ற அர்த்தத்தில் குறிப்பிடப்படவில்லை. ஒரு வயதுக் குட்பட்ட குழந்தைகள், 4 இலிருந்து 7 நாள்களுக்கு ஒருமுறை மலங் கழிப்பதும் உண்டு. தினமும் இரண்டு/ மூன்று முறை மலங்கழிக்கும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன.

வளர்ந்த சிறுவர்களில் 2-3 நாள்களுக்கு ஒருமுறை மலங்கழித்தல் சாதாரண நிலைமையாக கொள்ளப்படுகிறது. அதிகரித்த கால இடைவெளியோடு மலத்தின் இறுக்கத்தன்மை, கழிக்கும்போது நோவை உணர்தல், மலத்துடன் இரத்தம் காணப்படுதல் போன்ற அறிகுறிகளும் இருக்கும்போதே 'மலச்சிக்கல்' நோய் நிலைமையாக அடையாளம் காணப்படுகிறது.

இரண்டு கிழமைகளுக்கும் மேலாக, மலங்கழித்தலில் தாமதத்துடன் மேற்குறிப்பிட்ட சிக்கல்களும் உள்ள நிலைமையை 'மலச்சிக்கல்' எனக் குறிப்பிடுகிறோம். உணவுக்கால் வாயில் ஏற்படும் கட்டமைப்பு ரீதியான பிரச்சினைகளால் இந்த நிலைமை ஏற்படும்போது அல்லது தைரொயிட் சுரப்பு குறைவுபட்டால் இந்த நிலைமை ஏற்படும்போது பிறந்த சில நாள்களில் இருந்தே மலச் சிக்கல் அடையாளங்காணப்படுகிறது.

தொழிற்பாட்டு ரீதியான 'மலச்சிக்கல்' குழந்தையின் ஒருமாத வயது பூர்த்தியின் பின், எந்த வேளையிலும் உருவாகலாம். இது அதிகமான சந்தர்ப்பங்களில் மலங்கழிக்கும்போது பிள்ளை நோவை உணர்வதாலும் அதன் காரணமாக மலத்தை அடக்கப்படுவதாலும் ஏற்படுகிறது.

மலங்கழிக்கும்போது, நோவை உணர்வதற்கு மலத்தின் இறுக்கத் தன்மையே பெருபாலும் காரணமாகிறது. உண்ணும் உணவில் நார்த் தன்மையுள்ள உணவுகள் குறைதல், போதியளவு நீர் அருந்தாமை என்பன இதில் பங்களிக்கின்றன. மலங்கழிக்கப் பழக்குவதில் உள்ள குறைபாடுகளும் மலச்சிக்கலை ஏற்படுதுவதில் மிகப் பெருமளவு பங்களிக்கின்றன. மலங்கழித்தலுக்கான ஏற்ற சூழலை உருவாக்குவது மிக அவசியமானது.

குழந்தை மலங்கழிக்கும் உணர்வை சைகைகளாகவோ வார்த்தை மூலமோ வெளிப்படுத்தும்போது அதை அடையாளம் காண்பது இவற்றில் முதற்படியாகும். குழந்தையின் வயதுக்கேற்றபடி, மலப்பெட்டியிலோ (potty) அல்லது மலசல கூடத்திலோ அமர்த்திப் பழக்குவது மிக நன்று.

இவ்வாறு பழக்கும்போது பிள்ளைகள் நின்று கொண்டோ அல்லது விளையாடிக்கொண்டிருக்கும் போதோ மலங் கழிக்கப் பழகுவதும் உண்டு. இதன்போது மலங்கழித்தல் நிகழ்வுக்குப் பங்களிக்கின்ற தசைகளின் தொழிற்பாடு பூரணமாகக் கிடைப்பதில்லை. மலங் கழிப்பதன் பூரணமான திருப்தியைக் குழந்தை பெறுவதுமில்லை. இதனால் அடுத்த தடவை மலங்கழிக்கும் உணர்வை குழந்தை பெறும்போது அதைச் செயற்படுத்துவதில் தயக்கம் கொள்கிறது. ஒழுங்கற்ற மலங்கழித்தல் திண்மத் தன்மையான, இறுக்கமான மலத்தை உருவாக்குகிறது. அத்துடன் மலங்கழிக்கும்போது நோவை ஏற்படுத்தி மலச்சிக்கல் என்ற நோய் நிலைமைக்கு இட்டுச் செல்கிறது.

வெட்கம் காரணமாகவோ, மலங் கழித்தலின்போது ஏதாவது காரணங்களுக்காக தண்டிக்கப்படுவதாலோ அல்லது பயத்தினாலோ மேற்குறிப்பிட்ட வகையான மலச்சிக்கல் உருவாக வாய்ப் புண்டு.

குழந்தை வளரும்போது மலங்கழிக்கும் செயலை குறிப்பிட்ட நேரத்துக்கு குறிப்பிட்ட இடத்தில் அமர்த்திக் கிரமமான பழக்கமாக மாற்றுவது அவசியம். தினமும் ஒரு வேளையில் சாப்பாட்டுக்குப் பின் 10-15 நிமிடங்கள் அமர்த்திப் பழக்குவது நல்லது. வேறு நோய்கள் ஏற்படும்போது, வைத்தியசாலையில் அனுமதிக்கும்போது, மலங் கழித்தலில் ஒழுங்கு மாற்றங்கள் நிகழ்வதுண்டு. ஆனால் அவை நிரந்தர மானவை அல்ல.

நோயின் தீவிரத்தைப் போலவே, தேவையற்ற அல்லது நீண்டகால மருந்துப் பாவனையும் குழந்தைகளின் உடல் நலத்துக்கு மிகப் பாதிப்பை ஏற்படுத்தவல்லது.

மலச்சிக்கலுக்கான காரணியைக் கண்டறிந்து அதை நீக்குவது சிகிச்சையின் முதற்படியாகும். குறையான உணவுப் பழக்கங்கள், போதியளவு நீர் அருந்துதல் என் பன உறுதி செய்யப்பட வேண்டும். குழந்தைகளுக்கு உணவுண்ணப் பழக்குவதுபோல, மலங்கழித்தலைப் பயிற்றுவிப்பதையும் பெற்றோர் முக்கிய கடமையாக கருதுவது அவசியம். மலங் கழிக்கும் சூழல் வெட்கம், பயம், அருவெறுப்பு ஆகிய உணர்வுகளை தோற்றுவிக்காததாக அமைவதும் அவசியமாகும்.

மலச்சிக்கல் தொழிற்பாட்டு ரீதியானதெனினும் ஆரம்பத்தில் மருந்துப் பாவனை தேவைப்படலாம். எந்த வேளையிலும் மருத்துவரின் ஆலோசனையுடனேயே மருந்தைப் பெற வேண்டும்.

ஒரு தடவை கொடுத்த மருந்தை மருத்துவ ஆலோசன இன்றி மீள மருந்துக்கடைகளில் பெற்று பயன் படுத்துவது பொதுவாக அவதானிக்கப்படுவதொன்று. இது குழந்தையின் இயல்பான மலங்கழித்தலை மிக பாரதூரமாகப் பாதிக்கும் ஒரு விடயமாகும்.


ஒழுங்கான மலங்கழித்தல் பயிற்சியும், ஆரோக்கியமான மலங்கழிக்கும் சூழலும் குழந்தையின் வயது தொழிற்பாடுகளுக்கு தகுந்தவையாக வழங்கப்படவேண்டும்.

மேற்குறிப்பிட்ட செயன் முறைகளால் மலச்சிக்கலைக் குணப்படுத்தப்பட முடியாதபோது, வைத்திய ஆலோசனையை நாடுவது அவசியம். ஏனெனில் இந்த மலச்சிக்கலானது சில அரிதாகக் காணப்படுகின்ற நோய் நிலைமைகளாலும் ஏற்படலாம். நீண்டகால மலச்சிக்கலானது குழந்தையின் வளர்ச்சியில் பின்னடைவை ஏற்படுத்துகின்றது. உள ஆரோக்கியத்திலும் இந்த நிலைமை பெரிய தாக்கத்தை விளைவிக்கின்றது.

மலச்சிக்கல் எனும் நோய் நிலைமையைச் சரியாக ஆரம்ப நாள்களிலேயே அடையாளம் காண்பதாலும், சரியான முறைகளைக் கடைப்பிடிப்பதாலும் குழந்தையின் உடல், உள ஆரோக்கியத்தில் நேர்முகமான பங்களிப்பைச் செய்ய முடியும்.

**மருத்துவர் குமுதினி கலையழகன்,**
**குழந்தை நல விரிவுரையாளர், யாழ். போதனா வைத்தியசாலை**

# ஆரோக்கியமான உங்கள் பாதங்களுக்கு.....



உங்கள் முகப் பராமரிப்பில் எவ்வளவு அக்கறை காட்டுகிறீர்களோ அதைவிட உங்கள் பாதங்களைப் பராமரிக்க வேண்டிய அவசியம் உங்களுக்கு உண்டு. ஏனெனில் இடத்துக்கு இடம் நகர்ந்து எமது தேவைகளை இயல்பாக பூர்த்தி செய்வதற்கு இறைவனால் அளிக்கப்பட்ட இயற்கையான கொடை பாதங்களாகும்.

எனவே இயற்கையாகக் கிடைத்த இந்தச் செல்வத்தை நாம் கவனமின்றி விடுவது நியாயமாகுமா?

**உங்கள் ஆரோக்கியமான பாதக் கவனிப்புக்காக...**

★ உங்கள் பாதங்களைத் தினமும் கூர்ந்து அவதானித்தல் வேண்டும். அத்துடன் பாதங்களைச் சுத்தமாக பேணுதல் வேண்டும்.

★ குறைந்தது பாதங்களை ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது கழுவுதல் வேண்டும்.

★ பாதங்களை நன்றாக உலர்ந்ததாக வைத்திருத்தல் வேண்டும்.

★ ஈரலிப்பாக வைத்திருக்கக்கூடிய பூச்சுக்களைப் [cream] பயன்படுத்த வேண்டும்.

★ உங்களுடைய கால்விரல் நகங்களைக் குறுக்காக, தட்டையாக, நேராக வெட்டுதல் வேண்டும்.

★ கால்களில் ஏதாவது சிக்கல்கள் ஏற்பட்டால் உடனடியாக வைத்தியரை நாட வேண்டும்.

★ கால்களில் உணர்ச்சி குறைவாக இருந்தால் அதைபற்றிக் கவனமெடுத்தல் வேண்டும்.

★ புகைத்தலைத் தவிர்த்தல் வேண்டும். ஏனெனில் பாதங்களுக்கான குருதி விநியோகத்தை இது தடை செய்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

★ கால்களை ஒன்றன்மேல் ஒன்றாக குறுக்கே போடுதலைத் தவிர்க்க வேண்டும்.

★ சூடான பொருள்களுடன் காலினது தொடர்பைத் தடுத்தல் வேண்டும்.

★ குளித்தலுக்கு சூடான நீர் பயன்படுத்தலாகது.

★ மோட்டார் சைக்கிளில் பின் ஆசனத்தில் உட்கார்ந்து செல்லும் போது புகை போக்கியில் [silencer] பாதங்களை வைக்காது தவிர்த்தல் வேண்டும்.

★ பாதங்களுக்கான உடற் பயிற்சிகளை ஒழுங்காகவும் கிரமமாகவும் செய்தல் வேண்டும்.

★ காயங்கள் ஏற்படின் அவற்றுக்கு சிறந்த முறையில் மருந்து கட்ட வேண்டும்.

★ பாதணிகள் அற்று நடத்தலாகாது.

★ உங்களுடைய பாதங்களைத் தீயிலிருந்தும், குளிரிலிருந்து கூர்மையான பொருள்களிலிருந்தும் பாதுகாக்க வேண்டும்.

★ குளிரான, சூடான மேற்பரப்புகளில் பாதணிகளற்று நடக்கக்கூடாது.

**உங்கள் பாதத்தின் ஆரோக்கியத்தைப் பேணச் சிறந்த பாதணிகளைத் தேர்ந்தெடுப்பது எப்படி?**

★ மென்மையான சௌகரியத்தைத் தரக்கூடிய சப்பாத்துக்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

★ கூரான முனையுடைய திறந்த சப்பாத்துக்களை அணிவதைத் தவிர்க்கவும்.

★ பெட்டி வகை [box type] பாதத்திற்கேற்ற இடமுள்ளதான [well rooming] சப்பாத்துக்களைப் பயன்படுத்தல்.

★ உயரமான குதியுள்ள பாதணிகளைப் பயன்படுத்தலாகாது.

★ வீட்டில் தட்டையான சப்பாத்துக்களைப் பயன்படுத்த வேண்டும்.

★ பாதங்களில் ஏதாவது சிக்கல்கள் அவதானிப்பின் நீரிழிவு நோயாளர் பாதணிகள் [diabetic shoes] பயன் படுத்த வேண்டும்.

★ உடற்பயிற்சி செய்யும்போது உடற்பயிற்சி வீரர்கள் அணியும் பாதணிகளை பயன்படுத்த வேண்டும்.

★ எப்பொழுதும் இறுக்கமற்ற பருத்தி, பொலியஸ்ரர் கலந்த காலுறைகளை அணிதல் வேண்டும்.

[தொடரும்]

பி.சர்மிளா
தாதியக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைச்சி கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேர்ட் விற்பனைக்கு உண்டு. இறைச்சி : 420/=

**K.K. பாம்**

பருத்தித்துறை றோட்,
அருளம்பலம் ஒழுங்கை,
கல்வியங்காடு.
(சனி, ஞாயிறு, புதன் மட்டும்)

(22312) (6,7,10)

## A/L, O/L முடிவடைந்ததா? உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

18-30 வயதிற்குட்பட்ட ஆண்கள், பெண்கள் எமது சிறந்த தொழிற்பட்டறைகள் பலவற்றிற்கு பொதி செய்தல், மேற்பார்வை செய்தல், களஞ்சியப்படுத்தல் போன்ற பிரிவுகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட இருக்கின்றனர்.

சம்பளம்: 18,000 - 25,000/= வரை

முகவரி: புதிய பஸ்தரிப்பிடம்,
அநுராதபுரம்.

(20868) (5-6-7) தொடர்பு: 071 346 0295

## வீடு விற்பனைக்கு

நுணாவில் கிழக்கு கல்வயல் சாவகச்சேரியில் (துர்க்கை அம்மன் வீதி) 3 Rooms, 2 Halls, Kitchen உடன் புதிய நிலையில் உள்ள வீடு 4½ பரப்புக்காணியுடன் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 7724469

(சி/2670)(6-7-8)

## வீடு விற்பனைக்கு

மானிப்பாய் லோட்டன் றோட்டில் 7 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 7641448, 077 7825637

(சி/2671)(6-7-8)

# NEW SCIENCE COLLEGE

**வெங்கடேசன் வீதி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்**

## 2013 A/L

### DAY CLASS

செவ்வாய், புதன், வியாழன் 7.30 - 9 AM

## COM. MATHS

திரு. பிரேம்நாத்

ஆரம்பம் : 05.09.2012 Model Paper 3. p.m

(சி/3048)(6.8)

உடனடி வேலைவாய்ப்பு

# டுபாய் / அபுதாபி

அரிய சந்தர்ப்பம்



ஐக்கிய அரபு நாட்டில் உள்ள பிரபல நிறுவனங்களுக்கு கீழ்காணும் வெற்றிடத்திற்கு உடனடியாக ஆட்கள் தேவைப்படுகின்றனர்.

| ஆங்கிலம் பேசத் தெரிந்த, உயரம் 5'6" உடைய | Nos. | சம்பளம் | OT |
|---|---|---|---|
| SECURITY GUARDS | 50 | AED 2000 | AED 770 |

SLBFE Charges : அரசால் அனுமதிக்கப்பட்ட கட்டணம் மட்டும். 1AED = 36ரூபா

**Benefits / Conditions**

தங்குமிடம் மற்றும் உள்ளூர் பிரயாண ஒழுங்கு, மருத்துவம் - கம்பனியால் ஒழுங்கு செய்யப்படும், உணவு - கம்பனியால் தரப்பட மாட்டாது. வேலை நேரம் தினமும் 9 மணித்தியாலங்கள் 1 மணித்தியால விடுகை மற்றும் 02 மணித்தியால OT, இன்சூரன்ஸ் - UAE சட்டங்களுக்கு அமைவாக கம்பனியால் வேலை செய்யும் காலங்களில் ஒழுங்குசெய்யப்படும். 02 வருட சேவை ஒப்பந்தம். இரண்டுவருடத்திற்கு ஒருமுறை திரும்பி வர விமானச் சீட்டு. கிழமையில் 01 நாள் விடுமுறை. (நிலையான மேலதிக வேலை) ஏனைய விதிமுறைகள் UAE சட்டத்திற்கு அமைவானதாகும்.

**நேர்முகப் பரீட்சைகள் இம்மாதம்**
**செப்ரெம்பர் 08ம் திகதி சனிக்கிழமை**
**(காலை 10.00 முதல் மாலை 4.00 மணி வரை)**

நேர்முக பரீட்சைக்கு வரும்போது உங்களின் பாஸ்போட், சுயவிபரக்கோவை, கல்விச் சான்றிதழ்கள், முன்னனுபவச் சான்றிதழ்கள் மற்றும் 08 பாஸ்போட் அளவு புகைப்பட பிரதிகள் (White Background) தவறாமல் கொண்டுவரவும்.

AL/Advt/2491/32,33/12

## AL - AZAB Travels (Pvt) Ltd

No. 67, 1st Floor, Pradeepa Mawatha, Colombo 10.
(மாளிகாவத்தை பொலிஸ் நிலையத்திற்கு முன்னால்)
L. L. No. 2491
Tele : 0717 335 335 / 071 988 54 54
E-mail : alazabtravels@gmail.com


# மரண அறிவித்தல்

## திருமதி இராசம்மா சின்னத்துரை (ஆசையம்மா)



முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு 1 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் திருநெல்வேலியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட இராசம்மா சின்னத்துரை (31.08.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னப்பர் சின்னத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சின்னப்பர்- மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் நாகமணி, சின்னையா சின்னம்மா, சின்னக்குட்டி இளைய தம்பி ஆகியோரின் சகோதரியும், செல்லத்துரை (செல்வ ரட்ணம் - பிரான்ஸ்), மகேஸ்வரி (செல்லம்-பிரான்ஸ்), கனகையா (சிறி- லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், தயாளசிங்கம் (பிரான்ஸ்), இந்திராணி (இந்திரா - பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(03.09.2012) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று கோண்டாவில் இந்து மயானத்தில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'கணேசவாசா', திருநெல்வேலி கிழக்கு,
காளி கோயிலடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(22399)(5.6)

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.

*SERVICES OF WORKS SUPERVISOR (CIVIL) ON ASSIGNMENT BASIS AT ARIVIYALNAGAR, KILINOCHCHI*

### WALK IN INTERVIEW

Applications are invited from suitably qualified persons for the above post in order to carry out the following tasks:

* Supervision of Labourers
* Supervision of all Maintenance works
* Assist to Dean/Agriculture and Works Engineer on day to day activities.

NOTE: Selected candidate should reside in the working place at Ariviyal Nagar, Kilinochchi. Accommodation facilities will be provided.

Candidates, who are interested in the above, are requested to present themselves for an interview with their CV and relevant documents on 05.09.2012 at 10.00 a.m in the Board Room of this University.

**Qualifications:**

a. National Certificate in Technology (NCT) or equivalent qualifications with 3 years experience may be obtained while following the NCT Course.

*OR*

b. G.C.E. (Ordinary Level) Examination in 6 subjects at not more than 2 sittings with at least 5 years experience as a Supervisor, in the relevant field in a Government, Local government or State Corporation or a recognized Engineering Establishment.

Remuneration: Rs. 22,500/= (fixed) per month.

Registrar
30.08.2012

(சி/ 6,7,10)




உயர்கல்வித் துறையில் முன்னோடி வழங்கும், ரூ.150,000/- (குறைந்த பட்சம்) மாத வருமானத்தை உறுதிப்படுத்தும் சர்வதேச கல்வித் தகைமை!

**BCAS CAMPUS**

# BTEC HND in Quantity Surveying

Leading to **BSc (Hons)** From the University of Wolverhampton, UK

### Unique feature of QS course at BCAS

- நவீன கற்கை வசதிகளுடன் கூடிய பிரத்தியேக QS கற்கை நிலையத்தில் வழங்கப்படும் பாடநெறி
- முன்னால் மொரட்டுவ பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் அனுபவமிக்க QS நிபுணர்களையும் கொண்ட முழுநேர விரிவுரையாளர்கள்.
- முன்னணி நிறுவனங்களினூடாக வழங்கப்படும் நடைமுறைப்பயிற்சிகள்
- RICS, CIOB, IQSLல் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்
- £4500 வரை பிரித்தானிய Top - Up கற்கை நெறிகளிற்கான புலமைப்பரிசில்
- தற்போது இலங்கையிலேயே Top-Up கற்கைநெறியை பூர்த்தி செய்யும் அறிய வாய்ப்பினை BCAS கல்லூரி உங்களுக்கு வழங்குகின்றது
- கட்டாரில் தொழில் புரிந்துக்கொண்டே கட்டார் BCAS கல்லூரியில் Top-Up கற்கைநெறியை பூர்த்தி செய்யும் வாய்ப்பு.
- 13 வருட நம்பகமும் சிறப்பும் மிக்க உயர் கல்விச்சேவை

**For details: 0772 834595**

Hotline 2559255 | www.bcas.lk

British College of Applied Studies

32, Dharmarama Road, Colombo 06. Tel: 0112 501145, 0773 114105
344, Peradeniya Road, Kandy. Tel: 0812 224731, 0777 634508
294 ¼, Trinco Road, Batticaloa. Tel : 065-2228451, 0777 286676


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வல்வெட்டித்துறை இலங்கை வங்கிக் கிளையில் தன்னியக்கப் பணப் பரிமாற்ற சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இலங்கை வங்கியின் வடபிராந்தியப் பொது முகாமையாளர் கே.ஈ.டி சுமணசிறி, முன்னாள் உதவிப் பொது முகாமையாளர் என்.சிவரட்ணம் ஆகியோர் இணைந்து இந்தச் சேவையை ஆரம்பித்து வைத்தனர். (த-253)

# ஆசியாவின் சிறந்த தொழில் விருது 2ஆவது தடவையாகவும் மஞ்சி வசம்

இலங்கையின் பிரதான உணவு மற்றும் இனிப்பு தயாரிப்பு நிறுவனமான சிலோன் பிஸ்கட் நிறுவனத்தின் முதல்தர வர்த்தக நாமமான மஞ்சி, அண்மையில் சிங்கப்பூரில் நடைபெற்ற CMO விருது வழங்கும் நிகழ்வில் ஆசியாவின் சிறந்த தொழில்வழங்குநர் வர்த்தக நாமத்துக்கான (Asias Best Employer Brand) விருதினை இரண்டாவது தடவையாகவும் வென்றுள்ளது.





கடந்த வருடம் நடைபெற்ற CMO விருது வழங்கும் நிகழ்வில் இவ்விருதை மஞ்சி பெற்றுக்கொண்டிருந்ததுடன், இவ்விருதை தொடர்ச்சியாக இரண்டாவது தடவையாக பெற்றுள்ளதன் மூலம் மஞ்சி மீது வாடிக்கையாளர்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை தெளிவாகியுள்ளது.

சிறந்த மனிதவள மேம்படுத்தல், நவீன மயமாக்கலின் மூலம் எதிர்கால தலைவர்களை உருவாக்குதல் போன்ற பிரிவுகளில் மஞ்சி காட்டும் அக்கறை காரணமாக இவ்விருது வழங்கப்பட்டிருந்தது.

இலங்கையில் வேகமாக விற்பனையாகும் நுகர்வோர் பொருள்கள் (FMCG) பிரிவின் முன்னணி வர்த்தக நாமமான மஞ்சி, பிஸ்கட் சந்தையில் 60% வீதமான பங்கை தன்னகத்தே கொண்டுள்ளது. மஞ்சி பிஸ்கட்டின் வெற்றிக்கு உயர்ந்த தரம், தொடர்ந்தும் உற்பத்திகளில் மேற்கொள்ளும் மேம்படுத்தல்கள் மற்றும் தந்திரோபாயமான விற்பனை நுணுக்கங்கள் போன்றன காரணமாக அமைந்துள்ளன.

இதன் காரணமாக கடந்த பல வருடங்களாக விசேட விருதுகள் பலவற்றை மஞ்சி பெற்றுக்கொண்டதுடன், தேசிய தரத்திற்கான விருது, தொடர்ச்சியாக நான்கு வருடங்களாக வருடத்தின் சிறந்த உற்பத்திக்கான விருது, தொடர்ச்சியாக இரண்டு வருடங்கள் வருடத்தின் சிறந்த வர்த்தக நாமத்திற்கான விருது, தேசிய ஏற்றுமதி விருது மற்றும் வர்த்தக நாம தலைமைத்துவம் போன்ற பல பிரிவுகளில் விருதுகளை வென்றுள்ளது.

## செட்டிகுளம் பகுதியில் மக்கள் வங்கிக் கிளை

செட்டிகுளம் பிரதேச மக்களின் நன்மை கருதி மக்கள் வங்கியின் கிளை ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வடபிராந்திய முகாமையாளர் றஞ்சித் கொடித்துவக்கு தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வவுனியாமாவட்ட அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர வங்கிக் கிளையைத் திறந்து வைத்தார். மக்கள் வங்கியின் 356 கிளையின் முகாமையாளராக ஏ.எச்.எம் அரூஸ் நியமிக்கப்பட்டார்.

இந்தப்பகுதிக்கான மக்கள் வங்கிக் கிளை நீண்ட காலமாக திறக்கப்படாதிருந்த காரணத்தால் மக்கள் வவுனியா மற்றும் மாங்குளம் போன்ற தூர இடங்களுக்கே செல்ல வேண்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-400)



செலான் வங்கியின் பரிசுமேல் பரிசு திட்டத்தில் வெற்றியாளராகத் தெரிவு செய்யப்பட்ட மானிப்பாய் கிளையின் வாடிக்கையாளர் திரு திருமதி . ரவீந்திரனுக்கு யாழ்ப்பாணக்கிளை முகாமையாளர் ஞானபண்டிதன் வெற்றிப்பரிசான பெறுமதிமிக்க கண்ணாடி அலுமாரியினை வழங்குகிறார். (த)

## அழகுக்கலைப் பயிற்சி

நவாலி, செப்.2

நவாலி தெற்கு- ஹேமலதா ஞாபகார்த்த நிறுவனத்தில் அழகுக் கலைப் பயிற்சி மற்றும் மெழுகுதிரி பயிற்சி என்பன இடம்பெறவுள்ளன.

இதற்கான ஏற்பாட்டை நவாலி ஹேமலதா செல்வராஜா ஞாபகார்த்த நிதியத் தலைவர் மேற்கொண்டுள்ளார்.

சுவீடன் ஒறிபிளேம் நிறுவனம் அழகுக் கலைப் பயிற்சியை நவாலி, மானிப்பாய், ஆனைக்கோட்டை மற்றும் இதர பிரதேசங்களில் உள்ள பெண்களின் சுய தொழில் மேம்பாடு கருதி நடத்தப்படவுள்ளது.

இதில் அழகுக் கலை பயிற்சி தொடர்பாக 9 தலைப்புக்களில் பயிற்சி வழங்கப்படும்.

தொழில் வாய்ப்பற்ற கல்வியை முடித்து சுய தொழில் ஆரம்பிக்க விருப்பமுள்ளவர்கள் நவாலி ஹேமலதா ஞாபகர்த்த நிதியத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை, நாளை திங்கட்கிழமை ஆகிய தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

இதேவேளை நாளை திங்கட்கிழமை மு.ப 10.30 மணிக்கு அங்குரார்ப்பண வைபவம் நிறுவன இணைப்பாளர் திருமதி கனகசிங்கம் இந்திராணி தலைமையில் இடம்பெறும்.

அத்துடன் மெழுகுவர்த்தி உற்பத்தி மற்றும் சுயதொழில் மேம்பாடு தொடர்பான வேறு பயிற்சிகளும் சண்டிலிப்பாய் விதாதாவள நிலையத்துடன் இணைந்து நவாலியில் நடத்தப்படவுள்ளன.

எனவே தொழில் வாய்ப்பற்ற தொழில் தேடும் பெண்கள் இதில் கலந்து பயன் பெறலாம் எனத் தலைவர் அறிவித்துள்ளார். (த-50)

## மெட்ரோபொலிற்றன் ரெலிகொமுடன் கைகோர்த்துள்ளது மைக்ரோமெக்ஸ்

இந்தியாவின் முன்னணி கையடக்க தொலைபேசி உற்பத்தி நிறுவனமான மைக்ரோமெக்ஸ் இன்போர்மடிக்ஸ் (Micromax) ஆனது, Metropolitan Telecom Services நிறுவனத்தை இலங்கையின் தேசிய விநியோகத்தராக அறிமுகம் செய்துள்ளது.

இந்த ஒன்றிணைவின் மூலம், இலங்கையில் மைக்ரோமெக்ஸ் தமது செயற்பாடுகளையும், பங்களிப்பினையும் விஸ்தரிக்க திட்டமிட்டுள்ளது.

மைக்ரோமெக்ஸ் (Micromax) நிறுவனமானது, சாதாரண கைத்தொலைபேசிகள் முதல் அண்ட்ரொயிட் மென்பொருள் கொண்ட 3 கைத்தொலைபேசிகள் வரை 50 க்கும் அதிகமான கையடக்கதொலைபேசி வகைகளை தன்னகத்தே கொண்டுள்ளது.

புதிய கண்டுபிடிப்புகள் இந்தியாவின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றுகிறது. இந்த நிறுவனத்தின் மூலம் அதே புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் உயர் தரத்திலான தயாரிப்புகளை இலங்கையின் பாவனையாளர்களுக்கும் வழங்கவுள்ளது. விசேடமாக இளைஞர்களை இலக்காக கொண்டு, அவர்களை கவரும் வகையில் இந்த தயாரிப்புகள் அமையவுள்ளன.

இந்த ஒன்றிணைவு குறித்து மைக்ரோமெக்ஸ் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் சஞ்ஜீவ் ஆரியரட்னம் கருத்து தெரிவிக்கையில் இலங்கைக்கான தேசிய விநியோகத்தராக மெட்ரோபொலிற்றன் ரெலிகோம் சேர்விசஸ் நிறுவனத்துடன் நாம் கைகோர்த்துள்ளமையையிட்டு நாம் பெரிதும் மகிழ்ச்சியடைகிறோம்.

மேலும் எமது வர்த்தக தொடர்பை விஸ்தரித்து இலங்கை பாவனையாளர்களுக்கு புதிய ரெலிகொம் அனுபவத்தை வழங்க நாம் எதிர்பார்த்துள்ளோம் என்றார்.



பிரதான வீதி நெல்லியடியில் அமைந்துள்ள எல்.பீ.பினான்ஸ் தனது முதலாவது ஆண்டு நிறைவை சிறப்பிக்கும் வகையில் கடந்த 18 ஆம் திகதி சனிக்கிழமை ஸ்ரீ பரமானந்தா சிறுவர் முதியோர் [illegible] அலுமாரி வழங்குவதை முதல் படத்திலும், சக ஊழியர்களையும் நிகழ்வில் [illegible] இரண்டாவது படத்தில் காணலாம். (த- 253)



ரி.வி.எஸ். லங்கா நிறுவனத்தின் ஓட்டோ விற்பனை மற்றும் உதிரிப்பாகங்கள் விற்பனை நிலையம் ஒன்று பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டது. தேசிய விற்பனை முகாமையாளர் ஆர்.கெல்வ் இதனைத் திறந்து வைத்தார். (த-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குத்தகைக்கு காணி தேவை

யாழ் மாநகர சபை எல்லையில் இருந்து 8கி.மீ. தூரத்திற்குள் இருபாலை/பலாலிறோட் திருநெல்வேலி/ கல்வியங் காடு /கே.கே.எஸ் றோட்/செம்மணி றோட்/அரியாலை நாவற்குழி ஏ9 றோட் அண்டி/ இராசபாதை றோட் ஆகிய பகுதிகளில் கட்டட நீர் மின்சார வசதிகளுடன் 5 பரப்பு காணி தேவை.

தொடர்பு: 021 567 0350/077 329 6407
திங்கள்-வெள்ளி 8.30-5.00 வரை (22315)(5-6-7)

## பதவி வெற்றிடம்

இலங்கையில் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக இயங்கி வரும் பிரபலமான காப்புறுதி நிறுவனத்திற்கு கீழ்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்ய உள்ளோம்.

★ காப்புறுதி ஆலோசகர்
★ சிரேஷ்ட காப்புறுதி ஆலோசகர்
★ குழு முகாமையாளர்
★ விற்பனை முகாமையாளர்

இத்துறையில் ஆர்வமுடையோரும் போட்டி மனப்பாங்குடன் வேலை செய்ய முன்வருவோர்களும் விரும்பப்படுகின்றனர். கவர்ச்சிகரமான சம்பளத்துடன், மாதாந்த விற்பனை ஊக்கு விப்புத் தொகையும் மேற்கூறப்பட்ட அனைத்து தகைமை களுக்கும் வழங்கப்படும். விண்ணப்ப முடிவு திகதி: 15.09.2012

தொடர்பு: 077 870 0875 (22403)(5-6-7)

## ரஸ்யாவில் மருத்துவ பட்டப்படிப்பு

இலங்கை மெடிக்கல் கவுன்சில் / WHO அங்கீகரிக்கப்பட்டது

STAVROPOL STATE MEDICAL UNIVERSITY
& VOLGOGRAD STATE MEDICAL UNIVERSITY

போதனா மொழி 100% ஆங்கிலம்.
காலம் - 6 வருடம்

2012 செப்டெம்பரிற்கான தெரிவுகள் இன்று முதல் ஆரம்பம்

► தெரிவிற்கான பரீட்சை இல்லை. ► சிறந்த மருத்துவ வெளிப்பாடு.
► பல்கலைக்கழக விடுதி. ► சிறப்பான கட்டண சலுகையுடன் வருடாந்த கட்டணம். ► இலங்கையை ஒத்த காலநிலை.

விரைவாக பதிவு செய்யுங்கள் குறிப்பிட்டளவு ஆசனங்களே உள்ளன.

CALL : HAROLD LEON
0777348049 / 0757213200

Global Education Training & Services (GET'S)
E-mail : getslanka@gmail.com, getslanka@sltnet.lk
Web : www.getslanka.com
(சி/2664)(6.7.8)

## Metro Travels & Tours (PVT) LTD

விசேட விமானக் கட்டணங்கள்

| | |
|---|---|
| Colombo-Chennai-Colombo | 18200 |
| Colombo-Tiruchirapally-Colombo | 18500 |
| Colombo-Doha | 23500 |
| Colombo-London | 50000 |
| Colombo-Toronto | 80000 |
| Colombo-Singapore-Colombo | 31500 |
| Colombo-kualalumpur-Colombo | 37000 |
| Colombo-Frankfurt | 71000 |
| Colombo-Milan | 68000 |
| Colombo-Rome | 68000 |
| Colombo-Paris | 71000 |
| Colombo-Zurich | 74000 |

All Taxes included, credit card Accepted with a surcharge & Travel insurance,
Above Fares Are Subject to seat Availability
Terms & Conditions Apply.

மேலதிக தொடர்புகளுக்கு

METRO TRAVELS & TOURS (PVT) LTD
(Branch Office) No - 272/1, Stanly Road, Jaffna
Tel : 021 2224647, 021 2219424
Office Hours : Weekend From 8.30 am to 5.00 pm
Saturday From 9.00 am to 1.30pm
New Branch Office : No - 34, Bus Stand Complex, Vavuniya
Tel : 024 2226800, 024 2226801
(சி/2971)(6.7.8)


## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 17.03.1946

விண்ணில் 09.09.2006

திதி: துதியை

திருமதி
அன்புமலர் பேரின்பநாயகம்

அன்பின் அணிகலனாய்
அமைதியின் உறைவிடமாய்
வாழ்ந்த அம்மாவே
உம் நினைவு மறக்காது

மடத்தடி வீதி,
கொடிகாமம்.

உங்கள் நினைவில் வாழும்
குடும்பத்தினர்.

(22191)(5-6-7)


உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## CITY DRIVING SCHOOL



அரச அனுமதி பெற்ற சாரதி பயிற்றுனர் பாடசாலை (DS 390)

உங்களை நம்பிக்கையான சாரதியாக்குவதே எமது பொறுப்பு !

இன்றே எம்மை நாடுங்கள்...

No.05, Vaverset Place, Colombo - 06.

HOT LINE
0777 344 844



▶ உங்கள் நம்பிக்கையான சாரதி பயிற்சி நிலையம்
▶ (Instructor License) உள்ள அனுபவமிக்க பயிற்றுனர்களை கொண்டு பயிற்சியளிக்கப்படும்.
▶ உங்களுக்கு வசதியான நேரத்தை நீங்களே தெரிவு செய்யலாம்.
▶ அனைத்து வகையான வாகனங்களையும் இங்கே பயிற்சி பெறலாம்.
▶ ஆண் / பெண் இருபாலாருக்கும் பயிற்சியளிக்கப்படும்.

Tel : 011 2505672
(சி/2673)(6.7.8)


# UNIVERSITY OF JAFFNA
# BID NOTICE

**The Chairman, University Procurement Committee, University of Jaffna will receive sealed Bids from the qualified contractors for the following services.**

| Service Details | Refundable deposit (Rs.) | Non-refundable deposit (Rs.) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|
| Providing Facilities Management Services for Hostels at Siddha Medicine Unit, Kaithady, University of Jaffna. | 2,500.00 | 500.00 | M9/C10 (any field) or any organizations currently providing complete Facilities Management Services for any similar building |
எஸ்.எல்.பி.எல். தொடரின் இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் கொழும்பு ஆர்.பிரேமதாஸா விளையாட்டரங்கில் நடைபெற்றது. இதில் கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நஹன ஹிர நாகாஸ் அணியும், ஊவா நெக்ஸ்ட் அணியும் மோதிக்கொண்டன. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நஹனஹிர அணி முதலில் துடுப் பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதனடிப்படையில் அந்த அணி துடுப்பெடுத்தாடத் தொடங்கி 9.1 பந்துப் பரிமாற்றங்களில் மழை குறுக்கீடு செய்தது. இதனால் ஆட்டம் 15 பந்துப் பரிமாற்றங்கள் கொண்டதாக மட்டுப்படுத்தப்பட்டது. 15 பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 134 ஓட்டங்களை நஹனஹிர அணி பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் மத்தியூஸ் 27 பந்துகளில் 4 சிக்ஸர்கள், 8 பவுண்டரிகள் அடங்கலாக 73 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். அஹமட் செஹாட் 14 பந்துகளில் 3 பவுண்டரிகள் அடங்கலாக 18 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுக்க அந்த அணி 15 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை மாத்திரம் இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பந்து வீச்சில் மக் டொனால்ட் 24 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய ஊவா அணி ஆரம்பத்திலேயே ராஜபக்ஷவை 2 ஓட்டங்களுடன் இழந்தது. இருப்பினும் டில்ஷான் முனவீர மற்றும் சீக்குகே பிரசன் இருவரும் அதிரடியாக துடுப்பெடுத்தாடினர். 5.1 பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் ஒரு இலக்கினை மாத்திரம் இழந்து 63 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் மழை மீண்டும் குறுக்கீடு செய்தது. இதன் காரணமாக ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

இதன் காரணமாக டக்வோர்த் லூயிஸ் முறைப்படி ஊவா அணி 19 ஓட்டங்களினால் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. ஊவா அணியின் துடுப்பாட்டத்தில் முனவீர 23 பந்துகளில் 5 சிக்ஸர்கள், 2 பவுண்டரிகள் அடங்கலாக 43 ஓட்டங்களையும், சீக்குகே பிரசன்ன 5 பந்துகளில் 2 சிக்ஸர்கள் அடங்கலாக 15 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றிருந்தனர்.

ஆட்ட நாயகனாக ஊவா அணியின் முனவீரவும் தொடரின் நாயகனாக நஹனஹிர நாகாஸ் அணியின் எரங் கவும் தெரிவானார்கள். (5)

# தடுமாற்றத்துடன் தொடங்கியது இந்தியா



ஹோக்லி

பெங்களூர், செப் 2

நியூஸிலாந்து அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி ஆரம்பத்தில் தடுமாற்றத்துடன் தனது இன்னிங்ஸை ஆரம்பித்த போதும் ஹோக்லி, ரெய்னாவின் அரைச் சதங்கள் கைகொடுக்க ஓரளவு ஸ்திரமான நிலையை நோக்கிச் செல்கிறது.

முன்னதாக நியூஸிலாந்து அணி சகல இலக்குகளையும் இழந்து 365 ஓட்டங்களை தனது முதலாவது இன்னிங்ஸில் பெற்றுக் கொண்டது. அதற்குப் பதிலளித்து ஆடி வரும் இந்திய அணி நேற்றைய ஆட்டநேர நிறைவில் 5 இலக்குகளை இழந்து 283 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூஸிலாந்து அணி இரண்டு டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் பங்கெடுத்து வருகின்றது. முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி வெற்றி பெற்றிருந்த நிலையில் இரண்டாவது ஆட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பெங்களூரில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அந்த அணி நேற்று முன்தினம் ஆட்ட நேர நிறைவு வரையில் 6 இலக்குகளை இழந்து 328 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அணித் தலைவர் ரெய்லர் பெற்றுக் கொடுத்த 113 ஓட்டங்களுடன் இந்த வலுவான நிலையை எட்டியிருந்தது. களத்தில் வன்விக் 63, பிரேஸ் வெல் 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தனர்.

நேற்றைய இரண்டாவது நாள் ஆட்டத்தை தொடர்ந்த நியூஸிலாந்து அணி ஆரம்பத்திலேயே வன் விக்கை 71 ஓட்டங்களுடன் இழந்தது. தொடர்ந்து பிரேஸ் வெல் 43 ஓட்டங்களுடன் 'ரன் அவுட்டானார்'. அதன் பின்னர் களமிறங்கிய சவுத்தீ 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இறுதியில் நியூஸிலாந்து அணி 365 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணிக்கு அதிர்ச்சி கொடுத்த நியூஸிலாந்து. கம்பீர் 2, புஜாரா 9 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்ப 27 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை இழந்திருந்தது. அதன் பின்னர் சேவாக், சச்சின் ஜோடி சிறிது நேரம் நிலைத்தாடியது. சேவாக் 43, சச்சின் 17 ஓட்டங்களுடன் வெளியேற இந்திய அணி 80 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்து தடுமாறத் தொடங்கியது.

அதன் பின்னர் ஐந்தாவது இலக்குக்காக இணைந்த ஹோக்லி, ரெய்னா இருவரும் மிகச் சிறப்பான முறையில் துடுப்பெடுத்தாடி இந்திய அணியை கௌரவ இலக்கை நோக்கி அழைத்துச் சென்றனர். இருவரிடையேயும் 99 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பகிரப்பட்ட நிலையில் ரெய்னா 55 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அதன் பின்னர் அணித் தலைவர் டோனி, ஹோக்லி இணைந்து துடுப்பாட்டத்தை தொடர்ந்தனர். இருவரது அசத்தல் ஆட்டத்தால் நியூஸிலாந்து அணி ஆடிப்போனது. வேகமாக ஆறாவது இலக்குக்காக பிரிக்கப்பட முடியாத இணைப்பாட்டமாக 104 ஓட்டங்களை இந்த ஜோடி பகிர்ந்தது.

நேற்றைய ஆட்டநேர நிறைவில் இந்திய அணி 5 இலக்குகளை இழந்து 283 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. ஹோக்லி 93, டோனி 46 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றுக் கொண்டுள்ளனர். பந்து வீச்சில் சவுத் தீ 3, பிரேஸ் வெல் 2 இலக்குகளைக் கைப்பற்றினர். (5)




# இழந்த இடத்தை மீட்டது இங்கிலாந்து



இயன் மோர்கன்

ஓவல், செப் 2

இங்கிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும், இங்கிலாந்து அணிக்குமிடையிலான 5 ஆட்டங்கள் கொண்ட ஒரு நாள் சர்வதேசப் போட்டித் தொடரின் 3 ஆவது ஆட்டத்தில் இங்கிலாந்து அணி வெற்றிபெற்றுள்ளது. இந்த ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 4 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

லண்டன் ஓவல் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 46.4 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 211 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. சிறந்த ஆரம்பமாக 50 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்ட போதிலும், ஒரு கட்டத்தில் 2 இலக்குகளை இழந்து 120 ஓட்டங்களுடன் காணப்பட்டாலும் மத்திய வரிசை வீரர்கள் போதுமானளவு ஓட்டங்களைப் பெறாது போக தென்னாபிரிக்க அணி விரைவாக ஆட்டமிழந்தது.

துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக ஹசிம் அம்லா 43 ஓட்டங்களையும், டீன் எல்கர் 42 ஓட்டங்களையும், ஜே.பி.டுமினி 33 ஓட்டங்களையும், ஏ.பி.டி.வில்லியர்ஸ் 28 ஓட்டங்களையும், ரொபின் பீற்றர்சன் ஆட்டமிழக்காமல் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஜேம்ஸ் அண்டர்சன் 44 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், ஜேட் டேர்ண்பக் 44 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், ஜேம்ஸ் ட்ரெட்வெல் 49 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், ரவி போப்பாரா 31 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

212 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 48 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

முதலாவது இலக்கை 14 ஓட்டங்களுக்கே அந்த அணி இழந்த போதிலும், தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய வீரர்களான இயன் மோர்கன், ஜொனதன் ட்ரொட் ஆகியோர் சிறப்பாக ஆடி இங்கிலாந்தின் வெற்றியை உறுதி செய்தனர்.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக இயன் மோர்கன் 67 பந்துகளில் 73 ஓட்டங்களையும், ஜொனதன் ட்ரொட் 125 பந்துகளில் 71 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக ரொபின் பீற்றர்சன் 39 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், ஸ்ரெய்ன், மோர்னி மோர்க்கல், பார்னெல் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக இயன் மோர்கன் தெரிவானார்.

இந்த வெற்றியை அடுத்து 5 ஆட்டங்கள் கொண்ட இந்தத் தொடரில் 3 ஆட்டங்களின் முடிவில் இரு அணிகளும் 1-1 என்ற சமநிலையில் காணப்படுவதோடு, இங்கிலாந்து அணி இதற்கு முன்னைய ஆட்டத்தில் இழந்த ஒருநாள் சர்வதேசப் போட்டி முதலிடத்தையும் மீளப்பெற்றுள்ளது. (5)

# பாகிஸ்தானுக்கு வெற்றி

அபுதாபி, செப் 2

ஐக்கிய அரபு இராச்சியத்திற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய அணிக்கும், பாகிஸ்தான் அணிக்குமிடையிலான 3 ஆட்டங்கள் கொண்ட ஒரு நாள் சர்வதேசப் போட்டித் தொடரின் இரண்டாவது ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றுள்ளது.

அபுதாபியில் இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய 50 பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 248 ஓட்டங்களைப் பெற்றது. முதலாவது இலக்காக மத்தியூ வேட் 2 ஆவது பந்துப் பரிமாற்றத்திலேயே ஆட்டமிழந்திருந்த போதிலும் இரண்டாவது இலக்குக்காக டேவிட் வோணர், மைக்கல் கிளார்க் இருவரும் 68 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். ஆனால் அதன் பின்னர் அடுத்த 3 இலக்குகளும் விரைவாக வீழ்த்தப்பட அந்த அணி ஒரு கட்டத்தில் 4 இலக்குகளை இழந்து 87 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறியது.

எனினும் மத்திய, கீழ் வரிசை வீரர்கள் சிறப்பாக ஆட ஆஸ்திரேலிய அணி 248 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் ஆஸ் திரேலிய அணி சார்பாக மைக்கல் ஹசி 61 ஓட்டங்களையும், ஜோர்ஜ் பெய்லி 39 ஓட்டங்களையும், மைக்கல் கிளார்க் 37 ஓட்டங்களையும், பெற்றனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக சயிட் அஜ்மல் 32 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், ஜுனைட் கான் 52 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், கைப்பற்றினர்.

249 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 43.4 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணி சார்பாக நசீர் ஜம்ஷெட் 97 ஓட்டங்களையும், அஷார் அலி ஆட்டமிழக்காமல் 59 ஓட்டங்களையும், பெற்றனர்.

ஆட்ட நாயகனாக பாகிஸ்தான் அணியின் நசீர் ஜம்ஷெத் தெரிவானார். (5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மன்னார் பிறிமியர் லீக்

# கிறீன்பீல்ட், ஸ்டார் ஈகிள் சூடினர் வெற்றிவாகை

பெரியகடை ஸ்டார் ஈகிள் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்படும் 'மன்னார் பிறிமியர் லீக்' கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் ஆறாம் நாள் ஆட்டங்கள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றன.

லீக் சுற்றின் 21 ஆம் 22ஆம் போட்டிகள் நடைபெற்றன.

21ஆவது போட்டியில் கிறீன்பீல்ட் விளையாட்டுக்கழக அணிக்கும், யங்ஸ்டார் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் இடம்பெற்றன.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிறீன் பீல்ட் விளையாட்டுக்கழக அணியினர் 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றனர்.

லக்ஸ்மன் 19 பந்துகளில் 28 ஓட்டங்களையும், நார்தீபன் 13 பந்துகளில் 16 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் செல்லா 10 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், வேங்கை 21 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், யூட்சன் 7 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யங்ஸ்டார் விளையாட்டுக்கழக அணியினர் 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 57 ஓட்டங்களை மட்டும் பெற்று, 27 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தனர்.

துடுப்பாட்டத்தில் யங்ஸ்டார் விளையாட்டுக்கழக அணி சார்பாக செல்லா 11 பந்துகளில் 10 ஓட்டங்களையும், வேங்கை 10 பந்துகளில் 8 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் ஜக்சன் 8 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், நார்தீபன் 12 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

22 ஆவது ஆட்டம் ஸ்டார்ஈகிள் விளையாட்டுக்கழக அணிக்கும் சென். ஜோசப் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோசப் விளையாட்டுக்கழக அணியினர் 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 85 ஓட்டங்களைப் பெற்றனர்.

அணித்தலைவர் அருள் 23பந்துகளில் 44 ஓட்டங்களையும், முருகா 26 பந்துகளில் 21 ஓட்டங்களையும், அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் அஜித் 12 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், அமல் 11 ஓட்டங்களுக்கு ஒரு இலக்குகினையும், அருன் 11 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்டார் ஈகிள் விளையாட்டுக்கழக அணியினர் 9.1 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை மாத்திரம் இழந்து 89 ஓட்டங்களைப் பெற்று 8 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றனர்.

மயூரன் 20 பந்துகளில் 31 ஓட்டங்களையும், றோய் 18 பந்துகளில் 25 ஓட்டங்களையும், பிரியகாந் 5 பந்துகளில் 13 ஓட்டங்களையும் பெற்றனர். (23)

# உழவர் வி.க., உருத்திரபுரம் வி.க. உதைபந்து இறுதிக்குள் நுழைவு

யாழ்ப்பாணம், செப்.2

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனமும், விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து தேசிய உதைபந்தாட்ட அணிக்கான வீரர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிகளை நடத்தி வருகின்றன. முதற்கட்டமாக பிரதேச செயலக பிரிவுகளுக்கு இடையேயான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடர் நடத்தப்படுகின்றது.

கரைச்சி பிரதேச செயலகப் பிரிவுக்கான அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் அரை இறுதியாட்டத்தில் உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழக அணி, உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணி ஆகியவை வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளன.

முதலில் இடம்பெற்ற அரை இறுதியாட்டத்தில் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வட்டக் கச்சி இளம்தளிர் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இரு அணியினரும் எது வித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றியை நிர்ணயிக்க 5 சம நிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது.

உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.

இரண்டாவது அரை இறுதியாட்டத்தில் உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஸ்கந்தபுரம் ஸ்கந்தா விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் உருத்திரபுரம் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.

(23)

## சிவானந்தா வி.க. அரையிறுதிக்கு தகுதி

யாழ்ப்பாணம், செப்.2

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆதரவுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கால் இறுதி ஆட்டமொன்றில் சிவானந்தா விளையாட்டுக் கழக அணி வெற்றியீட்டி அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றறது.

நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற கால் இறுதியாட்டத்தில் சிவானந்தா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து றேஞ்சய்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் சிவானந்தா விளையாட்டுக்கழக அணி 4:3 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டி அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது.

(23)




வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான 19 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட உடுவில் மகளிர்கல்லூரி அணியினர், பொறுப்பாசிரியர் மற்றும் பயிற்றுநர்கள்.

(23)

## மாகாண கிரிக்கெட் போட்டி



யாழ்ப்பாணம், செப்.2

அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக்கழகங்கள் எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து விளையாட்டுக்கழகத் தலைவர், செயலாளர் ஆகியோரிடம் ஒப்படைக்குமாறு விளையாட்டுப்போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

(23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், செப்,2

மன்னார் பெரிய கடை ஸ்ரார்ஈகிள் விளையாட்டுக்கழகம் நடத்தும் 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட 'மன்னார் பிறீமியர் லீக்' கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு பெறவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு –

ஏசியன் விளையாட்டுக்கழகம் எதிர் இந்துமுன்னணி விளையாட்டுக்கழகம்

சென்.ஜோசப் விளையாட்டுக்கழகம் எதிர் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம்

ஸ்ரார்ஈகிள் விளையாட்டுக்கழகம் எதிர் இந்துமுன்னணி விளையாட்டுக்கழகம்

ஸ்ரார்ஈகிள் விளையாட்டுக்கழகம் எதிர் கிறீன்பீல்ட் விளையாட்டுக்கழகம்.

* * *

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கற்கோவளம் ஐஸ்தொழிற்சாலை ஆதரவுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் கால் இறுதி ஆட்டங்களில் மோதவுள்ள அணிகள் வருமாறு –

**பி.ப. 3. 30 மணிக்கு**

ஆதிசக்தி வி.க. எதிர் மனோகரா வி.க.

**4.30 மணிக்கு**

சென்.பீற்றர்ஸ் வி.க. எதிர் சென்.சேவியர் வி.க.

* * *

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை நவாலி அட்டகிரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் இறுதி ஆட்டத்தில்

இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து இளவாலை சென். லூட்ஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

* * *

கலட்டி நியூஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும், நியூஸ்ரார் பிறிமியர் வெற்றிக் கிண்ணத்திற்கான 20/20 விக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறுகின்ற ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு.

காலை 8.30 மணி: சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் கிறாஸ் கொப்பஸ் விளையாட்டுக் கழகம

மதியம் 1 மணி: திருநெல்வேலி கிரிக்கெட் கழகம் எதிர் வட்டுக்கோட்டை ஒல்ட்கோஸ் விளையாட்டுக்கழகம்

(23)

# 20/20 கிரிக்கெட்டில் ஸ்ரான்லிக்கு வெற்றி

யாழ்ப்பாணம், செப்.2

றெஜின்போ விளையாட்டுக் கழகத்திற்கும் ஸ்ரான்லி விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் இடம்பெற்ற நட்பு ரீதியிலான 20/20 கிரிக்கெட் ஆட்டத்தில் ஸ்ரான்லி விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி விளையாட்டுக் கழக அணியினர் 20 பந்துபரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்கினை இழந்து 130 ஓட்டங்களைப் பெற்றனர்.

றஜீவ் 26 ஓட்டங்களையும், தர்சன் 21 ஓட்டங்களையும், கண்ணராசன், கலைச்செல்வன் ஆகியோர் தலா 16 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

.பந்து வீச்சில் செந்தூரன் 4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 18 ஓட்டங்களுக்கு 2 இலக்கினையும் கண்ணா, 3 பந்துப் பரிமாற்றங்களை வீசி 23 ஓட்டங்களுக்கு, 2 இலக்கினையும் சோபிநாத் 4 பந்துப் பரிமாற்றங்களை வீசி 24 ஓட்டங்களுக்கு 2 இலக்கினையும் பெற்றனர்.

131 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய றெஜின்போ விளையாட்டுக் கழக அணியினர் 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளை இழந்து 118 ஓட்டங்களை மட்டும் பெற்றனர்.

டர்வின் 28 ஓட்டங்களையும், சோபினன் 22 ஓட்டங்களையும், காண்டீபன் 20 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்துவீச்சில் உதயா 4 பந்துப் பரிமாற்றங்களை வீசி 28 ஓட்டங்களுக்கு 2 இலக்கினையும் கலா 4 பந்து பரிமாற்றங்களை வீசி 16 ஓட்டங்களுக்கு 4 இலக்கினையும் ரஜீவ் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 17 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

(23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

# தண்ணீர்ப் பாத்திரத்தினுள் வீழ்ந்து ஆண்குழந்தை பரிதாபச் சாவு

யாழ்ப்பாணம், செப். 2

கரணவாய் மேற்கில் தண்ணீர் நிரப்பப்பட்டிருந்த பாத்திரம் ஒன்றுக்குள் தவறிவிழுந்த 2 வயதான ஆண்குழந்தை நேற்று பரிதாபகரமாக உயிரிழந்தது.

இந்தச் சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த தவநேசன் அகிம்சயன் (வயது-2) என்ற ஆண்குழந்தையே உயிரிழந்தது.

நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் வீட்டுக்கு வெளியில் தண்ணீர் நிரப்பப்பட்ட பாத்திரத்திற்குள் பெற்றோர் இல்லாத வேளையில் குழந்தை தலைகீழாக தவறி விழுந்துள்ளது. குழந்தையைத் தேடிய பெற்றோர் நீர்ப்பாத்திரத்திற்குள் குழந்தை கிடப்பதைக் கண்டுள்ளனர். உடனடியாக குழந்தையை ஊரணி வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்ற வேளை குழந்தை இறந்து காணப்பட்டது.

மரணவிசாரணை அதிகாரி எஸ்.பாஸ்கரன் விசாரணை மேற்கொண்டு நீரில் மூழ்கி மூச்சுத் திணறிய நிலையில் குழந்தையின் இறப்பு நிகழ்ந்துள்ளதாகத் தெரிவித்தார். சம்பவம் தொடர்பில் வல்வெட்டித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (10)

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் சிவகுருநாதன் (குணம்)



ஏழாலை மத்தியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் சிவகுருநாதன் (குணம்) கடந்த (29.08.2012) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான வல்லிபுரம் - இளையாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பித் துரை - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஞானேஸ்வரியின் (கனடா) அன்புக் கண வரும், கஜிந்தன் (USA), சஜிந்தன், துவாரகா (USA), நிஜிந்தன் (USA) ஆகியோரின் பாசமிகு தந்தை யும், நிதர்ஷனா, ஜீவறஞ்சன் (USA) ஆகியோரின் அன்பு மாமனும், Dr. பத்மநாதன், சிவகுரு ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பகீரதன்,ஸ்ரீதரன், கேதீஸ் வரன், வசீகரன், மயூரதன் ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.09.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் சண்டிலிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஜோகநாதன்
(ஜோகன் களஞ்சிய உரிமையாளர்)
இரட்டைய புலம் வைரவர் கோயிலடி,
சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்.

தகவல்:
கன்னகி கிளினிக்,
கன்னகி காட்வெயார் (Pvt)
விஸ்வமடு.

(22348)(3

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 01 • 07 • 1927



மறைவு 14 • 09 • 2011

அமரர்

திருமதி திருநாவுக்கரசு கண்ணகைப்பிள்ளை

எமது அன்புத் தெய்வத்தின் முதலாவது ஆண்டு நிறைவினையொட்டி இன்று (02.09.2012) ஞாயிற்றுக் கிழமை எமது இல்லத் தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெறும் ஆத்மாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பத்ம வாசம்,
கே.கே.எஸ் வீதி,
இணுவில்.

மகேஸ்வரகுமார் (மகன்)
பத்மாசனி (மகள்)
பாமதி (மகள்)

## மரண அறிவித்தல்

### அந்தோனிப்பிள்ளை மரியநாயகம் (சின்ராசா - மனேச்சர்)

(உரிமையாளர் - வேணி ஸ்ரோர், நெடுந்தீவு)



நெடுந்தீவு மத்தி 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு கொட்டாஞ்சேனை புளுமெண்டல் தொடர்மாடி A6/F18 இல்லத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை மரியநாயகம் கடந்த 30.08.2012 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - வைத்தியானாள் தம்பதியரின் கனிஸ்ட புதல்வரும், மரியாம்பிள்ளை - சிசிலியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சியோசியா தைசீலி (கெபி)யின் அன்புக்கணவரும், அமலவேணி (ஆசிரியர் - கிங்ஸ்ரன் சர்வதேச பாடசாலை), டிமெல்றொனி (கனடா), டிமெல்ஜெனி (லண்டன்), டிமேல்மேகலன் (சர்மிலா ரவல்ஸ்), குணிகிறேசினி (பெருளியல் துறை, கொழும்பு பல்கலைக்கழகம் இறுதி ஆண்டு மாணவி), ஆன்சன் (மாணவர், சென்.பீற்றர்ஸ் கல்லூரி) ஆகி யோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.09.2012) திங்கட்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரின் கொழும்பு இல்லத்தில் நடைபெற்று மாதம்பிட்டி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்!
குடும்பத்தினர்.

(சி/2685)(3.14)

## சகல பிரதேச சபைகளினதும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்

பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

ஒவ்வொரு பிரதேச சபைக்கும் பொலிஸாரை நியமித்து பொலிஸ் பாதுகாப்பு வழங்க முடியாது. ஆனால் பொலிஸாரை ரோந்தில் ஈடுபடுத்திச் சகல சபைகளினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கூறியுள்ளோம்.

வலி. தெற்கு பிரதேசசபைக் கட்டடத்துக்கு கழிவு ஒயில் வீசியவர்கள் என்று இதுவரை எவரையும் கைது செய்யவில்லை. அது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

வலி.தெற்குப் பிரதேச சபைக் கட்டடத்துக்கு கழிவு ஒயில் வீசியவர்கள் பற்றிய விசாரணை மற்றும் சபைகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று சபைகளில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளமை தொடர்பில் செய்தியாளர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஒவ்வொரு சபைக்கும் பொலிஸ் உத்தியோகத்தர்களை நியமித்துப் பாதுகாப்பு வழங்க முடியாது. ஆனால் அந்தந்தப் பகுதிகளைச் சேர்ந்த பொலிஸ் நிலையங்களினதும் பொலிஸாரை ரோந்தில் ஈடுபடுத்திச் சபைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்படி சகல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளோம்.

வலி.தெற்கு பிரதேச சபையின் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்துக்கு கழிவு ஒயில் வீசியவர்கள் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. அதுபற்றி விசாரணை செய்து வருகின்றோம் - என்றார் எரிக் பெரேரா.

தவிர, சபைகளுக்குப் பாதுகாப்பு வழங்குமாறு கோரிக்கை விடுத்து தனக்கு எதுவித கடிதமும் அனுப்பப்பட வில்லை என்றும் அவர் கூறினார்.

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

தேவை

வண்ணார் பண்ணை,
நாச்சிமார் கோயிலடியில்
புதிதாக திறக்கப்பட உள்ள
Multi Shop (பல்பொருள் வாணிபம்)
ஒன்றுக்கு...

- பெண் உதவியாளர் (கணக்காளராகவும் பணியாற்றத் தகுதியுடையவர்)
- சாரதி (பாரவூர்தி) AD தர சாரதி அனுமதிப் பத்திரம் அவசியம்
- Computer Hardware Technician கணினி திருத்துநர்
- விநியோகிப்பவர் (Delivery Boy) (... பத்திரம் அவசியம்)

0777804493

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி ஐயாத்துரை

(ஓய்வுநிலை DSA கோண்டாவில் டிப்போ இ.போ.வ. சபை, AKB லொச் பங்காளர்- கொழும்பு, சமாதான நீதிவான் அகில இலங்கை)



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சி. ஐயாத்துரை நேற்று (01.09.2012) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும், மாணிக்கம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இராசமணியின் அன்புக் கணவரும், மாலதி, ஸ்ரீகரன், தயாகரன், தமயந்தி வானதி, பிரசாந்தி ஆகியோரின் அன்பு தந்தையும், தசதரன், பஞ்சலிங்கம், விக்கினேஸ்வரமூர்த்தி, தேவகி, தயாளினி, குருபரன் ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற இராசதுரை மற்றும் இரத்தினம் மாணிக்கம் ஆகியோரின் அன்பு சகோதரனும், காலஞ் சென்ற அன்னம்மா மற்றும் சுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், டிவாகரன், மதுவந்தி, சாமந்தி, துசாணி, சஞ்சு, அபி, தனஞ்செயன், தார்மீகன், தாரகன், தனுசியா, மேவிஷா, நேசகி, அபிலாஸ், தட்சின் ஆகி யோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (03.09.2012) திங்கட்கிழமை நடைபெற்று பிற்பகல் ஒரு மணி அளவில் பூதவுடல் ஆவரங்கால் கரதடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

(22347)(3.14)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி இராசையா கெங்காதேவி



குழவியடி அம்மன் கோயில், கரணவாய் மத்தி, நவிண்டில், கரவெட்டியைப் பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசையா கெங்காதேவி நேற்று (01.09.2012) சனிக்கிழமை பி.ப 3.30 மணியளவில் இறைபதம் எய்தியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம் - இராசம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும், சுப்பிரமணியம் இராசையாவின் அன்பு மனைவியும், கெங்காதரன், மங்கயற்கரசி, ரதிதேவி ஆகியோரின் சகோதரியும், கிருஷ்ணதாஸ், விஜிதா, விஜயதாஸ் ஆகியோரின் அன்புத்தாயும், திவாகரன், சஞ்சிதன், சாருகன், லாவினன் ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், ஜெயகௌரி, நவரட்ணம், சுகந்தா ஆகியோரின் மாமியும், அங்கவி, அனுவர்கன், தனுசன், வினுஷா, துவீகன், ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.09.2012) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரணவாய் மத்தி,
நவிண்டில்.

(22455)(3.14)

தகவல்:
சு. இராசையா (கணவர்)

### வைத்திலிங்கம் இராமநாதன்

(இளைப்பாறிய எழுதுவினைஞர் யாழ் கச்சேரி)



வல்வெட்டித்துறை வேம்படி ஒழுங்கையை(உடையாமணல்) பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் இராமநாதன் (31.08.2012) வெள்ளிக்கிழமை வல்லையில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை வைத்திலிங்கம் மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான வையித்திலிங்கம்பிள்ளை- தெய்வானை நாயகிஅம்மா தம்பதியரின் மருமகனும் மகாலெட்சுமிஇராஜலெட்சுமியின் அன்புக் கணவரும், சங்கரலிங்கம் (பிரான்ஸ்), மனோகர் (பிரான்ஸ்), இலட்சுமணன் (பிரான்ஸ்), மதிவதனா (லண்டன்), இராஜாராம், ரஜனி (லண்டன்), லலிதா (லண்டன்) ஆகியோரின் தந்தையும், மலர், அமுதசெல்வி, ராதிகா, லோகநாதன், சுரேஷன், நவநீதன் ஆகியோரின் மாமனும், காலஞ்சென்றவர்களான புனிதவதி, வேதநாயகி, வள்ளிநாயகி, வேலுப்பிள்ளை, யோகாம்பிகை மற்றும் துளசியம்மா, தேவகியம்மா காலஞ் சென்ற சற்குணநாதன் ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்றவர்களான திருச் சிற்றம்பலம், பொன்னுத்துரை, விசுவலிங்கம் மற்றும் கமலம், ஆறுமுகசாமி, வேலும் மயிலும் அருமைச்செல்வி, சோமசேகரம், திருவடிவேல், சந்திரசேகரம், ஞானகலாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனரும் கணேஷ், தினேஷ், தனுஷ், முகேஷ், சங்கவி, பிரியா, வசந்தன், வாகீசன், வினோத், கிருஸ்ணி, கார்த்திக், வினு, திவ்யா ஆகியோரின் அன்புப் பேரனு மாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02.09.2012) ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் அவரது இல்லத்தல் வைக்கப்பட்டு நாளை (03.09.2012) திங்கட்கிழமை பி.ப 3 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பி.ப 4 மணிக்கு ஊரணி மயானத்தில் தகனம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேம்படி ஒழுங்கை,
உடையாமணல்
வல்வெட்டித்துறை.

தகவல்
குடும்பத்தினர்

## 31 ஆம் நாள் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

மலர்வு 30 * 10 * 1939



உதிர்வு 03 * 08 * 2012

### அமரர் திருமதி அன்புமலர் கணேசபிள்ளை

கடந்த 03.08.2012 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பவிளக்கு அமரர் திருமதி அன்புமலர் கணேசபிள்ளை அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 31.08.2012 வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (02.09.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பள்ளஞ்சீமா,
ஏழாலைமேற்கு, ஏழாலை.

(22460)(3.14)

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சைவப் பெரியாரும் சமூக சேவையாளருமான செல்லப்பா மயில் வாகனத்தின் சிலை திறப்பு விழாவும் அளவெட்டி மகாஜனா சபையின் வளாகத்தில் அமைக்கப்பட்ட மழலைகள் மகிழகத்தின் திறப்பு விழாவும் அண்மையில் இடம்பெற்றன. சிலையை அளவெட்டி மகாஜனா மன்றத் தலைவர் வை.சுப்பிரமணியம் திரைநீக்கம் செய்து வைக்கிறார். மழலைகள் மகிழ்வகத்தை முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகன், செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் ஆகியோர் பார்வையிடுகின்றனர். (ம-36)



நவாலி வடக்கு வரகு சாட்டி வீதி புனரமைப்புப் பணியை வலி.தென்மேற்கு பிரதேச சபையின் தலைவர் ஜெபநேசன் முதலாவது கல்லை வைத்து ஆரம்பித்து வைக்கிறார். (ம-100)



வலி.மேற்கு பிரதேச சபையினரால் 12 கிராம வீதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. சங்கானையில் மாவடி, குளத்தடி வீதி தார் ஊற்றி செப்பனிடப்படுகிறது. அதனைப் பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் ஆகியோர் பார்வையிடுகின்றனர். (ம-29)



யாழ். பிரதம தபாலகத்தில் நடைபெற்ற முத்திரைக் கண்காட்சியை ஆரம்பித்து வைத்து பார்வையிடுகிறார் தபால் மா அதிபர். வடக்கு மாகாணப் பிரதி அஞ்சல் அதிபரும் அருகில் உள்ளார். (ம-17)



காரைநகரில் அமைந்துள்ள காரை கிட்ஸ் பார்க் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழாவில் விருந்தினர்கள் மழலைகளின் பாண்ட் வாத்திய அணி வகுப்புடன் மைதானத்திற்கு அழைத்து வரப்படுகின்றனர். (ம-250)



கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தின் 53ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு யாழ் விழிப்புலனற்றோர் சங்கத்தின் கீழ் இயங்கும் கைதடி தொழிற் பூங்காவுக்கு கைதடி வளர்மதியின் லண்டன் வாழ் உறவுகளான க.தயாபரன், க.தயாநிதி ஆகிய சகோதரர்கள் ஒரு தொகை நிதியை அண்மையில் வழங்கினர். (ம-288)






சுன்னாகம் றோட்டறக்ட் கழகத்தின் ஏற்பாட்டில் மானிப்பாய் இளைஞர் சம்மேளனத்துடன் இணைந்து மாதகல் பிரதேசத்தில் அங்குள்ள [illegible] கொண்டாடினர்.(ம)



கரவெட்டி கோட்ட முன்பள்ளி பழைய மாணவர்களுக்கான விளையாட்டு விழா அண்மையில் திருமதி.க.பாலகிருஸ்ணன் தலைமையில் வதிரி டைமன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சிங்கர் [illegible] முகாமையாளர் தி.கா.துஷ்யந்தன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட [illegible] முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.தில்லைநாதன் ஆகியோர் சிறார்களின் பாண்ட் வாத்திய சகிதம் அழைத்து வரப்படுகின்றனர். (ம-253)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேசியா

**தமிழ் பேசும் பெண்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு**

மலேசியாவில் உள்ள தமிழ் VIP வீடுகளுக்கு தமிழ் பேசும் பணிப் பெண்கள் தேவை

மாதாந்த சம்பளம் RM 850
இலங்கைப் பெறுமதிக்கு சுமா. 34,000

* கடவுச்சீட்டு (Passport) - இலவசம்
* மெடிக்கல் (Medical) - இலவசம்
* இன்சூரன்ஸ் (Insurance) - இலவசம்
* விமான டிக்கட் (Air Ticket) - இலவசம்
* தங்குமிடவசதி (Accomodation) - இலவசம்
* உணவு (Food) - இலவசம்
* 2 வருட கால ஒப்பந்தம் (2 Years Contract)

பாஸ்போட் இல்லாதவர்கள் உரிய ஆவணங்கள் கொடுத்தால் இலவசமாக பாஸ்போட் செய்து தரலாம்

Labour Licence No.1785

**Rizviya Travels & Tours**
46/B, (1st Floor), Symonds Road, Maradana, Colombo-10.
Tel : 011-3091521, Hotline : 077-3179592
(சி/2644)


# கோமகனின் விடுதலைக்காக அவரது கட்சி பாடுபடவில்லை

மாநகர சபை உறுப்பினர் கோமகன் சார்ந்துள்ள கட்சி சிறைக் கைதியாக இருந்த அவரது விடுதலைக்காக எதையும் செய்யவில்லை என யாழ். மாநகர சபையின் ஒகஸ்ட் மாதக் கூட்டத்தில் பேசிய எதிரணி உறுப்பினரான ஆ.பரஞ்சோதி குறிப்பிட்டுள்ளார். மாநகர சபைக் கூட்டம் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெற்றது.

சிறைக் கைதிகள் விடுதலை தொடர்பாகக் கோமகன் தெரிவித்த கருத்துக்களை அடுத்துப் பரஞ்சோதி உரையாற்றினார். அவர் மேலும் கூறியதாவது:-

போர் முடிவடைந்து மூன்று வருடங்கள் முடிந்தது. ஆனால் கைதிகள் இன்னமும் சிறையிலேயே உள்ளனர். அரச கட்சியின் உறுப்பினராக இருந்தும் கூட கோமனுக்கு விடுதலை கிடைக்கவில்லை. சிறைக் கைதிகளை விடுவிப்பதற்கான போராட்டங்களை நாங்கள் நடத்தியுள்ளோம். அவரது கட்சி அவருக்காக எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதைக் கோமகன் சிந்திக்க வேண்டும். விடுதலை செய்யப்பட்டு புனர்வாழ்வளிக்கப்பட்ட கைதிகள் மீண்டும் கைதாகும் நிலை தான் உள்ளது. ஆயுதப் படைகளுக்குப் பயந்து தனிப்பட்டவர்கள்கூட அவர்களுக்கு வேலை வாய்ப்பளிப்பதில்லை என்றார். (த-7)


**விற்பனைக்கு**

அமெரிக்காவிலிருந்து கொண்டு வரப்பட்ட பாவித்த கால் நடமாட முடியாதவர்களுக்கான Battery இல் (rechargable) இயங்கும் electric power wheel chair விற்பனைக்கு உண்டு.

தொடர்பு 0779293181



**சல்லிகள் விற்பனைக்கு**

தரமான கருஞ் சல்லிகள் (½'', ¾'', 1'', 1½'', 4'', 9x6) போன்றவை நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு 0775890730.



**Personal class (கணினி)**

* கற்கை நெறிகள் யாவும் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
* Ms office 2010, DTP, Kids program (சிறுவர்களுக்கானது), Internet and E-mail, Computer Type setting (English, Tamil, Sinhalam), Web Design, Graphic Design
* குறிப்பு:- கணினி இல்லாதவர்களுக்கு எனது Laptop மூலமாக கற்பிக்கப்படும்.
* TP:- 0779672038
* ஆசிரியர்:-KRC

நல்லூர்



**பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்ட, A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான குறுகிய கால பயிற்சிநெறி**

* *Web Development*
  * *PHP/ MySQL/ HTML/ JavaScript*
* *Web Designing*
  * *HTML/ Css/Dreamweaver*

பல்கலைக்கழக, BIT, HND மாணவர்களுக்கான உதவி வகுப்புக்கள்

**CLTP Unit**
204,Brown Road,Jaffna. 0213201999, 0772517223
(22335)



**வர்த்தகர்கள், அரச உத்தியோகத்தர்கள், வங்கியாளர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியர்கள், Lions club Members தாங்கள் விரும்பிய நாட்டுக்கு குறிப்பிட்ட காலத்திற்குச் சென்று வர சந்தர்ப்பம்**

10 நாள்களில் சாத்தியமாகும் வகையில் சட்ட ரீதியான ஆலோசனை வழங்குகின்றோம் visit visa, business visa

கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, ஜேர்மனி, சுவிஸ், அமெரிக்கா, இங்கிலாந்து இன்னும் அனைத்து நாடுகளிற்கும் ஆலோசனை

முற்பணம் என்கின்ற பேச்சிற்கே இடமில்லை.


புதன் கிழமைகளில் விடுமுறை

திசைகாட்டி பிறைவேற் லிமிட் (PV 82703)
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.
0212219016



(22241)





# Study & Work Abroad

**Prestigious Collaboration Universities**

**UK Collaboration**
* University of East London
* Glyndwr University
* CRIC - Anglia Ruskin University
* EIC - Edinburgh Napier University
* HIBT - University of Hertforshire
* ICP - University of Portsmouth
* LIBT - Brunel University
* PDIC - Plymouth University
* BradFord College

**Australia Collaboration**
* James Cook University
* Curtin University
* MIBT - Deakin University
* ACN - La Trobe University
* PIBT - Edith Cowan University
* SAIBT - University of South Australia
* MQC - Macquarie University

**Singapore Collaboration**
* James Cook University
* AEC Business School
* SHRM College
* Curtin Singapore

**Malaysia Collaboration**
* Multimedia University
* Taylor's University
* INTI University
* SEGI University
* KDU University
* LINTON University

**Cyprus Collaboration**
* Cyprus International University

**Germany Collaboration**
* Eurasia - Germany
* European University

**Swiss Collaboration**
* HTMi - Hotel Tourism Management Institute
* European University

**Scholarships Available**

**Truly Exceptional**
* University Foundation Degree
* Medicine
* Architecture, Building & Design
* Biotechnology & Life Science
* Business
* Computing & IT
* Engineering
* Hospitality Management
* Law
* Mass Communication
* Nursing
* Post Graduate Studies

Apply Now For Next Intake

www.adinnovations.lk

iCS Study Overseas

107 B-1/1, Galle Road, Colombo 06.
(Opposite to Colombo Plaza NOLIMIT.)
E-Mail: info@icslanka.com www.icslanka.com
தொடர்பு: 434 3322 077 3013060
(சி/2668)



# BRITISH COLLEGE OF HIGHER STUDIES
## மாபெரும் கல்வி வழிகாட்டல் கருத்தரங்கு

BCHS

* A/L பரீட்சை எழுதிவிட்டீர்களா?
* உங்களுடைய எதிர்காலம் எவ்வாறு அமையவேண்டும் என தீர்மானித்து விட்டீர்களா?
* உங்கள் எதிர்கால கற்றல் தொடர்பான திட்டம் என்ன?
* எதைப்படிப்பது? எதைத் தெரிவு செய்வது?
* எப்படிப் படிப்பது? எங்கே படிப்பது?
* அடிப்படை தகைமை என்ன? கட்டணம் என்ன?

குழப்பத்தை விடுங்கள்

Birtish College of High Studies உம் British Council உம் இணைந்து நடாத்தும் இக் கருத்தரங்கில் மேற்படி கேள்விகளுக்கான ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் துறைசார் நிபுணர்களினால் வழங்கப்படும்.

**கருத்தரங்கில் ஆராயப்படும் விடயம்**

1. உள்நாட்டில் எவ்வாறான கற்கைநெறிகளை தொடரலாம் University, Open University, Advanced Technical Institue, External - Degree program, Sri Lanka Law College, CIMA, ACCA, AAT, IT, ect,
2. UK, Canada, Australia ஆகிய நாடுகளுக்கான Student Visa ஏனைய Settilment Visa, Migration Visa, Tourist Visa, Dependant Visa ஏனைய அனைத்து Visaக்களையும் பெற்றுக்கொள்வது தொடர்பான ஆலோசனைகளும், வழிகாட்டல்களும் துறைசார் சட்டத்தரணிகளால் வழங்கப்படும்.
3. சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஆங்கில கற்கை நெறிகளை எவ்வாறு தொடரலாம் என்பது பற்றிய ஆலோசனைகளும் வழங்கப்படும். (A1, B1, IELTS)

இடம்: யாழ். வீரசிங்கம் மண்டபம்
காலம்: 08.09.2012 (சனிக்கிழமை)
நேரம்: காலை 9.00 மணி

இக்கருத்தரங்கில் அனைவரும் பங்குபற்றி உங்கள் வாழ்க்கையினை வளமுள்ளதாக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலதிக தொடர்புகளுக்கு:
**British College of Higher Studies**
No. 15, Sirampiyady Lane, Off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074
(சி/2997)



**SUBRA -14**

சித்தன்கேணி - வட்டுக்கோட்டை இரு இடங்களிலும் 2013 புலமைப்பரிசில் வகுப்புக்கள் ஆரம்பம் 03.09.2012 (திங்கள்) மாலை 4.30

**வெற்றி தேர்வு வளவாளர்களுடன்**

ஆசிரியர்கள்
திருமதி ஜீவா
(முன்னாள் யாழ்ப்பாண கல்லூரி ஆசிரியை)
திரு. S. கைலைநாதன்

* வாரம் தோறும் பயிற்சிப் பரீட்சைகள்
* ஒரு பிரிவில் 40 மாணவர்கள் மட்டும்
* இன்று நேற்று அல்ல என்றென்றும் தனித்துவம் பெற்ற ஒரே நிறுவனம் SUBRA மட்டுமே.

(சி/3007)



**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

AAT:- Foundation
Intermediate
Final
Banking:- CBF/DBF
CIMA
Spoken English, KET, IELTS.
A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு 10% கட்டணக்கழிவு 15th September 2012

**English Teacher Training Diploma**

We are proved to bring to you CALSDA'S Associate Diploma in Teaching of ESOL programme starts on 2nd September 2012 Today 10.30 A.M)

இன்றும் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.
Spectra skills,
19, stanley road
(People's bank 2nd floor) Jaffna. Tel:- 0212221422 /1423



**NEW SCIENCE HALL**
கன்னாதிட்டி யாழ்ப்பாணம்

யாழ். மாணவர்களுக்கான வரப்பிரசாதம்
**A/L Geography Paper Class - 2013**
By:-
S. ஐங்கரன் M.A
S. தினேஸ் B.A (Hons)

திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி 4 - 6 pm

* ஆரம்ப அலகிலிருந்து மீட்டலும் கடந்த கால வினாவும், மாதிரிவினாவிடையும் இடம் பெறும்
* ஒரு கட்டணம் மட்டுமே அறவிடப்படும்.

ஆரம்பம் - 3.09.2012 திங்கள் மாலை 4.00
(சி/3006)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



05 பௌத்த மேலாதிகத்தில் பத்திரகாளி அம்மன்



09 பார்க்க வேண்டிய படம்தான் நான்



19 சிறுவர் துஷ்பிரயோகம்



25 மனித குலத்தின் முதல் பயணி



28 சகோதரச் சண்டையை மூட்டியவர் கருணாநிதி


# சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம் 01

உதயன் 02 செப்ரெம்பர் 2012 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள்: இருபத்தெட்டு


ஒள்ண்யன்

சகர்மேன் என்ற அறிஞர் இந்தியாவின் தமிழகத்திலுள்ள ஆதிச்சநல்லூரில் கிடைத்த சில மண்டை ஓடுகள் பற்றி ஆய்வு செய்து நூல் ஒன்றை வெளியிட்டார். ஆதிச்சநல்லூரில் அகழ்ந்து எடுக்கப்பட்ட மண்டை ஓடுகள் திராவிடர்களின் மண்டை ஓடுகள் என்றும், அதில் ஒன்று மட்டும் ஆஸ்திரேலிய பழங்குடி மக்களின் மண்டை ஓடு என்றும் அவர் கூறியுள்ளார். எனவே திராவிடர்களின் முன்னோர்கள் ஆஸ்திரேலிய நாட்டு பழங்குடி மக்களோடு தொடர்பு கொண்டிருந்தனர் என்று தெரியவருகிறது. அங்குள்ள பழங்குடி மக்கள் பேசும் மொழியில் தமிழ்ச் சொற்கள் இடம் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. ஆஸ்திரேலியா . தென்னிந்தியாவோடு இணைந்திருந்தது என்ற கருத்தை மட்டுமல்ல குமரிக் கண்ட கோட்பாட்டையும் இது உறுதி செய்கிறது. ஆஸ்திரேலிய பழங்குடி மக்கள் பயன்படுத்திய பூமராங் என்னும் ஒருவகை ஆயுதம் தமிழகத்தில் கிடைத்துள்ளதும் இங்கே குறிப்பிடத்தக்கது. பகைவர் மீது எறிந்தால் அவர்களைத் தாக்கிவிட்டு வீசியவர்கள் கைக்கு திரும்ப வரும் ஒருவகை ஆயுதம்தான் பூமராங்.



# பயணங்கள் முடிவதில்லை

வழமையை விடவும் அன்றைக்கு கடலில் அலைகள் அதிகமாக இருந்தன. மீன்பிடிக்கச் சென்ற படகுகள் அடிக்கடி தண்ணீரில் துள்ளி எழுந்து பின் விழுந்தே விரைந்து கொண்டிருந்தன. நிலவு வர இன்னும் நேரம் இருக்கின்றது. கரையை மூடி இருந்த இருளுக்குள் தம்மை மறைத்துக் கொண்டு அவர்கள் தமக்குரிய கட்டளை கிடைக்கும் வரை காத்திருந்தார்கள். கைகளில் ஒரு சில உடுபுடைவைகளோடு பயணப்பைகள். ஒரு பொலித்தீன் பைக்குள் சுற்றப்பட்டிருந்த ரூபா நோட்டுக்களை அடிக்கடி தொட்டுப்பார்த்துக் கொண்டனர்.

''ஊரில இருக்கிற எல்லாத்தையும் வித்துச் சுட்டுத்தான் இந்தக் காசை கொண்டு வந்திருக்கிறன். என்ர வல்லிபுரத் தானே! எப்பிடியாவது என்னை கொண்டு போய்ச் சேத்துப் போடு. சிற்றிசன் கிடைச்ச பிறகு உனக்கு பறவைக்காவடி எடுக்கிறன்'' காசு பத்திரமாக இருப்பதை உறுதிப்படுத்தி கொண்ட பின்னர் காத்திருந்த இளைஞன் ஒருவன் ஆயிரத்தோராவது தடவையாக இந்த நேர்த்திக்கடனை வல்லிபுர கோயில் இருக்கும் திசை நோக்கி உச்சரித்துக் கொண்டான்.

நீண்ட நேரமாக காத்திருத்தல் அங்கிருந்த குழந்தைகளுக்கு சினத்தை ஊட்டி இருக்க வேண்டும். தொற்றுநோய் போல ஒவ்வொரு குழந்தையாக வரிசைக்கிரமத்தில் சிணுங்கத் தொடங்கின. எவ்வளவு நேரம் தான் தாய்மாரும் அவற்றின் அழுகையை சமாதானப்படுத்த முடியும். இதுவே வீடாக இருந்திருந்தால் ஏதாவது 'பிராக்கு' காட்டியோ அல்லது முதுகில் இரண்டு சாத்துச் சாத்தியோ குழந்தைகளின் அழுகைக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்க முடியும். எல்லோரும் சொல்லி வைத்தவர்கள் போல பத்து செக்கனுக்கு ஒருமுறை கடிகாரத்தைப் பார்த்து விட்டு, தலையை கடலின் பக்கம் திருப்பிக் கொண்டிருந்தனர். படகு வருகின்ற 'சிலமன்' எதுவும் இல்லை.

பொறுமை இழந்துபோன வேறு சிலர் செல்போன் பட்டின்களை ஆத்திரத்தோடு அமுக்கி, தொடர்புகளை ஏற்படுத்த முயன்று தோற்றுக் கொண்டிருந்தனர்.

'' அவன் போனை 'ஓஃவ்' பண்ணி வைச்சிருக்கிறான். போன முறை மாதிரி இண்டைக்கும் ஏத்தாமல் ஏமாத்தப் போறானோ தெரியேல்லை'' கவலை, ஏமாற்றம், ஆத்திரம் எல்லாம் கலந்த குரலில் தமக்குள்ளே இந்த வார்த்தைகளைப் பரிமாறிக் கொண்டனர்.

இவர்களின் மனக்குரல் சம்பந்தப்பட்ட நபருக்கு கேட்டிருக்க வேண்டும். கடலில் தூரத்தே ஒரு இரைச்சல். மறு நொடியே புதிதான ஒரு இலக்கத்திலிருந்து கரையிலிருந்த படகோட்டிக்கு அழைப்பு.


''நிக்கிற ஆக்களை ஏத்திக் கொண்டு உடன வா''

இந்த உத்தரவுக்காகவே காத்திருந்த படகுக்கு உயிர் வந்தது. கரையில் பைகளுடன் காத்திருந்தவர்கள் படகில் பாய்ந்து ஏறிக் கொண்டனர். கடலில் தூரத்தே இவர்களின் வருகைக்காக காத்திருந்த பெரிய படகை நோக்கி சிறிய படகு பத்துப் பதினைந்து பேருடன் விரையத் தொடங்கியது. பத்து நிமிட ஓட்டத்துக்குப் பின்னர் பெரிய படகோடு ஒட்டிக் கொண்டது சிறிய படகு.


(சூரியகாந்தி 2 ஆம் பக்கம் பார்க்க)


## முன்னைய கப்பலோட்டம்

அன்னபூரணி அம்மாள் என்ற கப்பல் வல்வை சுந்தர மேஸ்திரியாரால் 1930 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இந்தக்கப்பல் இந்தியாவின் கரையோரப் பட்டினங்களுக்கும், பர்மா, பாகிஸ்தான், இந்தோனேசியா போன்ற நாடுகளுக்கும் பயணித்து வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்தது. உலகத்தை ஒரு சின்ன வள்ளத்தில் சுற்றி வந்த றொபின்சன் என்ற அமெரிக்க செல்வந்தபிரபு, அன்னபூரணியை பார்க்க நேர்ந்தது. இவர் பிரபல நாவலாசிரியரும், ஆராய்ச்சியாளரும், கடலோடியுமாவார். அன்னபூரணி உள்ளூர் வேப்பமரத்தைக் கொண்டு அழகுற அமைக்கப்பட்டது. இந்த பாய்மரக்கப்பலின் அழகிய அமைப்பையும் அதன் உறுதியையும் எந்த நீரோட்டத்திலும் இலகுவாகப் பயணம் செய்யும் தன்மையையும் கண்ட றொபின்சன் இதை அமெரிக்காவுக்கு கொண்டு சென்றால் அது காட்சிப் பொருளாகவும் நூதனமாகவும் [illegible]



1936ம் ஆண்டு அன்னபூரணியை விலை கொடுத்து வாங்கினார். அன்னபூரணிக் கப்பல் வல்வையைச் சேர்ந்த கே. தம்பிப்பிள்ளை என்பவரின் தலைமையில் தா. சபாரத்தினம், ஐ.இரத்தினசாமி சி.சிதம்பரப்பிள்ளை, பூ.சுப்பிரமணியம் ஆகியோரின் உதவியுடன் அமெரிக்காவுக்கு 1938 ஆண்டு சென்றடைந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணங்கள் முடிவதில்லை

(சூரியகாந்தி 1 ஆம் பக்க தொடர்ச்சி)

பயணிகள் தாம் கொண்டு வந்த பைகளை பெரிய படகுக்குள் எறிந்துவிட்டு, தாமும் ஒவ்வொருவராக ஏறத் தொடங்கினர். எல்லோரும் பெரிய படகுக்குள் சென்ற மறுநொடியே எதுவும் தெரியாதது போல வலைகளுடன் மீன்பிடிப்பது போல் வேறு திசை நோக்கி சிறிய படகு நகர்ந்து, மறைந்து போனது.

படகுக்குள் ஏறியவர்களை புன்முறுவலோடு வந்து ஒருவன் சந்தித்தான்.

'' சரி, எல்லாரும் காசை குடுத்திட்டீங்கள்தானே''

எல்லோரும் 'பூம்பூம்' மாடுகள் போல ''ஓம்'' என்று சீராகத் தலையாட்டினர்.

''மிச்சக்காசை கரையில இறங்கினவுடன என்ர எக்கவுண்ட் நம்பருக்கு போட்டுடோணும்.'' கொஞ்சம் கண்டிப்பான குரலில் சொல்லிவிட்டு இஞ்சின் அறைக்குப் போனான். அவன் போனதும் படகு நகரத் தொடங்கியது, கங்காருக்களின் தேசத்தை நோக்கி.

ஏற்கனவே படகுக்குள் ஏற்றப்பட்டிருந்த பயணிகளுடன் புதிதாக வந்தவர்களும் போய் அமர்ந்து கொண்டனர். எல்லோரும் அமர்ந்திருக்கவே இடம் போதாமல் இருந்தது. கடல் காற்றையும் மீறி வெக்கை மிகுந்து கொண்டது. உடல் எங்கும் வியர்வை ஓடி வழிந்து நசநச என்றிருந்தது. புதிதாக வந்தவர்களுக்கு ஆளுக்கொரு லெமன்பப் பிஸ்கட் பைக்கற்றும், தண்ணீர்ப் போத்தலும் வழங்கப்பட்டது. அழுது கொண்டிருந்த குழந்தைகள் பிஸ்கட்டை வாய்க்குள் திணிக்கத் தொடங்கின.

கொஞ்சத் தூரம் அமைதியாகச் சென்று கொண்டிருந்த படகு பின்னர் காற்று மிகுதியாலோ என்னவோ பெரிதாக ஆடத் தொடங்கியது. பயணிகள் படகின் ஒரு முனையிலிருந்து மறு முனைக்கு மாறி மாறி சறுக்கியபடியே இருந்தனர். படகின் ஆட்டம் கூடிக் கொண்டே போனது. படகுக்குள்ளும் பயணிகள் இருக்க முடியாத அளவுக்கு எங்கும் ஒரே வாந்திமயம். அவசர அவசரமாக உட்கொண்ட பிஸ்கட்டுக்களை அதே அவசரத்தோடு குழந்தைகள் ''உவாக்'' என்ற ஒலியோடு சத்தியாக வெளியே கக்கிக் கொண்டிருந்தார்கள். போட்டிக்கு பெரியவர்களும் தம் பங்குக்கு படகின் உட்தளத்தை வாந்திகளால் நிரப்பத் தொடங்கினர். இனிமேல் வாந்தி எடுப்பதற்கு வயிற்றுக்குள் எதுவுமே இல்லை என்ற நிலை வந்த போதும் கூட, வாந்தி எடுப்பது நிற்கவே இல்லை. ''ஏலாக்கட்டத்தில் குடல்தான் இனி சத்தியோட வரப்போகுது போல'' யாரோ இப்படிச் சொல்லிக் கொண்டார்கள்.

என்னதான் 'சத்தி' எடுத்தாலும் ஆஸ்திரேலியாவுக்குப் போவதென்ற முடிவை யாரும் மறுபரிசீலனை செய்ய தயாராயில்லை. உயிரே போனாலும் எப்படியும் ஆஸ்திரேலியா மண்ணில் காலடி வைப்பதென்ற முடிவில் உறுதியாகவே இருந்தனர். ஏற்கனவே இதுபோன்ற படகுப் பயணங்கள் பாறைகளில் மோதி பாடைப் பயணங்களாக மாறிய கதை அவர்கள் எல்லோருக்குமே தெரிந்திருந்தது. ஆயினும் உள்நாட்டில் உழைத்து தங்கள் குடும்பத்தின் சுமையை இறக்கி வைக்க முடியாது என்பதற்காக சாவைச் சந்தித்தாலும் கூட ஆஸ்திரேலியாவுக்கு சென்று சம்பாதித்தே ஆக வேண்டும் என்று பிடிவாதமாக இருந்தார்கள். தங்கையின் திருமணம், பெற்றோரின் மருத்துவம், சொந்தமாக ஒரு வீடு இப்படி நிறையக் கனவுகளை அந்தப் படகு சுமந்து கொண்டிருந்தது. வாந்தி எடுத்த மயக்கத்தில் கூட பல இளைஞர்களுக்கு வீட்டில் சீதனம் கொடுக்க வழியில்லாமல் இன்னமும் கன்னியாகவே இருக்கும் தங்கைகளின் திருமணக் காட்சிகள் இடையிடையே ஓடி மறைந்தன.

படகு பயணிகளை அவர்களுக்கு நிகராக வாந்திகளையும் சுமந்தபடி தன் இலக்கு நோக்கி பயணித்துக் கொண்டே இருந்தது. ஆனாலும் படகுக்கு பொறுப்பாக இருந்தவனின் முகத்தில் இன்னமும் கலவர ரேகைகள். பயணிகள் படகின் ஆட்டத்தோடும் வாந்தியோடும் போராடிக் கொண்டிருந்தார்கள்.

சாமம் கழிந்து கொண்டிருந்த பொழுதில் இனந்தெரியாத சில இரைச்சல்களும், ஒளித்தெறிப்புக்களும் கடலில் தென்படத் தொடங்கின. படகு பரபரப்பாயிற்று. அதற்குப் பொறுப்பாக இருந்தவனின் முகம் ஒரே நொடியில் செத்துப் போனது. ''இனி அவ்வளவுதான்'' தன்னையுமறியாமல் இந்த வார்த்தைகளை உச்சரித்துக் கொண்டே பயணிகளை நோக்கிப் போனான்.

''நேவி எங்களச் சுத்தி வளைச்சிட்டான். என்னால ஒண்டும் செய்யேலாது'' சொல்லிவிட்டு படகின் அணியத்தை நோக்கிப் போனான்.

அதன் பின்னர் எல்லாமே ஒருவித இயந்திரத் தனத்தோடு நிகழ்ந்தேறின. கடற்படையினர் பயணிகளை படகோடு கரைக்குக் கொண்டு வந்தனர். வல்லிபுரத்தானுக்கு இளைஞர்கள் பறவைக் காவடி எடுப்பதில் அவ்வளவாக விருப்பமில்லை போலும். நிறைய நேர்த்திக் கடன்கள் கடலில் கரைந்து அமிழ்ந்தன. ஏராளமான தங்கைகளின் அல்லது அக்காக்களின் தாலி அந்தப் படகின் பிடிபடுதலோடு தொலைந்துபோயிற்று. கரைக்கு வந்தவுடன் சில பிள்ளைகள் தாயிடம் இவ்வாறு கேட்டனர்.

''அம்மா! நாங்கள் அதுக்கிடையில ஒஸ்ரேலியாவுக்கு வந்திட்டமோ? ''

இந்தக் கேள்விக்கு பதில் சொல்லும் நிலையில் தாய் இருக்கவில்லை. பிடிபட்டவர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு சிறைகளுக்குள் முடக்கப்பட்டனர். மனிதாபிமானம் கருதி தாய்மாரும் அவர்களது குழந்தைகளும் பிணையில் வெளியே விடப்பட்டனர். கனவுகளையும் காசையும் ஒரே இரவில் தொலைத்தவர்களின் கதை இதுதான்.

★ ★ ★

தான் ஆடாவிட்டாலும் தசை ஆடும் என்பார்கள்.

பூர்வஜென்ம தொடர்போ என்னவோ இப்போதெல்லாம் ஈழத்தவர்கள் பலருக்கு ஆஸிக் கனவே அடிக்கடி வருகிறது. முந்தைய காலத்தில் - லெமூரியாக் கண்டம் அல்லது குமரிக்கண்டம் இருந்ததாக சொல்லப்படும் காலத்தில் - இந்தியப் பெரு நிலப்பரப்போடு ஆஸ்திரேலியாவும் ஒட்டிக்கொண்டிருந்ததாக இன்னமும் வரலாற்று ஆய்வாளர்கள் கற்பூரம் கொளுத்தி சத்தியம் செய்துகொண்டே இருக்கிறார்கள். ஆஸ்திரேலிய பழங்குடியினருக்கும் தமிழர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பது ஆதாரங்களோடு நிரூபிக்கப்பட்டிருக்கிறது. உடற்கூற்றியல் ரீதியாகவும் மொழி ரீதியாகவும் நிறைய ஒற்றுமைகள் இருக்கின்றன. ஆஸ்திரேலிய பழங்குடிகளின் இரத்தத்தைக் குடித்தே வெள்ளைகளின் அரியணை ஆஸ்திரேலியாவில் நிலைத்தது. இன்னமும் அங்கும் தங்கள் சொந்த நிலங்களில் ஆஸிப் பழங்குடிகள் ஒடுக்கப்பட்டவர்களாகவே இருக்கிறார்கள். (ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியில் இடம் பிடித்திருந்த அன்ட்ரூ சைமண்ட்ஸ் ஆஸ்திரேலிய பழங்குடியைச் சேர்ந்தவர். இதனாலேயே அவர் மீது அடிக்கடி சர்ச்சைகள் கிளப்பப்பட்டு அணியிலிருந்தே நீக்கப்பட்டார்)

கனடா, பிரிட்டன், பிரான்ஸ் போன்ற ஈழத்தவர்கள் விருப்பத்துடன் புலம்பெயர்ந்து செல்லும் நாடுகளின் கதவுகள் மிக இறுக்கமாக தாழிடப்பட்டு விட்டதால் மாற்றுத் தெரிவாக இப்போது எல்லோரும் ஆஸ்திரேலியாவைக் கெட்டியாகப் பிடிக்கத் தொடங்கி விட்டார்கள். தனியொரு நாடாகவும், அதே சமயம் கண்டமாகவும் விளங்கும் ஆஸ்திரேலியாவுக்கான படகுப் பயணங்கள் பெரும் கண்டங்களைச் சந்திக்க வேண்டியிருக்கிறது.

மிகப் பரந்த நிலப்பரப்பைக் கொண்ட ஆஸ்திரேலியா புலம்பெயர்ந்தவர்கள் விடயத்தில் மென்போக்கைக் கடைப்பிடித்து, அவர்களுக்கு குடியுரிமை வழங்குவது நிச்சயம் என்பதாலேயே பெரும் பணத்தைச் செலவழித்து, உயிரைப் பணயம் வைத்துப் பலர் படகேறுகிறார்கள். தென்கிழக்காசிய நாடுகளைச் சேர்ந்த பலரும் ஆஸ்திரேலியாவுக்குப் படையெடுத்தாலும் அவர்களில் இலங்கையர்களின் எண்ணிக்கையே அதிகமாக இருக்கிறது.



ஈழத்தில் போர் மூண்டபோது
படையினன் ஒருவன்
தன்னை சிங்கமாக நினைத்து
என்னை ''புலி'' என்றான்.
சிங்கத்தின் கொடூரம்
தாங்காமல்
''முயலாக'' பாய்ந்தே
மலேஷியாவுக்கு-
அங்கு
முதலையாகி
கடல்வழியே
இந்தோனேஷியா வுக்குள்
கரையேறி
பின்னர் நரியாக
மாறிவிட்டேன்.
நரி ஒருநாள் படகேறும்
ஆஸியில் கால்பதிக்கும்
தினத்தில்
அந்த நரி
கங்காருவாக உருமாறும்
குடும்பம், வீடு, உழைப்பு
என்று
கங்காரு தாவிக் கொண்டே
இருக்கும்
சாகும் வரையும்
ஒருபோதும் அவன்
மனிதனாகவே
இருக்கப்போவதில்லை.

- நிேனேஷ்

ஆஸ்திரேலியாவுக்கான சட்டவிரோத படகுப் பயணத்தின் பிரதான மார்க்கமாக இதுவரையும் நீர்கொழும்பே தனித்தவில் வாசித்து வந்தது. ஆனால் அங்கு இப்போது கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டுவிட்டதால் நீர்கொழும்பிலிருந்து புறப்படும் பல படகுகள் கடற்படையால் இடைநடுவிலேயே பிடிக்கப்படுகின்றன. எனவே இத்தகைய சட்டவிரோத கடற் பயணங்களை நெறிப்படுத்தும் சூத்திரதாரிகள் கண்டறிந்துள்ள புதிய மார்க்கம் யாழ்ப்பாணம், வடமராட்சியை ஒட்டிய கடற்பகுதியில் திறக்கப்பட்டுள்ளது.

கடலில் பல நாள்கள் சஞ்சரிக்கக் கூடிய அளவுக்கு எரிபொருளையும், உணவு, நீர் முதலியவற்றையும் சேகரித்து வைக்கக் கூடிய அளவுக்கு கொள்ளளவு கொண்ட பெரிய படகுகளே இந்தப் பயணத்துக்குப் பயன்படுத்[illegible]. இ[illegible] [illegible] செல்ல வேண்டுமெனில் 15 முதல் 20 நாள்கள் படகில் பயணப்பட வேண்டும். ஏறக்குறைய 40 பயணிகள் இருக்கக் கூடிய அளவுக்கு இடவசதியும் இந்தப் படகில் இருக்கும். கடலில் சுற்றித் திரியும் பல்வேறு நாடுகளின் கடற்படையினருக்கும், சோமாலியாக் கொள்ளைக்காரர்களுக்கும் 'டிமிக்கி' கொடுத்துவிட்டு பயணிகளை ஆஸ்திரேலியாவுக்குக் கொண்டு செல்லும் 'ரூட்' நீர்கொழும்புப் படகோட்டிகளுக்கு மட்டுமே தெரிந்த ரகசியம். ஆகவே வடமராட்சியிலிருந்து புறப்படும் படகுகளுக்கும் நீர்கொழும்புக்காரர்களே தலைமைப் படகோட்டிகளாகப் பொறுப்பேற்றுக் கொள்கிறார்கள்.

போர் நிகழ்ந்து கொண்டிருந்த காலத்தில் இந்தக் கடற்பரப்பில் கடற்படையினரதும், கடற்புலிகளினதும் நடமாட்டங்கள் இடைவிடாது இருந்தன. புலிகளின் படகுகளைத் தேடி விமானங்களும் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. இரு தரப்பும் எதிர்த் தரப்பின் மீது தாக்குதலை நிகழ்த்துவதற்காக அலைந்து கொண்டிருந்தன. இதனால் கடலில் சந்தேகத்துக்கிடமாக நடமாடும் எந்தவோர் படகும் சிதறாமல் இருக்க முடியாது. எனவே அப்போது வடமராட்சியூடாக ஆஸ்திரேலியாவுக்கு படகு மூலம் பயணப்படுதல் என்ற விடயத்தை கனவு கூட காண முடியாது.

போர் முடிந்து மூன்று வருடங்களுக்குப் பின்னர் நிலைமையில் நிறைய மாற்றங்கள். இனிமேல் புலிகள் தலையெடுக்கப் போவதில்லை என்ற நினைப்பில் கடலில் விதைக்கப்பட்டிருந்த கண்காணிப்புக் கண்களை படைத்தரப்பு விலக்கியுள்ளது. அத்தோடு தமிழர் பிரதேசங்களில் தென்னிலங்கை படகுகளை உள்நுழைய அனுமதித்து இங்குள்ள கடல் வளங்களை சூறையாட விட்டு வேடிக்கை பார்க்கிறது அரசு.

இவ்வாறு அரசின் அனுசரணையோடு வடமராட்சிக் கடற்பகுதியில் மீன்பிடிக்க வரும் பெரிய படகுகளோடு சேர்ந்தே பயணிகளை ஏற்றும் படகுகளும் வருவதால், கடற்படையினர் அவற்றை சோதனையிடுவதில்லை. (கடற்படையினரின் 'சப்போர்ட்' ோடு தான்' இந்தச் சட்டவிரோத படகுப் பயணம் வடமராட்சியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கலாம் எனவும் ஒரு பகுதியினர் சந்தேகம் எழுப்புகின்றனர்.) எனவே இந்த வசதிகளைப் பயன்படுத்தி ஏராளமானோரை பெருந்தொகைப் பணத்தை வாங்கிக் கொண்டு படகுகள் ஆஸ்திரேலியாவில் தரையிறக்கியுள்ளன. மிக நீண்ட காலத்துக்குப் பின்னரே இந்த மார்க்கம் கடற்படைக்கு தெரிய வந்திருக்கிறது. அதன் பின்னர்தான் படகுகள் பிடிபடத் தொடங்கியுள்ளன.

இந்தப் படகுப் பயணத்தின் படிமுறை இப்படித்தான் அமையும்.

★ முதலில் ஒரு ஏஜென்சி பயணப்பட விரும்புபவர்களோடு தொடர்பை ஏற்படுத்தி, வெற்றிகரமான ஆஸ்திரேலியத் தரையிறக்கங்கள் பற்றி கேட்பவர் வாய்மூட மறக்கும் அளவுக்கு கதையளப்பான்.

★ தன்னிலை மறந்த நிலையில் அவர்கள் ஆஸிக் கனவில் மூழ்கும் போது, எவ்வளவு காசை முதலில் கட்ட வேண்டும், மிகுதிப் பணத்தை எவ்வாறு தரவேண்டும் என்பன பற்றியெல்லாம் விளக்கவுரை நடக்கும். (வடமராட்சியிலிருந்து ஆஸிக்கு செல்ல மொத்தத் தொகை 12 லட்சத்திலிருந்து 17 லட்சம் வரைதான். முதலில் மூன்று லட்சம் முதல் பத்து லட்சம் வரை கைக்காசாகக் கொடுக்க வேண்டும். மிகுதிக் காசை பயணிப்பவர்கள் தங்களுடைய வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டுக் காட்ட வேண்டும்.)

★ கைக்காசைப் பெற்ற பின்னர் எப்போது, எங்கு பயணப்படுவது என்பது குறித்து தகவலைத் தொலைபேசியூடாக அந்த ஏஜென்சி தெரியப்படுத்துவான்.

★ ஏஜென்சி சொன்ன தினங்கள் பலவற்றில் காத்திருந்துவிட்டு ஏமாற்றத்தோடு திரும்பும் நாள்கள் அதிகமாக இருக்கும். '' இண்டைக்கு 'போட்' பழுதாப்போச்சு''

''நேவியின்ர ரோந்து கூடவாக்கிடக்கு''

'' கடலில சரியான காத்து'' இப்படி ஏஜென்சிக்கு அந்தக் கணத்தில் என்ன சாட்டு நினைவுக்கு வருகிறதோ அதைச் சொல்லி அவர்களைச் சமாளிப்பான்.

★ இலவு காத்துக் கொண்டிருக்கும் பயணக் கிளிகளை அவர்கள் எதிர்பாராத இரவொன்றில் ஏஜென்சியின் படகு ஏற்றிக் கொள்ளும்.

★ வடமராட்சி - ஆஸ்திரேலியா சேவையில் ஈடுபடும் படகை செலுத்துபவர் முற்பிறப்பில் யாழ்ப்பாணத்தில் மினிபஸ் ஓடியவராக இருக்க வேண்டும். முல்லைத்தீவு, அலம்பில், தாழையடி, நாகர்கோவில், பருத்தித்துறை என்று அகப்பட்ட கரைகளில் படகைக் கொண்டு சென்று பயணிகளை அடைந்துகொண்ட பின்னே படகு ஆஸிக்குப் பயணப்படும்.

★ படகு ஆஸிக்குச் சென்றால் வங்கியில் வைப்பிலிடப்பட்டிருக்கும் மிகுதிப் பணம் ஏஜென்சியின் கணக்குக்கு மாறும். பயணிகளும் கிறிஸ்மஸ் தீவில் தற்காலிகமாகக் குடியேறலாம்.

★ படகு பாறையில் மோதினால் பணமும், உடலும் கடலுக்குள்ளேயே சமாதியாக வேண்டியதுதான்.

★ படகு இடைநடுவிலேயே பிடிபட்டால் காசு போவதோடு, சிறைக்கம்பிகளை எண்ணுகின்ற பாக்கியம் எல்லோருக்கும் கிட்டும்.

இத்தகைய படிமுறைகள் இன்னமும் நிற்கவேயில்லை. இந்தப் பத்தியை வாசித்துக் கொண்டிருக்கும் கணத்தில் கூட யாரோ சிலர் ஆஸிப் பயணத்துக்கான ஆயத்தங்களை செய்து கொண்டிருக்கக் கூடும்.


அண்மைக்காலமாக படகுகள் பிடிபடுவது ஒரு 'செற்றப்' என்று இதன்போது பிடிபட்டவர்கள் சொல்லிக் கொள்கிறார்கள்.

''படகை ஒழுங்கு செய்பவர்கள் எப்படியும் 40 பேருக்கு மேல் அதில் ஏற்றுகிறார்கள். ஒரு நபருக்கு ஆகக் குறைந்தது 3 லட்சம் வீதம் முற்பணமாக வாங்கினாலும் ஒரு படகுப் பயணத்தில் ஒரு கோடியே 20 லட்சம் முதலிலேயே கிடைத்துவிடுகிறது. அந்தப் படகை ஒரு சில மணித்தியால பயணத்தின் பின்னர் வேண்டுமென்றே கடற்படையினரிடம் சிக்க வைத்துவிட்டால் படகுக்கான தொகைபோக மிகுதி அவ்வளவும் லாபம்தான். அதிலும் படகின் உரிமையாளர்கள் சிங்களவர்கள் என்பதால் எப்படியாவது பிடிபட்ட படகை மீட்டுவிடுவார்கள்'' என்று அண்மையில் படகுப் பயணத்தின்போது பிடிபட்ட ஒருவர் கூறுகிறார்.

இதேவேளை, ''அரசியல் பிரச்சினைகளுக்கு அப்பால் தமது சுயலாபங்களுக்காகவே பெருமளவானோர் ஆஸ்திரேலியாவில் புகலிடம் கோருகின்றனர்'' எனும் ஒரு நிலையை உருவாக்கி, அதன் மூலம் உண்மையாகவே அரசியல் பிரச்சினைகளால் ஆஸியில் தஞ்சம் கோருவோர் மீதான அந்த நாட்டின் இரக்கப் பார்வையை இல்லாமல் செய்வதற்கு அரச தரப்பே திட்டமிட்டு இத்தகைய பயணங்களையும் அவற்றின் பிடிபடுதல்களையும் அரங்கேற்றுகிறது என்று குற்றம் சாட்டுவோரும் உள்ளனர்.

கங்கை கொண்டு கடாரம் வரை வென்று ஆழக் கடல் எங்கும் ஆட்சிபுரிந்த சோழ மகாராஜனின் வாரிசுகள் இப்போது உழைப்புக்காக உயிரைப் பணயம் வைத்து படகேறத் தொடங்கியுள்ளனர். இந்தப் படகுப் பயணங்களுக்கு இப்போதைக்கு முற்றுப்புள்ளி அவ்வளவு விரைவாக வைக்கப்படாது என்பதையே தொடர்ந்தும் பிடிபட்டுக் கொண்டிருக்கும் படகுகள் சொல்லிக் கொண்டிருக்கின்றன. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


புதிதாக அமைக்கப்பட்ட புத்தர் சிலை



1990ஆம் ஆண்டிலிருந்து வன்னியை மையப்படுத்திய போர் அதிக தடவைகள் கனகராயன் குளத்தைக் காயப்படுத்தியது.

# கனகராயன்குளத்துக்கு ஆபத்து

ஜெரா

நமது கிராமங்கள் வேகமாக மூழ்கிக்கொண்டிருக்கின்றன. அதிகாரத்தின் அதி உச்ச பலத்திலிருந்து பிறந்திருக்கும் ஏதோ ஒன்று கிராமங்கள் பட்டப்பகலில் சூறையாடப்படுவதைக் கூட பார்த்துக் கொண்டிருக்கச் செய்திருக்கின்றது. எம் பாட்டன், பாட்டி, தாய், தந்தை வாழ்ந்து பழகிய நிலம் நமது காலத்தைக் கடன் கொடுக்க வலிந்து தயாராகிக் கொண்டிருக்கின்றது.

**பரவி வரும் ஆபத்து**

எமது தலைமுறைக்கும், எமது அடுத்த காலத்தவர்க்கும் அங்கு வாழ்வதற்கான ஆதாரங்கள் மறுக்கப்படும் சூழலுக்குள் அமிழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

வன்னியிலிருக்கின்ற மிகப் பழைமையான தமிழ்க் கிராமங்கள் இவ்வாறானதொரு சிதைவை அடைந்திருக்கின்றன. அரசியல் கட்சிகளினதும் ஊடகங்களினதும் மிகக்குறைவான பார்வையைப் பெறும் கிராமங்கள் இந்தத் துணிகர வேட்டையாடலுக்கு உள்ளாகிவருகின்றன.

அனுராதபுரத்தை அடுத்து வருகின்ற பாரம்பரிய தமிழ் இராச்சியத்தின் தென் எல்லையான வவுனியா மாவட்டம் 1970ஆம் ஆண்டுகளில் இருந்து திட்டமிட்ட வகையிலான சிங்கள மயமாக்கலை எதிர்கொண்டிருந்தது. குறித்த மாவட்டத்தின் தென் பகுதியிலிருந்த மகாவன்னி தற்போது முற்றுமுழுதான சிங்கள மக்களின் கிராமங்களாகிவிட்டது. அத்தோடு அங்கிருந்து விரைவான பெரும்பான்மைப் பரம்பலை விரிவுபடுத்தியும் வருகின்றனர்.

**கனகராயன்குளமும் சிக்கியது**

இப்போது இந்த விரிவுபடுத்தலானது வவுனியா மாவட்டத்தின் வட எல்லையில் இருக்கும் கனகராயன் குளம் வரைக்கும் வளர்ந்து விட்டது. வேறுவகையில் கூறுவதானால் வவுனியா மாவட்டம் முழுதும் சிங்கள வாசனையைப் பெற்றுவிட்டது. கனகராயன்குளம் வவுனியா நகரத்திலிருந்து 30 கிலோ மீற்றர் தூரத்தில், ஏ-9 சாலையை மையப்படுத்தி அமைந்திருக்கின்றது. வன்னியின் தனி அடையாளமான குளங்கள் இந்தக் கிராமத்தையும் தனித்துவமாக்குகின்றன.

வவுனியா வடக்குப் பிரதேச செயலகத்துக்குள் வரும் இந்தக் கிராமம் வடக்கு தெற்கு என இரண்டு கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்டுள்ளது. கிட்டத்தட்ட 400 வரையிலான குடும்பங்கள் வாழ்கின்றன. இவர்கள் விவசாயம், நன்னீர் மீன்பிடி, வணிகம் போன்ற தொழில்களில் ஈடுபடுகின்றனர். போருக்குப் பின்னரான அபிவிருத்தி இதனையும் பெரு நகரமாக்கி, போரின் ஓட்டை உடைசல்களைப் பூசிமெழுக முயற்சிக்கின்றது.

அதிகளவான கட்டடங்கள் மின்னல் வேகத்தில் முளைத்து வளர்கின்றன. ஏ-9 சாலையில் பயணிக்கும் ஒருவர் கனகராயன்குள மக்களுக்கு வசந்த காலம் பிறந்து விட்டது என்று எண்ணுமளவுக்கு கட்டடங்களும், கடைகளும் மாயஜாலம் காட்டுகின்றன. ஆனால் ஆழ ஊடுருவி பார்த்தால் பெரும் ஆபத்தை அந்தக் கிராமம் எட்டியிருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது.

**வரலாற்றைத் தவறவிட்ட கனகராயன்குளம்**

கனகராயன்குளம் பற்றிய வரலாற்றுப் பதிவுகள் எங்கும் இல்லை. 1895ஆம் ஆண்டில் வன்னி மாவட்டத்தின் விவரம் (manual of vanni district) என்ற நூலை எழுதிய ஜே.பி லூயிஸ் என்பவர் மட்டும் சில ஆதாரங்களைத் தருகின்றார். அது பிரிட்டிஷ் நிர்வாகவியலாளரும், தொல்லியலாளருமான பாக்கரின் கருத்தைத் தழுவியதாக இருக்கின்றது.

அதாவது கனகராயன் குளம் கி.பி. மூன்றாம் அல்லது நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனவும், அதற்குச் சான்றாக அந்தக் கால குள அமைப்பு முறை அமைந்திருந்ததாகவும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார். இதனையே லூயிஸிம் கூறி அந்தக் குளத்தின் பின் பக்கமாக உள்ள காட்டுக்குள் பழைய கட்டடங்களின் இடிபாடுகள் இருப்பதைத் தான் தரிசித்ததாகவும், அது மத சார்புடையதாகவோ அல் லது பண்டைய குறுநில மன்னர்களுக்கு உரியதாகவோ இருக்கலாம் என்றும் கருத்துத் தெரிவித்துள்ளார்.

**இடப் பெயரில் இருக்கின்றது தமிழர் வரலாறு**

இந்த இடத்தின் பெயரோடு வரும் கனக என்பது தமிழ்ச் சொல் ஆகும். கனகன், கானகன் போன்ற தமிழ் பெயர்கள் இன்றும் நம்மத்தியில் புழக்கத்திலிருப்பதைக் காணலாம். அதற்குப் பின்னால் வரும் ராயன் என்ற சொல்லும் தமிழ் வரலாற்று மரபில் அதிகாரம் பெற்ற தலைவர்களைக் குறிக்க பயன்படுத்தப்பட்ட சொல் ஆகும்.

இலங்கையிலும், தமிழகத்திலும் பண்டைய மன்னர்களால் வரையப்பட்ட கல்வெட்டுக்களில் ராயன் என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். அந்த வகையில் கனகராயன்குளம் என்பது ஆளும் திறனுடைய தமிழ் மகன் ஒருவரினது பெயரைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

இதற்குமேலும் சான்று தரும் வகையில் பல்லவராயன் கட்டு (கட்டு எனில் குளம்), கனகராயன் குளம், முத்துராயன்கட்டு, (ராயன் பின்னாளில் மருவி முத்துஐயனாக மாறியது) போன்றன பெயரமைப்பு வரிசையிலும், குள அமைப்பு வரிசையிலும் அமைந்திருக்கின்றது. இந்த மூன்று குளங்களையும் வரைபடத்தில் குறித்து நேர்கோடு ஒன்றை வரைந்தால் இவை கிட்டத்தட்ட ஒரே வரிசையில் வருவதைக் காணலாம். அத்தோடு மூன்றிலும் ராயன் என்ற அதிகாரத் தரப்பினைக் குறிக்கும் பின்னொட்டு சொல் வருகின்றது. ஆகவே இந்த மூன்றையும் குறித்த பிராந்தியத்தில் எழுச்சி பெற்றிருந்த தமிழ் அரச வம்சத்தினரே உருவாக்கியிருக்க வேண்டும்.

ஏற்கனவே பல்லவராயன் கட்டு பல்லவ வழிவந்த தமிழ் மன்னனால் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. 13ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தை மையப்படுத்தி உருவாகிய யாழ்ப்பாண ராசதானியிலும், வன்னிச் சிற்றரசுகளிலும் கனக என்ற பெயரோடு தொடர்புடைய மன்னர்கள் இடம்பெற்றமைக்கு வலுவான சான்றுகள் உண்டு. எனவே கனகராயன் குளம் வெளிச்சம் படாத வரலாற்றைக் கொண்டிருக்கின்றது. அது சரிவர ஆராயப்படவுமில்லை. எதுவும் உறுதி செய்யப்படவும் இல்லை.

**போர்தான் இதற்கும் விளம்பரம்**

பிரித்தானியர் பிரித்த எல்லைகளின் பயனாக வவுனியா மாவட்டத்துக்குள் அடங்கிக்கொண்ட கனகராயன்குளம், பல்வேறு குடிகளையும் தன்னுள் வைத்திருந்தது. போர் மட்டும் நடைபெறாவிட்டால் இந்தக் கிராமத்துக்கு விளம்பரம் கிடைக்காமல் போயிருக்கும். வன்னியின் பல கிராமங்களைப் போல இதுவும் 1980ஆம் ஆண்டுக்குப் பின்னர் இடம்பெற்ற போரினாலேயே அடையாளம் பெற்றது. 1990ஆம் ஆண்டிலிருந்து வன்னியை மையப்படுத்திய போர் அதிக தடவைகள் கனகராயன்குளத்தைக் காயப்படுத்தியது.

இலங்கை அரசு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி, கண்டி வீதியைப் பிடிப்பதற்கான எத்தனங்களை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில் எல்லாம் கனகராயன் குளம் போரின் கேந்திர மையமாகமாறும். அந்தவகையில்தான் 'ஜெயசிக்குறு' என்ற பெயரோடு அரசு ஆரம்பித்த மிக வலுவான படைத்தாக்குதலில் கனகராயன் குளம் படையினர் வசமானது. ஆனால் அந்தக் கைப்பற்றல் நீடித்திருக்கவில்லை.



படையினரின் பெயர் வைக்கப்பட்ட வீதிக் கல்

புலிகள் தொடுத்த மூன்று நாள் தாக்குதலில் கனகராயன்குளம் மறுபடியும் தமிழர்களின் கைக்கு வந்தது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனகராயன்குளத்துக்கு ஆபத்து



கனகராயன்குளத்தில் அமைந்த புத்தர்கோயில்

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சமாதான காலத்தோடு அங்கு வாழ்வைத் தொடங்கிய மக்கள் 2008ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் அங்கிருந்து மீண்டும் ஷெல்களினால் துரத்தப்பட்டனர். அத்தோடு வன்னி முழுவதும் இலங்கைப் படையினரின் வசமாகியது.

2009ஆம் ஆண்டு நிகழ்ந்த மனிதப் பேரவலத்தைத் தொடர்ந்து, 2010ஆம் ஆண்டில் மீண்டும் ஊர் திரும்பினர் கனகராயன்குளத்தவர்கள். அவர்கள் கையில் போர் எதையும் விட்டுவைத்திருக்கவில்லை. பழைய தொழிலைத் தொடங்க பலரிடம் கை, கால்களே இருக்கவில்லை. ஆனாலும் வாழ்வுடன் கடினமாகப் போராடத் தொடங்கினர். ஆனால் அவர்களின் இருப்புக்கான போராட்டத்தையும் மீறி சிங்களவர்களின் பெரும்பான்மை மயமாக்கல் விஸ்தீரணம் பெற்று வருகின்றது.

**அம்மன் கோயிலுக்குள் அமர்ந்த புத்தர்**

முதற்கட்டமாக மக்கள் தம் ஊர் திரும்பிய கையோடு பெரும் அதிர்ச்சியடைந்தார்கள். இதுவரை அந்த மக்களும், அயலூர் மக்களும் மட்டுமே வழிபட்டு வந்த அரச மரத்துக்கு கீழான அம்மன் கோயிலில் புத்தர் அழகாக அமர்ந்திருந்தார். அம்மன் காணாமல் போயிருந்தாள். ஆயினும் தேடி எடுத்து அந்த இடத்தில் அம்மனையும் இருத்தி விட்டனர் மக்கள். இப்போது அங்கு அரச மரம் இருந்த ஒரே காரணத்துக்காக இந்துக் கோயிலுக்குள் புத்தரும் இருக்கின்றார். ஆனாலும் அந்த ஆலயச் சூழலில் அவர் பிடித்திருக்கின்ற இடம் அதிகம்.

அந்தப் பண்பாட்டின் மையமோ?

இதற்கு அடுத்ததாக கனகராயன் குளத்தை அண்மித்த பகுதியில் பிரமாண்டமான பௌத்த மையம் ஒன்று 2009 ஆம் ஆண்டிலிருந்து உருவாக்கப்பட்டு வருகின்றது. இன்னமும் அதன் நிர்மாணப் பணிகள் முடிவு பெறவில்லை. அங்கே சின்ன அறையில் வெள்ளைப் புத்தர் இருக்கின்றார். அதற்கு அண்மித்த பகுதியில் அரச மரம் அழகுபடுத்தப்படுகின்றது. அணைக்கட்டு நாளுக்கு நாள் வளர்க்கப்படுகின்றது. பச்சைப்புல் இன்னும் விரிவுபெறுகின்றது. 24 மணிநேரமும் அந்த மையத்தை மெருகூட்டும் பணியில் 261ஆம் படைப்பிரிவினர் ஈடுபட்டிருக்கின்றனர். நாளுக்கு நாள் விரிவுபெறும் அந்தப் பௌத்த கலாசார மையம் கனகராயன்குளத்தை பௌத்தர்களின் புனித நிலம் என்று புதிதாய் வருபவர்களுக்கு விளம்பரப்படுத்தி வருகின்றது.

இல்லை, இது தமிழ் பண்பாடு இருக்கும் இடம்தான் என்பதை நிரூபிக்கக் கூடிய இந்து ஆலயங்கள் அதனை விட பிரமாண்டமாக இல்லாது இருப்பது குறித்த விளம்பரச் சிந்தனையை மேலும் உறுதிப்படுத்தும். அந்த மையத்துக்குப் பின்னாலிருக்கின்ற காடும் இப்போது அழிக்கப்படுகின்றது. இராணுவத்தினர் மேற்கொள்ளும் இந்தப் பணிக்கு இப்போதைக்கு காரணம் சொல்லப்படவில்லை. இதில் குறிப்பிட வேண்டிய முக்கிய விடயம், இந்தப் புனித மையம் அமைந்திருக்கின்ற காணியின் ஒரு பகுதி கனகராயன்குளத்தைச் சேர்ந்த தமிழர் ஒருவருக்கு உரியது என்பதுதான். மிகுதி மட்டுமே அரச காணி. இனி அவர் அந்தக் காணிக்கு உரிமை கோர முடியுமா?

வீதிகளின் பெயர்களிலும் ஒட்டிக் கொண்டது சிங்களம்

கனகராயன்குள மக்களின் வாழ்வாதாரத் தொழில் விவசாயம். அதற்கான ஊக்கத்தையும் உந்துதலையும் அளித்து வருவது விவசாயத் திணைக்களம். ஆனால் இப்போது விவசாயத் திணைக்களம் அவர்கள் வசம் இல்லை. அந்த இடத்தில்தான் பொலிஸ் அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. அது அரச காணி எனினும் மக்களின் அவசியத் தேவைக்குரிய நிலத்தை வேறுதேவைகளுக்குப் பயன்படுத்தியிருப்பது வேதனைக்குரியது.

**வீதிகளுக்கு சிங்களப் பெயர்**

இத்தோடு நின்று விடாமல் கனகராயன் கிராமத்துக்குள் நுழையும் கிரவல் வீதிகளுக்குக்கூட சிங்கள அடையாளம் வலிந்து திணிக்கப்பட்டிருக்கின்றது. வீதிகளுக்கு சிங்கள சிப்பாய்களின் பெயர்கள் இடப்பட்டிருக்கின்றது. கசலப்பெரோ வீதி, அனுரப்பெரேரா வீதி என அவை மாறியிருக்கின்றன. இந்த வீதிகள் முன்பொரு காலத்தில் தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடி மரணித்த போராளிகளின் பெயர்களைச் சூடியிருந்தன. இப்போது அதே வீதிகள் பண்பாட்டு, வரலாற்று, சிதைவுகளுக்கான திறவுகோலாக மாறியிருக்கின்றன.

கனகராயன்குளத்தை பௌத்த அல்லது சிங்கள மயப்படுத்தி வருவதில் படையினரும், பௌத்த பிக்கு ஒருவரும் முக்கிய பணியாற்றுகின்றனர். இதனைத் தடுக்க இதுவரை என்ன முயற்சிகளும் தமிழர் சார்பாக மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை, அரசியல்வாதிகளின் அறிக்கைகளைத் தவிர.

இப்படியே போனால் இன்னும் சில வருடங்களில் தமிழ் கிராமமமான கனகராயன்குளமும் சிங்களவர்களின் கிராமமாகலாம். அது வடக்கில் அதிகாரத்தின் துணையோடு வளர்க்கப்பட்டு வரும் பௌத்த பண்பாட்டுக்கு புதிய விளக்கத்தை கொடுக்கும். இதற்கு ஏற்ற வகையில்தான் அங்கு புதிய புதிய பௌத்த பண்பாட்டு மைய[illegible] றது. இதனைக்[illegible]

# மாற்றி யோசிக்கலாமே!

ம.வேலாயுதம்

1948ஆம் ஆண்டு எங்கள் நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தபின் தமிழர்களுக்கு இரண்டு அமைச்சர் பதவிகளை வழங்கிவிட்டு வடக்கு - கிழக்கு மாகாண நிலங்களை திட்டமிட்ட வகையில் விழுங்க ஆரம்பிக்கப்பட்ட இரகசிய சிங்கள மயமாக்கல் திட்டம் இன்று முழுவீச்சில் நடைபெறுகிறது. இவற்றுக்கும் ஏனைய சூழ்ச்சித்திட்டங்களுக்கும் எதிராக பல வேறுபட்ட அரசியல், ஆயுதப் போராட்டங்களைத் தமிழர்கள் நடத்தினார்கள். தீர்வுக்காகப் பல ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டன. கடைசியில் அவை ஒரு தலைப்பட்சமாக இலங்கை அரசுகளினால் மீறப்பட்டன. இன்று தெரிவுக்குழுவுக்கு வந்துபேசு, கேள் என்றளவில் நிற்கிறது தீர்வு முயற்சிகள்.

சம்பந்தன் ஐயாவோ, மாகாணங்களுக்குக் காணி பொலிஸ் அதிகாரம், 13பிளஸ், பிளவு படாத நாட்டில் உள்ளக அதிகாரங்கள் எனக் கூறி வருகிறார். ஆனால் டெசோ மாநாடு, கடல் கடந்த ஈழ அரசு பிரகடனம் என்பவற்றைக் காரணமாகக் காட்டி கடும்போக்கு நிலைப்பாட்டினையே அரசு எடுத்து வருகிறது.

அதிகாரங்களை வழங்கினால்தனிஈழம் அமைத்து விடுவார்கள் எனப் பிரசாரம் செய்து தங்கள் தேர்தல் வாக்கு வங்கியைத் தக்க வைப்பதுடன் இந்தியா போன்ற நாடுகளையும் நம்பவைக்கிறார்கள் அரசில் இருப்பவர்கள். எனவே எங்கள் தலைவர்கள் மாற்று அரசியல் சூத்திரம் ஒன்றை (Alternatinc new palitical formula) முன் வைக்க வேண்டிய நிலையில் எங்கள் அரசியல் தலைவர்கள் இருக்கிறார்கள்.

எங்கள் மாற்று அரசியல் தீர்வு, யோசனையை ஏற்றுக் கொள்ளுமானால் ஈழம் பற்றி சிங்களம் பயப்படுவது தேவையற்றதாகிவிடும். உலக நாடுகளும் இத்தீர்வுக்கு ஆதரவு வழங்கும் என எதிர்பார்க்கலாம்.

அரசு கூறும் ஒரேநாடு, ஒரே மக்கள், ஒற்றையாட்சி என்ற கொள்கையடிப்படையிலானதாக இந்த மாற்று அரசியல் சூத்திரத்தை அமைத்துக் கொள்ளலாம். ஆனால் அந்த அரசு நியாயமான நிபந்தனையில் கீழ் அமைய வேண்டும் என்பதைத் தமிழர் தரப்பு விடாப்பிடியாக - அழுத்தம் திருத்தமாக - வலியுறுத்த வேண்டும். அதற்கான திருத்தங்களை அரசமைப்பில் செய்விக்கவேண்டும்.

தமிழர் தரப்பு வைக்க வேண்டிய நிபந்தனைகளில் முதன்மையானது. 50 சதவீத இடஒதுக்கீடு. அதாவது தமிழ்பேசும் மக்களின் பூர்வீக வாழ்விடங்களான வடகிழக்கு மாகாணங்களில் இருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகும் பிரதிநிதிகளில், குறைந்தது 50வீதம் மக்களை பிரதிநிதிப்படுத்தக்கூடியவர்களை மத்திய அரசில் பங்காளிகளாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே அந்த முக்கிய நிபந்தனை.

அவர்களில் குறிப்பிட்டளவு எண்ணிக்கையிலானோர் அரசில் இருந்து விலகினால் அரசு கலைக்கப்படவேண்டும். ஆனால் அப்படி விலகுவது நியாயமானதும் சட்டாதிக்கமானதும் என ஒரு விஷேச நீதிமன்றத்தினால் தீர்ப்பளிக்கப்படவேண்டும். அல்லாவிடில் நாடாளுமன்றம் தொடர்ந்து செயலாற்றலாம்.

மேலும் அந்த நாடாளுமன்றமோ, நிறைவேற்று ஜனாதிபதியோ அரசியல், நீதிமன்ற சட்டங்களில் மாற்றம் எதுவும் செய்ய முடியாததான புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கிக் கொள்ள வேண்டும். ஐவர் ஜென்னிக்ஸ்- சோல்பரி யாப்பை சிறிமாவோ அரசு 1973இல் நிராகரித்தது போன்று அல்லாமல், மற்றொரு அரசமைப்பை உருவாக்க முடியாத வகையில் புதிய அரமைப்பு இருக்க வேண்டும்.

இப்படியான நிபந்தனைகள் ஐக்கிய நாடுகள் சபையின் அங்கீகாரத்துடனும் உத்தரவாதத்துடனும் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். ஏற்றுக்கொள்ளப்படும் நிபந்தனைகளை மீறி அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டால் ஐ.நா. குற்ற நடவடிக்கை எடுக்க அனுமதிக்க வேண்டும்.


இந்த யோசனையை ஏற்க மறுப்பதற்கு சிங்களத்தினால் நியாயமான காரணங்கள் காட்டமுடியாது. அதாவது பெரும்பான்மை இனமும் சிறுபான்மை இனமும் அரசியல் ரீதியில் உடைக்கமுடியாத பூட்டில் ஒற்றுமையாக இருக்கலாம். இந்த ஏற்பாடுகள் வெறும் கனவுமல்ல.

அப்படி ஒரு மாற்றம் வருமானால் சிறுபான்மை இனங்களின், முக்கியமாக வடக்கு - கிழக்கு தமிழ் முஸ்லிம் மக்களின் பூர்வீக நிலத்தை-பிரதேசத்தை திட்டமிட்ட குடியேற்றத்திலிருந்து முக்கியமாக போருக்கு பிற்பட்ட ஆக்கிரமிப்பிலிருந்து காப்பாற்றிக் கொள்ளலாம்.

இன்று இலங்கை அரசு பாதுகாப்பு பகுதிக்கு ஒதுக்கும் செலவீனத்தை குறைத்தால் வடக்கு - கிழக்குக்கு மட்டுமல்லாமல் ஏனைய பகுதிகளுக்கும் வரவு-செலவுத்திட்டத்தில் கூடிய நிதியை வழங்கலாம். அதற்கு இரு தரப்பினரும் நம்பிக்கை கொள்ளக்கூடிய ஒரு தீர்வு முன்வைக்கப்படுவது அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பௌத்த மதத்தின் மேலாதிக்கப் போக்கை நிலைநிறுத்த ஏனைய மதங்களின் நடைமுறைகளை மாற்றவும், ஏனைய மதங்களைப் பின்பற்றும் மக்களின் உணர்வுகளைத் துச்சமாக மதிக்கவும் தயங்காதவர்களால் இந்த நிலைமைகளின் பாரதூரத்தைப் புரிந்துகொள்ள முடியுமா?

# பௌத்தமத மேலாதிக்கத்தில் பத்திரகாளி அம்மன்

ஞாயிறு காரம்

■ சந்திரசேகர ஆஷாத்

சிலாபம் பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் அதன் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு இடம்பெறவிருந்த மிருகபலி, வேள்வி நிறுத்தப்பட்டுவிட்டது. அந்த ஆலயத்தின் பிரதம பூசகர் காளிமுத்து இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளார். இந்தியாவின் கபிலவஸ்துவிலிருந்து கொண்டு வரப்பட்ட புத்தரின் புனிதச் சின்னங்கள் வடமேல் மாகணத்தின் வாரியப்பொல என்ற இடத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கு மரியாதை கொடுக்கும் வகையில் மிருகபலி பூசையை நிறுத்தும்படியும் ஜனாதிபதி கேட்டுக் கொண்ட காரணத்தாலேயே அந்த வழிபாடு நிறுத்தப்பட்டதாக ஆலயப் பூசகர் தெரிவித்துள்ளார்.

பௌத்த மத சின்னங்களைத் தரிசித்து அவற்றை வணங்குவது எவ்வாறு பௌத்த மக்களின் வழிபாட்டு முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதோ அவ்வாறே காளிதேவிக்கு மிருக பலியிடுவதும் இந்து மக்களின் வழிபாட்டு முறைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இப்படியான ஒரு நிலையில் மாகாணத்தின் ஒரு பகுதியில் நடக்கும் ஒரு பௌத்த வழிபாட்டுமுறைக்காக இன்னுமொரு பகுதியில் இடம்பெற்ற ஒரு இந்து மத வழிபாட்டை நிறுத்தும்படி கோருவது நியாயமானது என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. சகல மதங்களையும் சமமாக மதிப்பதாகக் கூறிவரும் ஜனாதிபதி இப்படி ஒரு வேண்டுதலை முன்வைப்பது பல கேள்விகளை எழுப்புகிறது. அதாவது பௌத்த மதத்தின் நலன்களுக்கு அமைவாக ஏனைய மதங்கள் தங்கள் பாரம்பரிய முறைகளைக் கைவிட வேண்டும் என்பதே ஜனாதிபதியின் நோக்கம் போலவே தென்படுகிறது. இப்படியான நடவடிக்கைகள் எவ்வளவு தூரம் இந்துமத மக்களின் உணர்வுகளை அலட்சியப்படுத்துவதும் புண்படுத்துவதுமாக அமையும் என்பது சொல்லித்தான் தெரிய வேண்டும் என்பதல்ல. சில இந்து மத ஆலயங்களில் இடம்பெறும் மிருகபலி என்பது வெறுமனே ஒரு பூசை முறையல்ல. இது தொன்மைவாய்ந்த இந்து மத சடங்குகளுடன் தொடர்புபட்டது. வைரவக் கடவுளுக்கும் காளி, துர்க்கை, கொற்றவை ஆகிய பெண் தெய்வங்களுக்கும் மிருகபலி கொடுக்கப்படுவதுண்டு. இவைமிகவும் கோபம் கொண்ட, குற்றம் பொறுக்காத தெய்வங்கள் எனக் கருதப்படுவதாலேயே அவை பலிப்பூசைகள் மூலம் ஆற்றுப்படுத்தப்படுகின்றன.

இந்து மதத்தில் இருவேறு விதமான வழிபாட்டு முறைகள் உள்ளன. ஒன்று ஆகம விதிகளுக்கு உட்பட்ட வடமொழி மந்திரங்களிலான பூசை முறையைக் கொண்டது. இவை சிவன், பார்வதி, கணபதி, ஆறுமுகன் ஆகிய தெய்வங்களுக்கு உரியவை. வைரவர், கண்ணகி, காளி, துர்க்கை, கொற்றவை, நாகதம்பிரான், ஐயனார், பெரியதம்பிரான், அண்ணமார், நாச்சிமார் உட்பட்ட சிறு தெய்வங்களுக்கான பூசை முறைகள் ஆகம விதிகளுக்கு உட்படாதவை.

சிறு தெய்வ வழிபாட்டில் வேத மந்திரம் கற்ற பிராமணர்கள் பூசகர்களாக இருப்பதில்லை. சாதாரண மக்கள் மத்தியில் உள்ள பூசாரிகளே பூசைகளை மேற்கொள்வார்கள்.

பொங்கல், மடைபரவல், விளக்கு வைத்தல், தீ மிதித்தல், சாமியாடல், காவடியெடுத்தல், பால்குடம் எடுத்தல், மிருகபலி கொடுத்தல் போன்றவையே சிறு தெய்வ வழிபாட்டு முறைகளாகும். அந்த வகையில் சிலாபம் காளியம்மன் ஆலயமும் ஆகம விதிகளுக்கு உட்படாத சிறு தெய்வ வழிபாட்டு முறைகளுக்கு உட்பட்ட ஒரு ஆலயமாகும். இந்தக் கோயிலின் பூசை முறைகள் பாரம்பரிய சடங்குகளாகும். இவை தொன்று தொட்டு பின்பற்றப்பட்டு வருவனவாகும். இந்த வழிபாட்டு முறைகளில் பெரும்பாலானவை நேர்த்திக் கடன் நிறைவேற்றுவதுடன் சம்பந்தப்பட்டவை. தங்களுக்கு இடர்கள் நேரும் போதோ, நோய்கள் ஏற்படும் போதோ வேண்டுகைகளை நிறைவேற்றவோ மக்கள் நேர்த்திகளை வைப்பதுண்டு. அவற்றில் காவடி எடுத்தல், தீ மிதித்தல், மிருகங்களை வளர்த்துப் பலியிடல் என்பன முக்கியமானவையாகும்.

காவடியாட்டத்தில் பலவகை உண்டு. சாதாரண பால் காவடி, ஆட்டக்காவடி, தூக்குக்காவடி, துலாக் காவடி, பறவைக் காவடி என தோலில் இரும்புக் கொழுக்கிகளைக் கொழுவித் தம்மை வருத்தி மேற்கொள்ளும் வழிபாட்டு முறையாகும். இவை உடலைக் கடுமையாக வருத்தி மேற்கொள்ளும் நேர்த்திக் கடனாகும். இவ்வாறே கடும் வெப்பம் கொண்ட நெருப்பின் மீது நடந்து செல்வது தீ மிதித்தலாகும். இவ்வாறே பல மாதங்களுக்கு முன்பே ஆடுகளையோ, கோழிகளையோ காளிக்கு நேர்ந்துவிட்டு பக்குவமாக வளர்ந்து கோயிலில் கொண்டு போய் பலியிடுதலாகும்.

இப்படியான வழிபாட்டு முறைகளில் முக்கியமான வேள்வி எனப்படும் மிருகபலிப் பூசை ஜனாதிபதியின் வேண்டுதலின் பேரில் நிறுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. இங்கு முக்கியமாக உணரவேண்டியது இதுகோயில் வளாகத்தில் வருடமொரு முறை நடக்கும் ஒரு தனிச் சம்பவமல்ல. பல நூறு மக்கள் தங்கள் வேண்டுகைகளை நிறைவேற்றக் கோரி அல்லது நிறைவேறிய வேண்டுகைகளுக்கு நன்றி தெரிவிக்கப் பலிகொடுப்பதற்காக பல மாதங்களாக ஆடுகளையோ கோழிகளையோ வளர்த்து வந்தனர். அந்தப் பலியிடலே அவர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய நேர்த்திக் கடன் கழித்தலாகும். அவர்கள் பல மாதங்களாக எதிர்பார்த்த அந்த வழிபாடு தடுக்கப்பட்டுவிட்டது. அவர்களைப் பொறுத்தவரை அது ஒரு தெய்வகுற்றமாகும். அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் நேர்த்தியை நிறைவு செய்ய முடியாமைக்காகப் படும் துயரையும் தெய்வ பயத்தையும் பௌத்த மத மேலாதிக்க சக்திகளால் புரிந்துகொள்ள முடியாது.

காளிதேவி கோபம் கொண்டால் ஊரில் அம்மை, வாந்திபேதி போன்ற கொள்ளை நோய்கள் ஏற்படும் எனவும் வறட்சி, வெள்ளம், புயல் போன்ற இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும் எனவும் ஒரு நம்பிக்கை உண்டு. அதன் காரணமாக அந்த மக்கள் அச்சத்துடன் வாழும் சூழலும் ஏற்பட்டுள்ளது.

பௌத்த மதத்தின் மேலாதிக்கப் போக்கை நிலைநிறுத்த ஏனைய மதங்களின் நடைமுறைகளை மாற்றவும், ஏனைய மதங்களைப் பின்பற்றும் மக்களின் உணர்வுகளைத் துச்சமாக மதிக்கவும் தயங்காதவர்களால் இந்த நிலைமைகளின் பாரதூரத்தைப் புரிந்துகொள்ள முடியுமா? கடந்த வருடமும் இந்த ஆலயத்தில் பலியிடக் கொண்டுவரப்பட்ட ஆடுகளையும் கோழிகளையும் அமைச்சர் மேர்வின் சில்வா தலைமையில் வந்த ஒரு குழுவினர் பலவந்தமாகக் கடத்திச் சென்றனர். இது தொடர்பாகப் பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை நாம் மறந்துவிட முடியாது. ஜனாதிபதியோ அல்லது வேறு எந்த அமைச்சர்களோ அந்த முறை மீறலுக்காக வருத்தம் கூடத் தெரிவிக்கவில்லை.

இந்த வருடமும் இந்தக் கோயில் வேள்விக்கெதிராக அமைச்சர் மேர்வின் சில்வா குரலெழுப்பியதுடன் சத்தியாக்கிரகம் செய்யப் போவதாகவும் அறிவித்தார். அது மட்டுமன்றி சில பிக்குகள் தலைமையிலான ஒரு கூட்டத்தினர் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை மேற்கொண்டு முன்னேஸ்வரம் சிவன் கோயிலுக்குள் புகுந்து குழப்பத்தை ஏற்படுத்தினர். மிருகபலி அங்கு இடம்பெறுவதில்லை என்று பூசகர் தெரிவித்த பின்பு அங்கிருந்து அகன்று காளி கோயிலுக்குள் சென்று குழப்பங்களை மேற்கொண்டனர்.

அதேவேளையில் காளி கோயில் சுற்றாடலில் எந்தவித ஆர்ப்பாட்டமோ ஊர்வலமோ நடத்தக் கூடாது எனவும் மிருகபலிப் பூசை நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும் நீதிமன்றம் உத்தரவிட்டது. இவற்றிலிருந்து நாம் தெளிவாக ஒரு விடயத்தைப் புரிந்துகொள்ள முடியும். அதாவது பௌத்த பேரினவாத சக்திகள் தங்கள் மேலாண்மை மூலம் வேள்வியைத் தடுப்பது என ஏற்கனவே முடிவெடுத்துவிட்டனர் என்பதுதான் அது. நீதிமன்ற உத்தரவை அடுத்து மேர்வின் சில்வா எத்தடை வந்தாலும் தான் சுனாமியாகச் சீறியெழுந்து வேள்வியை நிறுத்தப் போவதாக சவால் விட்டதையும் நாம் மறந்துவிட முடியாது.

அமைச்சர் மேர்வின் சில்வாவின் மிரட்டலும் ஜனாதிபதியின் வேண்டுகையும் வேள்வியை நிறுத்துவது என்ற ஒரே நோக்கம் கொண்டவை என்பதில் சந்தேகத்துக்கு இடமில்லை.

அது மட்டுமன்றி அமைச்சர் மேர்வின் சில்வாவின் முயற்சிகளின் வேறு ஒரு வடிவமாக ஜனாதிபதியின் வேண்டுகை அமைந்துள்ளது. எனினும் இதுவும் அவற்றின் தொடர்ச்சியே என்பது தெளிவாகத் தெரிகிறது.

தம்புல்லவில் முஸ்லிம்களின் பள்ளிவாசலில் இடம்பெற்ற அடாவடித்தனம் தம்புல்ல ரன்கிரி விகாரையின் பீடாதிபதி தலைமையில் வந்த ஒரு குழுவினராலேயே மேற்கொள்ளப்பட்டது. அது பௌத்த புனித பிரதேசம் எனவும் அங்கு வேறு மதங்களின் வணக்கத் தலங்கள் இருக்கக் கூடாது எனவும் கூறப்பட்டது. அண்மையில் தம்புல்ல ரன்கிரி விகாரைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி உடனடியாகவே புனித பிரதேச அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளும்படி கட்டளையிட்டுள்ளார் சத்தமில்லாமலே பள்ளிவாசல் அந்த இடத்தை விட்டு அகற்றப்பட்டு வேறு இடத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.


தீவகாபி விகாரையைச் சுற்றியுள்ள இடங்கள் புனித பிரதேசமாக்கப்படவேண்டும் எனவும் அவ் விகாரையின் மணி கேட்கும் இடங்களிலெல்லாம் வேறு மதத்தினர் எவரும் குடியிருக்கக்கூடாது என அவ் விகாரையின் பிரதான பிக்குவால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அந்தப் பிரதம பிக்கு இனம் தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட பின்பு அப் பிரச்சினை அடங்கிப் போய் விட்டது. அண்மையில் அங்கு விஜயம் செய்த ஜனாதிபதி தீவகாபி புனித பிரதேசத்தின் அபிவிருத்திக்கு 250 கோடி ரூபா வழங்கியுள்ளார்.

அதாவது பௌத்த மதத்தின் மேலாதிக்கத்தை நிலை நிறுத்த ஏனைய மத வழிபாட்டுத் தளங்களை அகற்றவும் குடியிருப்புக்களை வெளியேற்றவும் ஜனாதிபதி சகல ஒத்துழைப்பையும் வழங்கி வருகிறார். அவற்றின் தொடர்ச்சியாகவே சிலாபம் காளிகோயில் வேள்வியை நிறுத்தும் படி ஜனாதிபதி கோயில் நிர்வாகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். அதேவேளையில் வாரியப்பொலவுக்கு கொண்டு வரப்படும் புத்தரின் புனித சின்னங்களை ஒரு சாட்டாகச் சொல்வது ஒரு அப்பட்டமான ஏமாற்றாகும். அது மட்டுமன்றி ஏனைய மதங்கள் பௌத்த மத மேலாதிக்கத்தை ஏற்று தங்கள் வழிபாட்டு முறைகளைக் கைவிடவேண்டும் என்ற பிரகடனமும் இதுவாகும்.

எனவே தமிழ் முஸ்லிம் மக்கள் தங்கள் மதங்களை இழிவுபடுத்தவும், சிதைக்கவும் முனையும் பௌத்த மேலாதிக்கம் தொடர்பாக விழிப்பாக இருக்கவேண்டியது அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுகந்தன்

# விடைபெற்றார் முதல் மனிதன்

சுமார் நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் உலகநாடுகள் அறிவியல் புரட்சிக்காக தமது மூளைகளைக் கசக்கிப் புளிந்து கொண்டிருந்தன.

அதில் மிகப்பெரும் புரட்சியை நிகழ்த்தும் நோக்கில் அமெரிக்கருக்கும் ரஷ்யருக்கும் பெரும் போட்டி நிலவியது. இதின் ஆரம்பத்தில் ரஷ்யாவே முன்னிலையில் திகழ்ந்து சாதனைகளைப் படைத்துக்கொண்டிருந்தது.

அந்த வரிசையில் ரஷ்யா பூமியைச் சுற்றிவர முதன் முதல் விண்கலத்தை 1957ஆம் ஆண்டில் அனுப்பி வெற்றி கண்டது. 'ஸ்புட்னிக்' எனப்பெயரிட்ட இந்த விண்கலம் வெற்றிகரமாக பூமியை வலம் வந்து சாதனை படைத்தது. அதன் தொடர்ச்சியாக 1961ஆம் ஆண்டில் முதல் மனிதனை ஏற்றிய ரஷ்ய விண்கலம் பூமியை வலம் வந்தது. யூரிககாரின் என்ற விஞ்ஞானியே தனது 27 ஆவது வயதில் இந்தச் சாதனைக்கு சொந்தமாகினார். இவர் பின்னர் விமான விபத்தொன்றில் உயிரிழந்தார்.

இதைவிட முதல்பெண் மணியை 1963ஆம் ஆண்டில் விண்வெளிக்கு அனுப்பிய சரித்திரமும் ரஷ்யா வசமானது. வாலண்டினா தெரஸ்கோவாவே இந்தப் பெண் விஞ்ஞானியாவார்.

இவ்வாறாக ரஷ்யா அறிவியலில் வல்லரசாகத் திகழ்ந்த காலகட்டம் அது.

அப்போது 1969 யூலை மாதம் 15 ஆம் திகதி அமெரிக்க வெள்ளை மாளிகையிலிருந்து அப்பேதைய அதிபர் கென்னடி - வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அறிக்கை ஒன்றை விடுத்தார்.

''ரஷ்யாவின் சாதனைகளைத் தவிடு பொடியாக்கும் வகையில் 20ஆம் நூற்றாண்டில் மனிதனால் எட்டப்பட்ட மைல்கல்லாக எமது வீரர்களின் சாதனை அமையப்போகிறது.

நிலவில் மனிதனின் கால்தடம் பதிக்கும் கனவு நனவாகப் போகிறது. அதற்கான ஒத்திகைகளை அமெரிக்கா வெற்றிகரமாக நிகழ்த்தியுள்ளது'' என்றார்.

ஆம்! அவர் அறிவித்தபடியே 1969 ஆண்டு யூலை மாதம் 16 ஆம் திகதி அமெரிக்காவின் கென்னடி முனையிலிருந்து 'அப்பலோ- II' விண்கலம் வானைக் கிழித்துக்கொண்டு மின்னல் வேகத்தில் பறந்தது.

அந்த விண்கலத்தில் மூவரடங்கிய குழு பயணித்தது. அதன் தலைவராக 39 வயதுடைய நீல் ஆம்ஸ்ரோங்கும் அவரது சகாக்களான ஆல்டரின்கொலின் ஆகியோரும் இருந்தனர்.

இலங்கை நேரப்படி இரவு 7.02 இற்கு புறப்பட்ட விண்கலம், 3,500 மைல் தூரத்தை ஒரு மணிநேரத்தில் கடந்தது. அதன் வேகம் அப்படி இருந்தது.

உலகமே இவர்களது சாதனைப் பயணத்தை நேரில் காணும் வாய்ப்பை தொலைக்காட்சி ஊடகங்கள் வழங்கின அந்தப் பாக்கியம் கிட்டாதோர் வானொலி மூலமாக நேரடி ஒலிபரப்பை நாசாவிலிருந்து கேட்டனர்.

இவ்வாறு பெரும் கனவுகளுடன் புகுந்த விண்கலம் இரு நாள்கள் பயணத்தின் பின்னர் சந்திரனை நெருங்கியது.

சந்திர மண்டலத்துக்குள் புகுந்து சுற்றிய விண்கலத்திலிருந்து 20 ஆம் திகதி மாலை 6.30 மணிக்கு ஆம்ஸ்ரோங்கும், ஆல்டரினும் தரையிறங்குவதற்கு வசதியாக பிரதான கலத்துடன் இணைக்கப்பட்ட உபகலத்துக்குள் புகுந்தனர். நள்ளிரவு 11.47 அளவில் சகல ஆயத்தங்களும் பூர்த்தியடைந்தன. பூமியிலிருந்து நேரடியாகப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் இதயம் வேகமாக துடிக்கத் தொடங்கியது.

அந்தவேளை உபவிண்கலம் பிரதான கலத்தை விட்டுப் பிரிந்து சென்று அதிகாலை 1.47 இற்கு சந்திரனைத் தொட்டது.

அதிலிருந்து காலை 8.26 இற்கு வாயில் கதவுகளை மெல்ல விலக்கிக்கொண்டு வெளியில் வந்து நிலவில் கால்பதித்தார் நீல் ஆம்ஸ்ரோங்.

இந்தத் தருணம் மனிதகுலத்துக்கே பெருமையைத் தேடித்தந்த கணமாக வரலாற்றில் பதிவாகியது. நிலவில் தடம் பதித்த முதல் மனிதன் என்ற பெயரையும் ஆம்ஸ்ரோங் பதிவுசெய்தார்.

இந்தச் சாதனை தொடர்பில் பல சர்ச்சைகள் கிளப்பப்படாமலும் இல்லை.

அமெரிக்கக்கொடியை இவர் சந்திரனில் நட்டு வைப்பதை வீடியோப் பதிவுகள் தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டின. ஆனால் அங்கேதான் ஒரு சிக்கல் இருந்தது. இயல்பாகவே பூமியைத் தவிர வளிமண்டலம் உள்ள பகுதி இதுவரை இந்தப் பிரபஞ்சத்தில் கண்டு பிடிக்கப்படவில்லை. இவ்வாறிருக்க அமெரிக்கத் தேசியக் கொடி காற்றில் அசைவது போன்று தோற்றப்பட்டை வீடியோக்கள் பதிவுசெய்தன.

எனவே இவர் இருப்பது உண்மையிலேயே சந்திரன்தானா? அல்லது உலகை ஏமாற்றும் நோக்கில் ஏதாவது பாலைவனப்பகுதியில் திட்டமிட்டு அமெரிக்கா தனது விண்கலத்தை இறக்கிவிட்டு வேடிக்கை காட்டுகின்றதா? என்பது பலரது கேள்விகளாக இருந்தது. இந்த சர்ச்சைகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

சாதனை நாயகன் நீல் ஆம்ஸ்ரோங்கே இந்த உலகிலேயே சிறுவர் முதல் பெரியோர் வரை சகலரது மனதிலும் நீங்கா இடம்பிடித்தவர். இவரைத் தெரியாத அல்லது அறியாத நபர்கள் ஒரு சிலரையே விரல்விட்டு எண்ண முடியும்.

நிலவைக்காட்டி அதிலுள்ள பள்ளங்கள் பூமியிலிருந்து பார்க்கும்போது கருமை நிறமாகவும் சில வடிவங்களாகவும் தோன்றுகையில். அந்த வடிவத்தை மனித உருவான மூதாட்டி அமர்ந்திருந்து பாட்டி வடைசுடுகிறார். என சிறுபிள்ளைகளுக்கு நாம் கூறி சோறூட்டிக்கொண்டிருந்த வேளை நிலவுக்கே போய் வந்து சாதனை படைத்தவர் நீல்ஆம்ஸ்ரோங் அமெரிக்கன்.

அமெரிக்காவின் ஒஹாயோ மாகாணத்தில் உள்ள வபாகோனெட்டாவில் 1930 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 5 ஆம் திகதி ஸ்டீபன் கோனிக் ஆம்ஸ்ரோங் மற்றும் வயோலாலூயின் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார்.


அவர் தனது திறமையால், 15 வயதிலேயே வாகன அனுமதிப்பத்திரம் பெற முன்னரே - விமானம் இயக்கும் சான்றிதழைப் பெற்றுக்கொண்டார்.

பின்னர் 1947 இல் விண்வெளிப் பொறியியல் துறையில் பட்டம் பெற்று வெளியேறினார். 30 ஆவது வயதில் நாசா விண்வெளி ஆய்வுமையத்தில் பயற்சி விமானியாக சேர்த்துக்கொள்ளப்பட்டார். இதன் பின்னரே அவருக்கு இந்த வாய்ப்புக் கிட்டியது.

இத்தகைய பெரும் சாதனைகுச் சொந்தக்காரனின் இறுதிக்காலம் வெறும் ஆடுகள் மேய்ப்பவராகவே கழிந்தது. ஆம் நாசாவில் இவருக்கு பெரிய பொறுப்பு வாய்ந்த பதவி கிடைத்தும் அதைவிடுத்து தனது ஊருக்குத் திரும்பிய ஆம்ஸ்ட்ரோங் ஆடு மேய்த்தலிலும் சோளப் பயிர்ச்செய்கையிலும் தனது இறுதிக் காலத்தைக் கடத்தினார்.

தனது சாதனைக்குப் பின்னர் ஊடகங்கள் இருந்து அவர் பல வருடங்கள் ஒதுங்கியே இறுதிவரை வாழ்ந்துள்ளார். இதனால் இன்றுவரை இவர் நம்முடன் வாழ்ந்தவரா என்ற ஆச்சரியத்தையே பலரிடம் ஏற்படுத்தியுள்ளது.

தனது சாதனைக்குப் பின்னர் ஊடகங் களிடமிருந்து அவர் பல வருடங்கள் ஒதுங்கியே இறுதிவரை வாழ்ந்துள் ளார். இதனால் இன்றுவரை இவர் நம்முடன் வாழ்ந்தவரா என்ற ஆச்சரியத்தையே பலரிடம் ஏற் படுத்தியுள்ளது.



இவ்வாறு தனது கடைசிக்காலத்தை கழித்து வந்த நீல் ஆம்ஸ்ரோங் கடந்த வாரம் தனது 82 ஆவது வயதில் காலமாகியுள்ளார். விண்வெளிப் பயணங்களென்பது வெறுமனே விமானத்தில் அயல் நாட்டுக்குப் பறப்பது போன்ற சர்வ சாதாரணமான விடயமல்ல.

புவியைச் சுற்றி குறித்த பகுதிக்கு வழிமண்டலம் காணப்படுகின்றது. இந்த வழிமண்டல அமுக்கத்தைச் சீர்ப்படுத்தும் வகையிலேயே மனித உடல் படைக்கப்பட்டுள்ளது.

உதாரணமாக குழாய் நீரைத் திறந்து விட்டவுடன் நீர் எவ்வாறு அமுக்கம் குறைந்த பகுதிக்கு சீறிப்பாய்கிறதோ அதேபோல் வழிமண்டலம் அற்ற பகுதிக்கு நாம் சென்றால் எமது உடலினுள் உள்ள அமுக்கத்துக்கேற்ப சீராக ஓடிக்கொண்டிருக்கும் குருதி எமது தோலைக் கிளித்துக்கொண்டு வெளியேறிவிடும் சாத்தியங்கள் உண்டு.

அவ்வாறு உடலிலுள்ள குருதி அனைத்தும் வெளியேறினால் எமது நிலை பற்றிச் சிந்தித்துப் பார்த்தாலே இதயம் வெடிக்கும். ஆனால் இத்தனை ஆபத்துக்களையும் ஆராய்ந்து அறிந்து அதற்குரிய மாற்று வழிகளைக் கண்டு பிடித்து தமது உயிரையே பணயம் வைத்து இந்தச் சோதனைகளை நிகழ்த்தும் விண்வெளி வீரர்கள் போற்றப்படவேண்டியவர்கள்.

இந்த வீரர்களுக்கு முதன்மையானவர்தான் இந்த நீல் ஆம்ஸ்ரோங். இவர் இந்த உலகை விட்டுப் பிரிந்தாலும் மக்கள் மனதை விட்டுப் பிரிவது அவ்வளவு எளிதல்ல. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என் ஊரே... என் உயிரே...

அழகான மண்தரையும்
மறுமுனையில் புற்றரையும்
விரிவான கடற்கரையும்
வீசிவரும் காற்றலையும்
அழகூட்டும் ஊர்அதுவே
என்ஊராம் மகிழுகிறேன்

குட்டிக் குழந்தைகளும்
குமரிகளும் குமரர்களும்
பட்டில் உடை அணிந்து
பகட்டாக வீதிவரும்
போதினிலென் உடல்சிலிர்க்கும்
என்மனமோ புல்லரிக்கும்

கிட்டிப்புள்ளும் கிளித்தட்டும்
எட்டிப்பிடித்தாடும் மழலைகளும்
வட்டக் கிணறும் வாய்க்காலும்
வயல்காடும் இன்னும்
பசுமையை இறைக்கும்
வெளிகளும் கண்ணுக்குள்
மறையாத உருவங்களாக
அச்சாய்ப் பதிந்து கிடக்கின்றன

புதிய அருங் கருத்துக்களை
அள்ளியூட்டும் புலவர்களும்
அறிஞர்களும் கலைஞர்களும்
சொந்தபந்தம் பார்த்திடாது
பலரையுமே ஈர்த்தணைக்கும்
இனம் வாழும் என் ஊரை
இதயத்தில் ஒட்டிவைத்தேன்

முதுமை என்னை வேதனையில்
மூழ்க வைக்கும் இந்த நாளில்
பெருமைசேர் ஊரே உந்தன்
பாசத்தமிழ் மடியினிலே
தலைசாய்த்து என் உயிரைப்
போக்கிடவே துடிக்கிறேன் நான்
பரமனிடம் வேண்டுகிறேன்
என் ஊரே எனைப் பெற்று
வளர்த்திட்ட எனது தாயே
விண்ணூரில் நான் சேரும்
வரை உனது புகழ்பற்றிப்
பேசிப்பேசி வாழ்ந்திருப்பேன்
இறுதி மூச்சு ஓடும் வரை
உன்னை நான் மறக்கமாட்டேன்
விண்சென்றும் உரைத்திடுவேன்
உளம் விரும்பி உரைத்திடுவேன்
என் ஊரே எனது உயிர்

கலாபூஷணம்,
நவாலியூர் நா.செல்லத்துரை
(நவாலியூரான்)

# அடிமைகளின் மீட்பர்

## ஆபிரஹாம் லிங்கன்

■ பா.உண்மை


1831 ஜூன் மாதம். ஆபிரஹாம் லிங்கனும், ஆஃபட்டும், ஜோன் ஹேங்க்ஸும் நியூ ஆலியன்ஸ் மாநிலத்திலிருந்து கிளம்பத் தயாரானார்கள். படகு ஆற்றில் இறங்கியது. செயின்ட் லூயிஸை நோக்கிப் படகு சென்று கொண்டிருந்தது. வழியில் ஆஃபட், ஆபிரஹாமிடம் கேட்டார், "ஆபிரஹாம்! என் கடையில் வேலை பார்த்துக் கொண்டு என்னுடனேயே இருந்துவிடேன்"

"என்ன கடை?"

"சின்னப் பலசரக்குக் கடை. நியூசேலத்துல இருக்கிறது. உன்னை மாதிரி ஒராள் பொறுப்பா என் கடையைப் பார்த்துக் கொண்டால் நல்லது. நீ சரி என்றால் இப்பவே சொல்லு. இப்பவே என் கடைக்கு உன்னையே பொறுப்பாப் போடுகிறேன்."

ஆபிரஹாமுக்கும் ஒரு மாற்றம் தேவைப்பட்டது. ஒப்புக் கொண்டார். நியூசேலம், ஸ்பிரிங்ஃபீல்டிலிருந்து கொஞ்ச தூரத்தில்தான் இருந்தது. நியூஆர்லியன்ஸுக்குப் போய்க் குடும்பத்தோடு கொஞ்சம் நாள் இருந்துவிட்டு, நியூ சேலத்துக்கு வந்தார்.

1831 ஒகஸ்ட் முதலாம் திகதி ஆபிரஹாம் ஆஃபேட்டைச் சந்தித்தார். ஆஃபட் கடைக்குத் தேவையான பொருள்களை பேர்ட்ஸ்டவுன். என்ற நகரத்தில் வாங்கியிருந்தார். அந்தப் பொருள்கள் வந்து கொண்டிருந்தன. அவை வரும்வரை ஆபிரஹாமுக்குச் செய்வதற்கு வேலை எதுவும் இல்லாமல் இருந்தது. நகரைச் சுற்றிச் சுற்றி வந்தார்.



அப்போது அங்கே தேர்தல் நடந்து கொண்டிருந்தது. வாக்களிப்பதற்காக ஒரு பள்ளிக்கூடத்தில் கூட்டம் நின்றுகொண்டிருந்து. ஆபிரஹாம் வேடிக்கை பார்த்தபடி அந்தப் பள்ளிக்கூடத்தின் வாசலில் நின்றுகொண்டிருந்தார். அன்றைக்குத் தேர்தல் நடத்தும் எழுதுநர்களில் ஒருவர் வரவில்லை. இன்னொரு எழுதுநர் இல்லாமல் சுமுகமாக வாக்கெடுப்பு நடத்துவது கடினம்.

என்ன செய்வதென்று தெரியாமல் அந்த வாக்குச் சாவடிக்குப் பொறுப்பாளரான நீதிபதியும் பள்ளிக்கூடத் தலைமையாசிரியரான மின்ட்டர் கிரஹாம் என்பவரும் தலையைப் பிய்த்துக் கொண்டு இருந்தார்கள். வாக்களிப்பதற்குப் பொதுமக்கள் வரத் தொடங்கியிருந்தார்கள். இன்னாரு எழுதுநரை ஏற்பாடு செய்வதாக இருந்தால்கூட, அவர் வருவதற்கு எப்படியும் மதியப்பொழுதைத் தாண்டிவிடும். அதுவரை என்ன செய்வது?

"சேர்! அதோ அங்கே ஓர் இளைஞர் நிற்கிறார். நல்லா உயரமாக... அவரைப் பார்த்தால் உள்ளூர்க்காரராத் தெரியவில்லை. ஆனால், படிச்ச ஆள் மாதிரித் தெரியுது. இன்று ஒரு நாளைக்கு இந்த வாக்குச் சாவடியில் எழுதுநரா வேலை பார்க முடியுமா என்று அவரைக் கேட்டுப் பார்க்கலாமா?" என்று நீதிபதியிடம் தயங்கித் தயங்கிக் கேட்டார் மின்ட்டர் கிரஹாம்.

நீதிபதி, தலைமையாசிரியர் காட்டிய திசையில் இருந்த ஆபிரஹாம் லிங்கனையே கொஞ்ச நேரம் உற்றுப் பார்த்தார். பிறகு ஒரு முடிவுக்கு வந்தவராக அவரருகே போனார்.

"உங்களுக்கு எழுதத்தெரியுமா?"

"கொஞ்சம் தெரியும்."

"இன்றைக்குத் தேர்தல் பணிக்கு வர வேண்டிய எழுதுநர் வரவில்லை. இன்னொரு எழுதுநர் இல்லாமல் தேர்தல் நடத்த முடியாது. உங்களால இன்றைக்கு ஒரு நாளைக்கு எழுதுநராக இருக்க முடியுமா?"

ஆபிரஹாம் லிங்கன் உடனே ஒப்புக்கொண்டார்.

லிங்கன் நியூ சேலத்தில் ஒரு கடையில் வேலை பார்ப்பதர்க்காக வந்தவர் என்று அங்கு யாருக்கும் தெரியாது. அன்றைக்கு வாக்குச் சாவடியில் மிகச் சிறப்பாக, அவருக்கே உரிய ஒழுங்குத் தன்மையுடன் எழுதுநர் வேலையைச் செய்தார் ஆபிரஹாம்.

அதுதான் அவர் முதல் முதலாகப் பார்த்த அலுவலக வேலை. இன்றைக்கும் இல்லினாய்ஸில் இருக்கும் ஸ்பிரிங்ஃபீல்டில், ஆபிரஹாம் லிங்கன் தேர்தல் அலுவலராகப் பணியாற்றி, தன் கைப்பட மிக நேர்த்தியாக ஏழுதிய தேர்தல் குறிப்புகள் அடங்கிய அந்த புத்தகங்கள் பத்திரமாகப் பாதுகாக்கப்படுகின்றன.

நெடுந் தொடர்

★

நியூசேலத்தில் ஆஃபட்டின் கடைக்குப் பொருள்கள் வந்து சேர்வது தாமதமாகிக்கொண்டே இருந்தது. ஆபிரஹாம் லிங்கனால் சும்மா இருக்க முடியவில்லை. நகரில் வெட்டியாகச் சுற்றுவது, வீட்டுக்கு வந்து சாப்பிட்டுவிட்டுப் படுப்பது என்பன அலுப்பூட்டும் வேலைகளாக இருந்தன.

அந்தச் சமயத்தில்தான் நெல்சன் என்பவர் நியூ சேலத்திலிருந்து டெக்ஸாஸுக்குத் தன் கும்பத்தோடு இடம்பெயர்வதாக இருந்தார். அவர் ஒரு மருத்துவர். அவரே சொந்தமாக ஒரு படகு வைத்திருந்தார். அதில் வீட்டுப் பொருள்களையும் குடும்பத்தாரையும் அழைத்துச் செல்வதாக ஏற்பாடு. சங்கமம் ஆற்றில்தான் பயணம் செய்ய வேண்டும். அந்த ஆறோ, வெள்ளப் பிரவாகத்தில் கொந்தளித்துக் கிடந்தது. இந்தச் சூழ்நிலையில் மருத்துவர் நெல்சனுக்குப் படகை ஓட்டிச் செலுத்தத் திறமையான ஓர் ஆள் தேவைப்பட்டார். யாரோ ஆபிரஹாம் லிங்கனைப் பற்றி மருத்துவரிடம் சொன்னார்கள்.


15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரல் நுனியில் எல்லாம்

"எல்லா தகவல்களையும் என் விரல் நுனியில் வைத்திருக்கிறேன்'' என்று சிலர் சொல்லக் கேட்டிருப்போம். விரல் நுனிக்கும் தகவல்களுக்கும் என்ன சம்பந்தம் என்று தெரியவில்லை. ஆனால், இன்றைய காலத்தில் தகவல்களைச் சேகரிக்க நம் விரல்களும் ஒரு வகையில் உதவத்தான் செய்கின்றன. கணினி தேடுபொறிகளில் விரல்கள் இன்றி எப்படி இயங்குவது? எனவே விரல்கள் தகவல்களைத் திரட்டுவதில் முக்கிய பங்காற்றத்தான் செய்கின்றன.

நாம் இந்த உலகத்தை, சுற்றுச் சூழலை உணர நமக்கு ஐந்து புலன்கள் உண்டு. அவற்றில் ஒன்று தொடு உணர்வு. இந்தத் தொடு உணர்வு மூலம் தகவல்களை சேகரிக்க, நம் விரல்கள்தான் நமக்கு பெரிதும் உதவுகின்றன. உதாரணமாக, தகவல்களை துல்லியமாக சேகரிக்கக்கூடிய நவீன கருவி களைப் போன்றவை நம் விரல்கள் என்று சில வல்லுநர்கள் குறிப்பிடுகின்றனர். ஆனாலும், நம் விரல்களால் தொட்டு உணர்ந்து கொள்ள முடியாத எண்ணற்ற பொருள்களும் நம்மைச் சுற்றி இருக்கத்தான் செய்கின்றன.



விரல்களின் இந்த இயலாமையை போக்க வந்துவிட்டது 'மின்னணு விரல் நுனிகள்' என்று அட்டகாசப் படுத்துகிறார்கள் அமெரிக்காவின் இல்லினாய்ஸ் பல்கலைக்கழக ஆய்வாளர்கள்.

விரல்களின் நுனியில் (சிறிய உறை போல) அணிந்துகொள்ளக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த மின்னணு விரல் நுனி கருவி விரல்களின் தொடு உணர்வுத் திறனை பல மடங்கு அதிகமாக்கக் கூடியவை. இதனை அணிந்து கொண்டு எந்த ஒரு பொருளைத் தொட்டாலும், அந்தக் கருவியிலிருந்து வெளியாகும் தனித்துவமான அதிர்வலைகள் விரல்களை வந்து சேரும். இந்த அதிர்வுகளின் மூலமே விரல்களின் தொடு உணர்வுத்திறன் பல மடங்கு மேம்படுகிறது என்கிறார் ஆய்வாளர் ரோஜர். முக்கியமாக, மருத்துவம், விளையாட்டு உள்ளிட்ட பல துறைகளுக்கு இந்த மின்னணு விரல் நுனிகள் மிகவும் பயனுள்ளவையாக இருக்கும் என்கிறார் ரோஜர்.

மனித விரல்களுக்கு ஒரு புதிய பரிமாணத்தைக் கொடுக்கும் இந்த மின்னணு விரல் நுனிகளில் வளையும் தன்மையுள்ள மின்சார 'சேர்கிட்' ஒன்று உண்டு. இதில், சில நானோ மீற்றர்கள் தடிமன் உள்ள தங்க மின்முனைகளாலான படலங்கள், 'பாலிஇமிட் பிளாஸ்டிக்' எனும் ஒரு வகை 'பிளாஸ்டிக்' படலங்களுக்கு நடுவே 'சான்ட்விச்' போன்று பதியப்பட்டிருக்கும். இந்த அமைப்புக்கு 'நானோ ஜவ்வு' என்று பெயர். பின்னர், விரல் போன்ற வடிவமைப்புள்ள ஒரு 'சிலிக்கன் ரப்பர்' குழாயில் 'நானோ ஜவ்வு' ஒட்டப்படுகிறது. முக்கியமாக, 'நானோ ஜவ்'வில் உள்ள ஒரு மின்சார 'சேர்கிட்'டின் ஒரு பக்கம், விரல் நுனிகளுடன் நேரடி தொடர்பில் இருக்கும் வண்ணம் 'நானோ ஜவ்வு' பொருத்தப்படுகிறது. 'சேர்கிட்'டின் மறுபக்கத்தில் அழுத்தம், வெப்பம் அல்லது மின்சார பண்பான எதிர்வினைகள் போன்றவற்றை பதிவு செய்யும் 'சென்சார்'களை பொருத்திக் கொள்ளும் வசதியும் உண்டு.

இந்தக் கருவியை அணிந்து கொள்பவருக்கு 'எலெக்ட்ரோடாக்டைல் தூண்டுதல்' எனப்படும் ஒரு மின்சார செயலின் மூலம் 'சிலிர்ப்பு அல்லது கூச்ச உணர்வு' ஏற்படும். இதற்கு கருவியிலிருந்து வரும் மின்சாரம் (வோல்டேஜ்) தோலின் மீது பாய்வதே காரணம். சென்சார்களால் கட்டுப்படுத்தப்படும் இந்த மின்சாரத்தின் அளவு தொடப்படும் பொருளைப் பொறுத்தே அமையுமாம்.

சரி! மிகவும் சுவாரசியமான இந்த மின்னணு விரல் நுனிகளின் பயன்கள்தான் என்ன?

அறுவைச் சிகிச்சைக்குப் பயன்படும் கையுறைகளில் இந்த விரல் நுனிகளைப் பயன்படுத்தலாம். 'நானோ ஜவ்வு' பொருத்தப்பட்ட கையுறைகளால் ஒரு திசுவின் தடிமன் அல்லது பொதிவினை உணர முடியுமாம். மேலும், இதை அணிந்துகொள்ளும் ஒரு அறுவைச் சிகிச்சை நிபுணரால் திசுக்களை லேசாக சீவி விடவும் முடியும். இதற்கு மணிக்கட்டில் கட்டக்கூடிய, 'ஹைப்ரீகுவன்சி' மின்சாரத்தைவெளிப்படுத்தும் மின்கலம் ஒன்று பொருத்தப்பட வேண்டியது அவசியம் என்கிறார் ரோஜர்.

மின்னணு விரல் நுனிகளின் பயன்கள் அறுவை சிகிச்சையோடு நின்றுவிடவில்லை. அதையும் தாண்டி, மிகவும் முக்கியமான, உயிர்வாழ்தலுக்கு இன்றியமையாத இதயத்தின் மின்சார செயல்பாடுகளுடைய 'அடிமப்'பையும் கொடுக்கவல்லதாம் இந்த கருவி. இதயத்தைச் சுற்றி பொருத்தப்படக்கூடிய 'நானோ ஜவ்'வினால் ஆன உறையின் மூலம் சாத்தியப்படும் இந்தப் பயன் ஒழுங்கற்ற இதயத்துடிப்பை சரிசெய்துவிடுமாம்.

இன்னும் சுவாரசியமாக, ஒரு வித பலூன் மூலம் நானோ ஜவ்வினை இதயத்துக்குள் செலுத்தி, பின்னர் அந்த பலூனை ஊதுவதன் மூலம் 'நானோ ஜவ்வு' இதயத்தின் உட்புற சுவரின் மீது ஒட்டுமாறு செய்துவிடலாமாம். இந்த மருத்துவ முயற்சியை செயல்படுத்த 'மெட்ரானிக்' என்னும் நிறுவனத்தின் உதவியை நாடியிருக்கிறார் ரோஜர்.

இது தவிர, விளையாட்டு ஆடை தயாரிப்பு நிறுவனமான ரீபோக்குடன் இணைந்து, விளையாட்டில் பயன்படக்கூடிய, உடலில் அணியும் வகை மின்சாரக் கருவிகளை தயாரிக்கும் எண்ணமும் இருக்கிறதாம் ஆய்வாளர் ரோஜருக்கு.

# சுயநலவாத மரபணு

எப்போதும் தன்னைப் பற்றியும், தனது முன்னேற்றத்தைப் பற்றியுமே சிந்தித்து வாழும் மனிதர்களை நாம் சுயநலவாதிகள் என்கிறோம். ஆனால், சுயநலவாதம் எனும் குணம் மனிதர்களில் மட்டும் காணப்படுவதல்ல என்பது ஆச்சரியமான உண்மை. உயிரினங்களின் இயக்கத்துக்கு அடிப்படையான மரபணு (டி.என்.ஏ.) மரபுப்பொருளுக்கும் இதே சுயநலம் உண்டு என்று ஆச்சரியமூட்டுகிறது சமீபத்திய ஆய்வு!



சி.எலிகன்ஸ்

மரபணு (டி.என்.ஏ.) என்பது உயிர்களின் உடலியக்கத்துக்கு அவசியமான நெறிமுறைகளை உள்ளடக்கிய ஒரு வேதியியல் மூலக்கூறு. இவை, சிக்கலான பல்வேறு உயிரியல் நிகழ்வுகள் மூலம், உடலிலுள்ள கோடிக்கணக்கான உயிரணுக்களின் செயல்பாடுகளை வழிநடத்துகின்றன. நம் உயிரணுக்களில் இருவகையான டி.என்.ஏக்கள் உண்டு.

ஒன்று, உயிரணுக்களின் மையக் கட்டுப்பாட்டுப் பகுதியான 'நிக்லியஸ்'இல் இருக்கும் உயிரணு டி.என்.ஏ. மற்றொன்று, உயிரணுக்களின் செயல்பாட்டுக்குத் தேவையான சக்தியைக் கொடுக்கும் 'மைட்டோ காண்ட்ரியா' பகுதியில் இருக்கும் 'மைட்டோகாண்ட்ரிய' டி.என்.ஏ. இந்த இரு வகையான மரபணுக்களுமே உயிரணு வளர்ச்சிக்கும், செயல்பாட்டுக்கும் இன்றியமையாதவை.

வினோதமாக, உயிரணு வளர்ச்சிக்கு எந்த விதத்திலும் பயனில்லாத, ஆனால் ஆபத்து விளைவிக்கக் கூடிய ஒரு புதிய வகை மரபணு 'மைட்டோ காண்ட்ரியா'வில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் ஓரிகான் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ள இந்த மரபணுவுக்கு 'சுயநலவாத மரபணு' என்று பெயரிடப்பட்டுள்ளது. சோதனைக்கூட ஆய்வுகளுக்குப் பயன்படும் மாதிரி உயிரினமான சி.எலிகன்ஸ் எனப்படும் ஒரு புழுவின் மீதான ஆய்வில் இந்த உண்மை தெரியவந்திருக்கிறது. ஓர் உயிரணு வளரும்போது பொதுவாக அதன் 'மைட்டோ காண்ட்ரியா' மரபணு உள்ளிட்ட மொத்த மரபணுக்களும் இரட்டிப்படைவதே இயல்பான உயிரியல் நிகழ்வு. ஆனால் இந்த ஆய்வில், உயிரணு வளர்ச்சியின்போது 'மைட்டோ காண்ட்ரியா'வில் உள்ள மரபணுவின் ஒரு பகுதி மட்டும் தனியாகவும், வேகமாகவும் இரட்டிப்படைந்தது கண்டறியப்பட்டது. மேலதிக பரிசோதனைகளில், இந்த மரபணுவினால் உயிரணுவுக்கு எந்தப் பயனும் இல்லை என்பதும், மாறாக சில பாதிப்புகள் இருப்பதும் தெரியவந்தது. இதன் காரணமாகவே, இந்த மரபணுவுக்கு 'சுயநலவாத மரபணு' என்று பெயரிடப்பட்டது என்கிறார் மூத்த ஆய்வாளர் டெடென்வர்.

இதற்கு முந்தைய ஆய்வுகளில், சில தாவரங்களில் இதேபோன்ற சுயநலவாத மரபணுக்கள் இருந்தது கண்டறியப்பட்டிருக்கிறது. மேலும், அந்தத் தாவரங்களின் மலர்தல் தொடர்பான குறைபாடுகள் மற்றும் மலட்டுத்தன்மைக்கு, அவற்றின் சுயநலவாத மரபணு காரணமாக இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது.

இதுவரை, சில தாவரங்களில் மட்டும் இருக்கிறது என்று கருதப்பட்ட சுயநலவாத மரபணு, 'சி.எலிகன்ஸ்' போன்ற விலங்குகளிலும் இருக்கிறது என்பது, ஓரிகான் பல்கலைக்கழகத்தின் இந்த ஆய்வின் மூலம் உலகில் முதல் முறையாக கண்டறியப்பட்டுள்ளது. சுவாரசியமாக, 'சி.எலிகன்ஸ்' புழுவில் சுயநலவாத வகை மரபணுக்கள் இருந்ததும், அவை ஆபத்தானவை என்பதும் முன்னரே தெரிந்திருந்தாலும், அவை சுயநலவாத மரபணுக்கள்தான் என்பது தெரியாமல் இருந்தது என்கிறார் ஆய்வாளர் கேட்டீ கிளார்க். மேலும், சுயநலவாத மரபணுக்களை உடைய புழுக்கள் குறைவான சந்ததிகள் மற்றும் தசை செயல்பாடு கொண்டவையாய் இருந்தன. இந்த நிலை, இயற்கை தேர்வு எனும் பரிணாம செயல்பாடு இந்த புழுக்களில் சரியாக வேலை செய்யவில்லை என்பதையே காட்டுகிறது என்கிறார் கேட்டீ.

சுயநலவாத மரபணுக்கள், உயிரினங்களின் வாழ்தல் மற்றும் இனவிருத்திக்கு பயன்படவில்லை என்றால், பரிணாம செயல்பாட்டின் மூலம் அவை அழிந்தல்லவா போயிருக்க வேண்டும்? என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது. அவை இன்னும் அழியாமல் இருப்பது, இயற்கை தேர்வானது உயிர் அல்லது உயிரின அளவில் எப்போதுமே சரியாக செயல்படுவதில்லை என்பதற்கான ஓர் உதாரணமே என்கிறார்கள் அறிவியலாளர்கள். ஆக, ''உயிரியல் முன்னேற்றமானது குறைபாடுகள் உடையதே'' என்கிறார் முனைவர் டெடென்வர்.

இவற்றைவிட இன்னும் சுவாரசியமான செய்தி என்னவென்றால், சுயநலவாத மரபணுவினால் 'சி.எலிகன்ஸ்' புழுக்களில் ஏற்படும் பாதிப்புகள் அல்லது குறைபாடுகள், ஒரு மனிதன் மூப்படைவதால் அவனது உயிரணுக்களில் அதிகரிக்கும் கெட்டுப்போன 'மைட்டோ காண்ட்ரியா'வினால் ஏற்படும் பாதிப்புகளைப் போலவே இருக்கிறது என்பதுதான். புழுக்களுக்கு வயதாக வயதாக, அவற்றின் சுயநலவாத மரபணுக்களின் அளவும் அதிகரித்தது.

அதெல்லாம் சரி, இந்த சுயநலவாத மரபணுக்கள் பற்றிய செய்தியால் நமக்கென்ன பயன் என்கிறீர்களா?




சுயநலவாத மரபணுக்கள் மீதான மேலதிக ஆய்வுகள் மூலம், மனிதர்களைப் பாதிக்கும் ஒருவித குறைபாடான 'மைட்டோ காண்ட்ரியல் டிஸ்பங்ஷன்' குறித்த புரிதலை பெற முடியும் என்கிறார் முனைவர் டென்வர். இந்த ஆய்வின் மூலம், சுயநலவாதமானது மனித அளவில் இருந்தாலும் சரி, உயிரணு அளவில் இருந்தாலும் சரி, ஆபத்தானதே என்பது நிரூபணமாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்க்க வேண்டிய படம்தான் 'நான்'




புது நடிகர், தெரியாத முகங்கள் படம் எப்படியிருக்குமோ, என்ற பயத்தோடு படம் பார்க்க சென்றேன். பார்க்க வேண்டிய படம்தான் 'நான்' என்பதை நிரூப்பித்திருக்கிறார்கள். இந்த படத்தில் மற்றொரு சிறப்பு, இசையமைப்பாளர் நடிகராகியிருக்கும் படம்

''அன்பு கிடைக்காமல் போவதே தவறுக்கான மூல காரணம்'' இதுதான் படத்தின் ஒரே வரிக் கதை. கதாநாயகன் கார்த்திக் தனது அம்மா இன்னொருவனிடம் உறவு வைத்துக் கொள்வதை நேரில் பார்த்து விடுகிறான். இதை அறியும் அவனது அப்பா அவமானத்தால் தற்கொலை செய்து கொள்கிறார். இதனால் விரக்தியடைந்த கார்த்திக் அவனது அம்மாவையும், கள்ளக் காதலனையும் வீட்டோடு எரித்து விடுகிறான். அதன் பிறகு ஜெயிலுக்கு சென்றுவிட்டு திரும்பும் வழியில், கார்த்திக் வரும் பஸ் விபத்தில் சிக்கிக் கொள்கிறது. அந்த விபத்தில் பலியான மருத்துவக் கல்லூரி மாணவனின் சான்றிதழை பார்க்கிறான் கார்த்திக். அதை எடுத்துக் கொண்டு தன் வாழ்க்கையை புதிய பாதையில் செலுத்த அவனுக்குள் ஒரு உத்தி தோன்றுகிறது. இதற்கு தனது தனிப்பட்ட திறமையான, மற்றொருவரின் கையெழுத்தை அச்சு அசலாக அப்படியே போடுவதை பயன்படுத்தி முகமது சலீம் என்ற பெயருடன் மருத்துவக் கல்லூரியில் படிக்கச் சேர்கிறான். அங்கு அசோக் என்ற பணக்கார நண்பனின் நட்பு கிடைக்கிறது. அவர்களது நட்புக்கு அசோக்கின் காதலி மூலம் பிரச்சினை வர, தன் நண்பனே தன்னை காட்டிக் கொடுத்துவிட்டான் என்ற ஆத்திரத்தில் கார்த்திக்கை வீட்டை விட்டு வெளியேற்றுகிறான் அசோக். அந்த நேரத்தில் முஸ்லிமாக கார்த்திக் செய்திருக்கும் ஆள்மாறாட்டத்தின் பின்புலத்தை அறியும் அசோக் மிரட்ட, இருவருக்கிடையேயான மோதலில் அசோக் இறந்து விடுகிறான். இந்தக் கொலையை மறைப்பதற்காக ஒவ்வொரு முறையும் தவறு செய்ய, தான் வாழும் இன்னொருவரின் வாழ்க்கையை தக்க வைத்துக்கொள்ள அவன் எடுக்கும் முடிவு என்ன என்பதுதான் மீதிக் கதையும் முழுப்படமும்.





கார்த்திக்காக இருந்து முகமது சலீமாக மாறும் கதாபாத்திரத்தில் இசையமைப்பாளர் விஜய் அன்ரனி. முதல்முறையாக கதாநாயகன், தயாரிப்பு, எனக் களமிறங்கியிருக்கிறார். 'ஹீரோயிசம்' இல்லாமல் முதல் படம் நடித்ததற்காகவே அவரை ஒரு தரம் பாராட்டலாம். முழுக்க யதார்த்தமான, தவறு செய்த குற்ற உணர்வோடும்தவறைமறைக்க அவர் எடுத்துக் கொள்கிற முயற்சியில் இறுதியாகத் தன்னைத்தானே தாக்கி சண்டையிடும் போதும் விஜய்அன்ரனிக்கு நடிக்க வருகிறது.

படத்தில் இன்னொரு ஹீரோ அசோக்காக வருபவர் ஆனந்த தாண்டவம் சித்தார்த். படத்தின் முதல் பாதியில் வந்தாலும் மேல் தட்டு வர்க்கத்தினுடைய பேச்சும், லேசான சிரிப்போடு இருக்கும் அவருடைய முகமும் பொருத்தமான தேர்வு. அழகாக இருக்கிறார்.

கதாநாயகியாக ரூபா மஞ்சரி. பின் பாதியில் நடிப்பதற்கு உண்டான வாய்ப்பைச் சரியாகச் செய்திருக்கிறார். சித்தார்த் என்ன ஆனான் என்று தெரியாமல் தவிப்பதிலும், விஜய் அன்ரனியின் மேல் சந்தேகம் வந்து கோபப்படும் நேரத்திலும் நல்ல நடிப்பு.

இன்னொரு நாயகியாக வரும் அனுயா அவ்வப்போது வந்து போகிறார். கதாநாயாகன் விஜய் அன்ரனிதான் இசையும். பின்னணி இசையில் கடின உழைப்பை கொடுத்து, பின்பாதிக் காட்சிகளில் நம்மைப் பரபரப்பாக்கியிருக்கிறார். பாடல்களுக்கும் படத்திற்கு மிகப் பெரிய பலம். இப்படத்திற்கு ஒளிப்பதிவு செய்து இயக்கியிருப்பவர் ஜீவா சங்கர்.

படத்தின் முதல் பாதி வரை கதை எந்த பாதையில் போகப் போகிறது என்பது தெரியாமலே கொண்டு சென்று, பின்பாதி முழுக்க ஒவ்வொரு காட்சியிலும் அடுத்து என்ன என்ற விறுவிறுப்பை ஏற்படுத்தி விடுகிறார். தெளிவான திரைக்கதையும், அவரது ஒளிப்பதிவும் படத்திற்குக் கைகொடுக்கிறது. படத்தின் முதல் பாதி மெதுவாக நகர்வதுதான் படத்தில் கொஞ்சம் சறுக்கல். தமிழ்ப் படங்களுக்கே உரிய தர்க்க மீறல்கள் சிலவற்றையும் புறந்தள்ளிவிட்டுப் பார்த்தால் 'நான்' நம்மோடு ஒன்றியிருக்கிறான்.

# எல்லைகளின் வித்தியாசம்


ஈராக் -சிரியா எல்லை:
ஆயுத முனைகளின் பிடியில்



ஹொலண்ட்- பெல்ஜியம் எல்லை:
பூச்செண்டுகளின் வாசனையில்


பெரும்பாலான நாடுகளை போர் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதால் அவற்றின் எல்லையோரங்கள் முழுதும் ஆயுதத்தின் பிடியில் சிக்கி, எப்போதும் கண்காணிப்பு மையங்களாகவே விளங்குகின்றன. போரின் முதற்பொறி இந்த எல்லைகளிலேயே உருவாகிறது. ஆனாலும் எப்போதும் வெம்மையைக் கக்குகின்ற எல்லைகளுக்கு முரணாக பூச்செண்டுகளின் வாசனையோடு நட்பைப் பரிசளிக்கும் எல்லைக்கோடுகளும் இருக்கவே செய்கின்றன. போரின் கந்தகப் புகைக்குள் சிக்கியுள்ள சிரியா –ஈராக் எல்லையும், வெறும் பூச்சாடிகளால் பிரிக்கப்பட்டுள்ள பெல்ஜியம்– ஹொலண்ட் எல்லையும் இத்தகைய வித்தியாசமான எல்லைகளுக்கு சிறந்த உதாரணங்கள். போர் இல்லாத உலகத்தில் பெல்ஜியம் –ஹொலண்ட் எல்லையைப் போலவே எங்கும் பூச்செண்டுகள் சொரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரம்யன்

# அமெரிக்காவில் எச்.ஐ.வி.க்கு மருந்து

அசை போட ஒரு விடயம் 43



தாயில்லாமல் நான் இல்லை
தானே எவரும் பிறப்பதில்லை

என்பது ஒரு சினிமாப் பாடல். இவ்வாறு தாய், தந்தையரைப் புகழ்ந்து கூறும் பாடல்கள் ஏராளம் வந்துவிட்டன. தமிழ் சினிமா ஆரம்ப காலத்தில் 'ஹரிதாஸ்' படத்தில் தியாகராஜ பாகவதர் பாடுவார்

அன்னையும் தந்தையும் தானே
அண்ட சராசரம்
கண்கண்ட தெய்வம்
தாயினும் கோயிலிங்கேது. பெற்ற
தந்தை சொல்மிக்கதோர்
மந்திரம் ஏது

தாய் தந்தையரிலிருந்துதான் எந்த மனிதனும் உருவாகின்றான். மனிதருக்கு மட்டுமல்ல உயிருள்ள ஜீவராசிகள் எல்லாவற்றுக்குமே தாய்- தந்தையரே மூலம்.

தெய்வங்களை எவரும் கண்டதில்லை. ஆனால் தெய்வத்தின் அன்பு, கருணை, அருள் பற்றியெல்லாம் மகான்கள் மூலம் அறிகின்றோம். அந்த தெய்வங்களின் அருளையும் அன்னையும் நேரில் காட்டித்தருபவர்கள் அன்னை- தந்தையரே. அதனால் தான் அவர்களைக் கண் கண்ட தெய்வம் என்கின்றோம்.

**பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு**

என்றொரு பழமொழி உண்டு. பெற்றதாயின் மனம் பித்து போன்று அன்பினால் கசியக்கூடியது. பிள்ளைகள் மீது அன்பினால் உருகும் தன்மையது. அதுமட்டுமல்ல பித்து என்பதற்கு பைத்தியம் என்ற ஒரு கருத்தும் உண்டு. பிள்ளைகள் மேல் அன்பினால் பைத்தியம் பிடித்தவர்கள் போல் தாய்மார் நடந்து கொள்வர். இப்படியான பெற்றோர், பிள்ளைகள் பிறர் விடயங்களில் தவறிழைத்தாலும் விட்டுக் கொடுக்காமல் அவர்களுக்காக வாதாடுவதைக் பார்க்கலாம்.

ஆனால் பிள்ளைகளில் அனேகர் பெற்றோர் விடயத்தில் இரக்கமின்றி நடந்து கொள்வதைப் பார்க்கின்றோம். அவர்களின் மனம் தான் கல் போன்றது என்பதாகும். இன்னொரு கருத்து. பெற்றோர் பித்தைப் போன்று கசியும் தன்மை கொண்டவர்கள் என்றால் அந்தப் பித்தப்பையில் கல் தோன்றினால் எப்படி இருக்கும் அந்த அளவுக்கு பெற்றோருக்கு வேதனை கொடுக்கும் பிள்ளைகளும் இருக்கிறார்கள் என்பதாம்.

வெள்ளவத்தையில் ஒரு நபர் தனது தந்தை, தாய்,சகோதரி மூவருக்கும் பழச்சாற்றில் தூக்க மருந்து கலந்து கொடுத்து கொன்றிருக்கிறான். கொடுக்கப்பட்டபோது தந்தை கசப்பாக இருக்கிறது என்று கூறியுள்ளார். சகோதரி பழச்சாற்றை வாந்தியெடுத்துள்ளார். ஆனால் அந்த தாய் மட்டும் தனது மகன் கொடுத்த நஞ்சு கலந்த பழச்சாற்றை எதுவும் கூறாமல் குடித்து முடித்து விட்டு நித்திரையிலேயே மரணமாகியுள்ளார். பெற்ற மகனே நஞ்சு வைப்பான் என்று அந்த தாயுள்ளம் எண்ணியும் பார்த்திராது.

**விருந்தினர் விடுதி ஆபாச விடுதி**

பத்திரிகைகளில் இப்போதெல்லாம் வாசகர்களைக் கவரும் செய்திகள் பெரும்பாலும் அரசியல் சம்பந்தமானவையாகத் தான் இருக்கின்றன. அதிலும் வாசகரை பரபரப்பாக்கும் செய்திகள் முக்கிய இடம்பெறும். இவைகளைப் படிப்பதில் கவனம் செலுத்தும் வாசகர்கள் சில சமயம் முக்கியமான சில சிறு செய்திகளை தவறவிட்டுவிடுவார்கள் அப்படியான ஒரு சிலவற்றை பார்ப்போம்.

கனேமுல்ல என்ற இடத்தில் ஒரு சந்தியில் நடைபெற்று வந்த விருந்தினர் விடுதியொன்றில் அண்மையில் கம்பஹா பொலிஸார் திடீர் சோதனை நடத்தினார்கள். அங்கிருந்த இரண்டு பெண்களும் விடுதியின் உரிமையாளரும் கைது செய்யப்பட்டார்கள். அந்த விடுதி ஒரு பெரிய இரட்டை மாடி வீட்டில் அமைந்திருந்தது. அங்கு எட்டு அறைகள் உண்டு. ஒரு எச்சரிக்கை மணியும் இணைக்கப்பட்டிருந்தது. பொலிஸார் அங்கு சென்ற போது எச்சரிக்கை மணி ஒலித்ததால் பல பெண்கள் தப்பிச் சென்று விட்டார்கள். பிடிபட்டவர்கள் தாம் விபசாரத்தில் ஈடுபட்டிருந்ததை ஒப்புக் கொண்டனர். அவர்களில் ஒரு பெண், தன்னைக் காதலித்து கற்பழித்த இளைஞன் கைவிட்டு வெளிநாடு சென்று விட்டான். வாழ்க்கையை நடத்த வேறு வழியின்றி இதில் ஈடுபட்டதாகக் கூறினார்.

**எச்.ஐ.வி.க்கு அமெரிக்காவில் புதுமருந்து**

அமெரிக்காவில் எச்.ஐ.வி. தொற்றுடையவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கான புதிய மருந்து ஒன்றை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். ஏற்கனவே பாவனையிலுள்ள இரண்டு மருந்துகளுடன் இந்த புதிய மருந்துகளையும் தினசரி பயன்படுத்தலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த மருந்துகளை தினமும் ஒரு டோஸ் வீதம் எடுத்து வருவது புதிய சிகிச்சைக்கான வழிமுறையாகும். இந்த மருந்தினை ஏற்கனவே எச்.ஐ.வி.சிகிச்சை பெறாதவர்கள் தினமும் ஒரு டோஸ் எடுத்து வர வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகப்பகுதியினர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளனர். இந்த மருந்து விரைவில் அமெரிக்க மருந்தகங்களில் விற்பனைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**பேரீச்சம்பழ மரம்**

புத்தளத்தில் சாலியவெவ சந்தியில் ஒருவர் தமது தோட்டத்தில் வளர்த்துள்ள பேரீச்சை மரம் காய்த்துக் குலுங்குகின்றது. 20 அடி உயரமான இந்த மரம் மூன்றாவது வருடமாக இப்பொழுது காய்த்துள்ளது என்கிறார் அதன் சொந்தக் காரரான றெஜினால்ட் பெரேரா என்பவர். இந்த வருடம் அறுவடை அதிகமாக இருக்கும் என்று கூறும் அவர் பழங்களை அணில்களிடமிருந்தும் பறவைகளிடமிருந்தும் காப்பாற்றுவதுதான் பெரிய பிரச்சினையாக இருக்கிறது என்கிறார்.

நாட்டின் ஏனைய பகுதிகளிலும் மண்வளம் பொருத்தமாக இருக்கும் இடங்களில் பேரீச்சம்பழ மரங்களை பயிரிட அதிகாரிகள் கரிசனை கொள்ள வேண்டும்.

**சீன ராணுவத்தின் ஆளணி பலம்**

இலங்கை வந்திருக்கும் சீனப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் லியாங்குவாங்லி தலைமையிலான குழுவினர் இலங்கைப் பயணம் முடிந்ததன் பின் இந்தியாவுக்கும் செல்ல விருக்கிறார்கள். அங்கும் இருதரப்பு பேச்சுகள் நடைபெறும். ஆனால் பேச்சுக்களின் அடிப்படை வேறு விதமாக இருக்கும் என்பது தெளிவு.

மக்கள் சீன குடியரசன் காலாட்படை, கடற்படை, கேந்திர ஏவுகணை பிரிவு மற்றும் விமானப் படை என்பவற்றின் ஒருங்கிணைந்த அமைப்புதான் மக்கள் விடுதலை ராணுவம் என்றழைக்கப்படுகின்றது. 1927 ஆம் ஆண்டு ஓகஸ்ட் முதலாம் திகதி இந்த ராணுவம் நிறுவப்பட்டது. உலகிலேயே மிகப் பெரிய ராணுவம் இது என்று கூறப்படுகின்றது. சுமார் 30 லட்சம் உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.

**இந்தியாவில் புகையிலை பாவிப்போர்**

இந்தியாவில் புகையிலை பாவிப்போர் சுமார் 27 கோடியே 50 லட்சம் பேர் இருக்கிறார்கள். உலக அளவில் சீனாவுக்கு அடுத்தபடியாக இரண்டாம் இடம். சீனாவில் சுமார் 30 கோடியே 10 லட்சம் பேர். சீனாவின் மக்கள் தொகை 95 யில் வீதத்தினர் சிகரெட் புகைக்கிறார்கள். ஆனால் இந்தியாவில் அனேகமானவர்கள் புகைக்காத வகையிலேயே புகையிலை பாவிக்கிறார்கள். ஆய்வு அறிக்கை ஒன்றில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.


இந்தியாவில் புகைக்காத வகையில் புகையிலைப் பாவனை என்பது புகையிலையை வாயில் வைத்து குதப்புவதையே குறிக்கும். புகையிலை சுவைப்பது இந்தியா, பங்களாதேஷ், மற்றும் தாய்லாந்து பெண்களிடம் பரவலாகக் காணப்படுகின்றது.

★

# இப்படியும் சில தலைவர்கள்

ஈரான் நாட்டு ஜனாதிபதி அகமது நிஜாத் பற்றி நமக்கு தெரியாத உண்மைகள் .....

வீதியில் தொழுகை





உணவில் எளிமை

வயதுக்கு மரியாதை





ஐந்து நட்சத்திர விடுதியிலும் தரையில் உறக்கம்

1 . அவருடைய மாத வருமானம் 1200 டொலர். இது ஒரு வளர்ச்சியடைந்த நாட்டின் தனிநபருடைய வருமானத்தை காட்டிலும் குறைவானது

2 அவர் இன்னமும் வாழ்வது அவரது அப்பா கட்டிய 40 வருடப் பழமையான வீட்டில் தான்.

3 இவரது விருப்பத்துக்குரிய உணவு தன் மனைவியின் கையால் சமைத்தவை மட்டுமே.

4 கல்வி : அறிவியல் , தொழில்நுட்ப போக்குவரத்து பொறியியல் மற்றும் திட்டமிடல்

5 இவரது வங்கி நிலுவையில் பணம் எதுவுமே இல்லை.

6 இவரிடம் இருந்த கார் ஈரானிய உற்பத்தியாகும். தற்போது அதையும் விற்று தன் நாட்டு மக்களுக்கு அந்தப் பணத்தை மக்கள் நலநிதிக்கு வழங்கிவிட்டார்.

7 அவர் ஜனாதிபதியான பின், அரசு சார்பில் வழங்கப்பட்ட ஜெற் விமானத்தையும் ஈரானிய விமானப்படைக்கு அன்பளிப்பு செய்துள்ளார்.

8 பிரார்த்தனையில் ஈடுபடும் போது விசேடமாக இடம் அமைத்து இருந்தாலும் சாதாரண மக்கள் தொழும் இடத்திலேயே பிரார்த்தனைகளில் ஈடுபடுவார்.

9 பெற்றோல் உற்பத்தி செய்யும் நாடுகளில் ஈரானும் முன்னணியில் உள்ளது. ஆயினும் எரிபொருளைச் சேமிப்பதற்காக தனது பயணங்களின் போது தேவையற்ற [illegible] இன்றி தனி வாகனத்தில் செல்வார்.

10 நிலத்தில் உறங்க நாட்டமுள்ள இவர் ஐந்து நட்சத்திர விடுதியில் தங்கினாலும் நிலத்திலேயே உறங்குவார்.

இந்தப் பத்துத் தகவல்களும் எங்கள் நாட்டு அரசியல்வாதிகளுக்கு சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொலைந்து போன உறவுகள்

சிறுகதை

மோ.ரிசானி,
ஆரம்பக் கல்வித்துறை,
யாழ்ப்பாணம்
தேசிய கல்வியியல் கல்லூரி.

அந்திப் பொழுதில் கடற்கரையில் கடல் அலைகளை ரசித்த வண்ணம் காத்திருந்தாள் பூஜா. அந்தக் கடல் அலைகள் என்ன தத்துவத்தை போதித்ததே தெரியவில்லை. அதையே உற்று நோக்கிக் கொண்டிருந்தாள். கடல் அலைகள் கரைகளை தொட்டு விட முயற்சி செய்து கொண்டிருந்தன. அத்தோடு சேர்ந்து அவள் நினைவுகளும் மெல்ல மெல்ல கரைந்து கொண்டிருந்தது. அவளுக்கு வீடு செல்லவே விருப்பமில்லை. வாழ்க்கை ஒரு சில கணங்களில் வெறுக்கவும், ரசிக்கவும் வைக்கிறது. எதிர்கால வாழ்வு என்னவாகுமோ என்ற ஏக்கங்கள் அவளது மனதில் இருந்தாலும் கடற்கரைப் பொழுதுகள் இனிமையாகத்தான் இருந்தது. பல நேரங்களில் ஆனாலும் நாளை எண்ணும்போது கடற்கரை கூட நரகமாகத்தான் இருந்தது. பொழுது சாய்ந்து இரவுகள் சூழ்ந்து கொள்கின்றன. ''ஐயோ நேரமாச்சு. அம்மா தேடுவாள்'' என்று மனச்சாட்சி சொல்கிறது. மெல்ல மெல்ல கால்கள் நடைபோடத் தொடங்குகின்றன. அவள் வீட்டை நோக்கி ''நாளை அவர்கள் வருவார்களோ? வந்து என்ன சொல்வார்கள்? நான் சொன்ன நிபந்தனைகளை ஏற்றுக் கொள்வார்களா? இல்லை அவர்களும் சாதாரண மனிதர்களைப் போல இவள் வேண்டாம் என்று விட்டு விடுவார்களா? இல்லை இல்லை மனிதநேயத்தை மதிப்பவர்களில் அவனும் ஒருவனாக இருப்பான்''

இவ்வாறு மனது ஆதங்கப் படுகிறது. எல்லாம் விடியட்டும் பார்க்கலாம் என்று மனது சமாதானம் சொல்கிறது. ''அம்மா காத்திருப்பாள்'' என்ற யோசனையில் அவள் தெருமுனையைக் கடந்து வீட்டை நோக்கி நடக்கிறாள். அம்மா காத்திருப்பது தொலைவிலேயே தெரிகிறது. ஆ..! என்ன பிழை செய்துவிட்டேன். இவ்வளவு நேரமாச்சு. அம்மா கலங்கியிருப்பா. அவளை ஒரு துளி கலங்க வைத்தது கூட தவறுதானே? என்று அவளின் அருகிலேயே செல்கிறாள். அவள் கண்கள் கலங்கியிருந்ததை காணும்போது இதயம் ஒருமுறை மறுத்ததை உணர்கிறாள். அம்மா மௌனங்களை பரிசளித்துவிட்டு தோளிலே கை வைக்கிறாள். பூஜா, தான் பிந்தி வந்த காரணத்தை விளக்க முயற்சிக்கிறாள். ''பரவாயில்லை பூஜா நான் காத்திருந்தேன் வா சாப்பிடுவோம்'' என்று அன்புக் கரம் நீட்டுகிறாள். நாம் பிழை விடும்போது மன்னிக்கும் ஒரே உள்ளம் தாய்தானே. அவளும் மௌனமாய் பின் தொடர்ந்தாள்.

''பூஜா நாளை அவர்கள் வருவார்கள்'' என்றபடி பூஜாவை பார்க்கிறாள் தாய். அந்தத் தாய் உள்ளத்துக்கு பூஜாவுக்கு அவர்கள் வரவில் மகிழ்ச்சியில்லை என்பது தெரிகிறது. ஆனாலும் அது தாயின் கடமை. பூஜா தன் தாயின் வார்த்தைகளுக்கு மதிப்பளித்து ''ஆம் அம்மா வரட்டும்'' என்றபடி உள்ளே நுழைகிறாள். கட்டிலில் உட்கார்ந்திருந்தாள். அவள் கண்ணீர்த் துளிகள் படுக்கையறையை நனைத்துக் கொண்டிருந்தது. அவள் தன் கடந்த கால நினைவுகளில் மூழ்கிப் போயிருந்தாள்.

அழகான கிராமத்தில் வாழ்ந்த குடும்பம்தான் பூஜாவின் குடும்பம். கிராமம் அழகாக இருந்ததினாலோ என்னவோ தெரியவில்லை. அவர்கள் வாழ்க்கை அழகாக இருந்ததில்லை போலும். பூஜாவின் தாய் பல உடன் பிறப்புகளுடன் பிறந்தவள். அவள் வாழ்க்கை சந்தோஷமாய் போய்க் கொண்டிருந்தது. காதல் திருமணங்கள் பல பெற்றோர்களால் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. அதனால் அவள் காதல் திருமணத்தை எதிர்த்து பெற்றோரின் கனவுகளுக்கு மதிப்பளித்து அவர்கள் பேசிய மணமகனை திருமணம் செய்து கொண்டாள். திருமணங்கள் எல்லாம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது என்பார்கள். ஆனால் இவர்களின் வாழ்வு என்ன ஆனதோ தெரியவில்லை.

பூஜாவின் தாய் வசந்தாவினதும் தந்தை சதீஸின் வாழ்க்கையும் இரண்டு மாத காலத்தில் முடியுமென்று யாரும் நினைத்துக்கூட பார்க்கவில்லை. பேசித் திருமணம் செய்து கொண்டவர்களிடையே புரிந்துணர்வு இருப்பதில்லை என்று சொல்வது கூடச் சரிதான். திடீரென பெண் பார்க்கும் படலம், அடுத்த நிமிடம் திருமணம். அதனால் சதீஸின் வாழ்க்கையை அறிந்து கொள்ள வசந்தாவால் முடியவில்லை.

ஒருவரின் குணங்களை அறிந்து கொள்ள ஒருவருடமாவது தேவைப் படுகிறது. ஆனால் அவளுக்கோ ஒருவாரம் கூட கிடைக்கவில்லை. கெட்டபாம்பை அறிந்து கொள்ள சந்தர்ப்பம் தேவைப்படுகிறது. அதுபோலத்தான் சதீஸைப் புரிந்துகொள்ள சந்தர்ப்பங்கள் தேவைப்பட்டன.

சதீஸ் ஒரு குடிகாரன் என்ற உண்மை அவளுக்கு ஒருமாதம் கழித்துத்தான் தெரிந்தது. அந்த மாதிரியான ஒரு மணமகனை எதிர்பாராததால் அவளால் அதை தாங்கிக் கொள்ள முடியவில்லை. எத்தனையோ முறை அவனை திருத்திவிட முயற்சி செய்தாள். ஆனால் அந்த முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. சதீஸை மாற்றி விட துடித்த அவள் மனதை தோற்கடிக்கும் முகமாக ''வசந்தா நீ உன் வேலையை பார் இதுக்கு மேல கதைச்சா நீ எனக்கு தேவையில்லை'' இந்த வார்த்தைகளை அவள் எதிர்பார்க்காததால் சற்றுத் தள்ளாடித்தான் போனாள். அதற்கு மேல் என்ன கதைக்க முடியும்? கணவனை திருத்த மனைவி முயற்சிப்பது கூட தவறாகத்தான் தெரிகிறது. அவனை நல்வழிக்கு கொண்டுவர முயற்சி செய்தாள். ஆனால் இறுதி முடிவு என்னவானது? கண்ணீர்த் துளிகள்தான் மிஞ்சினவே.

அன்றைய இரவுகள் பல சண்டைகளுடன் கண்ணீரில் கரைந்து போயின. காலையில் எழுந்தபோது சதீஸைக் காணவில்லை. எங்கே போனான்? தேடுதல்களும் காத்திருப்புக்களும் தொடர்ந்தது. இறுதியில் அவன் அவளின் வாழ்க்கையை விட்டே தொலை தூரம் சென்றுவிட்டான் என்பது புரிந்தது.

துயரங்கள் தான் சிலருக்கு வாழ்க்கையாகின்றன. அவளின் வாழ்க்கையும் கூட அப்படித்தான். சதீஸை மெல்ல மறக்கத் தொடங்கினாள். ஆனாலும் மறக்க முடியாத ஒரு அதிர்ச்சியான சம்பவம் நடந்தது. வசந்தா கருவுற்று இருந்தாள். கணவன் பிரிந்து சென்ற சோகங்கள் ஒரு புறம், கருவாக இருக்கும் சிசு ஒருபுறம். இதை என்ன செய்ய முடியும்? இதயம் ஒருமுறை மரணித்துப் போய்விடுகிறது. என்ன செய்வது என்ற போராட்டங்கள் தொடர்கிறது. ஓர் உயிரை எடுக்கின்ற உரிமை எம்மிடம் இருப்பதில்லை. வசந்தா ஒரு தனிமரம் என்ன செய்வாள்? யாரிடம் உதவி கேட்பாள்? சிந்தித்தாள். ஒரு தடவையல்ல பல வாரங்களாக முடிவு செய்தாள். சதீஸ் செய்த பிழைக்காக வருந்தவில்லை. எப்படியாவது தான் அந்தக் குழந்தையை வளர்க்க வேண்டும். அந்தக் குழந்தை நல்ல நிலைக்கு வந்து சதீஸை அவமானப்படுத்த வேண்டும். ஒரு பெண்ணால் முடியாதது என்ன? இப்படிப்பட்ட ஆண் வர்க்கமே தலை குனிய வேண்டும் என்ற திடம் வந்தது.

அன்று 04.02.1991 வசந்தாவின் வயிற்றிலிருந்து ஒரு பெண் குழந்தை பிறந்தது. அவள்தான் பெற்றது பெண்குழந்தை என்று வருந்தவில்லை. ஒரு கணவனை இழந்து தன் மகளை வளர்க்க அவள் பெரும்பாடுபட்டாள். சமுதாயம் போற்றும் ஒரு மகளாக வளர்க்க அவள் எதிர்பார்ப்புக்கள் பலவற்றைச் சந்தித்தாள். அவள் பட்ட இன்னல்களை வார்த்தைகளில் வடிக்க முடியாது என்பது உண்மைதான். தன் உடலை வருத்தி மகளைப் படிப்பித்தாள்.

அந்த மகள்தான் பூஜா. பூஜா அறிவிலும் குணத்திலும் சிறந்து விளங்கினாள். வசந்தா தன் கலாசார பண்பாடுகளுக்கும் மதிப்பளித்து வாழ்ந்தாள். ஒருவரின் ஒழுக்கத்தைப் பார்த்து அவளையும் பூஜாவையும் ஏற்றுக் கொள்ள என்று ஒரு இதயம் ஏங்கியது. ஆனாலும் வசந்தா அந்த இதயத்தை நிராகரித்துவிட்டாள். அவள் ஒருத்திக்கு ஒருவன் என்ற ஒழுக்கத்துடன் தன் மகளை வளர்ப்பேன் என்ற நம்பிக்கையுடன் வளர்த்தாள் பூஜாவை.

பூஜா இன்று ஒரு ஆசிரியையாக சமூக சேவை செய்து கொண்டிருக்கிறாள். அவளை இந்த சமுதாயமே தலைமேல் வைத்துக் கொண்டாடுகிறது. அந்தப் பெருமைகளை எல்லாம் சுமந்து கொண்டு தாயின் அருகே வருகிறாள். அவள் கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் வெளிவருகின்றன. அந்தக் கண்ணீர் ஆனந்த துளிகளைத் துடைக்க விருப்பமில்லாது தாயின் முகத்தை நோக்கிக் கொண்டிருந்தாள்.

இவ்வாறு சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருந்தபோதும் சதீஸ் வசந்தா பற்றிய நினைவுகளின்றி இருக்கின்றான். வசந்தா அதற்காக வருந்தவில்லை, ஏன் தெரியுமா? அவனைவிட அவளுக்குக் கிடைத்த பெரிய செல்வம் பூஜாதானே.

நாள்கள் மெல்ல மெல்ல கரைந்து கொண்டிருந்தன. பெண்கள் மென்மையானவர்கள் என்பது உண்மைதான் போலும் ஏன் தெரியுமா? பிரிந்து சென்ற சதீஸின் மரணத்தை வசந்தா கேள்விப்பட்டாள். என்னதான் பிரிந்து சென்ற கணவனாக இருந்தாலும் அவன் அவளுக்கு கணவனாகவும் பூஜாவுக்குத் தந்தையும் தானே. அவனின் மரணம் அவள் உள்ளத்தை கலங்கத்தான் செய்தன.

வசந்தா சதீஸ் இறந்து பல வருடங்களாகியும் இன்றும் கூட அவள் வெளியே வருவதில்லை. ''அம்மா உங்களை விட்டு விட்டு போனவரைப் பற்றி யோசிக்கத் தேவையில்லை. நீங்களும் மற்றவங்களைப் போல வாழுங்கள்'' என்று கெஞ்சுகிறாள் பூஜா. வசந்தாவின் கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள்தான் வருகின்றன. அவள் இன்றுவரை ஒரு நல்ல தாயாகவும் சதீஸ் இறந்தாலும் அவளின் மனைவியாகவும் வாழ்கிறாள்.


இப்படிப்பட்ட ஒரு மனைவியை அவன் இழந்துவிட்டதாலோ என்னவோ அவன் விரைவில் நரகலோகம் சென்றுவிட்டான். ஆ... அது அவன் செய்த பிழை. இப்படிப்பட்ட ஒரு மனைவியை இழந்ததுதான், அதற்கு கடவுள் கொடுத்த தண்டனைதான் அவன் மரணம்.

''பூஜா...'' என்ற அம்மாவின் குரல் கேட்கிறது. நிஜவுலகுக்கு திரும்புகிறாள். நாளை விடிந்தால் பெண் பார்க்கும் படலம், அவளின் நிபந்தனைகள் தாயுடன் தனி வாழ்க்கை கூடவே இருக்கவேண்டும். தன் சம்பளம் தாய்க்கே போக வேண்டும். இது ஏற்கக் கூடிய நியாயம்தான். அவள் வாழ்வில் அவள் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள ஒருத்தன் வருவானா? அவள் உணர்வுகளை புரிந்துகொள்ள வருவானா? அவள் காத்துக் கொண்டிருக்கிறாள். சதீஸ் மாதிரி இன்னொரு கொடூரமான ஜீவன் மட்டும் வரக் கூடாது என்பது தான் என் வேண்டுதல்கள்.

வசந்தாவின் வாழ்க்கையில் வசந்தம் வீசும் வண்ணமும் பூஜாவின் கனவுகள் நிறைவேறும் முகமாகவும் ஒருத்தன் நிச்சயம் வருவான் என்ற நம்பிக்கையிலும் நானும் காத்திருக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னமும் இனிக்கும் சர்க்கரைத் தொட்டிகள்




■ எஸ்.எம்.கோபாலரத்தினம்

யாழ்ப்பாணத்திலும் வில்லுப்பாட்டுக்கென ஓர் ஆறுமுகம் உருவானார். இவர் வண்ணை இராமகிருஷ்ண மிஷன் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் ஓர் ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். தூய்மையும் ஒழுக்கமும் நிறைந்த ஆசிரியர்களுள் இவரும் முக்கியமானவர். புங்குடுதீவு கல்விக்கும் கலைக்கும் பண்பாட்டுக்கும் மட்டுமல்ல வர்த்தகம், வணிகத்திலும் பெரும் புகழ்பெற்றது. உயர் பதவிகளிலும் இலக்கியத்திலும் புகழ்பெற்றவர்கள் யாரையாவது உலகில் எந்தப் பகுதியிலாவது சந்தித்தால் அவர் புங்குடுதீவில் பிறந்தவராகவே இருப்பாரென்று ஐயமில்லாமல் சொல்லிவிடலாம்.

இதனால் இப்படிப் பெயர் பெற்றவர்கள் தங்கள் பெயருடன் தாங்கள் பிறந்த மண்ணின் பெருமையைப் பறைசாற்றுவதற்காகத் தங்கள் மனத்திருப்திக்கேற்ப ஊர்ப்பெயரைச் சுருக்கி மாற்றி எழுதிக் கொள்வார்கள். வைத்தீஸ்வராவில் எனக்குத்தமிழ் படிப்பித்த ஆசிரியர் தமது பெயரை வித்துவான் பொன் அ.கனகசபை என எழுதுவார். பொன் என்ற பெயரே பொதுவாகப் பலராலும் பின்பற்றப்பட்டது. வில்லுப்பாட்டை யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தியவர் திருப்பூங்குடி வி.கே.ஆறுமுகம் என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். காரைதீவு காரைநகர் ஆனது போல புங்குடுதீவை இரண்டொருவர் புங்கைநகர் என்றும் பெயர் மாற்ற எடுத்த முயற்சி வெற்றியளிக்கவில்லை. பொன் கொடு தீவின் தலைப்பாக பொன் என்ற பெயரே பெரும்பாலும் நிலைபெற்றுவிட்டது. பொன் என்ற பெயரில் பல வித்துவான்கள் புங்குடுதீவைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் பொன் முத்துக்குமாரன் என்ற மற்றொரு தமிழறிஞருக்கான பொன் என்பது பொன்னாலையைக் குறிக்கும். திருப்பூங்குடி ஆறுமுகம் வண்ணை சிவன் கோயில் கோபுர வாசலுக்கு முன்புள்ள மண்டகப்படி மண்டபத்தின் அருகே இப்பொழுதுள்ள சண்முகம் சாப்பாட்டுக்கடையின் பின்புறமுள்ள ஒருவீட்டில் வசித்தார். இந்த வீட்டின் அருகே முன்பு பெரிய தண்ணீர்த் தொட்டி கட்டப்பட்டிருந்தது. (இப்பொழுதும் இருக்கிறதோ தெரியாது) இரண்டாவது உலக மகா யுத்தத்தில் விமானத்திலிருந்து குண்டு வீச்சு நடந்தால் மக்களை ஆபத்திலிருந்து காப்பாற்றுவதற்காக ஏ.ஆர்.பி (ARP) Air Raid Precaution) என ஓர் அமைப்பு நாடு முழுவதும் அமைக்கப்பட்டு மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் பயிற்சியளிக்கப்பட்டு வந்தது. குண்டு வீச்சு நடந்தால் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென பயிற்சியளித்து தினமும் முற்பகல் 11 மணியளவில் அபாயச் சங்கு ஒலிக்கப்படும். கல்விக் கூடங்களிலுள்ளவர்கள் இந்தச் சங்கொலி கேட்டதும் சுவர் ஓரமாக வாயில் பென்சிலையோ தடியையோ வைத்துக் கடித்தபடி குப்புறப்படுத்துவிட வேண்டும். மீண்டும் அபாயச் சங்கு ஊதும் வரை அப்படியே படுத்திருக்க வேண்டும். இதேபோல வீதியில் போகிறவர்களையும் இதில் பயிற்சி பெற்றவர்கள் பாதுகாப்பாக சுவர் ஓரங்களில் குப்புறப்படுக்கச் செய்வார்கள். திருப்பூங்குடியார் வீட்டுக்கு அருகே இருந்த பெரிய தண்ணீர்த் தொட்டி போல் மற்றும் முக்கிய இடங்கள் பலவற்றிலும் தண்ணீர்த் தொட்டிகள் கட்டப்பட்டிருந்தன. இதேபோல் முக்கிய சந்திகள், கல்விக் கூடங்கள், கந்தோர் கட்டடங்கள் ஆகியவற்றுக்குச் சமீபத்தில் மண்மூடைகளும் அடுக்கி வைக்கப்




பட்டிருக்கும். ஒவ்வொரு நாளும் அபாயச்சங்கு ஒலித்தவுடன் பயிற்சி பெற்ற ஏ.ஆர்.பி.காரர்கள் அங்குமிங்கும் ஓடி மக்களைக் குப்புறப்படுக்கச் செய்வதிலும் தண்ணீர்த் தொட்டிக்கும் மண்மூடைகளுக்கும் இடையே ஓடுவதும் வேடிக்கையாக இருக்கும். யாழ்ப்பாணத்தில் ஜப்பான்காரன் குண்டு போட வரவில்லை. கொழும்பை எட்டிப்பார்த்துப் போய்விட்டான். வடக்கில் மொட்டைப் பனை மரங்களைப் பார்த்துப் பயந்து ஓடிவிட்டான் என்று இங்கு சிலர் கதைவிட்டார்கள்.

உலக மகாயுத்தம் முடிந்த பின்னும் இந்தத்தண்ணீர்த் தொட்டி இருந்தது. 1940 களின் தொடக்கத்தில் தான் வண்ணை சிவன் கோயிலின் பழைய கோபுரம் இடிக்கப்பட்டுப் புதிய கோபுரத்துக்கு அத்திபாரமிட முயற்சிகள் நடந்தன. இந்தக் கோபுரம் கட்டுவதற்கும் அதன் நிலம் உறுதியாக இருப்பதற்கும் பல நுட்பங்கள் கைக்கொள்ளப்பட்டன.

வல்வெட்டித்துறை சிவன்கோயில், அம்மன் கோயில் கோபுரங்கள் அழகாக அந்தக் காலத்திலேயே கட்டப்பட்டிருந்தன. நிலம் கண்ணாடி போல் பளபளப்பாகவும் இருந்ததற்கு சக்கரையும் கலந்து அத்திபாரமிட்டதுடன் நிலத்துக்கும் சர்க்கரையும் கலந்ததுதான் காரணமென்று சொன்னார்கள். போர்ப் பாதுகாப்புக்கு முன்னெச்சரிக்கையாக தண்ணீர் நிரப்பி வைத்த தண்ணீர்த் தொட்டியில் சர்க்கரையைக் கொண்டு வந்து வைத்து நிரப்பினார்கள். நாங்கள் பள்ளிக்கூடம் போகும் போது தொட்டிக்குள் நிரப்பியிருந்த சர்க்கரையைக் கொஞ்சம் கிள்ளி வாய்க்குள் போட்டுக் கொள்வதும் ஒரு கிழவர் எங்களை அடிப்பதற்கு கம்போடு ஓடிவருவதும் வாடிக்கையானது. கோபுரம் கட்டுவதற்கு மிக நீண்ட காலமானது. சர்க்கரைக்கு என்ன நடந்தது என்பதை ஆராய வேண்டிய தேவை எங்களுக்கு இருக்கவில்லை.

# இறக்கி வைக்க முடியாத சுமைகளுடன்....

■ சோபனா

***போர்க் காலச் சூழலில் உறவுகளையும், உடைமைகளையும் பறிகொடுத்து ஆறாத வடுக்களுடன்தற்போது அவற்றை எவ்வாறு பெற்றுக் கொள்ள முடியும் எனும் சிந்தனையுடன் இருப்பவர்களைத் தொடர்கின்ற பல்வேறு நெருக்கடிகள் உள நோயாளிகளாக மாற்றிக் கொண்டிருக்கின்றன.***

துன்பங்களையும் சோதனைகளையும் சொந்தமாக அனுபவிக்கப் பிறந்தவர்கள் வன்னி மக்கள் என்பதை தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் சம்பவங்களை வைத்து அறிய முடிகிறது. போரின் வடுக்கள் ஆறாத துயராக வன்னி மக்களை தொடர்ந்தும் வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிறது.

போரின் நிசப்தம் ஓய்ந்து விட்டன இனியாவது எமக்கான மண்ணில் நிம்மதியாக சந்தோசமாக வாழ முடியும் என நினைத்து மீண்டும் தமது சொந்த நிலங்களில் காலடி எடுத்து வைத்தவர்கள் நிம்மதியற்ற, நிர்கதியான வாழ்க்கையை தொடர்ந்து அனுபவிக்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக் கொள்ளவதற்குப் பொருளாதார நெருக்கடிகள் ஒருபுறம் இருக்க, உள ரீதியான பாதிப்புக்கள் வாழ்க்கையில் வெறுப்பை உண்டு பண்ணுவதாக தொடர்ந்து கொண்டிருக்கிறது.

கடந்த காலங்களில் போரின் பிடியில் சிக்குண்டு உடு துணியுடன் நலன்புரி முகாம்களில் (சிறைவாசம்) அனுபவித்து நரகத்திலிருந்து மீண்டெழுந்தவர்களுக்கு மீண்டும் சொந்த இடங்களில் குடியமர்த்தப்பட்ட போதும் வன்னி மக்கள் தொடர்ச்சியாக எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் தீர்வு காணப்படாதவையாகவே உள்ளன. இதன்காரணமாக உள நோயாளிகளாக மாற வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளனர்.

போர்க் காலச் சூழலில் உறவுகளையும், உடைமைகளையும் பறிகொடுத்து ஆறாத வடுக்களுடன் தற்போது அவற்றை எவ்வாறு பெற்றுக் கொள்ள முடியும் எனும் சிந்தனையுடன் இருப்பவர்களைத் தொடர்கின்ற பல்வேறு நெருக்கடிகள் உள நோயாளிகளாக மாற்றிக் கொண்டிருக்கின்றன .

தாம் வாழ்ந்த மண்ணில் இன்று அரசினால் மறைமுகமாக மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப்பணிகளால் [illegible] கடாக்களாக்கப்பட்டுள்ளனர்.

புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளின் குடும்பங்கள், மாவீரர் குடும்பம் என வன்னியிலுள்ள குடும்பங்கள் ஏதோ ஒரு வகையில் விடுதலைப் புலி அமைப்புடன் தொடர்பு பட்டு இருந்தவர்கள் என்பது அரசு அறியாத ஒன்றல்ல.

போராட்ட காலத்தின் தமிழர்களின் உரிமைக்காக அர்ப்பணிப்பான சேவைகளை வழங்கியவர்கள் இன்று அடங்கிப் போக வேண்டியவர்களாக உள்ளனர். 'தனி மனித சுதந்திரம்' வன்னி மாவட்ட மக்களிடம் இருந்து பறித்தெடுக்கப்பட்டுவிட்டது. அவர்கள் எதையும் தனியாகச் சிந்தித்து முடிவெடுக்க முடியாதவர்களாக உள்ளனர். கடந்த காலங்களில் அனுபவித்த துன்பங்களை விட தற்போதைய சூழலில் அனுபவிக்கின்ற துயரமான சம்பவங்கள் [illegible] தாகவே உள்ளன.

மீள்குடியமர்வின் பின்னர் கூடவே இருந்த அற்பசொற்ப உடைமைகளை விற்றும் அடைவு வைத்தும் அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக் கொண்டவர்கள் விலைவாசியின் பிடிக்கு ஈடு கொடுக்க முடியாதவர்களாக வங்கிகளில் கடன் வாங்கித் தற்போது கடனாளிகளாக வேறு உள்ளனர். தாம் பெற்றுக் கொண்ட கடன்களை எப்படிக் கட்டி முடிக்கப் போகின்றோம் என்பது ஒவ்வொரு குடும்பத்தினரதும் நாளாந்த சிந்தனை. வருமானம் தேடித் தரக் கூடியவர்கள் தொழில் வாய்ப்பின்றி (புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள்) வீடுகளில்முடங்கியிருப்பதால் எப்படிக் கடன் சுமை தீர்க்க முடியும்.

நாளாந்த உணவு, பிள்ளைகளின் படிப்புச் செலவு, போக்குவரத்து என வருமானத்தை மீறிய செலவுகள் இருப்பதால் மேலும் மேலும் கடனாளிகளாகவே உள்ளனர். இதன் காரணமாக குடும்பத்தைத் தலைமை தாங்குபவர்கள் குறிப்பாக பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் நாளை எப்படி போகப் போகின்றது என்ற சிந்தனையுடன் தூக்கம் மறந்து ஆழ்ந்த யோசனையில் இருப்பார்கள். இதனால் உளரீதியான பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

வன்னி மாவட்ட மக்கள் இத்தகைய உள ரீதியான பாதிப்பைச் சந்திப்பதற்கு முக்கிய காரணம் 'கடன் சுமை'. இந்தக் கடன் சுமை தீர்க்கப்பட்டால் உளரீதியான ஆற்றுப்படுத்தல் தானாகவே நிறைவேறும். தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் உட்பட அரச நிறுவனங்களும் அபிவிருத்தி நடவடிக்கைகள் எனக் கூறிக் கொண்டு செய்து கொண்டிருக்கும் பணிகள் வன்னி மக்களை நன்மையடையச் செய்துள்ளதா என்பதைச் சற்றுச் சிந்திக்க வேண்டும்.

மக்களின் நலன்களைக் கருத்தில் கொள்ளாமல் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி எந்த விதப் பலனையும் இனாமாகத் தரப்போவதில்லை. மாறாக மக்கள் நன்மை பெறக் கூடிய அபிவிருத்திப் பணிகள் அவர்களின் வாழ்வில் ஒரு முன்னேற்றத்தைக் கொண்டு வருவதுடன் உளரீதியாகச் சந்திக்கக் கூடிய பிரச்சினைகளும் தீர்வு காணப்படும்.

வன்னி மக்களை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்திப் பணிகள் குறிப்பாக அவர்களின் அபிவிருத்திப் பணிகளை சரியாக நிறைவேற்றக் கூடிய வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் வன்னி மக்களின் முக்கிய தேவையும் எதிர்பார்ப்பும் தற்போது இதுவாகவே உள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றே தோழி நம் கணவன்




காதலர் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவு பட்டதே இன்பமான வாழ்க்கை. அன்பின் முதிர்ச்சி நிலையே காதல் என்பது இருவருக்கு இடையில் நட்பு உண்டாவதற்கும் அன்பு தான் காரணமாகிறது. ஆனால் நட்பு காதலாகாது.

இருவர் தம்முள் நட்புக் கொள் ளும் போது, கரும்பின் சுவை யைத் தொடர்படுத்தி அதன் நிலைப்பாட்டைக் கூறுவது வழக்கம். பொதுவாகவே, அடிக் கரும்பு இனிமை கூடியிருக்க, நுனிக்கரும்பு சுவை குறைவாக இருக்கும். அடியிலிருந்து நுனி நோக்கிச் சுவை குறைந்து செல்லும்.

அதுபோல, கண்டதும் நட்பு இனிமை கூடி இருக்காது; இருப் பது மிகவும் அரிது. தொடக்கத் தில் இனிப்பான நட்பு, அநேகமாக, போகப் போக இனிமை குறைந்து, நட்பின் தாக்கம் குறைந்து போய், நட்பே இல்லாத நிலைமை வந்து விடுகிறது. அதே நேரம் குறை வான இன்பத்தில் தொடங்கிய நட்பு போகப் போக வளர்ந்து கூடிய இன்பம் பயப்பதாக மலர்ந்து இருப்பதைக் காணலாம்.

நவில்தொறும் நூல்நயம் போலும், பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு (குறள்) என

வள்ளுவர் காட்டுவதும் நோக்கத் தக்கது.

இந்த நட்பு, கரும்பின் நடுப் பகுதியிலிருந்து தொடங்கும் இனிமை போல இருப்பதே வாழ்க் கையில் சாத்தியமாகிறது. கண்டதும் இருவரிடையே நட்பு வராது என்பதால், தொடங்கிய சந்திப்பு அடிக்கரும்பை நோக்கி அமையும் இனிப்புப் போல இன்பம் கூடிச் செல்லும்; பல சந்தர்ப்பங்களில் நுனி நோக்கிச் செல்லும் இனிமை போல, நட்பின் வலிமை குறைந்து சென்று நட்பே இல்லாத நிலை தோன்றும். அது நெருடலான நிலை.

இந்த உண்மையை திருமணபந் தத்தில் இணையும் ஆண், பெண் உறவில் வைத்துப் பார்ப்பதே இந்தக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

திருமணம் எல்லாம் காதலில் நடப்பதில்லை. ஏதோ ஒரு வகையில் ஒருவரையொருவர் புரிந்து கொண்டுதான் மண வாழ்க்கை தொடங்குகிறார்கள். அதனையே பொருத்தம் பார்த்தல் எனச் சொல்லுகிறோம். அந்தச் சிறியளவிலான புரிந்துணர்வு வளர்ந்து செல்ல வேண்டும். அதாவது கரும்பின் அடிப்பகு திக்குச் செல்ல வேண்டும். அப்ப டிச் செல்லும் போது அதனைக் காதல் என்று சொல்லலாம்.

அந்த அன்பு வளராது (நுனிப் பகுதிக்கு) சென்றால் கணவன் மனைவி உறவில் காதல் மலராது. ஒற்றுமை இல்லாத வாழ்க்கை யாகிச் சில வேளை பிரிவிலும் முடிந்துவிடும்.

உண்மையான காதல் வாழ்வே உலக இயக்கத்துக்குத் தேவை யாகிறது. அதனையே 'அன்பின் வழியது உயிர் நிலை'' என வள் ளுவர் கூறுகின்றார். இது மனிதத் துக்கு மாத்திரமன்று எல்லா உயிரினங்களுக்கும் பொருந்தும்.

அவ்வாறு, காதல் மனையா ளும் காதலனும் மாறின்றித்தீதில் ஒரு கருமம் செய்ய வேண்டும் என்பதனையே உலகம் எதிர்பார்க் கிறது. அதுவே கற்பு என்னும் ஒழுக்கம் ஆகும்.

இத்தகைய காதலர், கற்பு நெறியில் ஒழுகி வாழ்வதையே பழந்தமிழ் இலக்கியங்கள் மேலான வாழ்க்கை என நமக்குக் காட்டு கின்றன. ஏனையவற்றைப் புலவர் கள் போற்றுவதில்லை; புறந் தள்ளி விடுவர்.

இராமன்+சீதை வாழ்க்கை யைக் காட்டும் இராமாயணம், கோவலன்+கண்ணகியின் சிலப் பதிகாரம், பாண்டவர்+பாஞ்சாலி யின் பாரதம், நளன்+தமயந்தி கதை, அரிச்சந்திரன்+சந்திரமதி கதை என்னும் இலக்கியங்கள் மிக உன்னதமான காதலின் கற்பு ஒழுக்க வாழ்க்கை முறையை நமக்குப் படம் பிடித்துக் காட்டுவன வாக அமைந்துள்ளன என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறான காப்பிய மாந்தரி டையே காணப்படுகின்ற கணவன்-மனைவி இன்பநிலை, ஏனைய தமிழர் வாழ்க்கையிலும் இருந்து வந்துள்ளது என்பதையும் நாம் அறிவோமாக. எடுத்துக் காட்டாக சிலவற்றை இங்கே காண்போம். திருமணமாகிச் சில ஆண்டுகள் கழிந்த நிலையில், தனது நண்பி ஒருவரின் இல்லத்துக்கு ஒருத்தி போகிறாள். வரவேற்பு உபசாரம் நடந்த பின், உரையாடிக் கொண்டி ருக்கிறார்கள். அப்பொழுது, ''திரு மண வாழ்க்கை எப்படி' எனத் தோழி கேட்கிறாள். அந்த இல்ல றப் பெண், இசைக் கலையில் தேர்ச்சி பெற்றவள்; நுண்ணறிவு படைத்தவள். அவள் சொல் கிறாள். ''தோழி, முறையான இசைகற்றவள் யான்; அத்து டன் இசை ஆர்வம் கொண்ட வள் என்பதையும் நீ அறி வாய்; ஆனால் எனது கண வன் தரும் இன்பமோ எனது இசை ஆர்வத்தையும் விஞ்சி நிற்கிறது. இனி யவர் என்று பிறர் சொல்லக் கேட்டே நான் அவரைத் திருமணஞ் செய்தேன்; அன் றைய நாளை விடவும் மிக இனிமையு டையவராகவே நான் அவரைப் போற்று கி றேன்; உணர் கிறேன்'' என் கிறாள்.

''எண்ணுமுறை
நிறுத்த
பண்ணினுள்ளும்
புதுவது புனைந்த திறத்தினும்
வதுவை நாளினும்
இனியனால் எமக்கே'' (அகம்)

என இதனைக் காட்டுகின்றார் புலவர்.

இன்னொரு குடும்ப வாழ்வைப் பார்ப்போம். மனைவியாக வாழ்ந்த அந்தப் பெண், செல்வச் செழிப் புள்ள குடும்பத்தில் வாழ்ந்தவள். இப்போது புகுந்த கணவன் வீடு வறுமைக் கோட்டில் உள்ளது. ஆயினும் அந்தப் பெண் வறுமை யிலும் செம்மையாய் வாழும் அந்தக் குடும்பத்தோடு ஒற்றுமை யாக வாழ்கிறாள். ''கொண்ட கணவன்குடி வறனுற்றெனக் கொடுத்த தாதை கொழுஞ்சோறுள் ளாத''வளாக வாழ்கிறாள். அப்படி யானாலும் அந்தக் கணவன் வாழ்வு அவளுக்கு உவப்பான இன்பம் தருவதாக இருக்கிறது. அங்கே சென்ற தோழிக்கு இந்த இரண்டு பகுதிக் குடும்ப நிலை தெரிந்திருந்தாலும், சாதாரணமாக, ''எப்படிச் சுகம்'' எனக் கேட்டதற்குத் தலைவி, தனது முன்னைய நிலையையும் இப்போதைய நிலையையும், கூறி கணவன் வாழ் வின் இன்பத்தில் தான் மன நிறைவு கொண்டு வாழ்கிறேன்; பிறந்த வீட்டு செல்வ வாழ்வை எண்ணவில்லை என்கிறாள்.

இராமழை பெய்த இரானீ ரத்துச்
செங்கோல் வேந்தன் உழவனாகிப்
பனை நுகங்கொண்டு யானை ஏர்ப்பூட்டி
வெள்ளி விதைக்கப் பொன்னே விளையினும்
வேண்டேன் பிறந்தகத்து ஈண்டிய வாழ்வே-
என்றும்

பிறந்த வீட்டு செல்வம்,
அது அன்றோடு போனது இன்று.
செங்கோல் வரகுப் பசுங்குரல் கொய்து
நன்று காத்துக் குன்றில் உணக்கி
ஊடுபதர் போக்கி முன் உதவினோர்க்குதவி
காடுகளை இந்தனம் பாடுபார்த் தெடுத்துக்
குப்பைக் கீரை உப்பின்று வெந்து
இரவற் தாலம் விரைவுடன் எடுத்து
சோறு கொண்டு பீறல் அடைத்து
ஒன்று விட்டொரு பொழுது
தின்றே சிடப்பினும்
நன்றே தோழி நம் கணவன் வாழ்வே!

என்றும் பெருமையாகக் கூறுகின்றாள்.

தனது தாயகத்தில் எத்தனையோ வசதி வாய்ப்புக்களோடு வாழ்ந்த பெண், இப்போது இல்லற வாழ் வில் புகுந்திருக்கிறாள். ஆண் களை விடவும் பெண்கள் தமது வாழ்நாளில் பல படி முறைகளில் வாழ வேண்டியவர்கள். உடல், உளம் இரண்டையும் அந்தந்த நிலைக்கு ஏற்பப் பழக்கப்படுத்தி வாழ வேண்டியவர்கள். அதுவே அவர்களது ஒழுக்கம், கற்பு நிலை எல்லாம். அதனாலே தான் சமூ கத்தில் மாண்புடையவர்களாகப் போற்றப்படுகிறார்கள்.

கணவன் அன்புடையவனாக இருந்தால் போதும் அவனது வளத்துக்கேற்ப அவள் வாழத் தெரிந்து கொண்டால், அவள்தான் சிறந்த வாழ்க்கைத்துணை.

மனைத்தக்க மாண்புடைய ளாகித்
தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை (குறள்51)

என்பது தானே வள்ளுவரின் வாய்மொழியாகிறது. இல்லவள் மாண்புடையவளானால், கண்ணிரண்டும் ஒன்றையே காண்பது போல நன்மை தீமை, வறுமை, செல்வம் எனவரும் எல்லா நிலைகளிலும் இன்ப வாழ்க்கையை அவர்கள் காண்பார்கள் அல்லவா?



மட்டுவில் நா.நல்லதம்பி




''..யாரோ ஒருவன் சொன்னான்
என்று சீதையை நடுக்காட்டில்
விட்டு வரும்படி தன் தம்பியிடம்
கூறி அனுப்பியபோது இராமனின்
மென்போக்கு எங்கே போயிற்று?...''

-உரும்பிராய் ஞானாம்பிகை

## இராமனின் சந்தேகம்

சீதை இராமனுடன் காட்டுக்குச் சென்றாள். அவளை இராவணன் கவர்ந்து சென்றான். சீதை இருக்கும் இடம் கண்டு போர் நடந்து, சீதையை தீக்குளிக்க வைத்து அயோத்திக்கு கூட்டி வந்தான் ராமன். பின் தெருவில் போனவன் சொல்கேட்டு தம்பியுடன் காட்டுக்கு அனுப்பினான். அந்தத் தாய் இரண்டு புதல்வர்களை பெற்றாள். [லவன், குசன்] அதையும் அயோத்தி நகரம் அறிந்தது.

நாள்கள் சென்றன. சீதை பிள்ளைகளுடன் அயோத்தி அரண்மனை செல்கிறாள். சிறுவர்களை யார் என்று கேட்கிறான் ராமன்! உனது மைந்தர்கள் என்று முனிவர் கூற இராமனுக்கு சந்தேகம் உண்டானது. சீதை என் செய்வாள். அயோத்தியின் பொக்கிஷம் இருவரையும் இராமனிடம் சேர்த்துவிட்டு எல்லோரும் நிறைந்த சபையில் இதே சந்தேகம் தொடரும். எப்படி பூமியில் இருந்து வந்தேன் அப்படியே பூமி தாயை வரவழைத்து தாயிடம் சேர்கிறேன் என்று மறைந்தாள். இது இராம னின் வன்போக்கே தான்.

புனித வதி,
புதுறோட்.

## குறை கூறுவது சரியா...?

இராமாயணம் கதை வடிவில் இயற்றப்பட்ட வரலாற்று ஆவணம் தவிர சமகாலத்தில் பல்வேறு நோக்கங்களை வெளிப்படுத்தும் நுட்பங்களையும் கொண்டிருப்பது அதன் சிறப்பம்சம். மற்றும் உபகரைகளையும் புராணங்களையும் கூடக் கொண்டிருக்கின்றது.

தவிர இராமாயணம் நடைபெற்றது என நம்பப்படும் காலம் ஒன்று, அது வேடுவ குலத்தைச் சேர்ந்த வான்மீகி முனிவரால் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு பின்னரே இயற்றப்பட்ட இன்னொரு காலம் என்பதும் வரலாறு.

இராமாயணத்திலே இராமன் மர்வுரிதரித்த வேடுவனாகப் பலகாலம் காட்டிலே வாழ்வதும் காட்டு வாசிகளுடன் நட்பும் சகோதரத்துவம் கொள்வதும் தனது மனைவி பிள்ளைகளைக் காட்டிலே விட்டுவிடு வதும் கூட நாட்டை விடக் காடுதான் சிறந்தது என எண்ணினானோ என்னவோ தவிர இராமாயணத்தை இயற்றிய வான்மீகி முனிவர் தனது வேடுவ குலத்தைப் பெருமைப்படுத்த இராமனின் குலத்தை தனது குலத்துடன் சம்பந்தப்படுத்தியுமிருக்கலாமல்லவா? ஆக இராமனையோ சீதையையோ குறைகூறுவதை மட்டுமே நோக்கமாகக் கொள்ளாது பிற விடயங்களைக் கூட ஆராய்வோம்.

ஜெ.ஹே.லதா,
தொட்டிலடி.

## வாசகர்களே!

உரும்பிராய் ஞானாம்பிகையின் கருத்தை ஒட்டியும், வெட்டியும், கீறியும், கிழித்தும், சேர்ந்தும், தோள் கொடுத்தும் உங்கள் கருத்து எதுவானாலும்

'சூரியகாந்தி' 361,
கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம் என்ற
முகவரிக்கு 100
சொற்களுக்குள் அனுப்பி
வையுங்கள்



தரமும் பண்பும் கண்டு பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமனாகும் முதலைகள்



அருணா தருமலிங்கம்,
வந்தாறு மூலை கிழக்கு, செங்கலடி

இலங்கையிலும் ஓந்தி போன்ற உருவத்துடன் கூடிய முதலைகள் (Crocodiles) ஆறு, குளம், குட்டை போன்றவற்றில் உயிர் வாழுகின்றன என்பதை நாமறிவோம். இது நீர்வாழ் உயிரினத்தைச் சேர்ந்தது. நம் வீட்டுச் சுவர்களில் காணப்படுகின்ற பல்லியின் (Lizard) உருவத்தை ஓரளவிற்கு கொண்டுள்ள இது முதிர்ச்சியடைந்ததும் சுமார் ஐநூறு கிலோ எடையுள்ள இராட்சத தோற்றத்தைக் கொண்டிருக்கும்.

இது மனிதன், விலங்கு, பறவை போன்றவற்றிற்கும் பெரும் தீங்கு விளைவிக்கக் கூடியது. முதலை நீர் வாழ் உயிரினமாதலால் இது வாழுகின்ற குளத்தில் குளிப்பதற்கு செல்லும் மனிதனையும், நீர் அருந்துவதற்கு அங்கு பிரசன்னமாகும் கால் நடைகளையும் பதம் பார்த்து விடுகின்றது.

எனவே முதலையின் உடலமைப்பு, இனம், இரை, இனப் பெருக்க முறை, சூரியக்குளியல், வயதெல்லை என்பவற்றை விரிவாக ஆராய்வது இங்கு உசிதமாகும்.

முதலையின் வால் நன்றாக வளர்ந்து நீரில் சுலபமாக நீந்துவதற்கும், தற்பாதுகாப்புக்கும் இரையைப் பயங்கரமாக அடிப்பதற்கும் உதவுகின்றது. அதனுடைய முன்கால்களில் ஐந்து விரல்களும் பின் கால்களில் நான்கு விரல்களும் காணப்படுகின்றன.

முதலையின் தோலில் கடினமான கொம்புப் பொருளிலான செதில்களும் தென்படுகின்றன. முதுகிலே இந்தச் செதில்கள் ஒழுங்கான குறுக்கு வரிசைகளாக அமைந்திருக்கும். இந்த முதுகுச் செதில்களுக்கு அடியிலே எலும்புத் தகடுகள் இருக்கும். வாலிலே இந்தக் கொம்புகள் வரம்பாக உயர்ந்து நிற்கும். வாலின் முன்பகுதியிலே இரண்டு வரம்பாகவும் மத்தியில் ஒரே வரம்பாகவும் பரிணமித்துள்ளன.

மூக்கின் துவாரம் முகத்தின் முன் முனையில் காட்சி தருகின்றன. இவை வால்வு போன்ற மடிப்புக்களாலானவை. இதனை அவசியம் ஏற்பட்டால் முதலை மூடிக் கொள்கின்றது. கண்களுக்கு மேல் மூன்று இமைப்படலங்கள் உண்டு. நீருக்குள் மூழ்கியிருக்கும் வேளையில் உள் இமைப்படலத்தை கண்களின்மேல் விரித்துப் போர்த்துக் கொள்ளும். செவியிலே ஒரு குட்டையான புறச் செவித் துவாரம் காணப்படும். செவியின் புறத்தே அசையக் கூடிய தோல்மடிப்பு ஒன்று தென்படுகின்றது. முதலை இதனைப் பயன்படுத்தி செவிக்குள் நீர் புகாத வண்ணம் இறுக்கி மூடிக் கொள்கின்றது.

முதலையின் மண்டை ஓட்டில் இரண்டு சந்துக்கள் உள்ளன. அவை பொறிச் சந்துக்கள் (Temporal Flossa) எனப்படும். குவாட்ரேட் (Quadrate) என்னும் நாற்பக்க எலும்பு அசைய முடியாதபடி பொருத்தப்பட்டிருக்கும். வலம், இடம் ஆகிய பக்கத்து தாடை எலும்புகளும் பாலட்டைன் (Palatine) என்னும் மேல்வாய் எலும்புகளும் ஒன்றோடு ஒன்று நடுக் கோட்டில் சேர்ந்திருக்கும். இதனால் மூக்கின் வெளித்துவாரத்திலிருந்து மூக்கு வழியானது நெடுந்தூரம் பின்னுக்குச் சென்று மூக்கில் உள்ள தாடைகள் வாயறையின் பிற்பகுதியிலே தொண்டையருகே திறக்கும். நாக்கின் பின் பகுதியில் ஓர் மடிப்பு உண்டு. இரண்டு மடிப்புக்களும் ஒன்றோடு ஒன்று பொருந்தினால் மூக்கிலிருந்து காற்று உள்ளே சென்று வரும் மூக்குப்பாதை வாயறைக்கு சம்பந்தமில்லாதபடி முற்றிலும் வேறாக அடைத்துவிடப் படும். இப்படி முதலை இரையை நீருக்குள் பற்றிப் பிடித்துக்கொண்டிருக்கும் போதும் காற்று நுரையீரலுக்குச் சென்று வருதல் தடைப்படாமல் இருக்கும். பற்கள் தாடை எலும்புகளில் மட்டுமே உண்டு. தாடை எலும்புகளிலுள்ள பற்குழிகளில் இவை பொருந்தியிருக்கும். இதனால் அவை குழிப்பற்கள் எனப்படும். பல்லி முதலிய ஊர்வனவற்றின் பற்கள் ஒன்றாகச் சேர்ந்து வளர்ந்திருக்கும். முதலைக்கு காறை எலும்பு இருப்பதில்லை. ஆயினும் இடைக்காறை எலும்பு உண்டு. விலா எலும்புகள் இருதலையுள்ளவை வயிற்றுப்பளு எலும்புகளும் உண்டு. வாலின் முதல் முன்னெலும்பு இரு முனைகளிலும் குவிந்திருக்கும். உடம்பின் உள்ளறையானது மார்பறையென்றும், வயிற்றறையென்றும் பாலூட்டிகளுள் உள்ள உதரவிதானம் போன்ற ஒரு திரையால் பிரிக்கப் பட்டிருக்கின்றது. இந்த இடைத்திரை தசைகளாலும் மற்றையபாகம் சவ்வினாலுமானது.

இரைப்பை பெரிதாகவிருக்கும். அதில் முதலை தன்னிச்சையாக விழுங்கிய கற்கள் உண்டு. இந்தக் கற்கள் இரையை நன்கு அரைப்பதற்கு உதவுகின்றன. இருதயத்தில்(Heart) இரண்டு மேலறைகளான 'ஓரிக்கல்லும்' இரு கீழறைகளான 'வென்ரிக்கலும்' இருக்கின்றன.

எல்லா முதலைகளிலும் இரண்டு ஜோடி மணப்பொருள் சுரப்பிகள் (Glands) தென்படுகின்றன. அவை முதலைகளின் இனப்பெருக்கம் நடைபெறும் வேளையில் அதிகம் சுரக்கும் என நீர் வாழ் உயிரின ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

முதலைகள் இடும் முட்டைகள் அண்டவடிவில் காட்சி தரும். மேலே வெண்ணிறமுடைய உறுதியான ஓடு மூடியிருக்கும். முதலை தான் வாழுகின்ற ஆறு, குளம், ஏரி முதலியனவற்றின் மருங்கில் குழிதோண்டி அதில் முட்டைகளை இடுகின்றது. பின்னர் அந்த மடுக்களை நன்கு மூடிவிடுகின்றது. சில முதலை இனங்கள் முட்டையிட்ட பின் அருகில் காவல் காத்து வரும். ஆபத்து நேரிடப் போகின்றது என்று உணர்ந்து கொண்டதும் நீரினுள் பாயக்கூடிய வித்திலேயே காத்திருக்கும். முட்டைக்குள் வளரும் குட்டியின் முகத்தில் பல் போன்ற பெரிய வளர்ச்சி ஒன்றியிருக்கும். இதற்கு முட்டைப்பல் என்றுபெயர். இதனால்குட்டி முட்டையை உடைத்துக் கொண்டு வெளிவரும்.

முதலைகள் எல்லாம் புலாலுண்ணும் பிராணிகள். உயிருள்ள இரையை வாலால் அடித்து நிலைகுலைய வைக்கும். சிறு பருமனுள்ள விலங்குகளை உடனே விழுங்கி விடுகின்றது. இரை பெரிதாகக் காணப்பட்டால் அதை சுரங்கத்தை ஒத்த பாழிக்குள் மறைத்து வைக்கின்றது. அது எளிதாக உண்ணக் கூடியவாறு அழுகிய பின்பு புசிக்கத் தொடங்கிவிடும் இயல்புடையது.

முதலைகள் நீருக்குள் சஞ்சரிக்கும் வேளையில் லாவகமாக நுழைந்து செல்லக்கூடிய சுரங்கத்தை ஒத்த பாழிகளைத் தோண்டும் வல்லமை பொருந்தியது முதலைகளின் செவிப்புலன் மிகக் கூரியது. அவ்வாறே கண்பார்வையும் மிகவும் துல்லியமானது. முதலை குரைப்பதும், குமுறுவதும் கலந்த உரத்த ஒலி எழுப்பும். சீற்றம் உண்டாகும் போது உஸ் என்ற சிற்றொலியை உண்டாக்கும். முதலைகள் எல்லாம் நீரில் வாழ்வன. கடுமையான சூரிய ஒளி விழும் வேளையில் நீரிலிருந்து வெளியேறி கரைக்கு வந்து அங்கு அச்சமெதுவுமின்றி சூரியக்குளியலை மேற்கொள்ளுகின்றன. சிறு அரவம் கேட்டாலும் மீண்டும் நீரினுள் விரைந்து சென்று விடுகின்றன. இரவில் இவை நீருக்குள்ளேயே இருக்கும்.

முதலைகளின் வயதெல்லையைச் சரியாக கணிக்க முடியாதுள்ளது. 'குரோக்கோடைலஸ்' 'பாலுஸ்ட்ரிஸ்' என்னும் சதுப்பு அல்லது நன்னீர் முதலையொன்று மிருகக் காட்சி சாலையில் முப்பது ஆண்டுகாலம் வாழ்ந்திருக்க கண்டுள்ளனர். இனி சில முதலை வகைகளை நோக்குவோம்.

'கவியாலிஸ் காஞ்செடிக்கஸ்' (Gavialis Gangeticus) அல்லது 'கடியாஸ்' என்பது சிந்து, கங்கை, பிரமபுத்திரா, மகாநதி ஆகிய ஆறுகளிலும் சஞ்சரிக்கின்றது. இதன் பிரதான உணவு மீன் இனங்களாகும். 'குரோக்கோடைலஸ்' என்னும் சாதி முதலைகள் இந்தியாவின் கிழக்கு கரையிலும், மேற்கு கரையிலும் கிழக்கிலிருந்து வடக்கே கொச்சி வரையிலும் வாழ்கின்றன. கீழைத்தேய நாடுகளில் இது ஆஸ்திரேலியாவின் கிழக்கு கரையிலும் சாலமன் தீவுகள், பிஜித்தீவுகள், வரையிலும் உண்டு. இது கழிமுகமுதலை எனப்படும். இவை ஆறுகளின் சாதாரண கழிமுகங்களிலும் கடலை அடுத்தகழிகளிலும் வாழ்கின்றன. இது உப்பு நீரிலும் சஞ்சரிக்கும் தன்மை கொண்டது. சில வேளைகளில் கடலில் சில கிலோ மீற்றர் தூரம் செல்வதுமுண்டு. இதுவே இந்தக் காலகட்டத்தில் வாழும் ஊர்வனவற்றில் எல்லாம் பெரியது. இது மனிதரையும் இரையாக்குகின்றது. நன்றாக முதிர்ச்சியுற்ற முதலைகளே இந்தக் கைங்கரியத்தை மேற்கொள்கின்றன.

பறவைகள் நீரின் மேல் மிதந்து கொண்டிருக்கும் போது முதலை நீருக்குள் பதுங்கி நீந்தி வந்து பிடித்துக் கொள்ளும். முதலைக்குட்டிகள் நண்டு, இறால் முதலியவற்றையும் பூச்சிகளையும் உண்ணும் பெண்முதலை நாணல் கோரை இலை முதலியவற்றால் விசேட கூட்டை உண்டுபண்ணும். இனப் பெருக்கத்திற்கு இது உறுதுணை புரிகின்றது. 'கைமன்' என்னும் முதலை வகை மெக்சிக்கோவிலிருந்து தென்அமெரிக்க வடபகுதி வரையில் சஞ்சரிக்கின்றன.

மனிதனுக்கு எமனாகின்ற கொடூர முதலைகள் பற்றி நாம் கவனத்தில் கொள்வது உத்தமமான செயலாகும்.

## மீண்டும் வருவாளா...?



ஆசை ஆசையாய்
அழகாக பிறந்த மகள்
பூவின் வனப்போடு
புன்னகைத்த நிலவு
வளரும் போதெல்லாம்
மனதை நிறைத்த மகள்
பிள்ளைப் பருவம் முதல்
வாலைக் குமரிவரை
எம் தோளில் சாய்ந்த மகள்
கனவுகளை வளர்த்து
கற்பனைகள் சமைத்து
எண்ணங்கள் பல விதைத்து
எப்படியோ- அவள் வாழ
எண்ணியிருக்கையிலே
எல்லாமும் அவளென்று
எமக்கிருந்த ஒரு சொத்தாய்
அள்ளி எடுத்தவளை
ஆராதித்திருக்கையிலே
''காதல்'' திரை விழுத்தி
காணாமல் செய்ததென்ன..?
பாசப் பொழிவுகளை-
அவள் மேல்
படரவிட்டே சுவாசித்தோம்
ஒட்சிசனாய் அவளைத்தான்
உயிர்வரையும்
தீண்ட வைத்தோம்
கவிதை மொழிபேசி
கற்பனைகள் பகிர்ந்து - அவள்
கரம் பிடிக்க எண்ணியவன்
பெயர் கூட நாம் அறியுமுன்பே
புறப்பட்டுச் சென்றதெங்கே?
விம்முகின்ற மனதால்
விழிகள் நிறையக் கண்ணீர்
அவள் எழுதி வைத்த
காகிதத்தில்
மழை சொரிந்து நிற்கிறது
ஏன் மறந்துபோனாள்..?
அவள் விருப்பந்தானே
எம் எண்ணம் என்பதனை
பிரிவுத் துயர் தந்து
இணைவிற்கு கரங்கொடுத்தான்
இதில்தானா சந்தோசம்
அவளுக்கு வரப் போகிறது..?
இதுவேயவள் மகிழ்ச்சியென்றால்
இருந்திட்டும்
இப்படியே..! நாம்
எல்லாமும் தொலைத்தவராய்
இறந்தபடி இருந்திடுவோம்...

பா.பொன்நிலவன், மீசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனங்கள் மாற வேண்டும்

வாழ்க்கையில் வசதிவாய்ப்புக்கள் பெருகப் பெருக பல வழிகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. பொருளாதாரம், கல்வி, பண்பாடு, கலாசாரம் போன்றவற்றில் ஏற்பட்டுள்ள மாற்றங்களில் சில வரவேற்கத்தக்கனவாகவும் சில மாற்றங்கள் விரும்பத்தகாதனவாகவும் இருக்கின்றன. அந்த வகையில் இந்த நாகரிகமான மாற்றம் பெண்களின் பண்பாடு, கலாசாரம் என்பவற்றில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அளவுக்கதிகமான கைத்தொலைபேசிப் பாவனை, கலாசாரத்துக்கு ஒவ்வாத ஆடைகள் அணிவது, தொலைக் காட்சித் தொடர் நாடகங்கள் மீதுள்ள மோகம், வரையறை அற்ற ஆண் நண்பர்களின் சகவாசம் என்று பட்டியல் நீண்டு கொண்டே செல்கின்றது.

முன்னைய காலங்களில் திருமணமான பெண்களுக்கென தாலி, குங்குமம், மெட்டி என அடையாளங்கள் இருந்தன. ஆனால் இன்றைய பெண்கள் இந்த மங்களகரமான அடையாளங்கள் எல்லாவற்றையுமே தொலைத்து நிற்கின்றனர். திருமணமாகாத பெண்கள் கூட ஒரு காலில் மெட்டி அணிகின்றனர். சடங்குகள், சம்பிரதாயங்களுக்கு மத்தியில் கணவனால் அணிவிக்கப்படும் மெட்டிக்கே இவ்வாறான பெண்களால் மரியாதை இல்லாமல் போய்விட்டது.

அடுத்து அநேகமானோர் பெண்கள் மீது அவர்கள் அணியும் ஆடைகளைப் பற்றி குறைகூறுகின்றனர். உண்மையில் இது மறுக்க முடியாதது. திருமணமான பெண்கள், மணம் ஆகாத பெண்கள் என்ற வேறுபாடின்றி பார்ப்போரை சங்கடப்படுத்தும் ஆடைகளை அணிகின்றனர். இதனைஅவர்கள் நாகரிகம் என நினைக்கலாம். ஆனால் அது எங்கள் பண்பாட்டையே சிதைக்கிறது என்பதை அவர்கள் புரிந்து கொள்வது இல்லை.

இன்றைய காலத்தில் பெண்கள் ஆண்களுடன் பல சந்தர்ப்பங்களில் பழக வேண்டிய சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. அப்போது அந்தப் பழக்கம் வெறும் நட்புரீதியாக மட்டுமே இருக்க வேண்டும். அதற்கான எல்லைகளை மனதில் ஆழப்பதித்துக் கொண்டால் வீணான பிரச்சினைகள் ஏற்படாது. தவறான நபர்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி கணவன் பிள்ளைகளை விட்டு விட்டு ஓடிப்போய் வாழ்வை ஏற்படுத்திக் கொண்ட பெண்களும் இன்று இருக்கின்றனர். இதெல்லாம் பண்பாட்டுக்கு களங்கத்தை ஏற்படுத்தும் செயல்கள்.

மாற்றங்கள் வேண்டும்; ஆனால் அதனை சரியான செயல்களுக்கு மட்டும் பயன்படுத்தினால் வாழ்க்கை இனிக்கும். அவ்வாறில்லாமல் "நான் இப்படித்தான் நடந்து கொள்வேன்" என்று முரண்பட்டால் நாளை அழிவது பெண்களது வளமான வாழ்க்கைதான். மாற்றம் என்பது மனதில் இருந்தால் போதும்; நாமும் நிச்சயமாய் மாற வேண்டும் என்ற கட்டாயமில்லை.

# அன்னைப் பெருந்தகையே



தொட்டிலிட்டு தாலாட்டி
தோளில் சுமந்திருந்து
அம்புலி காட்டி
அமுதாட்டி அரவணைத்தாய்
நோயுற்ற போது
நித்தம் கண்விழித்து
ஊண் ஒறுத்து உடல் வருத்தி
எண்ணற்ற விரதங்களை
எனக்காகப் பிடித்திட்ட
அன்னைப் பெருந்தகையே
முற்றத்தில் இருத்தி
மண்தடவி எண்ணும்
எழுத்தும் தொடக்கி
வித்தகனாய் வருவதற்கு
வித்திட்ட பொன்மயிலே
மறுபிறவியென்றிருந்தால்
மறுபடியும் உன்மடியில்
தவழ்ந்திருக்க வரம் தாராய்
அன்னையே...

ந.சந்திரலிங்கம்
அச்சுவேலி வடக்கு

# பட்டுப் புடைவைகளை எப்படிப் பராமரிப்பது?



பட்டுப் புடைவைகள் மீது ஆசைப்படாத பெண்களே இருக்க முடியாது. நல்லநாள் பெருநாள் கோயில் திருவிழாவென குறிப்பிட்ட சில நாள்களில் மட்டும் கட்டுவதாக இருந்தாலும், பத்துக்கு மேல் பட்டுப்புடைவை இருந்தால் தான் மனசு ஓரளவுக்கு சமாதானம் அடையும். இப்படி விலை கொடுத்து வாங்கும் பட்டுப் புடைவைகளைப் பாதுகாக்க பராமரிக்க தெரிந்திருக்க வேண்டும் அல்லவா?

ஓர் இடத்துக்குப் போய் வந்தோமாக இருந்தால், வந்ததும் புடைவையை மடிச்சு வைக்கக் கூடாது. புடைவையை கொஞ்சம் காத்தாட விட்ட மாதிரி அகலமா கொடியில் தொங்கப் போட வேண்டும். எந்தக் காரணம் கொண்டும் வெயிலில் காய விடக்கூடாது. வெயிலில் காய்ந்தால் அப்பளம் மாதிரிப் போய்விடும். கலர் மாறிவிடும்.

இதனால் 3,4 மணி நேரம் நிழலில் உலர்த்தினால் போதுமானது. புடைவையை துவைப்பதாக இருந்தால் சலவைத் தூள் போடக்கூடாது. சோப் போட்டும் துவைக்கக் கூடாது. நல்ல தண்ணீரில் அலசினாலே போதுமானது. புடைவையில் ஏதாவது கறை, கயர் பட்டால் முடிந்த அளவுக்கு நல்ல தண்ணீரில் அலசுங்கள். போகவில்லையென்றால் விபூதியை கொஞ்சம் எடுத்து, போகாத கறை உள்ள இடத்திலே அப்பி விட்டு ஒரு அரைமணி நேரம் கழித்து அலசுங்கள் போய்டும். பொதுவாகப் பட்டுப் புடைவையைக் கட்டிக் கட்டி அவிழ்த்து வைக்கக் கூடாது. 3,4 மாசத்துக்கு ஒரு முறை, தண்ணீரில் அலசி நிழலில் காய வைக்க வேண்டும்.

பட்டுப் புடைவையென்றால் கண்டிப்பாக ஜரிகை இருக்கும். அது வெள்ளி ஜரிகையாக இருக்கலாம். இல்லை தங்க ஜரிகையாகக் கூட இருக்கலாம். புடைவையை அயன் பண்ணும் போது ஜரிகை மேல் ஒரு மெல்லிய துணி வைத்து தான் அயன் பண்ண வேண்டும். இந்த நடைமுறைகளைப் பின்பற்றிப் பாருங்கள் பெறுமதிமிக்க உங்கள் பட்டுப் புடைவைகளை நீங்களே பாதுகாத்துக் கொள்ளலாம் அல்லவா.

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
"திலகம்",
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு
அனுப்பி வையுங்கள் .



# வாழாவெட்டி

வாழ்க்கை தந்தவன்
சீர்குலைத்து போனதால் - தான்
நீ வாழ வெட்டி!

துணை நின்றவன்
துயர்கொடுத்ததால்- தான்
துவண்டு போனது உன் வாழ்வு

பொட்டு இழந்து பூ இழந்து
போனதால் உன்னால் தலை நிமிர்ந்து
நிற்கமுடியவில்லை உலகில் ...

வாழாவெட்டி என்ற பட்டம் கட்டி
உன் திறமையையும் உன் ஆற்றலையும்
உன்னோடு சேர்த்துக்கட்டி
மூலையில் போட்டது
இந்த உலகம் .

பெண்ணே விழித்திடு!
வாழாவெட்டி என்று கூறி
உன் வாழ்வை வெட்டி
ஆக்காதே பெண்ணே !

உன்னையும் இவ் உலகிற்கு
எடுத்துக்காட்டு
உன்மனம் சோரலாம் ஆனால்
உன்னிடம் சோர்வு இல்லை

காலத்தை எதிர்த்து நீச்சல் இடு
வெற்றி நிச்சயம்
உன்னை நம்பு பிறரை நம்பாதே
எழுந்திடு பெண்ணே
துவண்டுவிடாதே!

அபினஜா
மாசார்

# காலத்துக்கு ஏற்ப மாறுங்களேன்...

அருவி



உலகம் முழுவதும் இன்று எதிர்நோக்கும் பிரச்சினை பொருளாதார நெருக்கடி. இதனால் பலபேர் வேலைக்குப் போக வேண்டிய கட்டாயம் எழுகின்றது. பெண்களும் இதற்கு விதிவிலக்கல்ல.

படித்த புத்திசாலிப் பெண்கள் வேலை இல்லையே என்று அங்கலாய்க்கத் தேவையில்லை. எனக்குப் பிடித்த துறையில் தான், வேலை வேண்டும் என்ற பிடிவாதத்திலிருந்து பெண்கள் கொஞ்சம் இறங்கி வரவேண்டும். காலத்திற்கும் தேவைக்கும் ஏற்றாற்போல் மனமாற்றத்தை உருவாக்க வேண்டும்.

அரச வேலைகள்தான் வேண்டும் என்று காத்திருப்பதிலிருந்து கொஞ்சம் இறங்கினால் தனியார் நிறுவனங்களில் தனியார் நிர்வாகங்களில் பெண்களுக்கு நிறைய வேலைகள் காத்துக் கிடக்கின்றன. ஆண்களிடம் இல்லாத சிறப்பு அம்சங்கள் பெண்களிடம் நிறையவே இருக்கின்றன. எந்த வேலையைக் கொடுத்தாலும் பெண்கள் மிகவும் பொறுப்புடன் செய்து முடிப்பார்கள்

பெண்களுக்கே உரிய தனித்திறமை என்னவென்றால் எந்தப் பிரச்சினை வந்தாலும் அமைதியாக இருந்து சமாளித்து விடுவார்கள். கோபப்பட்டு கூச்சலிட மாட்டார்கள் அவசரப்பட்டு எதையும் செய்ய மாட்டார்கள். எந்த வேலையையும் முறைப்படி சரியாகச் செய்வார்கள். முன்னுக்குப் பின் முரணாகச் செயற்பட மாட்டார்கள். காலத்தைக் கடத்தாது குறிப்பிட்ட நேரத்திலேயே எல்லாவற்றையும் செய்து முடித்து விடுவார்கள்.

எந்த ஒரு விடயத்தையும் அலசிப் பார்த்து முடிவெடுப்பார்கள், ஒரே நேரத்தில் பல விடயங்களை சமாளிக்கக்கூடிய வல்லமை உள்ளவர்கள் பெண்கள்தான் என்று ஆய்வுகள் கூட கூறுகின்றன.

பெண்கள் எதையும் வேகமாகக் கற்கக்கூடியவர்கள், ஆர்வத்துடன் எதையும் செய்வார்கள்.

இப்படியெல்லாம் போற்றப்படும் பெண்கள் இந்த வேலைக்குத்தான் போவேன் என்று அடம்பிடிக்காது பொருளாதார நெருக்கடிக்கேற்ற வகையில் ஏதாவது ஒரு வேலையைத் தேர்ந்தெடுத்து அதில் விசுவாசமாகவும் நம்பிக்கையுடனும் உழையுங்கள் வெற்றி உங்களைத் தேடிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகான அம்மா!



ஓர் அழகான கிராமத்தில் மாலை வேளையில், தன் அம்மாவுடன் நடந்துசென்ற ஒரு குட்டிப் பையன், பட்டாம்பூச்சிகளைக் கண்டு அவற்றின் பின்னால் ஓடினான். நீண்ட நேரத்தின் பின்னரே தன் தாயை விட்டு வெகுதூரம் வந்து விட்டதை அந்தச் சிறுவன் உணர்ந்தான். யாருமே இல்லாத அந்தப் பகுதியில் சிறுவனின் அழுகுரல் மட்டுமே எங்கும் ஒலித்தது.

''ஐயோ, வழி தெரியாமல் நிறையத்தூரம் வந்திட்டேனே...அம்மா..அம்மா...,என்ர அம்மாவிடம் யாரா வது கொண்டு போய் விடுங்கோ!'' எனக் கதறி அழுதான்.

அப்போது அந்த வழியே வந்த ஒரு உழவன், சிறுவனின் அழுகுரல் கேட்டு அவனிடம் ''நீ யார்... எதற்காக இங்கே தனியாக நிற்கிறாய்?'' என வினா வினான்.

''நான் பட்டாம்பூச்சி பிடிக்க ஓடி வந்து அம்மாவைத் தொலைத்துவிட்டேன். எனக்குத் திரும்பிப் போக வழி தெரியவில்லை'' என்று சிறுவன் கூறவே, அவனைச் சமாதானப்படுத்திய உழவன், ''சரி, பயப்படாதே... நான் உன்னை அம்மாவிடம் கூட்டிக் கொண்டு போறேன்! உனது அம்மா எப்படி இருப்பாள் என்று சொல்ல முடியுமா?'' எனக் கேட்டான்.

அதற்கு ''என் அம்மா மிகவும் அழகாக இருப்பார். இந்த ஊரிலேயே அம்மா தான் அழகு!'' எனப் பெருமையுடன் பதிலளித்தான் அந்தச் சிறுவன்.

சிறுவனை அழைத்துக் கொண்டு ஊரை நோக்கிச் சென்ற உழவன், வழியில் எதிர்ப்பட்ட அழகான பெண்களை எல்லாம் சுட்டிக் காட்டி ''இதுவா உன் அம்மா?'' என்று சிறுவனைக் கேட்க அவனும் இல்லை என்று தலையசைத்துக் கொண்டே வந்தான். கடைசியில் ஒரு பெண்ணைக் கண்ட சிறுவன் ''அம்மா'' என்று கூவிக்கொண்டு சென்று கட்டிப் பிடித்தான். அந்தப் பெண் கரிய நிறத்தவளாயும், உருவத்தில் குள்ளமானவளாகவும், துருத்திய பற்களோடும் இருந்தாள். ''இந்தப் பெண்ணையா ஊரிலேயே அழகி என்று சிறுவன் சொன்னான். உண்மைதான் எல்லாக் குழந்தைகளுக்கும் அவர்களது அம்மாதான் அழகு'' என்று மனதுக்குள் சொல்லியவாறே நகர்ந்தான் உழவன்.

# விடுகதைகள்

1. மேலிருந்து கீழ் வரும்; கீழிருந்து மேல் செல்லும் அது என்ன?
2. விளக்கிய வெள்ளைப் பாத்திரத்தில் நிரப்பாமல் நிரம்பி இருக்கிறது தண்ணீர். அது என்ன?
3. காவலர் பன்னிருவரிடம் சிக்கிய திருடர்கள் மூவரால் காலம் முழுவதும் சுற்றி அலைந்தாலும் தப்ப முடியவில்லை. அது என்ன?
4. வாங்கிறவனுக்கும் பயன்படாது விக்கிற வனுக்கும் பயன்படாது. அது என்ன?
5. கையிலே அடங்குவார் கதை நூறு சொல்லுவார். அவர் யார்?

## விடைகள்

1. மழை
2. தேங்காய்
3. கடிகாரம்
4. சவப்பெட்டி
5. புத்தகம்

கு.ஜெயராமன்
யா/மத்திய கல்லூரி

# ஆபிரகாம் லிங்கனும் கிழமைகளும்




ஞாயிறு–ஆபிரகாம்லிங்கன் பிறந்தார்.
திங்கள்–முதல்முறையாக அமெரிக்க ஜனாதிபதியானார்.
செவ்வாய்–இரண்டாவது முறையாக ஜனாதிபதியானார்.
புதன்–வழக்கறிஞராக தம்மைப் பதிவு செய்து கொண்டார்.
வியாழன்–பிரசித்திபெற்ற கெட்டிஸ் பர்க்கில் உரையாற்றினார்.
வெள்ளி–லிங்கன் சுடப்பட்டார்.
சனி–லிங்கன் உயிர்நீத்தார்.

ம.காவியா
தரம்–7சி, யா/வேம்படி மகளிர்
உயர்தரப் பாடசாலை






இ.இந்துசாந், தரம்- 7டி,
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.


அ.கார்த்திகேயன், தரம்- 4,
அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை.



சா.பபிதா,
கோப்பாய் இராம கிருஸ்ண மகாவித்தியாலயம்.



இ.லக்ஷனா, தரம்- 2,
நீர்வேலி றோ.க.த.க.பாடசாலை.



சு.ஜெயராமன், தரம்- 8,
யாழ்.மத்திய கல்லூரி.

சத்தம் தொடர்ந்து போட்டிடுமே
நித்தம் வெளியில் காட்டிடுமே
தத்தித் தத்திச் சென்றிடுமே
தண்ணீர் என்றால் ஒன்றிடுமே

பாம்பைக் கண்டால் நடுங்கிடுமே
பாய்ந்தே ஓடி ஒடுங்கிடுமே
விம்பாய்க் கத்திக் கெட்டிடுமே
விரோதி கண்ணில் பட்டிடுமே

நதியில் நீச்சல் அடித்திடுமே
நாக்கால் பூச்சி பிடித்திடுமே
அதிகம் பேசி ஆடிடுமே
அழிவை அதுவே தேடிடுமே

க.தேனுகா
தரம்-4பி
யா/புத்தூர் இந்து
ஆரம்பப் பாடசாலை

# தவளை



# எனது செல்லப்பிராணி கிளி



★ கிளி ஒரு அழகான பறவை
★ கிளி பழம் தின்னும்.
★ கிளி கீக்கீ எனக் கத்தும்
★ கிளி பேசும்
★ கிளி பச்சை நிறம்
★ கிளியின் சொண்டு சிவப்பு நிறம்
★ கிளி மரப்பொந்தில் வாழும்
★ கிளியின் கழுத்தில் ஆரம் உள்ளது
★ கிளி முட்டை இட்டு குஞ்சு பொரிக்கும்

ச.றிஸ்விலி
யா/மயிலிட்டி கலைமகள்
மகாவித்தியாலயம்

## விடை தெரியுமா? 175

### உங்களுக்கும் பரிசில்கள்

1. மருத்துவத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
2. ஐக்கிய அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் பெயர் என்ன?
3. சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம் எப்போது கொண்டாடப்படுகின்றது.
4. அதிக நீர் அருந்தும் பறவை எது?
5. 'மோனாலீசா' என்னும் உலகப் புகழ் பெற்ற ஓவியத்தை வரைந்தவர் யார்?

### விடைகள் 173

1. சிலந்திப்பூச்சி
2. பிறேசில்
3. [illegible]
4. ரோம்
5. மத்திய தரைக் கடல்

## வெற்றி பெற்றோர் விவரம் (174)

* செ.விஜித்தா, தரம்- 8, கிராஞ்சி அ.த.க.பாடசாலை.
* பா.சாரங்கன், தரம்- 6, யாழ்.மத்திய கல்லூரி.
* க.கோகுலன், தரம்- 7, சன்மார்க்க ம.வி.
* கு.மாதங்கி, தரம்-4, இணுவில் இந்துக் கல்லூரி.

## விடை தெரியுமா?

தெரிந்தால் 08.09.2012 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் ''சிறுவர்கதிர்'', உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒரு நாட்டின் அரசியல் அதிகாரத்தரப்புகள், குறிப்பிட்ட அந்த நாட்டில் வாழும் சகல இனங்களையும் சமமாகக் கருதிப் பேணி நிர்வகிக்கும் அரசியல் நாகரீகம் கொண்டிருந்தால் மட்டுமே அந்த நாட்டில் நீதியும் நியாயமும் மிக்க நிர்வாகம் அமைய வாய்ப்புண்டு.

# காலத்தின் தேவை மனமாற்றம்

■ தானா

உலகில் பரந்து வாழும் மனித இனங்கள், தாம் வாழும் நாடுகளில் அமைதியான மகிழ்வான சூழலில் வாழ வாய்ப்பு அமையுமானால் தத்தமது இனத்துக்கான மொழி, மத தனித்துவங்களை மட்டுமன்றி, தத்தமது இனத்துக்கான பாரம்பரிய கலை, கலாசார விழுமியங்களையும் முறைப்படி பேணிக் கடைக்கொள்ள வாய்ப்புக் கிட்டுகிறது.

பண்டைக் காலத்தில், உலக நாடுகள் மத்தியில் நிலவிய ஆதிக்க வெறித்தனம், மற்றொரு நாட்டைக் கைப்பற்றி தன் கீழ் நிர்வகிக்கும் ஒரு நாட்டின் அபிலாஷை, பெருவிருப்பு பல சகாப்த காலமாக நீண்டு நிலைத்ததால், பிறிதொரு நாட்டின் ஆளுகைக்கு உட்படும் நாட்டில் வாழும் இனங்கள் வலுக்கட்டாயமாக தம்மை ஆளும் நாட்டின் மொழி, மதம் மட்டுமன்றி கலை கலாசார விழுமியங்களை விரும்பியோ, விரும்பாமலோ உள்வாங்க நேரிடுவ்துண்டு. இது காலப்போக்கில் பற்றிப் பரவி ஈற்றில் ஒரு கூட்டுக் கலாசார நடைமுறையாக பரிணமிப்பதுண்டு. நமது இலங்கை நாட்டை இதற்கோர் பொருத்தமான உதாரணமாகக் கொள்ள இயலும்.

இலங்கையில் பாரம்பரியமாக வாழ்ந்த தமிழ், சிங்கள, முஸ்லிம் இனங்கள் அவர் தம் மொழிகள் மற்றும் மதங்கள் என்பவற்றினூடாக அவர்கள் கட்டிக் காத்துப் பேணிப் பெருமைப்பட்ட கலை, கலாசார நடைமுறைகள், ஆங்கிலேயர்கள் இந்த நாட்டை நிர்வகித்த காலகட்டம் முதல் இந்த நாட்டின் சுதேச இனத்தவர்களின் தனித்துவ அடையாளங்களைப் புறமொதுக்கி வைத்து விட்டு ஆங்கில மொழியும் அவர் தம் மதமாகிய கிறிஸ்தவமும் முன்னிலை பெற வழிவகுத்தது.

இலங்கைத் தமிழ் இனத்தவர்களைப் பொறுத்தவரை, பல்லாண்டுகள் காலத்துக்கு முன்பிருந்தே, தென்னிந்தியத் தமிழ்க் கலை, கலாசார பண்பாட்டுப் பழக்க வழக்க முறைகள் எம்மினத்தவர்களது வாழ்வியலுடன் நீக்கமற நெருக்கமாக நிலைத்துப் போய்விட்டதொன்று.

ஆங்கிலேயர்களுக்கு முன்பதாக இந்த நாட்டை நிர்வகித்த போர்த்துக்கேயரும் சரி, டச்சுக்காரரும் சரி இலங்கையின் தேசிய வளங்களைச் சுரண்டி, வர்த்தக ரீதியில் இலாபமீட்டும் குறிக்கோளுடன் செயற்பட்டதால் நாட்டு மக்களின் வாழ்வியல் நடைமுறைகளுக்கு அவர்களால் எவ்வித கடும் பாதிப்பும் ஏற்படவில்லை. ஆனால் ஆங்கிலேயர்கள் வர்த்தகத்தை முன்னிலைப்படுத்திச் செயற்பட்ட போதிலும் தமது மொழியாம் ஆங்கிலத்தையும், மதமான கிறிஸ்தவத்தையும் இந்த நாட்டுச் சுதேச இனத்தவர்கள் மத்தியில் பரப்புவதில் ஆர்வம் காட்டிச் செயற்பட்டமைக்கு வரலாற்றுப் பதிவுகள் சான்று பகிர்கின்றன. ஆங்கிலேயர் இந்த நாட்டை நிர்வகித்த கால கட்டத்தில் சுதேசிய கல்வி நிலை தரம் வாய்ந்ததாக அமைந்திருக்கவில்லை. அந்த வாய்ப்பைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்ட ஆங்கிலேயர்கள், ஆங்கில மொழியை இந்த நாட்டின் சுதேச இனத்தவர்கள் மத்தியில் அறிமுகப்படுத்தி வளர்க்க முயன்ற அதேவேளையில் சுதேச இனத்தவர்கள் மத்தியில் தமது கிறிஸ்தவ மதத்தைப் பரப்பும் குறிக்கோளையும் முன்னிறுத்திச் செயற்பட்டனர்.

இந்த நாட்டின் சுதேசிகள் கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றினால் பற்பல சலுகைகளை அத்தகையோருக்கு வழங்கி அவர்களில் மென்மேலும் பலரைக் கிறிஸ்தவ மதத்தைத் தழுவச் செய்யும் முயற்சியில் கிறிஸ்தவ மிஷனரிகள் ஆர்வம் காட்டிச் செயற்பட்டன. கிறிஸ்தவ மதத்தைத் தழுவியோருக்கு இலவசமாக ஆங்கில மொழிக் கல்வி வசதி வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதுடன் அரச தொழில் வாய்ப்புக்களும் வழங்கி உற்சாகப்படுத்தப்பட்டது: அந்த வகையில் உலகமொழியாம் ஆங்கில மொழி இந்த நாட்டின் சுதேச இனத்தவர்கள் மத்தியில் மெதுமெதுவாக உட்புகுத்தப்பட்டதோடு, கிறிஸ்தவ மதமும் இலங்கை மக்களின் வாழ்வியலில் முக்கிய இடமொன்றை பெற்றுக் கொண்டது.

நாடு அந்நியர் ஆட்சியிலிருந்து விடுபட்டு சுதந்திரம் பெற்றதன் பின்னர் நாட்டின் சுதேச இனத்தவர்கள் மத்தியில் அவரவர் மொழி, மதம் குறித்த தேசியத்துவ ஈடுபாடு உயர்வடைந்தது. சிறுபான்மையினரான தமிழ் மக்கள் தமது தாய்மொழியாம் தமிழ் மொழி குறித்து காட்டிய ஈடுபாடு, தமது மதம் குறித்துகாட்டிய ஈர்ப்பு என்பவற்றுக்குச் சமமான அளவுக்கு பெரும்பான்மை இனத்தவரான சிங்கள மக்களும் தமது இனம், மொழி, மதம் குறித்து மேலாண்மைத்தனப் போக்குடன் செயற்பட ஆரம்பித்தனர். அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளும் முனைப்பில் பெரும்பான்மையின அரசியல்வாதிகள், சிறுபான்மை இன தமிழ் மக்களது அரசியல் மற்றும் வாழ்வியல் உரிமைகளை வழங்க மறுத்ததால் இனங்களுக்கிடையேயான நட்புறவு மற்றும் அன்னியோன்ய நெருக்கம் அற்றுப்போய் இவ்விரு இனங்களும் ஒரு தரப்பை மற்றைய தரப்பு குரோதத்துடன் நோக்கும் போக்கு தோற்றம் பெற்றது. அதேவேளை அரசியல்வாதிகள் இத்தகைய சிக்கலை வாய்ப்பாக்கிக் கொண்டு இனங்கள் மத்தியில் கோபம், குரோதம், வெறுப்பை வளர்த்து விடுவதில் தத்தம் இன மக்களது உணர்வுகளைத் தூண்டி விடுவதில் வெற்றியும் கண்டனர். அரசியல்வாதிகளின் அத்தகைய போக்கு அவர்களது அரசியல் இருப்பை ஸ்திரப்படுத்திக் கொள்ளும் தக்க வைத்துக் கொள்ளும் உத்தியாக அமைந்திருந்தன்று. காலப்போக்கில் அது இனங்கள் மத்தியில் பிரச்சினைகளையும் பூசல்களையும் உருவாக்கக் காரணமாயிற்று.

அத்தகைய முரண்பாட்டு நிலை மெது மெதுவாக இனங்கள் மத்தியில் வளர்ச்சி கண்டு, காலப்போக்கில் முற்றிப் பருத்து இன்று இந்நாட்டின் இனப்பிரச்சினை என்ற பெரு விருட்சமாக உருவாகிப்போயுள்ளது.

இனப்பிரச்சினைக்கு சகல தரப்பினாலும் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க நியாயமான, நீதியான தீர்வொன்று எட்டப்பட வேண்டுமானால், அது நீண்டு நிலைக்கக்கூடிய வகையிலான தீர்வாக அமைய வேண்டுமானால், பேரினவாதத்தரப்பினர் மத்தியில் மனமாற்றம் ஏற்பட்டாக வேண்டும். எவ்வளவு தான் மத்தியஸ்தரப்புக்கள் நியாயம் நீதி குறித்து எடுத்தியம்பினாலும், பெரும்பான்மையின சிங்கள மக்கள் மத்தியில் நீதி நியாயம் குறித்து புரிந்துணர்வு ஏற்படாத பட்சத்தில் எத்தகைய மத்தியஸ்த முயற்சிகளும் உரிய பலனளிக்கப் போவதில்லை.

''வாழு; வாழ விடு என்ற'' தத்துவ சொற்றொடர் இன்றைய உலக அரசியலில் நலிவடைந்தொன்றாகவே ஆகிப்போய் விட்டது. ஒரு நாட்டின் அரசியல் அதிகாரத்தரப்புகள், குறிப்பிட்ட அந்நாட்டில் வாழும் சகல இனங்களையும் சமமாகக் கருதிப் பேணி நிர்வகிக்கும் அரசியல் நாகரிகம் கொண்டிருந்தால் மட்டுமே அந்த நாட்டில் நீதியும் நியாயமும் மிக்க நிர்வாகம் அமைய வாய்ப்புண்டு.

அதே வேளை பட்டறிவு அனுபவம் வாய்த்ததால் ஈழத்தமிழினமும் இன்று தமது இனத்துக்கான உரிமைகள் குறித்து கடும் ஈடுபாடு காட்டி வருவதை எவராலும் மறுத்துரைக்க இயலாது. ஆங்கிலேயரின் பிரித்தாளும் சூழ்ச்சி உத்தி குறித்த அனுபவ பாடங்கள் கற்றுத்தெளிந்ததன் காரணமாக, அனுபவப்பட்டதன் காரணமாக தம் இனத்துக்கான அடிப்படை உரிமைகள் விடயத்தில் எந்த வித விட்டுக் கொடுப்புக்கும் இணங்காது உறுதியோடு செயற்படும் நிலைக்குப் பண்பட்டுப் போயுள்ள இன்றைய ஈழத் தமிழினத்தை அற்பசொற்ப சலுகைகள் மூலமோ, பிரித்தாளும் தந்திரத்தின் மூலமோ நிலை குலைத்துவிடலாம் என்று பேரினவாதச் சிந்தனையாளர்கள் எண்ணுவார்களானால் அது தப்புக் கணக்காகவே அமையும்.

அந்த வகையில் ஆட்சி அதிகாரத் தரப்பினர் மட்டுமன்றி இந்த நாட்டின் பெரும்பான்மை இனத்தவர்களான சிங்கள மக்களும் கூட மனச்சாட்சியின் பாற்பாட்டு உலக யதார்த்தம் குறித்து கவனம் செலுத்தி இந்த நாட்டின் சகோதர இனத்தவர்களான தமிழ் மக்களது நியாயமான அபிலாஷைகளைக் கருத்தில் எடுத்து ஈழத் தமிழ் மக்களது அடிப்படை உரிமைகளை வழங்கி இந்த நாட்டில் சகல இனத்தவர்களும் அடிப்படை மனித உரிமைகளுடன் வாழத்தக்க சூழ்நிலையொன்றை உருவாக்க மனம் கொள்ள வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும்.

## மௌனத்தின் மனவலி




தினம் தினம் பார்த்து
எப்போதும் நினைத்தபடி
கைகோர்த்துத் திரிந்த
என்னை விட்டுக் கடந்து போன என்
வாழ்வின் வசந்த காலத்தை
மறக்க முடியவில்லை
பிரிந்துவிட்ட மனவலியில்
நேசத்தின் நிஜத்தை
உணர்ந்தபோதும்
உயிர்கொடுத்த நட்பையும்
உயிருக்குயிரான நண்பர்களையும்
மறக்க முடியவில்லை
விட்டுப் பிரிய மனமில்லாமல்
விதி செய்த சதியில்
பிரிந்து போனாலும்
என் மனக் கவலைகள்
மௌனத்தின் மனவலியோடு
என் இதயம் எனும்
சிறைக்குள் புதைக்கப்படுகிறது

மு.வேணுஹா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 250



அனுப்புபவர் பெயர்:......................................................

விலாசம்:......................................................

......................................................

கையொப்பம்:......................................................

### இடமிருந்து வலம்

1. பாடசாலையின் ஓர் அலகு
4. தூக்குத் தண்டனைக்கு உள்ளான ஓர் நாட்டின் தலைவர்
6. மன்மதன் மனம் கவர்ந்தவள்
7. உலோகத் தகடு
9. வீடு
11. பழையவன் அல்லன்
13. போதை தருவது
14. ஏக பத்தினி விரதன்
15. வேகம்
16. உயர்திணை, ஆண்பால் ஒருமை, படர்க்கை சுட்டும் சொல்
17. மறி
19. இது நக நட்பது நட்பன்று அக நக நட்பதே நட்பு
20. பொருத்தமான நிலை
22. யானைக்கு விசேட உறுப்பு
23. வள்ளல் ஒருவன்

### மேலிருந்து கீழ்

1. வயலின் எல்லையில் அமைப்பது.
2. பாய்.
3. மகன்
4. மாலை
5. தாங்கள்
8. பாத்திரம்
9. உயிர் பறிப்பவன்
10. செவி
12. அமிலநீர்
13. சந்திரன்
15. இது சிறிது. காரம் பெரிது
16. தேவர் உணவு
17. நீரில் மிதக்கும்
18. இளைய சகோதரன்
20. பயத்தில் இதயம் அடிப்படி இப்படி
21. வாழ்.

✱ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

✱ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 228 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) உத்தமன் (4) சாவி (6) கரு (7) மாதிரி (8) சமர்த்தன் (11) வலை (12) துளி (13) இரை (14) கவர்தல் (16) சமன் (18) அகல (19) சகலன் (20) கலம்பகம்

### மேலிருந்து கீழ்

(1) உற்சவம் (2) தகர் (3) மருத்துவன் (4) சாதி (5) விரிவுரை (7) மான் (9) மலை (10) தளிர் (13) இல் (14) கமலம் (15) தங்கம் (16) சகல (17) கன்னி (18) அக (19) சக

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விபரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 250**
நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (12.09.2012 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.230இல்வெற்றி பெறுவோர்களது விபரம்16.09.2012 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 228 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விபரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**நிரஞ்சனா செல்வரஞ்சன்,**
தரம்- 10, யா/விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம், மிருசுவில்.

**2 ஆம் பரிசு**
**ம.ஜெனார்த்தனன்,**
2 ஆம் ஒழுங்கை, முல்லை வீதி, பரந்தன்.

**3 ஆம் பரிசு**
**தெ.ரஜீவதேபன்,**
யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.

**4 ஆம் பரிசு**
**பா.வசிதரன்,**
இல.259, மறவன்குளம், வவுனியா.

**5 ஆம் பரிசு**
**திருமதி ப.கதிர்காமலிங்கம்,**
அரசடி வீதி, புலோலி வடக்கு, பருத்தித்துறை.

**பாராட்டுப் பெறுவோர்**

**அ.மோகனகுமாரி,**
முதலாம் வட்டாரம், முள்ளியவளை.

**செல்வி ராதிகா பரஞ்சோதி,**
வேலணை மேற்கு, வேலணை.

**சு.சோபியா,**
கள்ளப்பாடு வடக்கு, முல்லைத்தீவு.

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.*



# தோற்றும் தோற்காத காதல்

பார்த்துப் பார்த்து தெவிட்டாத
உன் முகம் சிரித்துப் பேசி
சீண்டல்கள் தீண்டும்
உன் இன்பமான பேசும் விழிகள்
அனைத்துக்கும் அடிமை
ஆகிவிட்ட என் ஆழமற்ற மனம்

தினமும் உன் வதனம் தரிசிக்க
ஒன்றுக்கு இரண்டு, மூன்று தடவை
நடைபயிலும் என் கால்கள்
தட்டுத் தடுமாறி நீயும் என் கண்ணில்
பட்டுவிட்டால் திக்குத் திசை தெரியாமல்
விழி தித்திக்கும் என் வழிகள்

மடலில் நீ தந்த பதில் என்னை
சிறகின்றி வானில் உலாவர அனுமதி
அளித்தது - அன்று ஒரு நாள்
உன் வரவில் எனக்கிருந்த விருப்பு
ஏமாற்றத்தைத் தர

விருப்புடன் உன்
வீடு வந்தேன் சொல்லாமல்
பிரியாத உன் பிரியா விடை
என்னை சுக்கு நூறாக்க
காரணம் அறிய என்
காலடி தேடினேன்

உன்னைக் காண வேண்டும்
உன் இறுதி பதிலை மடல் மூலம் அல்ல
மனம் மூலம் அறிய வேண்டும் என்ற
வெறியோடு- என் புதிய வீட்டுக்கு
என் பழைய மனதுடன் நெருங்கினேன்
உனது- அதே வதனம் கண்ட என் மனம்
தனக்குள் அழுதது - நீ
சொல்லும் அந்தப் பதிலை
அறிந்து தானோ என்னவோ!

நான் வந்த காரணம்
உனக்கு தெரிந்திருந்தும்
உடனே உன் பதிலை
அம்பிலிருந்து புறப்படும்
வில்லின் அதே வேகத்தில்..
உன்னை எனக்குப் பிடிக்கவில்லை...
இனி என்னைப் பார்க்காதே
பேசாதே - இனி நமக்குள்
காதல் இல்லை - நீ இலகுவாய்
சொல்லி விட்டு மின்னலாய் மறைந்தாய்..

முதல் காதல் முதல் தோல்வி
கொஞ்சம் கொஞ்சமாய் உன்னை மறந்தேன்
இல்லை இல்லவே இல்லை முடியவில்லை
அனைத்திலுமே தோல்வி

யூலியட் றோமியோ
அம்பிகாவதி அமராவதி
என்று அனைத்துப்
புகழ் பெற்ற காதல்களும்
தோல்வியில் தானே
முடிந்தது பெண்ணே
அதுவரை எனது
காதலும் உண்மைக் காதல்
புகழ் பெற்ற காதல்
காதலுக்கு நான் அதிஷ்டசாலி
காதலிக்கு நான் துரதிஷ்டசாலி
தோற்றும் தோற்காத எனது காதல்
காதல் உள்ளவரை
காதலுடன் வாழும்....

சக்தீனா, வேரவில், பூநகரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் மீது கட்டவிழ்க்கப்படும் அறியப்படாத துஷ்பிரயோகம்

''யாருக்குத் தேவை விழிப்புணர்வு'' என்ற 19.08.2012 இல் வெளிவந்த கட்டுரையையும், செயற்பாடுகளில் 'சமூகப் பார்வை வேண்டும்' என்ற 26.08.2012 இல் வெளிவந்த கட்டுரையையும் தொடர்ந்து அது சார்ந்த கருத்துப் பகிர்வுகள்.

■ மருத்துவர் இ.சிவசங்கர்

சமூகத்தில் சிறுவர்சார் கவனிப்புகளும், வளர்ப்பு நிலைகளும் எவ்வாறு அமைவது சிறந்ததாக அமையும் என்பதே எம்மில் பலரின் சமூகக் கேள்வியாக இருக்கின்றது. இதை ஆராய்வதற்கு சமூகக் கட்டமைப்பில் ''சிறுவர்'' முக்கியத்துவம் பற்றி சிந்திப்பது தேவையென்று கருதுகின்றேன்.

'சிறுவர்கள்' என்று கூறும் போது அவர்கள் தற்போதைய சமூக செயற்பாடுகளில் பங்களிப்பு செய்யக் கூடிய அளவிற்கு வளர்ச்சி அடையாதவர்கள் என்றும், ஆனால் எதிர்கால சமூகமாகச் செயற்படப் போகின்றவர்கள் என்றும் கண்டு கொள்கின்றோம்.

சிறுவர்கள் என்போர் தத்தமது முழுமையான வளர்ச்சி நிலையை அடைவதற்கான தயாரிப்புக் காலகட்டத்தில் உள்ளோர் எனவும் கண்டு கொள்ளலாம். இதன் அடிப்படையில் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சூழ்நிலைகள், சந்தர்ப்பங்கள், வாய்ப்புக்கள் என்பவையை கவனத்தில் எடுப்பதே முக்கியமானதாகும். இந்த முக்கியத்துக்கான காரணம் என்னவெனில் இந்தக் கால கட்டத்தில் எதிர்கால சமூக வாழ்வுக்குத் தேவையான மனப்பாங்குகளையும், நடத்தைக் கோலங்களையும் அனுபவங்கள், பயிற்சிகளுக்கூடாக பயின்று பெற்றுக் கொள்கின்றார்கள். அதே வேளையில் இந்தக் கால கட்டத்தில் அவர்கள் எதிர்கொள்ளும் பாதகமான அனுபவங்கள் அவர்களின் ஆளுமையிலும், மனப்பாங்குகளிலும் நிரந்தரமான பாதிப்பை ஏற்படுத்தி விடுகின்றன. இதன் விளைவாக சிறுவர்கள் வளர்ந்து பெரியவர்களாகி சமூகச் செயற்பாடுகளில் பங்கெடுக்கும் போது குடும்ப, தொழில்சார் உறவுச்சிக்கல்கள் ஏற்படுவதுடன், சமூக எதிர்நடத்தைக் கோலங்களை வெளிப்படுத்துவர். இதிலிருந்து சிறுவர்களுக்கு கிடைக்க வேண்டிய விடயங்களைப் பின்வருமாறு பிரித்துக் கூறலாம்.

1.சமூக நடத்தைக்குரிய விருத்தியைப் பெற்று கொள்ளும் வகையிலான சந்தர்ப்பங்கள், வாய்ப்புகள்

2.இந்த சந்தர்ப்பங்கள், வாய்ப்புகள் அவர்களை ஊக்கப்படுத்தக்கூடிய சந்தோஷமான சூழ்நிலையுடன் வழங்கப்பட வேண்டும்.

3.மனத்தாக்கம் ஏற்படக்கூடிய பாதகமான சம்பவங்கள், சூழ்நிலைகள் தவிர்க்கப்பட வேண்டும்.

பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமூகம் என்பவை சிறுவர்களுக்கு வழங்கப்படுவதை உறுதிப்படுத்தக் கூடிய கட்டமைப்பைக் கொண்டிருக்க வேண்டும். இவை ''சிறுவர்களின் விருத்திக்கான தேவைகள்'' எனப்படும். இவை கிடைக்காதபோது சிறுவர்களிடம் சமூக நடத்தை விருத்தி ஏற்படமாட்டாது. சிறுவர்கள் வெவ்வேறு நடத்தைகளைக் கற்று கொள்ள கூடிய காலத்திலேயே வழங்கப்படவேண்டும். அவ்வக் கால கட்டத்தில் குறிப்பிட்ட விருத்திக்கான சந்தர்ப்பங்கள் கிடைக்கப்பெறுவது சிறுவர்களின் உரிமை என்பதற்குள் வகைப்படுத்தப்படுகின்றது.

இத்தகைய விருத்திக்கான சந்தர்ப்பங்கள் சிறுவர்களுக்கு மறுக்கப்படுவதும், சிறுவர்களிடம் மனப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய சம்பவங்கள் நிகழ்த்தப்படுவதும் சிறுவர் துஷ்பிரயோகம் என்பதனுள் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

சரியான விளக்கங்கள் அற்ற நிலையில் இவை தவறான விளக்கங்களுக்கு உட்பட்டு எதிர்மறைச் செயற்பாடாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. தேவைக்காக ஒரு உதாரணத்தை முன்வைக்கின்றேன்.

சிறுவர் இல்லங்களில் வாழும் சிறுவர்களுக்கு அவர்களது எதிர்காலம் தனித்து வாழும் சமூக நடத்தையைப் பெற்று கொள்ளும் வகையான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும்.

உதாரணமாக வீடுகளை துப்புரவாக்கல், சமைத்தல், தோட்டம் செய்தல், வேலி கட்டுதல், தைத்தல் என்ற அன்றாட வேலைகளைச் செய்தல், போதுமான பணத்தை பொருத்தமான முறையில் முகாமை செய்தல், தனித்துச் சென்று பொருட்களை வாங்குதல், உணவகத்தில் உணவு அருந்துதல், வாகனங்களில் பயணம் செய்தல் மற்றும் வேலைகளை தாமே திட்டமிட்டுத் தட்டிக் கொட்டி ஒழுங்குபடுத்தல் போன்றவை.



தட்டி, கூட்டி ஒழுங்குபடுத்தல் போன்றவை. ஆனால் இத்தகைய செயற்பாடுகளை சிறுவர் இல்ல சிறுவர்களுக்கு வழங்குவதை சிறுவர் பாதுகாப்புப் பிரிவினர் தடுக்கின்றனர். சிறுவர் துஷ்பிரயோகம் என்று வகைப்படுத்துகின்றனர். உண்மையில் மேற்கூறிய சந்தர்ப்பங்கள் சிறுவர்களுக்கு வழங்கப்படுவது அவர்களின் வளர்ச்சிக்குத் தேவையானதாகும்.

அவை சிறுவர் உரிமைக்குள் வகைப்படும் இத்தகைய சந்தர்ப்பங்கள் மறுக்கப்படுவது துஷ்பிரயோகத்திற்குள் வகைப்படும். மேலும் சிறுவர் இல்ல சிறுவர்கள் அவற்றுடன் இயங்கும் முதியோர் இல்ல முதியோருடன் கலந்து பழகுவதும், முதியோர்களின் தேவைகளை நிறைவேற்றப் பழகுவதும் சிறுவர்களின் சமூக வளர்ச்சிக்கு மிக அத்தியாவசியமாகும். இது சிறுவர் உரிமைக்குள் வகைப்படும். துரதிஷ்டவசமாக இவையும் சிறுவர் பாதுகாப்பு குழுக்களால் தடுக்கப்படுகின்றன.

மேற்கூறிய உதாரணங்களின் மூலம் சிறுவர் பாதுகாப்புக் குழுக்களே சிறுவர் வளர்ச்சித் தேவைகள் எனப்படும் உரிமைகளை மறுப்பவர்களாக காணப்படுகின்றனர்.

இத்தகைய பல அணுகுமுறைத் தவறுகள் எம்மிடையே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதன் ஒருவகையாகவே நல்லூர் திருவிழாவில் வியாபாரத்தில் ஈடுபட்ட சிறுவர் மீதான நடவடிக்கை சார் நடத்தை அமைந்து விட்டது.

கல்வி ஓய்வு காலங்களில் தமது குடும்ப வருமான ஈட்டலில் தத்தமது வயதுக்கேற்ற செயற்பாடுகளில் ஈடுபடுவது வரவேற்கப்பட, உற்சாகப்படுத்தப்பட வேண்டிய நடத்தையாகும்.

சிறுவயதிலேயே வயதுக்கேற்ற வகையில் குடும்பப் பொறுப்புக்களைப் பகிர்ந்து செயற்படும் சந்தர்ப்பம் கிடைப்பது அவர்களின் சமூக வளர்ச்சியில் ஆரோக்கியமான நடத்தையை வளர்த்தெடுக்க உதவும்.

பெற்றோர் தமது பிள்ளைகளை இத்தகைய செயற்பாடுகளுக்கூடாக வளர்த்தெடுப்பது முக்கியமாகும். இத்தகைய செயற்பாடுகளுக்கூடாக வளர்த்தெடுக்கப்படும் சிறுவர்களே இளைஞர்கள் ஆகும் போது, குடும்ப பொறுப்புணர்வுடன் செயற்படுபவர்களாகவும், சுயதொழில் முயற்சிகளுக்கூடாக பொருளீட்டும் ஊக்கமுடையவர்களாகவும் உருவாவர்.

உளவியல், சமூக அறிவும், அது சார்ந்த பார்வையுமற்று நடைமுறைப்படுத்தப்படும் செயற்பாடுகளுக்கு யார் பொறுப்பு? யாருடைய கருத்துருவாக்கத்தில், யாருடைய முடிவெடுத்தல் பொறுப்புடன் இவை நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இவை கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயமாகும்.

இத்தகைய குறுகிய பார்வையுடன் கூடிய மேலோட்டமான செயற்பாடுகள் சமூகக் கெடுதிகளை ஏற்படுத்தும்.

எமது சமூகக் கட்டமைப்புகள், விழுமியங்கள் சார்ந்து ஆராய்ந்து செயற்திட்டம் தீட்டப்படுவது அவசியமாகும். மேலெழுந்த வாரியாக, போதிய தகைமைப்பின்னணியற்ற நிலையில் நடைமுறைப் படுத்தப்படும் சமூகத் தலையீடுகள் சமூக சிதைவுகளுக்கு வழிவகுக்கும்.

தற்போது எமது சமூகத்தில் இளைஞர்களிடையே காணப்படும் சமூகப் பொறுப்பற்ற உணர்வும், கலாசாரத்துக்கு மாறுபாடான நடத்தைகளும் இத்தகைய தலையீட்டின் விளைவாக இருக்கலாம்.

இவை சார்ந்த கருத்துப்பகிர்வுகள் சமூகக் கட்டுமானத்திற்கு அவசியமானவை மட்டுமல்ல இலங்கை வாழ் தமிழ் சமூகத்துக்கு அவசர விடயமாகவும் காணப்படுகின்றது. சரியான பொறிமுறை கட்டுமானத்தை கட்டியெழுப்புவதனூடாக சமூகத்தினுள் உட்புகக்கூடிய தவறான அணுகுமுறைகளைத் தவிர்த்து கொள்வோம்.

சிறுவர்களும், இளைஞர்களும் குழப்பப்படுகின்றார்கள். அவர்களின் பாதகமான நடத்தைக் கோலங்களுக்கு எமது பொறுப்பேற்காத நிலை முக்கிய காரணமாகும்.

சிறுவர்களுக்கும், இளைஞர்களுக்கும் உயர்விழுமிய சமூக நடத்தை உருவாக்கத்திற்கான வாய்ப்புக்களை உறுதிப்படுத்த பொறுப்பெடுப்போம்.

இவை செயற்படுத்தப்பட வேண்டிய நிலைகளை மூன்று வகைகளில் அணுகலாம்.

1.எமது சமூக வளர்ச்சிக்கான கட்டுமானத் தலையீடுகளை இனம் கண்டு, முதன்மை அடிப்படையில் ஒழுங்குபடுத்தல்.

2.இவைகள் சமூகத்தினுள் கொண்டு செல்லப்படக்கூடிய வழிகளை கண்டறிந்து நடைமுறைப் படுத்தல்.

3.எமது சமூக விழுமியங்களுக்கும், வளர்ச்சிக்கும் பொருத்தப்பாடற்ற தலையீடுகள் உள்வரும் வழிகளை இனம் கண்டு அவற்றை முனைப்புடன் தடுத்து நிறுத்துதல்.

## நமது கடமையும் உரிமையும்

★ அநியாயங்கள் நடக்கும் போது அதை எதிர்த்து சாதுரியமான வகையில் கோபத்தை வெளிப்படுத்தி நியாயமான சூழ்நிலைகளை உருவாக்குவதற்கு நமக்கு கடமை உண்டு.

★ சில வேளைகளில் குறைவான உண்மைகள், அதிகமான அநியாயங்கள் பின்னிப்பிணைந்து பொருத்தமாகத் தெரிவது மனோதத்துவ கொடுமையாகும். அதை எதிர்த்து நிற்பது நமது கடமை ஆகும்.

★ பாதி உண்மைகள் எப்போதும் கொடுமைகளைப் பொறுத்துக் கொண்டு இணங்க வைத்துவிடும். எனவே உண்மையும் பொய்யும் சேர்ந்த கலப்பு மதிப்பீடுகளில் இருந்து உண்மையைப் பிரித்து எடுக்க வேண்டும். பிரித்து எடுப்பது நமது கடமை.

★ அநியாய அடக்குமுறைகளை கண்டும் காணாது, விட்டுவிடுவது அவர்களுக்கு ஒத்துழைப்பது போலாகும். அந்த அடக்குமுறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏதோ பரிதாப உணர்ச்சியையும், போலியான பாதுகாப்பையும் கொண்டு திருப்திப்படுத்துவும் அடக்கு முறைக்குச் சமம். எனவே அடக்குமுறை அதிகாரங்களுக்கு எதிர்ப்புக் குரல் கொடுப்பது நமது கடமை.

★ நன்னெறியைச் சாராத பழக்கவழக்கங்களையும் மூடத்தனத்தையும் எதிர்த்து நிற்பது நமது கடமை.

★ பிரச்சினையிலிருந்து தப்பிப்பதற்காக பயங்கரமான [illegible] பழக்கவழக்கங்களை நியாயப்படுத்துவது மனோதத்துவ கொடுமையாகும். அதன் அடிப்படையில் எழும் ஒற்றுமை என்னும் மாயையை எதிர்ப்பது நமது உரிமை.

★ சட்டபூர்வமாகவோ, அதிகாரபூர்வமாகவோ, சமுதாய நலன்களை கெடுக்கக்கூடிய யுக்தியை கையாளும் அதிகாரியை எதிர்த்து நிற்பது நமது உரிமை.


★ தவறுகளைச் சுட்டிக்காட்டுவதற்காக சரியான பக்கம் சாய்ந்து நின்று ''செய்வது தவறு, செய்வதை நிறுத்து என்று கண்டித்துச் சொல்வதற்கு நமக்கு உரிமை உண்டு.

★ நன்னெறிக்குப் புறம்பான பழக்கவழக்கங்கள் உடையவர்களை சமுதாயத்தில் சந்தித்தால் அவர்களைச் சந்தித்து சுமூகமாகத் திருத்த நமக்கு உரிமை உண்டு.

★ நாம் மற்றவர்களுக்கு ஆறுதல் தருவது மற்றவர்களோடு நூறுவீதம் ஒத்துப்போவது என்பது அர்த்தம் அல்ல. கண்மூடித்தனமான அவர்களின் கருத்தை ஏற்றுக்கொள்வதும் தேவையில்லை. நாம் சரிவர உணர்ந்து கொள்ளும் கருத்துக்களில் நிலை நிற்பது நமது உரிமையாகும்.

அ. இராபர்ட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இசைக்கலையில் இலங்கும் இணையற்ற பேராசான்

## மரபுக்கலை மேதை மா.ஸ்ரீரங்கநாதன்

**59**

**சாதனைக் கலைஞரைச்**
**சந்திப்போம் சிந்திப்போம்**

■வயாவிளான் தவமைந்தன்

நுண்கலைக் கல்வியானது குருகுல முறையில் வளர்த்தெடுக்கப்பட்ட காலத்தில் உருவாக்கப்பட்ட கலைஞர்கள் இன்று வரை அதிசிறந்த ஆற்றுகையாளர்களாகவும் ஒப்பற்ற ஆசிரியர்களாகவும் கலைத் தொண்டாற்றி வருகின்றமை யாவரும் அறிந்ததே. தற்காலத்தில் குருகுல முறைமையானது ஈழத்தில் அருகி வருகின்ற போதும் எண்பதுகளுக்கு முந்தைய காலத்தில் பல மாணவர்கள் தங்கள் குருவுடன் தங்கியிருந்து இசை கற்றதற்கான ஆதாரங்களை அறியக் கூடியதாக உள்ளது.

வட இலங்கைச் சங்கீத சபையின் உருவாக்கத்தில் உழைத்தவர்களுள் ஒருவரான இசையரசர் பரம் தில்லைராசா அவர்களிடம் குரலிசையை குருகுல வழியில் கற்று, அவருடன் ஆயிரக்கணக்கான மேடைகளில் இணைந்து பாடிய சிறந்த இசையாளராகவும் தமிழர் வாழும் பகுதிகள் அனைத்திலும் மன்றங்கள் ஊடாகவும் தனிப்பட்ட முறையிலும் அர்ப்பணிப்புடன் ஆசிரியப் பணியில் ஈடுபட்டு ஏராளமான இசை ஆற்றுகையாளர்களை ஈழத்தில் உருவாக்கி வருகின்ற இசைப் பேராசானாகவும் தன்னடக்கமும் அமைதியும் குடிகொண்டிருக்கும் தூய உள்ளம் கொண்ட நல் மனிதராகவும் கடந்த நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக இசைப்பணியாற்றி வருபவர் சங்கீதரத்தினம் மா.ஶ்ரீரங்கநாதன்.

மறைந்த மார்க்கண்டு பாக்கியம் தம்பதிகளின் மகனாக 01.02.1945இல் வயாவிளானில் இவர் பிறந்தார். பலாலி சாதனா பாடசாலை, புன்னாலைக் கட்டுவன் சைவப்பிரகாச வித்தியாசாலை, வயாவிளான் மத்திய கல்லூரி போன்ற பாடசாலைகளில் கற்று 1962இல் இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் இணைந்து நான்காண்டுகள் பயின்று சங்கீதரத்தினம் என்னும் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.

ஈழத்தின் இசைநாடக வரலாற்றில் என்றும் நீங்கா இடம் பிடித்து நிற்கும் நடிகரான இவரது தந்தை கலைமாமணி வயாவிளான் வே.மார்க்கண்டுவிடம் தனது ஐந்தாவது வயதில் இருந்தே குரலிசையைக் கற்று வந்த இவர் பத்தாவது வயதிலேயே ஆலயங்களிலும் பொது நிகழ்வுகளிலும் இசைக் கச்சேரிகளை வழங்கும் திறனும் துணிவும் கொண்டவராக மிளிர்ந்து வந்தார்.

சங்கீதபூசணம் அல்வின் தேவசகாயத்திடம் பாடசாலையிலும் தனியாகவும் இசை கற்றதுடன் இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் எம்.ஏ.கல்யாணகிருஷ்ண பாகவதர், ஏ.ஜி.ஐயாக்கண்ணு தேசிகர் போன்ற மேதைகளிடமும் வாய்ப்பாட்டிசையை வரன் முறையாகக் கற்றதுடன் அந்தக் காலத்தில் இசைத்துறையில் பெரும் புகழ் பெற்றிருந்த இசையரசர் பரம் தில்லைராசாவிடம் பத்து ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ச்சியாக இசையைக் கற்று, இருபத்தொரு ஆண்டுகள் அவருடன் இணைந்து பாடியும் தனது இசைக்கலையை வளர்த்துக் கொண்டார்.

மரபுவழியின் நின்று சற்றும் வழுவாத இசையாளரான பரம் தில்லைராசாவிடம் கற்றும் இணை ஆற்றுகையாளராகப் பணிபுரிந்தும் அவரது பேரன்பையும் நிறைவான ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொண்ட இவர் தனது குருவின் வழியில் பாடாந்தரம் வழுவாமலும் உருப்படிகளின் தரம் குறையாமலும் இசைக்கலையின் ஆழத்தையும் பெருமையையும் நன்குணர்ந்த அற்புதக் கலைஞராகவும் தற்காலத்தில் விளங்கி வருகின்றமை போற்றுதற்குரியதாகும்.

இராகம், தாளம், நிரவல், கற்பனாஸ்வரம் போன்ற மனோதர்மப் பகுதிகளையும் சகல விதமான கல்பித உருப்படிகளையும் பழமை மாறாமலும் மரபுவழி பிறழாமலும் கற்றுக்கொடுப்பதிலும் ஆற்றுகைப்படுத்துவதிலும் தன்னிகரற்றவராக விளங்கும் இவர் யாழ்.பல்கலைக் கழக இசைத்துறையில் வருகை விரிவுரையாளராகவும் பல ஆண்டுகளாகப் பணியாற்றியவர்.

இவரது தந்தையாரால் உருவாக்கப்பட்டு முத்தமிழ்க் கலைகளைப் பயிற்றுவித்து வந்த சித்திர கான சபாவில் தனது பதினைந்தாவது வயதில் இருந்து இசை ஆசிரியராகப் பணிபுரிந்து வந்த இவர் காரைநகர் நடராஜா முத்தமிழ்ப் பேரவை, இணுவில் இளந்தொண்டர் சபை, இணுவில் மஞ்சத்தடி முருகன் கோவில், திருநெல்வேலி இராமகிருஷ்ண ஆலயம் போன்ற கலை வளர்ச்சி மையங்களில் பல ஆண்டுகளாக இசையாசிரியராக கடமையாற்றியுள்ளார்.

கல்யாணி, சுமதி, கீதா, சந்திரவதனி, தயாபரன், இரங்கராணி, இராகவன், த.றொபேட் போன்ற இளைய பாடகர்களின் இசையாசானாக விளங்கும் இவர் இணுவில் இளந்தொண்டர்சபையாரின் இசைநாடக முயற்சிகளில் துணைநின்றதுடன் தனது தந்தையாரிடம் அவர்களுக்கான பயிற்சிகளையும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள வழிவகை செய்ததுடன் நந்தனார் என்னும் இசைநாடகத்தின் பாடல்கள் அனைத்தையும் பொறுமையுடனும் அன்புடனும் கற்பித்து, இசைநாடகக் கலையின் இசை நுட்பங்களையும் அச்சபையின் நடிகர்களுக்கு இனிதே ஊட்டியவர்.

2002ஆம் ஆண்டில் இருந்து கொழும்பில் வசித்து வருகின்ற இக்கலைஞர் அங்கே பல நூற்றுக்கணக்கான மாணவர்களின் மனம் கவர்ந்த இசையாசிரியராகவும் வழிகாட்டியாகவும் பணியாற்றி வருகின்றார். அத்துடன் வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களிலும் தனது இசை ஆற்றுகைகளைச் சிறப்புடன் வழங்கியும் வருகின்றார்.

"எந்த விதமான ஒழிவு மறைவுமின்றித் தூய மனதுடன் கற்பிப்பவரே உண்மையான இசை ஆசிரியர். தெய்வீகக் கலையாகவும் ஆய கலைகளுள் முதன்மையான இடத்திலும் திகழ்கின்ற இசையைக் கற்பிக்கும் ஆசிரியர் கடவுளைப் போன்றவரே. எனது குருநாதர் அமரர் பரம் தில்லைராசா அவர்களைக் கடவுளாகவே நான் நினைக்கின்றேன். தான் கற்றறிந்த அனைத்தையும் எனக்கு அமுதென ஊட்டியவர். இசை ஆசிரியர் எப்படி இருக்க வேண்டும் என்று வாழ்ந்து காட்டியவர். அவரது வழியையே இன்று வரை நானும் பின் தொடர்ந்து வருகின்றேன்.

"ஆனால் தற்காலத்தில் சில வித்துவான்கள் பணத்திற்காக இசைக்கலையைப் பயன்படுத்தி வருகின்றனர். தமக்கிருக்கும் புகழையும் செல்வாக்கையும் பயன்படுத்திப் பிற இசை ஆசிரியர்களிடம் பல ஆண்டுகளாக வாய்ப்பாட்டிசையைக் கற்று வந்த மாணவர்களை அழைத்து ஒரு சில பாடல்களை மட்டும் சொல்லிக் கொடுத்து விட்டு அம்மாணவர்களைத் தமது மாணவர்கள் என்று கூறித் திரிவதுடன் அரங்கேற்றமும் செய்து தம்மைத் தனவந்தர்களாக்கி வருகின்றனர். இவ்வாறான ஆசிரியர்கள் தம்மைத் திருத்திக் கொள்வதுடன் பணத்துக்காக அலைந்து திரியாத நேர்மையான தன்மானமுள்ள கலைஞர்களாகவும் வாழ எதிர்காலத்தில் முயற்சிக்க வேண்டும்" எனத் தனது ஆணித்தரமான கருத்துக்களை இவர் கூறுகின்றார்.

# இருமல் தணிக்கும் சித்தரத்தை

**நலம் தரும் தெய்வீக மூலிகைகள்**

**சித்தரத்தை**
**வேறு பெயர்** - ஆகுலி, அரத்தை, கபவிரோதி.
**தாவரவியற் பெயர்**- Alpinia officinalis (அல்பீனியா ஒஃபிசினாலிஸ்)
**குடும்பம்** - Zingiberaceae (ஜின்ஜிபெரேசியே)
**சிங்களப் பெயர்** - அரத்த (ஹீன் அரத்த - சிற்றரத்தை) மஹாஅரத்த - பேரரத்தை)
**சமஸ்கிருதப் பெயர்** - கந்த மூல
**ஆங்கிலப் பெயர்** - Lesser galangal

அரத்தையில் சிற்றரத்தை, பேரரத்தை என்ற பேதங்களுண்டு.

இது பெரும்பாலும் வீடுகளில் அழகுக்காக அல்லது மருத்துவ தேவைக்காக வளர்க்கப்படுகிறது.

தனியிலைகள் மணிவாழை போன்றது. பூக்கள் செந்நிறம், பூந்துணரில் காணப்படும். வேர்த்தண்டுக் கிழங்கு வாதனாளியின் வடிவத்தைப் பெரிதும் ஒத்திருக்கும். இது வாதனாளி, மூச்சுக்குழல்கள் சம்பந்தமான நோய்களை நீக்குவதில் உதவுகிறது.




**இருமல், இளைப்புக்கு**
சித்தரத்தை [illegible] செய்து தேனில் [illegible] மாலை சாப்பிட்டு வர இருமல், இளைப்பு, சளி நாட்பட்ட இருமல் என்பன தீரும்.

சிறுதுண்டு சித்தரத்தையை வாயிலிட்டு [illegible] வந்தாலும் இவை தணிவடையும்.

**சளி, இருமல், காய்ச்சலுக்கு**
சித்தரத்தை, வேர்க்கொம்பு பற்படாகம், கொத்தமல்லி, மரமஞ்சள் என்பவற்றைச் சமஅளவில் எடுத்துக் குடிநீர் செய்து குடித்து வர மாறும்.

**மூட்டு வலி, வீக்கத்துக்கு**
சித்தரத்தை, சாரணை, ஆமணக்கம் வேர், சீந்தில் தண்டு, தேவதாரு, சரக் கொன்றைப் பட்டை என்பவற்றைச் சமஅளவில் எடுத்துக் குடிநீர் செய்து காலை, மாலை பருகி வர மூட்டு வாதத்தால் ஏற்படும் வலி, வீக்கம் என்பன மாறும்.



Dr. சே.சிவசண்முகராஜா M.D. (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...

## 02.09.2012 முதல் 08.09.2012 வரை

தருபவர் - வித்தியா

**மேடம்**-தேவையற்ற பிரச்சினைகளுக்கெல்லாம், அதிகமான மன வருத்தத்தை ஏற்படுத்திக் கொள்வீர்கள். கடந்த காலங்களில் செயற்பட்ட விதம் பற்றி அலசி ஆராய்வீர்கள். புதிய முயற்சிகளை சற்று தாமதப்படுத்தவும். பண நிலையில் எதிர்பாராத பற்றாக்குறை ஏற்பட்ட போதும் சாதுர்யமாக சமாளிப்பீர்கள். தொழில்துறையில் இழுபறியாக இருந்த பிரச்சினைகளை, நல்லதொரு தீர்வுக்குக் கொண்டு செல்வீர்கள். முதலீடுகளை கூட்டவும், சில முயற்சிகள் தேவையானதாக இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு, அன்றாட அலுவல்களை உற்சாகத்துடனும், சுறுசுறுப்பாகவும் செய்து முடிப்பீர்கள். பெண்களுக்கு விருப்பங்கள் நிறைவேறும்.

**இடபம்**-சிலரின் கருத்துக்கள் அதிகம் யோசிக்க வைக்கலாம். கோபப்படுவதை தவிர்த்துக் கொண்டு, ஆராய்ந்து செயற்பட்டீர்களேயானால் நல்ல தீர்வுக்கு வழிவகுக்கும். குடும்ப விவகாரங்களில் நிலவும் கவலைகள் நியாயமான போதும், தீர்வுக்கு சில காலங்கள் பொறுத்திருக்க வேண்டியிருக்கும். தொழில் வகையில் புதிய திட்டங்கள், ஒப்பந்தங்கள் ஏற்படும். வியாபாரிகளுக்கு, வியாபாரம் விரிவடையவும். உத்தியோகத்தர்களுக்கு பணிகளில் மேற்கொள்ளும் தீவிரம் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். பெண்களுக்கு மகிழ்ச்சி அதிகரிக்கும். குழந்தைகளால் பெருமை அதிகரிக்கும்.

**மிதுனம்**- ஒவ்வொரு பிரச்சினைகளையும் தெளிவாக ஆராய்ந்து முடிவுக்கு வருவீர்கள். தேவையற்ற பதற்றம் மனக்கஷ்டம் இருக்கும். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்களில் பயன்கள் குறைவாக இருக்கும். தொழிலில் அரசு சம்பந்தப்பட்ட விவகாரங்களுக்கு, பொருளின் தரம் போன்றவற்றில் யோசித்துச் செயற்படுங்கள். உத்தியோகத்தர்களுக்கு வருமானத்தை அதிகரிக்க சில புதிய முயற்சிகளை ஏற்படுத்துவீர்கள். அதில் கூடுதல் கவனம் இருக்கட்டும். குழந்தைகளால், புதிய செலவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். அரசியலில் எந்தக்காரியத்தையும் ஒருமுறைக்கு இருமுறை சிந்தித்துச் செயற்படுத்துவது உத்தமம்.

**கடகம்**-எதிலும் சற்றுக் கூடுதலான எச்சரிக்கையோடு செயற்படுதல் நல்லது. நண்பர்கள் மற்றும் முக்கியஸ்தர்களிடமிருந்து எதிர்பார்க்கும் உதவிகள் தாமதமாகும். புதிய தொழில்களில் தகுந்த ஆலோசனைக்குப் பின் செயற்படுதல் நல்லது. தொழில் வகையில் ஏற்றத்தாழ்வுகள் நிலவிய போதும் லாபம் பாதிக்காது. உத்தியோகத்தர்களுக்கு பணியில் தேவையற்ற தாமதங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். தொழிலாளர்களுக்கு பணியில் பளு அதிகரிக்கும். உடன் பணியாற்றும் ஊழியர்களோடு கருத்து வேற்றுமை ஏற்படலாம். கவனம் தேவை. வீட்டிலும், பணிபுரியும் இடத்திலும் உங்களின் பெருமை அதிகரிக்கும்.

**சிங்கம்** -அதிகமான பணிச் சுமைகளால் உடலும், மனமும் சோர்வு கொள்ள நேரிடலாம். இருப்பினும், திட்டமிட்ட செயற்பாடுகள் பணிகளை வெற்றிகரமாக முடிப்பதற்கு ஏதுவாக அமையும். எதிர்பார்த்த உதவிகளும் கிடைக்கப்பெறுவீர்கள். முக்கியஸ்தர்கள் மற்றும் அரசியல்வாதிகளின் தொடர்புகள் பயன் உள்ளதாக ஆக்கிக் கொள்வீர்கள். வெளிவட்டாரப் பழக்கவழக்கங்களில் செலவுகள் சற்றுக் கூடுதலாக இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு, கடன் தொந்தரவுகளை குறைத்துக் கொள்ள வாய்ப்புக் கள் கிடைக்கப் பெறுவீர்கள். சற்று பொறுமையோடு எந்த ஒரு விடயத்தையும் மேற்கொள்ளுதல் நல்லது.

**கன்னி**-சில காரியங்கள் அதிக கவலையை ஏற்படுத்தியபோதும், உங்களின் தீவிர சிந்தனையால் நல்லதொரு தீர்வு காண்பீர்கள். குடும்ப உறுப்பினர்களின் செயற்பாடுகள் அதிருப்தி தந்தபோதும், அதனை வெளிக்காட்டாமல் கொண்டு செல்லுங்கள். எதிர்பார்த்த வரவுகள் வரும். வெளிவட்டாரப் பழக்கவழக்கங்களில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வங்கி மற்றும் அரச வகையில் உள்ள தொடர்புகளை மிகக் கவனமுடன் கொண்டு செல்லுங்கள். உத்தியோகத்தர்களுக்கு, தேவையற்ற பேச்சுக்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். பெண்களுக்கு, குடும்பத்தில் உள்ள கோபதாபங்களை வெளியிடங்களில், வெளிப்படுத்துவதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

**துலாம்**- உங்களின் வார்த்தைகளே சர்ச்சைகளையும், பிரச்சினைகளையும் ஏற்படுத்த வாய்ப்புண்டு. எனவே மிகுந்த கவனம் தேவை. புதிய பொறுப்பு ஏற்படும். பணம் சம்பந்தப்பட்ட வகையில் எதிர்பார்க்கும் உதவிகள் கிடைக்கப்பெறும். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்கள் மிகுந்த பயன் உள்ளதாக இருக்கும். தொழில் துறையில் நல்லதொரு மாற்றங்கள் ஏற்படும். வளர்ச்சிக்கான நடவடிக்கைகள் பயன் தரும். உத்தியோகத்தர்களுக்கு வருமானங்கள் அதிகரிக்கும். வசதிகளும் கூடும். கலைத் தொடர்புள்ள தொழில் புரிவோருக்கு எதனையும் கொஞ்சம் போராடியே முடிக்க வேண்டி இருக்கலாம்.


**விருச்சிகம்**-தேவையற்ற பிரச்சினைகளுக்கெல்லாம், அதிகமான மன வருத்தத்தை ஏற்படுத்திக் கொள்வீர்கள். கடந்த காலங்களில் செயற்பட்ட விதம் பற்றி அலசி ஆராய்வீர்கள். புதிய முயற்சிகளை சற்று தாமதப்படுத்தவும் பண நிலையில் எதிர்பாராத பற்றாக்குறை ஏற்பட்ட போதும் சாதுர்யமாகச் சமாளிப்பீர்கள். தொழில்துறையில் இழுபறியாக இருந்த பிரச்சினைகளை, நல்லதொரு தீர்வுக்குக் கொண்டு செல்வீர்கள். முதலீடுகளை கூட்டவும், சில முயற்சிகள் தேவையானதாக இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு, அன்றாட அலுவல்களை உற்சாகத்துடனும், சுறுசுறுப்பாகவும் செய்து முடிப்பீர்கள். பெண்களுக்கு விருப்பங்கள் நிறைவேறும். புதிய வேலை வாய்ப்புகளுக்கான முயற்சிகள் வெற்றிபெறும்.

**தனுசு** - சில காரணங்களுக்காக, ஓய்வு உறக்கமின்றி அலைச்சலும் இருக்கும். சில காரியங்கள் தாமதமானபோதும், அதுவும் நன்மைக்கே என்று எடுத்துக் கொள்ளுங்கள். முக்கியஸ்தர்களின் தொடர்புகள் பயன் தரும். செல்வாக்கு அதிகரிக்கும். வெளிவட்டாரப் பழக்க, வழக்கங்களில் கவனம் தேவை. தொழில் துறையின் விரிவாக்கத்துக்காக சில நடவடிக்கைகளை மேற்கொள்வீர்கள். பணியாளர்களைத் தேர்ந்தெடுப்பதில் கவனம் இருக்கட்டும். உத்தியோகத்தர்களுக்கு, பணிபுரியும் இடத்தில் முடிந்தளவுக்கு அமைதியாகச் செல்ல முயற்சியுங்கள். பெண்களுக்கு, சில செயற்பாடுகளால் பாராட்டு கிடைக்கப் பெறுவீர்கள். பெற்றோருக்காக சில பணிகளை மேற்கொள்வீர்கள். பணிபுரியும் இடத்தில் கொஞ்சம் பதற்றம் இருக்கும்.

**மகரம்**-பல காரியங்களையும் விரைந்து முடிக்க வேண்டிய நிர்ப்பந்தங்கள் ஏற்படும். உடலும், மனமும் ஒத்துழைக்கும். எதிர்கால சிந்தனைகள் சற்று அதிகம் காணப்பட்ட போதும், நிகழ்கால பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுங்கள். முக்கியஸ்தர்களுக்கு, தொடர்புகள் தகுந்த நேரத்துக்கு பயனுள்ளதாக இருக்கும். நண்பர்களின் ஆலோசனைகளும், அறிவுரைகளும் மிகுந்த பயனுள்ளதாக இருக்கும். வெளிவட்டாரப் பழக்க, வழக்கங்களால் வீண் அலைச்சலும், செலவுகளும் தான். தொழில் வகையில் புதிய முயற்சி, விரிவாக்கம் என இருக்கும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படுவர்.

**கும்பம்** - மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறும். உடல்நிலையில் சற்று கவனம் தேவைப்படும். பண நிலையில் எதிர்பார்த்த வரவுகள் தாமதப்பட்ட போதும் கிடைக்கப் பெறுவீர்கள். வியாபாரிகளுக்கு கொள்முதலில் கூடுதல் கவனம் போட்டிகளை எதிர்கொள்ள ஏதுவாக அமையும். நிதித் தேவைகளுக்காக நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றி பெறும். உத்தியோகத்தர்களுக்கு, சில சலுகைகள் கிடைக்கும். இடமாற்றங்களுக்கு அவசரப்பட வேண்டாம். மேலதிகாரிகளின் கருணைப்பார்வை உங்கள் மேல் ஏற்படும். பெற்றோரின் மீது பாசம் கூடும்.

**மீனம்**-பிரியமானவர்களின் சந்திப்புக்கள் என இருக்கும். வெளிவட்டாரப் பழக்க, வழக்கங்களிலும் புகழ் செல்வாக்கு அதிகரிக்கும். முக்கியஸ்தர்களின் சந்திப்பின் போது கோரிக்கைகள், பேச்சுக்கள் மிகத்தெளிவான வகையில் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள். தொழில் துறையில் திடீர் நடவடிக்கைகளை மேற்கொள்வீர்கள். உத்தியோகத்தர்களுக்கு, அலுவலகத்தில் இருந்த நெருக்கடிகள், சங்கடங்கள் குறையும். சில சலுகைகளும் கிடைக்கப் பெறுவீர்கள். பெண்களுக்கு, இல்வாழ்வில் ஏற்றமுண்டாகும். பணிபுரியும் இடத்தில் குடும்ப விவகாரங்கள் பேசுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். திறமையை வளர்த்துக் கொள்வதற்காக சில முயற்சிகளில் ஈடுபடுவீர்கள்.




# உலகம் போற்றும் ஆசிரியர்

மனிதனை மனிதனாக உருவாக்கும் சிற்பிகளே ஆசிரியர்கள். மனிதனை முதன்மைப்படுத்த உரமாக இருப்பவர்கள் ஆசிரியர்கள் என்றால் அது மிகையாகாது. ஒவ்வொரு மாணவனுக்கும் ஞானத்தின் சுடரை ஏற்றுகின்ற பணி ஆசிரியருடையது.

''குறிக்கோள் இல்லாத வாழ்க்கை முகவரியில்லாத கடிதத்துக்குச் சமன்'' இதுபோல மாணவ சமூகமும் குறிக்கோள், இலட்சியம் இல்லாமல் இருந்தால் எதிர்காலம் ஓர் இருண்ட பாதை என்பதை ஆரம்ப காலத்தில் இருந்தே மாணவர் மனதில் நன்கு பதிய வைத்து அவர்களை வெற்றிநோக்கிய எதிர்காலம் அமைய வழிகாட்ட வேண்டியது ஆசிரியர்களே.

ஒரு மாணவன் ஆசிரியரை அடையும் தருணத்தில் வெறும் மண் கலவையாய் மட்டுமே உள்ளான். அவனைத் தேவையான வடிவில் சிலையாக வடிவமைப்பது ஆசிரியரின் பணியாக உள்ளது. ஒரு நாட்டின் எதிர்கால தலைவிதி ஒவ்வொரு வகுப்பறைகளிலும் உருவாக்கப்படுகிறது என்பதை ஆசிரியர்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

தமிழ் சிறப்பாயிரம் பாடலில் சொன்னதுபோல் அன்னையும் தந்தையும் ஒரு குழந்தையை உலகிற்குத் தருகின்றனர். ஆனால் ஓர் ஆசிரியர் உலகத்தையே குழந்தைக்குத் தருகின்றார். இந்த உண்மைகளால் ஆசிரியர்கள் உலகம் போற்றும் உத்தமர்களாக விளங்குகின்றனர்.

ஒரு வழக்கறிஞர் தவறு செய்தால் அவரை பூமியில் இருந்து ஆறடி உயரத்தில் தொங்க விட்டு விடலாம். அதேபோல் ஒரு மருத்துவர் தவறு செய்தால் அவரை பூமியில் இருந்து எட்டடி பள்ளத்தில் புதைத்து விடலாம். ஆனால் ஓர் ஆசிரியர் தவறு செய்தால் எட்டின அளவுக்கு எதிர்கால சந்ததிகள் பாதிக்கப்படுவர் என்று ஒரு கருத்து இருக்கிறது. இதனை உணர்ந்து செயற்பட்டால் ஆசிரியர் பணி சிறக்கும். அதனால் நாடும் சிறக்கும்.

சிறந்த ஆசிரியர்கள் என்பவர்கள் செயலுக்கும் சொல்லுக்கும் இடையிலான இடைவெளியை குறைப்பவர்களாக இருக்கவேண்டும். அப்படி இருந்தால்தான் ஆசிரியர் பணி சிறப்பாகப் போற்றப்படும். அதேபோல் மாணவர்களைச் சிறந்த பண்போடு உருவாக்க நினைக்கும் ஆசிரியர்கள் தாமும் ஒழுக்கமாக இருக்க வேண்டியது அவசியம். ஒரு சமூகம் அதி உன்னத நிலையை அடைந்து இருந்தால் நிச்சயமாக அதன் பின்னால் அற்புதமான ஆசிரியர் சமூகம் இருப்பதாகவே அர்த்தம்.

இவ்வாறான நல்ல பிரஜைகளை உருவாக்கி அவர்களின் எதிர்காலம் சிறப்பாக அமைய ஒரு சிறந்த மாணவ சமுதாயத்தை உருவாக்குபவர்கள் உலகம் போற்றும் ஆசிரியப் பெருந்தகைகளே.

*சிவப்பிரகாசம் துவாரகன்,*
முதுநிலை ஆசிரியர், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோ.பத்மநாதன்



நாடகத்தில் - ஏன், புனை கதையிலும்கூட - ஒரு பாத்திரம், அச்சொட்டாக, இன்னொரு பாத்திரம் போல் அமைவதில்லை; அமையவும் கூடாது.



# 'சுணைக்கேடு'

## ஒரு வித்தியாசமான அனுபவம்

தொலைக்காட்சி நிறுவனமொன்று அறிவிப்பாளர்களுக்கான தேர்வு நடத்துகிறது. மூன்று இளம்பெண்கள் - 16,17 வயதினர் - நேர்முகத் தேர்வுக்கு வந்து சேர்கிறார்கள். அவர்களை வரவேற்கவோ, ஆற்றுப்படுத்தவோ யாருமில்லை. ஒருவரையொருவர் அறிமுகம் செய்து கொள்கின்றனர். தத்தம் திறன்களை முன்னிறுத்துகின்றனர். சந்தர்ப்பம் வரும்போது அடுத்தவரை மட்டந்தட்டுகின்றனர்.

தொலைக்காட்சி நிறுவனத்தின் பணிப்பாளர் இப்பெண்களை நேரில் சந்திக்காவிடினும், அவர்களின் ஒவ்வோர் அசைவையும் பேச்சையும் அவதானித்துக் கொண்டிருக்கிறார். அவர்கள் நடமாடும் வெளி (அரங்கு) வீடியோ பண்ணப்படுகிறது. ஒரு கட்டத்தின் பின் அவர் 'குரல்' அவர்களோடு தொடர்பு கொள்கிறது; அவர்களை வழி நடத்துகிறது. அந்தப் 'புறக்குரல்' தான் நாலாவது பூாத்திரம்.

மரெய்ன், லில்லி, பெட்றா ஆகிய மூன்று வேட்பாளர்களுடைய குண இயல்புகளை அவர்களுடைய சுயரூபங்களை - வெளிக்கெணர்வதில் நாடகாசிரியர் லூாட்ஸ் ஹப்னர் வெற்றி பெற்றிருக்கிறார். இக்கோணத்தில் பார்க்கும்போது 'சுணைக் கேடு' ஓர் உளவியல் பரிமாணம் பெறுகிறது.

நாடகத்தில் - ஏன், புனை கதையிலும் கூட - ஒரு பாத்திரம், அச்சொட்டாக, இன்னொரு பாத்திரம் போல் அமைவதில்லை; அமையவும் கூடாது. There shouldn't be a duplication of characters ஒரே நோக்கத்துக்காக, ஒரே இடத்துக்கு வந்து சேரும் ஒரே வயதினரான பெண் பாத்திரங்களை, அவர்களுடைய குணசித்திர வேறுபாடுகள் தெரியும்படி வார்த்தெடுப்பது சிரமமான காரியம்.

இயக்குநர் தேர்ந்தெடுத்துள்ள நடிகைகள் தோற்றத்தில் மட்டுமல்ல, பேச்சு, நடை, அங்க அசைவுகள் ஆகியவற்றிலும் தம் சுயங்களை அடையாளப் படுத்துகின்றனர்.

'சுணைக்கேடு' ஒரு சமகால ஜேர்மன் நாடகம். 2003 இல் வொன் ஜோதிகா டலால் என்பவரால் ஆங்கிலத்துக்கு மொழி பெயர்க்கப்பட்டு, பம்பாயில் அரங்கேற்றப்பட்டது. இவ்வாண்டு சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டு, கொழும்பில் அரங்கேற்றப்பட்டது.

இப்பொழுது ஈழத்தின் முன்னணி நாடகாசிரியராகிய கலாநிதி குழந்தை சண்முகலிங்கத்தால் மொழி பெயர்க்கப்பட்டு செயல் திறன் அரங்க இயக்கத்தினரால் தயாரிக்கப்பட்டு கடந்த 26ஆம் திகதி கைலாசபதி கலையரங்கில் அளிக்கை செய்யப்பட்டது. இதை நெறியாள்கை செய்தவர் இனமுரண்பாடு - சமாதானம் பற்றி 9 நாடகங்களையும் 28 சிறுவர் நாடகங்களையும் இயக்கிய சாதனையாளர் தே.தேவானந் - நாடகத்தை சமூகத்துக்கு எடுத்துச் செல்வதில் தேவானந்த் ஆற்றியுள்ள பணி மிகப் பெரிது. அனோஜா, மறீன், துவாரகி மூவருமே தம் பாத்திரங்களை உணர்ந்து நடித்துள்ளனர். இவர்கள் செயல்திறன் அரங்க இயக்கத்தின் வழமையான பட்டறைகளூடாக வந்தவர்கள் அல்லர். புதுமுக நடிகைகள் என்று பார்க்கையில் அவர்களுடைய நடிப்புப் பாராட்ட வேண்டியது. மேலைத்தேய இசைக்கேற்ப நடன அசைவுகள் செய்ய வேண்டிய சவாலை அனோஜா சமாளித்து வெற்றி கண்டுள்ளார்.

அசரீரியாக இயங்கிய தேவானந் நாடகத்தை பின்னகர்த்துகிறார். சந்தர்ப்பத்துக்கேற்ப கண்டிப்பு, எள்ளல், இணக்கம் முதலிய தொனிகளை அவர் குரல் வெளிப்படுத்துகிறது.

இவ்வளவும் சொன்ன பிறகு ஒரு விஷயத்தைக் குறிப்பிட வேண்டும். மேற்கத்திய பண்பாட்டுக் கோலத்தை அப்படியே எமது தமிழ்ச் சூழலில் காட்டும் போது, எந்த அளவுக்கு அது சுவைஞர்களைத் தொற்றும்? பாத்திரங்கள் அவையோடு உரையாட முயன்ற போது, அவை இறுகிப் போய் இருந்ததற்கு கலாசார இடைவெளிதான் காரணமோ? அல்லது இளையோர் நாடகத்தில் முதியோர் பலர் பார்வையாளராக வந்த துரதிர்ஷ்டம் காரணமோ? சுணைக் கேட்டை சுதேசமயப் (indigenize) படுத்தியிருந்தால் சபை அதிகம் ஈர்க்கப்பட்டிருக்குமோ?

நாடகத்தின் தொழிநுட்ப அம்சம் பாராட்டப்பட வேண்டியது. video clippings வழியில் காட்சிகளை நடிகைகளுக்கே போட்டுக் காட்டியது நல்ல உத்தி. பொருத்தமான settings பயன்படுத்தப்பட்டுள்ளன. மொத்தத்தில் ஒரு வித்தியாசமான அனுபவம்.

# பெயர்கள் தரும் பாதைகள்.....

இ.சத்தியன், கொக்குவில்

கீழே தரப்படுகின்ற பெயர் அமைப்புக்களின் பிற்பகுதியில் மி, தி, வி போன்ற விசேட எழுத்துக்கள் வெளிப்புறமாக காணப்படுகின்றன. இந்த எழுத்துக்கள் குடும்பக் கட்டுப்பாடு கரிசனை தீர்க்க சுமங்கலி என்கின்ற பெருமைகளையும் மதிப்பையும் பெண் குலத்துக்கு மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. இவற்றைக் கீழே வருகின்ற உதாரண சொற்களில் விசேட எழுத்துக்கள் மூலமாக நாம் அறிந்து கொள்ள முடியும்.

| | | | |
|---|---|---|---|
| முருகன் | வள்ளி | - ளி | தீர்க்க சுமங்கலிகள் எனப்படுவர் |
| சிவன் | பார்வதி | - தி | |
| பிரம்மா | சரஸ்வதி | - பி | |
| விஷ்ணு | இலக்குமி | - வி | |
| கோவலன் | கண்ணகி | - கி | |

| | | |
|---|---|---|
| சோனியா | - யா | பெயரின் இறுதியில் வருகின்ற யா,கா,மா போன்ற விசேட எழுத்துக்கள் குடும்ப வாழ்வை இறக்கச் செய்து பிற சேவையில் அதிக நாட்டத்தை ஈடுபடச் செய்கின்றன. (சமூக – குடும்ப சேவைகள்) |
| சந்திரிகா | - கா | |
| சிறிமா | - மா | |
| விஜயகலா | - லா | |
| ஜெயலலிதா | - தா | |
| விக்கினராசா | - சா | |

பெயர்த் தொகுதிகள் ஒவ்வொன்றும் பெருக்கல் வாய்ப்பாடுகளின் தரவுகளுக்குச் சமமாக கற்பனை செய்து பார்க்க வேண்டும். அப்போது இதன் விவரங்கள் இலகுவாகப் புரியும் மனித சமுதாயம் முன்னேற உதவும்.

| | | |
|---|---|---|
| ஔவை | - வை | - இந்து சமயத்தின் பக்திமான். சிறுவர்களுக்கான பாடல்களை பாடியவர். |
| சங்கமித்தை | - தை | - புத்த சமயத்தை பரப்பும் நோக்குடன் அரச மரக்கிளையை இலங்கையில் நாட்டியவர். |
| துர்க்கை | - கை | - வீரத்தின் அடையாளம் |
| அகலிகை | - கை | - கௌசிகர் மனைவி, இவருடைய காலத்தில் அழகுக்கு முதலிடம் அவளுக்கு. இந்திரன் மயங்கி விட்டார். |
| சீதை | - தை | - ராமரின் மனைவி |

| | | |
|---|---|---|
| ஐயா | - ஐ | |
| ஐயாத்துரை | - ஐ | |
| யானை | - னை | இவைகள் வடிவத்தால் உயர்ந்த நிலை |
| மலை | - லை | |

மேற்படி சொற்களில் வெளிப்புறமாக அமைந்த வை - தை - கை- ஐ - னை போன்ற எழுத்துக்கள் கீர்த்தி- புகழ் என்பவற்றை நமக்குத் தருகின்றன.

| | | |
|---|---|---|
| குந்திதேவி | -கு | - தனது மகன் கர்னனை போரில் இழந்தமை |
| சூர்ப்பனகை | - சூ | - ராவணனின் சகோதரி. குடும்பம் அமையவில்லை. |
| அசமுகி | - மு | - சூரனின் சகோதரி. குடும்பம் அமையவில்லை |
| சுமித்திரை | - சு | - தனது கணவன் உயிர் பிரிந்தமை தசரதன்- இராமாயணம் |

மேற்படி சொற்களில் வெளிப்புறமாக அமைந்த கு,மு,து,ரு,சு போன்ற எழுத்துக்கள் பெண்களின் குடும்ப வாழ்வில் சோகம் இழப்பு என்பனவற்றை எடுத்துக் காட்டுகின்றன.

**சொற்களில் விசிறி அமைவதன் பலன்கள்**

| ஆரம்பப் பகுதி | மத்திய பகுதி |
|---|---|
| கிட்லர் | ஆசிரியர் |
| பிரபாகரன் | வசிட்டர் |
| சிவானந்தன் | அதியமான்- மரியாள் |
| இராவணன் | பாக்கியம் |
| சியாமளா | ரத்தினம்- எடிசன் |
| கிருபானந்தவாரியார் | மாணிக்கம்/ன் |
| விசுவாமித்திரர் | அமிர்தலிங்கம் |
| சின்னப்பிள்ளை | அகத்தியர் |
| விக்கிரமசிங்க | [illegible]ப்பிள்ளை |
| | பார்வதிஅம்மாள் |

முடிவுப் பகுதி

வள்ளி, பார்வதி, கண்ணகி, நமெனி, மெஸ்சி, காந்தி, கடாபி, கதிர்காமத் தம்பி, கந்தசாமி

**மத்திய பகுதியில் விசிறி அமைவது**

ஆண்களுக்கு விசேட நன்மையையும், பெண்களுக்கு மத்திம நன்மையையும் தரவல்லது.

**முடிவு பகுதியில் விசிறி அமைவது**

பெண்களுக்கு விசேட நன்மையும், ஆண்களுக்கு மத்திம நன்மையும்.

**ஆரம்ப பகுதியில் விசிறி அமைவது**

ஆண்கள், பெண்கள் இருபாலாருக்கும் உலகியல் வாழ்வில் நன்மையாகத் தெரியவில்லை. ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்வோம்.

மனித வர்க்கம் படிப்படியாக முன்னேறிச் செல்கின்ற தடையில்லாத சொற்களை இங்கு கவனிப்போம்.

| | | |
|---|---|---|
| கர்ப்பம் | விபுலானந்தர் | செல்வநாயகி |
| குழந்தை | கிருஷ்ணர்/ன் | நமெனி 41 |
| பிள்ளை | சின்னத்துரை | மெஸ்ஸி 24 |
| மாணவன் | அருமைத்துரை | செவ்வந்தி |
| வாலிபன் | செல்லத்துரை | ஜெயலலி- தா |
| மனிதன் | தம்பித்துரை | ரெலி -போன் |
| பெரியவர் | தம்பிமுத்து | பெகி - 104 |
| முதியவர் | | |

மேற்கண்ட பெயர் சொற்களின் தொகுதிகளில் அதிக பட்சம் நெடில் எழுத்துக்கள் இல்லாத சொற்களாக அமைகின்றன. இவைகள் மனிதவளம் அடங்கியது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திர மண்ணில் காலடி பதித்த மனித குலத்தின் முதல் பயணி

■ ரெங்கன்

1969 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் திகதி சந்திரனில் முதன் முதல் காலடி வைத்த போது நீல் ஆம்ஸ்ரோங் கூறிய வார்த்தைகள் "இது ஒரு மனிதனுக்கு ஒரு சிறு கால் சுவடு மட்டும்தான். ஆனால் மனித இனத்துக்கு இது ஒரு ராட்சத பாய்ச்சல்" என்பதாகும். இந்த வார்த்தைகள் ஆங்கில மொழியில் பலராலும் எடுத்தாளப்படும் மேற்கோளாக ஏன் பழமொழியாகக் கூடப் பயன் படுத்தப்படுகின்றது.

நீல் ஆம்ஸ்ரோங்கும் அவரது சக பயணியான எட்வின் பஸ் ஆல்ட்ரினும் அப்பலோ 11 தாய் கலத்திலிருந்து பிரிந்து தமது ஈகில் கலத்தை சந்திரனில் இறக்குவதற்காக மலைப் பாறைகளற்ற சமதரையான ட்ராங்குவிலிட்டி என்றழைக்கப்படும் பகுதியில் இறங்குவதற்கு ஆம்ஸ்ட்ரோங் தாம் ஏற்கனவே விமானம் ஓட்டுவதில் பெற்றிருந்த அனுபவத்தை முழுமையாகச் சாதுரியத்துடன் பாவித்துக் கொண்டார் என்று சொல்வார்கள்.

ஈகில் வாகனம் சந்திரனில் இறங்கிய மாத்திரத்தில் அவர் தரைக் கட்டுப்பாட்டு நிலையத்துக்கு அனுப்பிய செய்தி, "ஹாஸ்டன், இது ட்ராங்குவிலிட்டி தளம். ஈகில் தரை இறங்கி விட்டது" என்பதாகும்.

ஈகில் என்றால் கழுகு என்று பொருள். நிலவில் இறங்கிய சேய் கலத்துக்கு ஈகில் என்றே பெயரிட்டிருந்தார்கள். கழுகு அமெரிக்காவைக் குறிக்கும் சின்னமானதால் கழுகு சந்திரனில் இறங்கிவிட்டது என்பதின் மறைபொருள் அமெரிக்கா சந்திரனில் இறங்கிவிட்டது என்பதே. சந்திரனில் இறங்கிய முதல் மனிதர் என்றழைக்கப்பெற்றவரான நீல் ஆம்ஸ்ரோங் மறைந்துவிட்டார் என்பதை உலகம் முழுவதுமே தம் காலத்தில் வாழ்ந்த ஒரு மகாவீரனை, சரித்திர புருஷனை மற்றவர்களால் இலகுவில் சாதிக்க முடியாத ஒரு சாதனையாளனை இழந்துவிட்ட சோகத்துடனேயே எதிர்கொண்டிருக்கும் என்பதை சொல்லத் தேவையில்லை.

அமெரிக்காவில் ஓகையோ மாகாணத்தில் வப்பகொனெட்டா என்ற இடத்தில் நீல் ஆம்ஸ்ரோங் 1930 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி பிறந்தார். தமது 82 ஆவது வயதில் 2012 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி இன்சினாட்டியில் உயிர் துறந்தார்.

ஆம்ஸ்ட்ரோங் தமக்குக் கிடைத்த புகழைப் பெரிதாகக் காட்டிக் கொள்ளவில்லை. ஆனால் அமெரிக்காவின் மிக உயர்ந்த விருதுகளைப் பெற்றிருந்தார். 17 நாடுகள் அவரை அழைத்துக் கௌரவித்தன. ஆனால் புகழைக்கண்டு அவர் வெட்கப்படுபவராய் இருந்தார். அவரது கையெழுத்தை சிலர் பெரும் விலைக்கு விற்கிறார்கள் என்பதை அறிந்தவுடன் ஓட்டோ கிராப்புக்களில் ஒப்பமிடுவதை நிறுத்திக் கொண்டார்.

இந்த மாத ஆரம்பத்தில் ஆம்ஸ்ரோங்கிற்கு இதய நோய் ஏற்பட்டது. அவரது இரத்த நாடிகளில் அடைப்புக்கள் இருப்பதை மருத்துவர்கள் கண்டுபிடித்தார்கள். அதற்காக அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அது பயனளிக்காமல் அவர் மரணமானார்.

### காலடியின் சக்தியை காட்டியவர்

ஆம்ஸ்ரோங் மரணத்தால் கவலைக்குள்ளான அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா "அமெரிக்க வீரர்களில் அவர் மிக உயர்ந்தவர். அவர் காலத்தில் மட்டுமல்ல எல்லாக் காலத்திலும்" என்றார். ஒரு காலடியின் சக்தியை எமக்கெல்லாம் சொல்லிக் கொடுத்தவரான அவர் விட்டுச் செல்லும் விழுமியங்கள் காலத்தைக் கடந்து நிற்கும் என்று ஒபாமா குறிப்பிட்டார்.

ஆம்ஸ்ரோங்கின் தந்தை ஸ்டீபன். தாயார் வயோலா. அவர்களின் மூன்று பிள்ளைகளில் மூத்தவர் இவர். தனது கல்லூரிக் காதலி ஜெனெற் ஷேரோன் என்பவரை 1955 இல் மணமுடித்தார். 1994 இல் இருவருக்குமிடையில் விவாகரத்து ஏற்பட்டதால் கரோல் னைட் என்பவரை மணமுடித்தார்.

வருங்காலத்தில் மனிதர்கள் பலபேர் சந்திரனிலும் செவ்வாயிலும் போய் இறங்கக்கூடும். ஆனால் பூமியிலிருந்து சென்று வேற்றுக் கிரகமான சந்திரனில் காலடி வைத்த மனிதன் ஆம்ஸ்ரோங் தான் என்ற வரலாற்றுப் பதிவை எவராலும் மறைத்துவிட முடியாது.

அவரிடம் ஒருவர் கேட்டார், உங்கள் காலடி சுவடு ஆயிரமாயிரம் வருடங்களுக்கு அங்கு இருக்கப் போகின்றது என்பதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று இதற்கு அவர் கூறிய பதில்:-

"எனக்கொருவித எண்ணம் தோன்றுகிறது. இந்த நாள்களில் யாராவது அங்கு செல்வார்கள். அந்தச் சுவடுகளை சுத்தம் செய்துவிடுவார்கள்" இதுவே அவர் அளித்த பதிலாகும்.

82 வயதில் காலமான நிலாவில் முதன்முதலில் காலடி வைத்தவரான நீல் ஆம்ஸ்ரோங்கிற்கு மரியாதை செலுத்துமுகமாக அமெரிக்க தேசிய கொடி சகல அரச கட்டடங்களிலும் அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட வேண்டும் என்று அதிபர் பராக் ஒபாமா பிரகடனம் செய்துள்ளார்.

வெள்ளை மாளிகை, சகல அரச கட்டடங்கள், இராணுவ நிலையங்கள் , அமெரிக்கக் கப்பல்கள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள அமெரிக்க தூதரகங்களில் அமெரிக்க நாட்டு தேசியக் கொடி மறு அறிவித்தல் வரை அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டுள்ளது. ஆம்ஸ்ட்ரோங்கின் பூதவுடல் நல்லடக்கம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெறுவதாக இருந்தது. ஆம்ஸ்ரோங்கின் நல்லடக்கம் அரச மரியாதையுடன் நடத்தப்படவேண்டும் என்று ஓகையோ பகுதி குடியரசு கட்சி காங்கிரஸ் உறுப்பினர் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

### ஒரு குண்டு விழுந்தாலும் எதிரிகளைத் துவம்சம் செய்வோம்

தென்கொரியா - அமெரிக்காவுடன் இணைந்து போர் பயிற்சிகளில் ஈடுபட்டிருப்பது வடகொரிய தலைவர் கிம்- ஜொங் உங்கை ஆத்திரமடையச் செய்துள்ளது. கடந்த திங்கட்கிழமை அமெரிக்காவும் தென்கொரியாவும் இராணுவ கூட்டுப் பயிற்சிகளை ஆரம்பித்தன. வடகொரியா நடத்தக் கூடிய தாக்குதல் எதனையும் எதிர்கொள்வதற்கான பயிற்சியாகவே இது இருக்கும். இது தற்காப்பு பயிற்சியாகவே இருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் வடகொரியா மீது அணுத் தாக்குதல் ஒன்றை நடத்துவதற்கான முன் பயிற்சியாகும் என்று அந்த நாடு கருதுகிறது.

இந்தப் பயிற்சியில் 30 ஆயிரத்துக்கும் அதிகமான அமெரிக்கப் படைகளும் வெளியிலிருந்து 3 ஆயிரம் படைகளும் கலந்துகொள்கின்றன. வருடம்தோறும் நடைபெறும் பயிற்சிதான் என்று கூறப்படுகிறது.

வடகொரிய தலைவர் இந்தப் பயிற்சி குறித்து ஆத்திரமடைந்துள்ளதுள்ளார். இது வடகொரியாவுக்கான ஓர் அச்சுறுத்தலாகும். பயிற்சியின் போது எமது எல்லைகள் எதுவும் மீறப்படுமானால் எதிரிகளுக்கு சாவு அடி கொடுப்பதற்கு எமது படைகள் ஆயத்தமாகவே இருக்கின்றன என்றும் கூறியுள்ளார். எமது பிரதேசத்தின் மீது எதிரிகள் ஒரு ஷெல் குண்டையாவது வீசுவார்களானால் எமது முழு இராணுவமும் ஒன்றாகத் திரண்டு முழு அளவிலான எதிர்த் தாக்குதலை நடத்தும் என்று கூறியிருக்கிறார்.

துணிச்சல்மிக்க எமது அதிகாரிகள் இறுதி வார்த்தை ஒன்றுக்காக இப்போது காத்துக் கொண்டிருக்கிறார்கள். அது கிடைத்ததும் எதிரிகளுக்கு எதிரான வாழ்வு அல்லது சாவு என்ற வகையிலான போராட்டத்தில் முழு மூச்சில் குதித்துவிடுவார்கள் என்று கிம்ஜொங்உங் இராணுவ அதிகாரிகள் கூட்டம் ஒன்றில் பேசியதாக அமெரிக்க செய்தி ஸ்தாபனம் ஒன்று தெரிவித்துள்ளது.

### ஜனாதிபதிக்கு மன்னிப்பு கோரி கஸாப் விண்ணப்பம்

2008 ஆம் ஆண்டு மும்பே தாக்குதலில் 166 பேரின் உயிருக்கு உலை வைத்தவர்களில் உயிருடன் பிடிபட்ட மொகம்மது கஸாப்புக்கு அளிக்கப்பட்ட மரண தண்டனையை இந்திய உயர் நீதிமன்றம் உறுதி செய்து தீர்ப்பளித்துள்ளது.

மும்பையில் நடத்த இந்தத் தீவிரவாதிகள் தாக்குதலின் போது பத்து நபர்கள் சம்பந்தப்பட்டிருந்ததில் கசாப் மட்டுமே உயிருடன் பிடிபட்டார். மும்பை நகரில் முற்றுகையொன்றை நடத்திய தீவிரவாதிகள் 166 பேர் கொல்லப்படுவதற்குக் காரணமாக இருந்தனர். அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பான வழக்கில் அவருக்கு வழங்கப்பட்டிருந்த மரணதண்டனையை எதிர்த்து மேன்முறையீடு செய்திருந்தார். தமக்கு நியாயமான விசாரணையொன்று நடத்தப்படவில்லை என்று அவர் கூறியிருந்தார்.

மேல் முறையீட்டை விசாரித்த இரண்டுபேர் கொண்ட நீதியரசர்கள் ஆயம் மரணதண்டனை வழங்குவதை விட எங்களுக்கு வேறு தெரிவு இல்லையென்று கூறினார்கள்.

கசாப் மீது சுமத்தப்பட்டிருந்த பிரதானமான முதல் முக்கிய குற்றச்சாட்டு இந்திய நாட்டுக்கு எதிராக போர்தொடுத்திருந்தார் என்பதாகும். மற்றும் கொலைகள் செய்தது, பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டது என்பவை ஏனைய குற்றச்சாட்டுக்களாக இருந்தன. 2010 ஆம் ஆண்டு மே மாதம் அவருக்கு கீழ் நீதிமன்றில் மரண தண்டனை வழங்கப்பட்டது.

உயர் நீதிமன்றம் அவரது மேல் முறையீட்டை நிராகரித்துவிட்டதால் தம் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள புதிய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியிடம் மன்னிப்புக் கோரி முறையிடக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறு மன்னிப்புக் கோரும் 11 விண்ணப்பங்கள் குறித்து ஜனாதிபதி தீர்மானிக்க வேண்டியிருக்கிறார்.

### 'விக்கிலீக்ஸ்'க்கு தகவல் வழங்கிய அமெரிக்க வீரர்

'விக்கிலீக்ஸ்' நிறுவனத்துக்கு அமெரிக்க அரசுத் தகவல்களை வழங்கிய குற்றச்சாட்டில் கைதாகியுள்ள பிராட்லி மான்னிங் என்ற இராணுவ வீரருக்கு எதிரான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்படலாம் என்று கூறப்படுகின்றது.

பிராட்லி முன்னரும் இவ்வாறு சட்டவிரோத நடவடிக்கைகளில் இறங்கியிருந்தார், தாம் செய்வது சட்டவிரோத செயல் என்பதையும் அறிந்திருந்தார் என்று அமெரிக்க இராணுவ சட்டவாளர்கள் தெரிவித்துள்ளனர். அவர் ஏராளமான அமெரிக்க அரசு இரகசியங்களை விக்கிலீக்ஸுக்கு வழங்கியுள்ளார் என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

24 வயதான பிராட்லி மான்னிங் அமெரிக்காவில் மிகப்பெரிய வரலாறு இரகசிய தகவல் முறைகேடுகளைப் புரிந்துள்ளார். நீதிமன்ற விசாரணைகள் ஆரம்பிப்பதற்கு முன் நடந்த விசாரணையொன்றில் 2008 ஆம் ஆண்டில் அதிகாரமற்ற யூரியூப் தொலைப்பதிவு ஒன்றைத் தமக்கு குடும்பத்தினருக்கு அனுப்பியுள்ளார்.

அது அவருக்கு போட்டுக் காட்டப்பட்டது. நீதிமன்ற விசாரணையின்போது இந்தப் பதிவும் ஆதாரமாக தாக்கல் செய்யப்படவிருக்கிறது. இந்த இராணுவ வீரர் தாம் செய்வது தவறு என்று தெரியாமலே எதிரிக்கு இரகசியங்களை வழங்கியுள்ளார் என்று அவருக்குச் சாதகமாக வாதிடும் சட்டவாளர்கள் கூறுகிறார்கள். விக்கிலீக்சுக்கு ஏராளமான ராஜதந்திர இரகசியங்களையும் இராணுவ இரகசியங்களையும் அவர் அனுப்பியது தெரிய வந்ததால் 2010 ஆம் ஆண்டு ஈராக்கில் அவர் பணி புரிகையில் கைது செய்யப்பட்டார்.

### மூழ்கிய கப்பலில் இருந்து 55 பேர் மீட்கப்பட்டனர்

இந்தோனேசியா கடலில் மூழ்கியதாகக் கருதப்படும் ஆஸ்திரேலியாவுக்கான அகதிகளை ஏற்றிச் சென்ற கப்பல் பயணிகளில் 55 பேர் கடந்த வியாழக்கிழமை மீட்கப்பட்டுள்ளனர்.

இந்தோனேசியா கடல் பகுதியில் மூழ்கிய கப்பலில் இருந்தவர்களைத் தேடுவது நிறுத்தப்பட்டதன் பின்னர் ஏ பி எல் பஹ்ரேன் என்ற வியாபாரக் கப்பலினால் இந்த 55 பேரும் காப்பாற்றப்பட்டுள்ளனர். ஜாவாவுக்கும் சுமாத்திராவுக்கும் இடையில் கப்பல் ஒன்று சங்கடத்தில் உள்ளது என்று முதலில் வந்த செய்திகள் கூறியதாக ஆஸ்திரேலியா அதிகாரிகள் தெரிவித்தனர். அதில் 150பேர் இருந்துள்ளனர்.


★ 82 ஆவது வயதில் நீல் ஆம்ஸ்ரோங் இதய நோயால் காலமானார்

★ தென்கொரிய - அமெரிக்க போர் பயிற்சி - வடகொரியா எச்சரிக்கை

★ மும்பைத் தாக்குதல் எதிரிக்கு மரண தண்டனை ஊர்ஜிதம்

★ விக்கிலீக்ஸுக்கு இரகசியம் வழங்கிய யு.எஸ். வீரர்

★ மூழ்கிய கப்பலில் இருந்து 55 பேர் மீட்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி பெறலாம் வாங்க! 14

■ ராகவன் அல்பி



## நேரத்தை உருவாக்குதல்

வெற்றிக்கான முன்னேற்றத்தில் முக்கியமானது மேலதிக நேரத்தைக் கண்டறிதல். நேரம் இல்லை என்று சொல்லிச் சொல்லியே நாம் பலவற்றைச் செய்யாமல் விடுகிறோம். இதுவே வெற்றியைத் தாமதப்படுத்துகிறது. எனவே மேலதிக நேரத்தைக் கண்டறிவதற்கான வழிகளைத் தேடுவது மிக முக்கியமானது.

ஒரு நாளில் 24 மணி நேரம் உள்ளது. நம்மில் பெரும்பாலான பேருக்கு இந்த நேரம் போதுமானதாக இருப்பதில்லை. அவ்வளவு பணிப்பளு. திட்டமிடுவதற்கு மட்டுமல்ல, புதிய விஷயங்களைச் செய்வதற்கும் நீங்கள் அதிக நேரத்தைக் கண்டறிந்தாக வேண்டும். இது சவாலானதுதான். ஆனால் இதில் அடையும் வெற்றிதான் உங்களின் முதல் வெற்றி.

உங்கள் வாழ்க்கையை மாற்றப்போகும் தொடர்....

நீங்கள் பணிபுரிபவராக இருந்தால் நேர நிர்வாகம் பற்றித் தெரிந்திருக்கும், சில பேர் இதைத் தீவிரமாக எடுத்துக்கொண்டு, கடுமையான வழியில் தங்களையும் தங்கள் நேரத்தையும் ஒருங்கிணைப்பார்கள். வேறு சிலருக்கு சில எளிய நுட்பங்கள் இருக்கின்றன. அதுவே நிறைய விஷயங்களைச் செய்யச் சொல்லும். நேரத்தைக் கண்டறிவதற்கும் எளிய 10 வழிகள் உள்ளன. இன்று அவற்றைப் பார்க்கலாம்.

**'அலராம்' வையுங்கள்:** ஒரு நாளின் தொடக்கத்தில் நீங்கள் சேமிக்கும் 10 நிமிடம், கடைசி நேரத்தில் அவசரமாகப் படபடப்புடன் இருக்கும் உணர்வைத் தவிர்க்க உதவும்.

**ஒழுங்காக அடுக்கி வையுங்கள்:** பொருள்களைத் தேடுவதில் நேரத்தை விணடிக்காதீர்கள். இது நீங்கள் வேலை செய்யும் இடத்தில் பொருள்களை ஒழுங்காக வைத்துக்கொள்வதற்கும், வீட்டில் உங்கள் உள் ஆடைகளை ஓர் இடத்தில் ஒழுங்காக மடித்துக்கொள்வதற்கும் பொருந்தும் நேர்த்தியானவராக மாறுங்கள்.

**நீங்கள் எதைச் சிறப்பாகச் செய்வீர்களோ அதைச் செய்யுங்கள்:** சமயத்தில் சில விஷயங்களை நன்றாகச் செய்வதும், சில விஷயங்களை மோசமாகச் செய்வதும் சரிதான். ஆனால் நீங்கள் எதைச் சிறப்பாகச் செய்வீர்களோ அதை நீங்கள் செய்ய முயலவேண்டும். மற்றவைகளைப் பிறரை வைத்துச் செய்யவேண்டும். இதனால் நீங்கள் அதிகமாகச் சாதிப்பதுடன் மனநிறைவும் அடைவீர்கள்.

**சிறிது இடைவேளை எடுத்துக்கொள்ளுங்கள்:** ஒரு வேலை நடக்கும்போது எத்தனை முறை இடைவேளை கொடுக்கப்படுகிறதோ அந்த அளவுக்குச் சீக்கிரமாக வேலை முடிந்துவிடும். இது முரணாகத் தெரிந்தாலும் உண்மை தான். இந்த விஷயத்தில் புகைப்பிடிப்பவர்களுக்கு ஒரு சுவ கமான அம்சம் இருக்கிறது. அவர்கள் செய்யும் வேலையை நிறுத்திவிட்டு புகைப்பதற்காக வெளியே வருவார்கள் இந்தச் சமயத்தில் வெளிக்காற்றைச் சுவாசிப்பதுடன் வேலையிலிருந்து சில நிமிடம் ஓய்வும் அவர்களுக்குக் கிடைக்கும்.

**உடனடியாகப் பதில் அளிக்காதீர்கள்:** உங்களுக்கு ஏகப்பட்ட மின்னஞ்சல்கள் வந்து குவிந்தால் அதற்கு உடனடியாகப் பதில் சொல்ல வேண்டும் என்தற்காக நேரத்தை அதிலேயே செலவழித்துவிடாதீர்கள். எப்பொழுது பதில் சொல்ல வேண்டுமோ அப்போது சொல்லுங்கள். அப்போது தான் சொல்ல வேண்டிய விஷயத்தைப் பற்றி முடிவு எடுத்திருப்பீர்கள்.

**சிந்தியுங்கள்:** தீர்மானங்கள் எடுக்க வேண்டி வரும்போது அல்லது சவால்களை எதிர்கொள்ள நேரும்போது கண்களை மூடிக்கொண்டு சிறிதுநேரம் சிந்தனை செய்யுங்கள். இது முதலில் அரைகுறையாக மனதில் தோன்றும் முடிவுகளை நிரந்தரமாக எடுப்பதைத் தவிர்க்கச் செய்து சரியான முடிவை எடுக்க வைக்கும்.

**முன்னுரிமை கொடுங்கள்:** நேர நிர்வாகத் தத்துவத்தின் படி நீங்கள் எப்பொழுதும் மிக முக்கியமான வேலைகளைத்தான் முதலில் செய்ய வேண்டும். ஆனால் சில சமயங்களில் உங்கள் விருப்பப்படி மட்டும் அமைந்த முன்னுரிமைகளைத் தேர்ந்தெடுப்பதும் முற்றிலும் ஏற்றுக் கொள்ளக்கூடியதுதான் என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

**கவனத்தைச் சிதறவிடாதீர்கள்:** உங்கள் கவனத்தைக் கலைக்கும் விடயங்கள் எவை என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும். அனைத்தையும் தவிர்த்துவிடுங்கள். முக்கியமாக உங்களுக்கு மிகவும் இடையூறு ஏற்படுத்தும் விடயத்தை நிச்சயமாகத் தவிர்த்துவிடுங்கள்.

**குளிர்சாதனப் பெட்டியில் வைத்துவிடுங்கள்:** உங்களுக்குச் சமைக்கப் பிடிக்குமென்றால், ஏன் இரண்டு மடங்கு சமைத்து ஒரு பகுதியை குளிர்சாதனப் பெட்டியில் வைக்கக்கூடாது? சில நாள்களில் வேலை அதிகமாக இருக்கும். அப்போது சமைக்க நேரம் இருக்காது. அது போன்ற நாள்களில் ஏற்கனவே குளிர்சாதனப் பெட்டியில் சமைத்த உணவு இருப்பதால் நேரமும் வீணாகாது, சுவையாகவும் சாப்பிடலாம்.

**உடற்பயிற்சி:** உடற்பயிற்சி செய்வதற்கென்று தினமும் நேரத்தை ஒதுக்கி நேரத்தில் பூங்காவில் நடந்து வருவதாக இருந்தாலும் சரிதான். மேலும் நடந்து விட்டு மீண்டும் வேலை செய்யத் தொடங்கினால் முன்பைவிட அதிகமாக வேலை செய்வீர்கள். உங்கள் நாளை வேலை, ஓய்வு என இரண்டும் கலந்த வடிவில் வடிவமைத்துக் கொண்டீர்கள் என்றால் ஒரு நாள் நீண்டதாக, நீண்ட நேரம் கொண்டதாகத் தோன்றும். இவ்வாறு செய்வது செய்யும் வேலையில் எந்த நேரத்திலும் குவிமையம் கொள்ள வைக்க உதவும்.

■ ஆதங்கன்

# முருகா! உனக்குமா...?

கதிர்காம ஆடிவேல் விழா முடிந்த அலுப்பு இன்னமும் கந்தனுக்குத் தீரவில்லை. அதற்கிடையில் நல்லூர், செல்வச்சந்நிதி என்று அடுத்தடுத்து ஒரே திருவிழா மயம். வேதியர்களின் மந்திரச் சொற்களைக் கேட்டுக் கேட்டு அவை கந்தனுக்கே மனப்பாடமாகியிருந்தன. அந்தளவுக்கு கந்தன் திருவிழா சீசனுக்குள் இருந்து மீள முடியாதிருந்தது. அப்படியே கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் பக்தர்களுக்கும் அலுப்போடு அலுப்பாக அருள் பாலித்துவிட்டு வர கந்தன் கிளம்பினான்.

போனவுடனேயே கந்தனுக்கு வந்தது சிக்கல்.

''தீர்த்தக் குளத்துக்குப் போக ஆமியின்ர பெமிஷன் தேவையாம்'' கந்தன் வந்ததையே கண்டுகொள்ள முடியாமல் ஆலய நிர்வாகத்தினர் அவதிப்பட்டபடியிருந்தனர். ஒருவாறு இராணுவத்தின் அனுமதி கிடைத்த பின்னரே கந்தன் வள்ளிதெய்வானையோடு பக்தர்களின் தோள்களில் அமர்ந்தான். வழி நெடுக 'பீல்ட் பைக்' குகளில் முறுக்கிக் கொண்டு முன்னே சில சிப்பாய்கள் பறந்து செல்ல அதன் பின்னே ஆடி அசைந்தபடி வந்த கந்தனை இரு புறமும் தப்பித்து ஓடிவிட முடியாதபடி சீருடையினர் கண்காணித்தபடியே வந்துகொண்டிருந்தனர். தீர்த்தத்துக்கு வந்திருந்த பக்தர்களை விடவும் படையினரின் எண்ணிக்கையே அதிகமாக இருந்தது கண்டு கந்தனுக்கு ஒரே குழப்பம். என்றாலும் ''கதிர்காமத்தில் கும்பிட்ட பழக்கத்தில் இஞ்சையும் கும்பிட வந்திருப்பாங்கள்'' என்று தன்னைத் தானே சமாதானம் செய்துகொண்டான். ஆனாலும் அந்தச் சமாதானத்தை நீடிக்க விடுவதற்கு சீருடைகள் தயாராக இல்லை. படைத்தரப்பின் ஏவுதலின்படியே எந்தப் பாதையால், கந்தனின் உலா நிகழ வேண்டும், எப்போது- எத்தனை மணிக்கு- எங்கு தீர்த்தமாட வேண்டும்? என்பனவெல்லாம் நிகழ்ந்தன. அவனின்றி ஓர் அணுவும் அசைவதில்லை. இங்கோ



படைகளின் கண்ணசைவின்றிக் கந்தன் கூட அசைய முடியாதிருந்தது. கதிர்காமத்தில் வணங்கவரும் போது இருந்த பயபக்தி இப்போது படையினரின் முகங்களில் இல்லை என்பதை கந்தன் கண்டுகொண்டான்.

கந்தனுக்கு ஒரே குழப்பமாக இருந்தது. ''கதிர்காமத்திலையும் நான் தானே இருக்கிறன். அங்க மட்டும் நெத்தியில திருநீறோட, வெள்ளை உடுப்போட உவங்கள் [சிப்பாய்கள்] கும்பிடுறாங்கள். இஞ்ச, 'யூனிபோர்மைக்' கூட கழட்டாமல், 'பீல்ட் பைக்'கையும் முறுக்கி பயப்பிடுத்துறாங்கள். உவங்கள விளங்கிக் கொள்ளவே ஏலாமக் கிடக்கு''. கிளிநொச்சிக் குளத்தில் தீர்த்தமாடிய பின்னும் குழப்பம் தீராமலேயே அங்கிருந்து கந்தன் அகன்றான்.

*அடையாள அட்டைப் பரிசீலனை, உடற்பரிசோதனை, பதிவுகள், விசாரணைகள், கண்காணிப்பு என்ற வழமையான பாதுகாப்புக் கெடுபிடிகள் சாதாரண மக்களுக்கு மட்டும் தான் என்றிருந்த காலம் மலையேறிவிட்டது. இப்போது கடவுள்கள் கூட, படைத்தரப்பின் அனுமதியில்லாமல் அசைய முடியாது. தமிழ்ப் பிரதேசங்களில் கோயில் கொண்ட குற்றத்துக்காக, இன்னமும் இந்தக் கடவுள்கள் மீதான கண்காணிப்பை விலக்க படைத்தரப்பு தயாராக இல்லை. அவர்களும் அனுமதி பெற்று, தம் அடையாளத்தை நிரூபிக்க வேண்டியுள்ளது. கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் தீர்த்தத்துக்கு வந்த பக்தர் ஒருவர் [illegible] இப்படிக் கேட்டார்.*

*''அப்பனுக்கே பாடம் சொன்ன சுப்பன் எப்போது இந்தப் படைகளுக்கு பாடம் படிப்பிப்பான்?''*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போராட்டம்



மிகப்பெரிய இனவழிப்புடன் அடங்கிப் போனது தமிழர்களது ஆயுதப் போராட்டம். அந்தப் போராட்டங்கள் மீது தூசிபடியத் தொடங்கிய காலங்களில் மீண்டும் மெல்ல தூசியைத் தட்டி ஜனநாயக வழியில் போராடத் தொடங்கியுள்ளனர் தமிழர்கள். அடக்கப்படுவர்கள் என்றும் அடிமைகளாகவே இருக்கப் போவதில்லை.

■ தில்லாலங்கடி

போராட்டம், அடக்கப்படுபவர்களின் உயிர்நாதம். இதனால்தான் இது தமிழர்களுடன் என்றும் இணைந்திருக்கின்றது. ஜனநாயக வழிமுறையிலான போராட்டமாக இருந்தாலும் சரி, ஆயுதம் தாங்கிய போராட்டமாக இருந்தாலும் அடக்குமுறையாளர்களை எதிர்க்கும் இந்தப் போராட்டம் தமிழர்களுக்கு மட்டும் ஏனோ இதுவரை முழுமையான வெற்றியைப் பெற்றுக் கொடுக்கவில்லை.

மிகப்பெரிய இனவழிப்புடன் அடங்கிப் போனது தமிழர்களது ஆயுதப் போராட்டம். அந்தப் போராட்டங்கள் மீது தூசிபடியத் தொடங்கிய காலங்களில் மீண்டும் மெல்ல தூசியைத் தட்டி ஜனநாயக வழியில் போராடத் தொடங்கியுள்ளனர் தமிழர்கள்.

2009ஆம் ஆண்டுக்குப் பின்னரான தமிழர்களின் ஜனநாயக வழியை அடியொற்றிய போராட்டங்கள் சொற்பமாக தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்தன. இருப்பினும் அவற்றுக்கு வீரியம் போதாது. மிக மந்தமாகவே அவை இடம்பெறுகின்றன. "செய்யலாமா", "செய்தால் சனம் வருமா", "குழப்பங்கள் வந்தால் என்ன செய்வது" என்ற தடுமாற்றத்தில் கட்சிகளும் தலைவர்களும் சிக்கிக்கொண்டு விட்டதால் எழுச்சியான போராட்டங்களுக்குத் தலைமைதாங்க இங்கே ஆள்கள் இல்லாமல் போய்விட்டார்கள். சிறையில் அடித்துக் கொல்லப்பட்ட டெல்றொக்ஷனுக்காக யாழ். நகரில் நடத்தப்பட்ட போராட்டம் முடிந்து இரண்டு வாரங்களாகி விட்டன. அதன் பின்னர் அரசியல் போராட்டங்களுக்கான முனைப்புகள் ஏதுமில்லை.

2009 ஆம் ஆண்டு நிகழ்ந்தேறிய இறுதிப் போரின் பின்னர் தமிழர் தரப்புகள் நடத்திய ஜனநாயகப் போராட்டங்கள் எத்துணை தூரம் வெற்றி பெற்றது என்பது விடை தெரியாத கேள்வியாகவே உள்ளது. ஆனால், அது தவிர வேறு தெரிவுகள் ஏதும் தமிழர்களின் முன்னால் இல்லை என்பதும் யதார்த்தமான உண்மை.

தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களான வடக்கு - கிழக்கில் போரின் பின்னர் இனப்பரம்பலை மாற்றியமைக்கும் நோக்குடன் பல்வேறு நடவடிக்கைகள் இலங்கை அரசினால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டன - மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழர் தாயகப் பகுதிகளில் சிங்கள மக்களைக் குடியேற்றுதல், புத்தர் சிலைகளை அமைத்தல், இராணுவக் குடியிருப்புக்களை நிரந்தரமாக அமைத்தல், இராணுவக் குடியிருப்புக்களுக்கு அண்மையில் அவர்களது குடும்பங்களை தங்க வைத்தல், இனக்கலப்பு மேற்கொள்ளல் என்று முற்றுப் பெறாத தொடர் கதையாக இனவிகிதாசாரத்தை மாற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ் மக்கள் தாங்கள் பூர்வீகமாக வாழ்ந்த நிலத்தில், தங்களது சொந்த மண்ணில் வாழ முடியாதவர்களாக இடம்பெயர்ந்து அல்லல்படுகின்றனர். இராணுவத்தினர் தங்களது முகாம்களை அமைக்க மக்களின் காணிகளை அபகரிக்கின்றனர்.

இவையெல்லாவற்றையும்விட அரசியல் தீர்வு ஒன்றைத் தமிழர்களுக்கு முன்வைப்பதற்கான சிறிய விருப்புக்கூட இன்றி மஹிந்த அரசு காலத்தைக் கடத்துகிறது. இருந்தாலும் இவற்றையெல்லாம் திரட்டி போராட்டங்களை முன்னெடுப்பதற்கோ மக்களை அணிதிரட்டுவதற்கோ இங்கு தலைமைகள் இல்லை என்பது கவலைக்குரியது.

ஒவ்வொரு உரிமைகளும் மறுக்கப்படுகின்ற, அடக்கப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தமிழர் தரப்புக்களால் ஜனநாயக வழியிலான குரல்கள் எழுப்பப்படுகின்றன. அவை வேண்டுகோள்களாகக் காற்றில் கரைந்துபோகின்றனவே தவிர, இலக்கை எட்டும் அம்புகளாக மாறுவதுமில்லை; மாற்றப்படுவதுமில்லை.

சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படுத்துவதற்கானவையாக மட்டுமே தமிழர் தரப்புகளின் தற்போதைய போராட்டங்கள் அமைந்திருக்கின்றன. இவற்றாலும் என்ன பயன் என்பது தெளிவில்லை. ஏதாவது பயன் கிடைத்ததாகவும் தெரியவில்லை.

ஆயுதப் போராட்டத்தின் முடிவின்பின் மீண்டுத் தமிழர் தரப்புகள் பூச்சியப் புள்ளியிலிருந்தே தமது போராட்டங்களை தொடங்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். எனவே இவற்றின் பயன்களையும் விளைவுகளையும் எதிர்பார்ப்பதற்கான காலம் போதமலும் இருக்கலாம். ஆனால் அதற்கான எமது அர்ப்பணிப்பு எந்தளவில் இருக்கிறது என்பதுதான் கேள்வி.

அடக்கப்படுவர்கள் என்றும் அடிமைகளாகவே இருக்கப் போவதில்லை. அதற்கான வழிகள் என்ன என்பதைக் கண்டறிவதுதான் தேவை.

# சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்வோம்

■ மாணிக்கம் லோகசிங்கம்,
உபதலைவர் பருத்தித்துறை பிரதேசசபை

தமிழர்கள் தமக்கென சமூக பொருளாதாரக் கட்டமைப்பைக் கொண்டிருந்த பொழுதும் அதனடிப்படையில் அரசியல் பொருளாதாரக் கட்டமைப்பை 20 ஆம் நூற்றாண்டில் உருவாக்கும் சந்தர்ப்பம் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகளால் கை நழுவிப் போனது.

தமிழர்கள் ஏன் போராடுகின்றார்கள்? தமிழ் மக்கள் எல்லோரும் இந்த ஜனநாயக ரீதியான உரிமைப் போராட்டத்தில் ஏன் இணைய வேண்டும்? இந்தக் கேள்விகளுக்கான விடைகளைத் தமிழர்கள் உணர வேண்டும். இல்லையேல் அவற்றை உணர்த்த வேண்டும். இது அரசியல்வாதிகளான எங்கள் எல்லோரினதும் பொறுப்பாகும்.

இலங்கை தனது சுயாதீனமான அரசியல் பொருளாதாரத்தைப் பெற்று 60 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. ஆனால் தமிழர்களின் அரசியல் உரிமைகளும் பொருளாதார சுதந்திரமும் இன்னமும் கேள்விக்குறியாகவே உள்ளன.

13 ஆம் நூற்றாண்டளவில் யாழ்ப்பாண இராச்சியம் வெளிப்படையாக வளர்ச்சியடைந்திருந்தது. அது தனக்கென அரசாட்சியை மாத்திரமல்லாமல் பேரினப் பொருளாதார முகாமைத்துவத்தையும் கொண்டிருந்ததை வரலாற்றாசிரியர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

16 ஆம் நூற்றாண்டளவில் இலங்கைக்கு வந்த அந்நிய ஆட்சியாளர்கள் யாழ்ப்பாண இராச்சியத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தாமலேயே தமது பரிபாலனத்தை மேற்கொண்டனர் என்பதும் துரதிஷ்ட வசமாக பிரிட்டிஷ் கோல்புறுக் குழுவினர் தமது நிர்வாக செலவினத்தைக் குறைப்பதற்காக முழு இலங்கைத் தீவினையும், ஒரே நிர்வாக ஆட்சிமுறைக்குள் கொண்டு வந்தனர் என்பதும் கிட்டிய வரலாறுகள்.

அது மாத்திரமல்லாமல் யாழ்ப்பாண இராச்சியத்தின் எல்லை யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை வரை நீண்டு செல்வதனைத் தவிர்த்து வடக்கையும், கிழக்கையும் இரு மாகாணங்களாகப் பிரித்தவர்களும் பிரிட்டிஷ்காரர்களே அன்றிலிருந்தே தமிழர்களின் பிரதேச ஒருமைப்பாட்டு எல்லைக்கு சாவுமணி அடிக்கப்பட்டது.

தமிழர்கள் தமக்கென சமூக பொருளாதாரக் கட்டமைப்பைக் கொண்டிருந்த பொழுதும் அதனடிப்படையில் அரசியல் பொருளாதாரக் கட்டமைப்பை 20 ஆம் நூற்றாண்டில் உருவாக்கும் சந்தர்ப்பம் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகளால் கை நழுவிப் போனது. இது சிங்கள மக்களினாலோ அல்லது சிங்கள இயக்கங்களினாலோ ஏற்படுத்தப்பட்டதல்ல.

எமது புவியியல் ரீதியான ஒருமைப்பாட்டைக் கூறுபோட்ட பிரிட்டிஷ் அரசே தமிழர்கள் தமது தேசத்தை இலங்கை என்ற ஒரு தனிப்பட்ட தீவுக்குள் இணைத்துக் கொள்வதற்குக் காரணமாக இருந்தவர்கள். எனினும் சுயாதீனம் பெற்ற இலங்கைக்குள் நடந்த தேர்தல்களில் தமது வெற்றி எனும் நோக்கத்திற்காக சிங்கள அரசியல் கட்சிகள் தமிழர்களை இரண்டாந்தரப் பிரஜைகள் எனக் கணிப்பிடும் அளவுக்கு நடந்து கொண்டார்கள்; கொள்கிறார்கள். இதில் எந்தவித கருத்து முரண்பாடும் இல்லை.

எது எவ்வாறிருப்பினும் தமிழர் கட்சிகளும் இதற்குத் தீனி போடுபவர்களாக நடந்து கொள்ளவில்லை என்று கூறிவிட முடியாது. இந்த விதமாகக் கூர்மையடைந்த பிரச்சினைகள் தமிழர்கள் வாழ்வில் சொல்லொணாத் துயரங்களையும் அவலங்களையும் ஏற்படுத்தின. இவற்றையெல்லாம் நன்கறிந்து கொண்ட இந்தியா, இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை 13 ஆவது அரசியல் திருத்தத்தின் ஊடாக வழங்கினர். அந்த சீர்திருத்தம் அரசியல் ரீதியான பல அதிகாரங்களைத் தர மறுத்தாலும் அந்த அதிகாரங்களைக் கோடிட்டுக் காட்டியது. அதனையும் விட மேலாக தமிழர்களின் பூர்வீகமான புவியியல் பிரதேசங்களான வடக்கையும், கிழக்கையும் ஒன்றிணைத்தது. இவை தற்காலிகமாக இணைக்கப்பட்டிருந்தாலும்கூட 1987 இற்குப் பின்னர் தமிழர்களின் போராட்டம் அதனை நிரந்தரமாக இணைக்கப்படுவதற்கும் கோடிட்டுக் காட்டப்பட்ட அதிகாரங்களை உறுதிப்படுத்துவதற்குமாகவே இருக்க வேண்டும் என முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி எண்ணியிருந்தார்.

துரதிஷ்டவசமாக அதற்கு எதிராக அனைத்து நிகழ்வுகளும் நடந்தேறின. இலங்கை என்ற ஒரு தீவினுள் சங்கமமாகிய தமிழர்களின் பாரம்பரிய புவியியல் பிரதேசம் மீட்கப்படுவதற்கு இந்தியா தந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டிருக்கலாம். அப்படி நடந்திருந்தால் பின்னால் வந்த இழப்புகள் பல குறைந்திருக்கும்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் தோல்வியைத் தொடர்ந்து தமிழர்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடுகளினால் ஆற்றல் மிக்க தமிழ் மக்களில் மிகப் பெருந்தொகையானவர்கள் ஜனநாயக ரீதியான அரசியலில்கூட ஈடுபடாமல் ஒதுங்கியிருக்கும் நிலை ஏற்பட்டது. இப்போது எமக்கு அரசியலில் நல்லதொரு சந்தரப்பம் கிடைத்துள்ளது. நாங்கள் நிதானமான முறையில் சகிப்புத் தன்மை பொருந்திய, தீர்வை நோக்கிப் பயணிக்கக் கூடிய உறுதியான அரசியலைக் கட்டி வளர்க்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா, சீனா எதிர் இலங்கை

■ விகேளம்

போருக்குப் பின்னரான இலங்கை – இந்திய உறவில் நெருக்கடிகளும் திருப்பங்களும் மாறி மாறி நிகழ்ந்த வண்ணம் உள்ளன. இரு நாடுகளுமே தங்களின் இரட்டை வேடங்களை யாரும் புரிந்து கொள்ளக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கின்றன.

இந்தியா இலங்கை மீது அக்கறை கொண்டு செயற்படுவதற்கு இருக்கக்கூடிய இரண்டு நிலைப்பாடுகளில் ஒன்று சீனாவின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்துவது மற்றையது தமிழக அரசியல்வாதிகளை திருப்திப் படுத்துவது.

இதற்காக இந்திய அரசு இலங்கை அரசுடன் சாதகமாகவும் பாதகமாகவும் நடந்துகொள்ள முற்படுகிறது. ஏற்கனவே ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவால் கொண்டு வரப்பட்ட இலங்கைக்கு எதிரான தீர்மானத்திற்கு அமெரிக்க அழுத்தத்துக்கு உட்பட்டோ அல்லது தமிழக அரசியல்வாதிகளை கட்டுப்படுத்தவோ ஆதரவாக வாக்களித்திருந்தது.

மறுபுறத்தில் இலங்கையின் ஆத்திரத்தைத் தணிக்க இந்தியா இலங்கையின் நட்புநாடு என்று அயல் நாடு என்பதையும் இலங்கைப் பிரச்சினை தொடர்பில் இந்தியாவுக்கு தொடர்ந்து அக்கறை இருக்கும் என்று கருத்து வெளியிடுவது மட்டுமல்லாது இராணுவத்தினருக்குப் பயிற்சி அளித்தல், வர்த்தக தொழில்நுட்ப உடன்படிக்கைகளை பரிமாறிக் கொள்ளுதல், ஆலோசனைகளை வழங்குதல் என்பவற்றை செயல் வடிவிலும் காட்டி வருகிறது.

இலங்கையுடன் சீனா கொண்டுள்ள உறவு நெருக்கமாகி வருவதாக இந்தியா உணர்கிறது. இதற்கு நல்ல உதாரணமாக கொழும்பு காணி விவகாரம் இந்திய அரசின் சிரத்தில் ஏறியுள்ளது. இதனால் இலங்கையைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க அல்லது கவனிக்க இந்தியா விரும்புகிறது. ஆனால் இவற்றுக்கு மேலாக இந்திய அரசுக்கு தமிழகத்தின் அழுத்தம் தொடர்ச்சியாக இருந்து வருகிறது.

இந்தியா ஒரு கட்டத்தில் தமிழகத்திலும் தங்கியிருக்க வேண்டிய நிலை உள்ளது. குறிப்பாக உணவு உற்பத்தி, அரசியல் நிலைப்பாடு என்பவற்றில் தமிழக நிர்வாகத்தில் தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. எனவே தமிழகத் தமிழர்கள் முற்றிலும் மத்திய அரசுக்கு எதிராக அணி திரளாமல் இருக்கும் வகையில் தனது அரசியல் நகர்வுகளைச் செய்து வருகிறது. தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியை வலுப்படுத்துவது இதன் மற்றுமொரு பணியாக உள்ளது.

ஆனால், இலங்கையை கவனிக்காது விட்டால் அங்கு சீனா முற்றுமுழுதாக ஆதிக்கம் செலுத்தி எதிர்காலத்தில் இந்தியாவுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தலாம் அல்லது நெருக்கடியை கொடுக்கலாம் என்ற ஐயமும் இந்தியா விடம் தொடர்ச்சியாக குடி கொண்டுள்ளது.

வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களுக்கெல்லாம் ஈடுகொடுத்து அவ்வளவு சனத் தொகைக்கு மத்தியிலும் சீனா உலக நாடுகளுடன் போட்டி போட்டு முன்னேறி வருகிறது. யாரையும் நிரந்தரமாக பகைத்துக் கொள்ள விரும்பாத இவர்கள் எந்த நாடு தனக்கு போட்டியாக இருக்கிறதோ அந்த நாட்டின் உத்திகளையும் வியூகங்களையும் அறிந்து அதற்கேற்றாற் போல் தன்னைத் தயார் படுத்திக் கொள்கிறார்கள். சீனாவின் இரகசியக் கொள்கையாக உள்ளது. வெளியில் அதிகம் அலட்டிக்கொள்ளாத இவர்களின் தந்திரோபாயம் இன்றைய மாற்றத்திற்கு ஏற்றதாகவே உள்ளது.

இலங்கை இப்போது உள்ளகத்திலும் வெளியகத்திலும் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்துள்ளது. அரசியல் அதிகாரங்களை ராஜபக்ஷ குடும்பம் கைப்பற்றி வைத்திருந்தாலும் அரசியல் வங்குரோத்தும் பொருளாதார நெருக்கடியும் உச்சத்தில் உள்ளன என்பனது அவர்களது தடுமாற்றங்களில் இருந்து தெரிகிறது. வெளியில் காட்டிக் கொள்ள விரும்பாத இந்த வங்குரோத்து நிலை பூனை கண்ணை மூடிக் கொண்டு பால் பருகியது போல எல்லா மட்டங்களிலும் பரவியுள்ளது.

போர்க் காலத்தில் சீனா வழங்கிய உதவிகள் வெளியில் சொல்ல முடியாததாயினும் மறக்க முடியாதவை. இதற்காக சீனாவுக்கு நீண்ட காலத்திற்கு நன்றிக்கடன் செய்ய வேண்டியது கடமையாக உள்ளது. இந்த விடயத்தில் இந்தியா என்ன ஒதுங்கியா இருந்தது. இல்லை! அவர்களும் சரிக்குச் சமம் போருக்கு சகல பணியாற்றி இருந்தனர். ஆனால் ''பக்கத்து வீட்டிற்கு [தமிழகம்] தெரிந்தால் பிரச்சினையாகிவிடும் வெளியில் சொல்லிவிடாதைங்கோ'' என்பது இந்தியாவின் கோரிக்கையாக இருந்தது. இந்த நிலையில் இந்தியா இலங்கையை எதிர்ப்பதும் ஆதரிப்பதுமான நிலைப்பாட்டில் இருந்து வந்துள்ளது.

இதனால் இந்தியாவை வெறுத்துக்கொள்ள விரும்பாத இலங்கை அரசு, இப்போது அதன் வெளிவிவகார உறவுகளைப் பலப்படுத்த தொடங்கியுள்ளது. தமிழகக் கட்சிகளின் எதிர்ப்பால் இந்த உறவுக்கு பாதிப்பு ஏற்பட்டு விடுமோ என்ற ஐயமும் இலங்கைக்கு வந்துள்ளது.

இந்த முரண்பாட்டு நிலையை நீக்க புதிய வியூகம் ஒன்று இலங்கை வெளி விவகார அமைச்சினால் வகுக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் தமிழ் பிரதிநிதிகளை அமர்த்துவது இதன் முதற்கட்ட வேலையாக உள்ளது. கொல்கத்தா, புதுடில்லி, மும்பை, சென்னை போன்ற இடங்களில் உள்ள இலங்கைத் தூதரகம் மற்றும் உப தூதரகங்களில் தமிழ் பேசும் அதிகாரிகளின் எண்ணிக்கை வெகு விரைவில் அதிகரிக்கப்படவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

தமிழகத் தலைவர்களின் கொக்கரிப்பு அவ்வளவு பெரிய நெருக்கடிகளை தராது எனினும் இந்திய மத்திய அரசை தொடர்ச்சியாக வலியுறுத்தினால், மத்திய அரசின் நிலைப்பாடு இலங்கைக்கு எதிராக திரும்பி விடுமோ என்ற எண்ணமே தூதரகங்களுக்கு தமிழ் அதிகாரிகளை நியமிப்பதற்கும் வழிவகுத்துள்ளது. எது எப்படியோ இலங்கை – இந்தியா – சீனா முக்கோண உறவு பாதிக்கப்படக் கூடாது என்பதில் இலங்கை தெளிவாக உள்ளது. ஒன்றுக்காக ஒன்றை அடகு வைத்தாவது உறவைப் பேண வேண்டும் என்பதே இலங்கையின் நிலைப்பாடு. இதுவே அவர்களது வங்குரோத்து அரசியலாகவும் உள்ளது.

## வெறுவாய் மெல்லும் அரசியல்

*காகம் திட்டி மாடு சாகாது என்பது போல தமிழகத் தலைர்களின் கொக்கரிப்பும் எந்தப் பய னும் அற்றதாகவே முடியும் என்பது இலங்கை மற்றும் இந்திய அரசிற்கு தெரிந்த உண்மை. போர் நடைபெற்றுக்கொண்டிருந்த போதும் தமிழகத் தலைவர்களால் கொக்கரிக்க மட்டுமே முடிந்தது. அவ்வாறான சிலவற்றை இங்கே பார்க்கலாம்.*

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலர் டி. ராஜா**

இலங்கை வீரர்களுக்கு இந்தியாவில் எவ்வித ஆயுதப் பயிற்சியையும் அளிக்கக் கூடாது என்று தமிழக அரசும், தமிழகத்தின் அனைத்து அரசியல் கட்சிகளும் குரல் கொடுத்து வருகின்றன. அந்த எதிர்ப்பை பொருட்படுத்தாமல், இலங்கைப் படையினருக்கு பயிற்சி தொடரும் என்ற பாதுகாப்பு இணை அமைச்சரின் பதில், வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் உள்ளது.

**தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் கட்சித் தலைவர் எம் யுவராஜா**

தமிழகத்தில் மட்டுமல்ல இந்தியாவின் எந்த மூலையிலும், இலங்கை இராணுவ வீரர்களுக்கு பயிற்சி அளிக்கக் கூடாது. இலங்கை நட்பு நாடு போல செயல்படுவதில்லை. இலங்கை வெலிங்டன் பயிற்சி முகாமில், பயிற்சி பெற்று வரும் இலங்கை இராணுவ அதிகாரிகளை நாட்டைவிட்டு வெளியேற்ற வேண்டும். இந்திய அரசு இலங்கை இராணுவத்துக்கு பயிற்சி அளித்தால் அது தமிழக மீனவர்களையும், அங்குள்ள இலங்கை தமிழர்களையும் தாக்கவே பயன்படும். ஆகவே இலங்கை இராணுவ அதிகாரிகளை இந்தியாவில் இருந்து திருப்பி அனுப்ப வேண்டும்.

**தேசிய முற்போக்கு திராவிட கழக தலைவர் விஜயகாந்த்**

உலக அரங்கில் இலங்கை அரசின் இனவெறிப் போக்கு தமிழர் நெஞ்சங்களில் எரியும் ஈட்டியென பாய்ந்துள்ளது. இலங்கையில் தமிழர் வாழும் பகுதிகள் சிங்கள அரசின் இராணுவப் பகுதியாக மாற்றப்பட்டு வருகின்றன. இந்த போக்கை தடுத்து நிறுத்த இந்திய அரசு எதுவும் செய்யவில்லை.

தமிழர்களையும், தமிழ்நாட்டையும் பணயம் வைத்து இலங்கை அரசோடு இந்திய அரசு ஒரு தலை நட்பு கொள்ள துடிப்புடன் செயற்படுவது தமிழ் நாட்டு மக்களுக்கு புரியவில்லை. சிங்கள இனவெறி அரசின் இந்த துரோக போக்கிற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் இலங்கை இராணுவத்தை தமிழகத்தில் இருந்து விரட்டி அடிக்க வேண்டும்.

**பா.ம.க. நிறுவனர் ராமதாஸ்**

இலங்கையுடனான உறவு குறித்த விடயத்தில் மத்திய அரசு தவறான கொள்கைகளையே கடைப்பிடித்து வருகிறது. இனியாவது இந்த தவறை திருத்திக் கொள்ளவேண்டும். வெலிங்டனில் பயிற்சி பெற்று வரும் இலங்கை இராணுவத்தினர் இருவரையும் உடனடியாக அவர்களின் நாட்டிற்கு திருப்பி அனுப்ப வேண்டும். அதுமட்டுமின்றி, இனி இலங்கைப் படையினருக்கு இந்தியாவின் எந்தப் பகுதியிலும் பயிற்சி அளிக்கப் படாது

**நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான்**

தமிழக மீனவர்கள் 546 பேரை கொன்று குவித்த ஒரு நாட்டின் இராணுவத்துக்கு தொடர்ந்து பயிற்சி கொடுப்போம் என்று கூறுவார்களேயானால், இந்திய மீனவர்கள் மீதும், அந்நாட்டு தமிழினத்தின் மீதும் இலங்கை படைகள் நடத்திய, நடத்தி வரும் தாக்குதல்கள் நியாயமானது என்பதுதான் மத்திய அரசின் நிலைப்பாடா?

**விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல் திருமாவளவன்**

தமிழகத்தில் மட்டுமல்லாது இந்தியாவின் எந்த இடத்திலும் இலங்கை இராணுவத்தினருக்கு பயிற்சி அளிக்கக் கூடாது என்று டெசோ மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

இந்த நிலையில் இந்திய அரசு இலங்கை இராணுவத்தினருக்கு திருட்டுத்தனமாக தமிழகத்திலேயே பயிற்சி அளிப்பது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

இலங்கைத் தமிழர் விவகாரத்தில் தமிழக முதல்வர் ஜெயலலிதா கடிதம் எழுதுவதை நிறுத்தி விட்டு, சிறப்பு பிரதிநிதிகளை அனுப்ப மத்திய அரசை உடனடியாக நடவடிக்கை எடுக்க வலியுறுத்த வேண்டும்.

**ஜெயலலிதா பிரதமருக்கு மீண்டும் கடிதம்**

இலங்கை இராணுவத்தினருக்கு தமிழகத்தில் பயிற்சி வழங்குவதை உடன் நிறுத்த வேண்டும், என்ற கோரிக்கையை வலியுறுத்தி, பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா மீண்டும் கடிதம் எழுதியிருந்தார். நீலகிரி மாவட்டம் வெலிங்டனில் கடந்த 4 மாத காலமாக பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இந்த தகவலை இராணுவம் மாநில அரசுக்கு தெரிவிக்கவே இல்லை, இதன் மூலம் தமிழக மக்களின் உணர்வுகளை, மத்தியஅரசு மதிக்கவில்லை என கடிதத்தில் கடுமையாக சாடியிருந்தார்.

அத்துடன் ஜெயலலிதாவின் கடிதத்திற்கு பதில் அளித்திருந்த மத்திய இணை அமைச்சரின் கருத்துக்கும் ஜெயலலிதா கண்டனம் வெளியிட்டிருந்தார். இலங்கை இராணுவத்தினருக்கு, இந்தியாவில் பயிற்சி அளிப்பது தொடரும் என மத்திய இராணுவத்துறை இணை அமைச்சர் பல்லம் ராஜு ஜெயலலிதாவின் கடிதத்துக்கு பதிலளித்திருந்தார்.

**அ.தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் தீர்மானம்**

அ.தி.மு.க. செயற்குழு கூட்டம் சென்னையில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் முக்கியமான 16 தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. இலங்கை இராணுவத்திற்கு இந்தியாவில் பயிற்சி அளிப்பதை மத்திய அரசு கைவிட வேண்டும் என அவற்றில் ஒரு தீர்மானம் அமைந்திருந்தது.

**பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர் இல.கணேசன்**

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழர் பாதிக்கப்படுவதற்கு மத்திய அரசு உடந்தையாக உள்ளது.

லட்சக்கணக் கான தமிழர்களை அழித்துவிட்டு நட்பு நாடு எனக் கூறிக்கொண்டு இலங்கை இராணுவத்துக்கு இந்தியாவில் பயிற்சி அளிப்பது கண்டனத்துக்குரியது.

**தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஞானதேசிகன்**

நீலகிரியில் பயிற்சி பெறும் இலங்கை இராணுவ அதிகாரிகளைத் திருப்ப அனுப்ப வேண்டும் என்ற தமிழகத்தின் கோரிக்கையை மத்திய பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் பல்லம் ராஜு நிராகரிக்கவில்லை. நட்பு நாடு என்பதால் இலங்கை இராணுவத்தினருக்கு தொடர்ந்து பயிற்சி அளிக்கப்படும்.

இதனை தவறாக அர்த்தம் கொள்ளக் கூடாது. ஒப்பந்தங்களின் அடிப்படையில் பயிற்சி அளிக்கப்படுவதால் உடனடியாக மத்திய அரசு திருப்பி அனுப்பிவிட முடியாது. இனி வரும் காலங்களில் மத்திய அரசு பொறுப்புடன் செயற் படும்.

**தி.மு.க. தலைவர் கருணாநிதி**

பல முறை கேள்வி பதில் அறிக்கைகளும் கடிதங்களும் எழுதியிருக்கிறார். ஓகஸ்ட் 12ஆம் திகதி தமிழீழ ஆதரவு அமைப்பான டெசோ மாநாட்டில் முக்கிய தீர்மானமாகவும் இலங்கை இராணுவத்திற்கு பயிற்சி அளிக்கக்கூடாது எனவும் வலியுறுத்தினார்.

**குன்னூர் முற்றுகைப் போராட்டம்**

குன்னூரில் இராணுவ பயிற்சி கல்லூரி மையத்தை முற்றுகையிட முயன்ற, தே.மு.தி.க. மற்றும் நாம் தமிழர் கட்சியைச் சேர்ந்த 92பேரை, குன்னூர் பொலிஸார் ஓகஸ்ட் 27ஆம் திகதி கைது செய்தனர்.

இதில், தே.மு.தி.க. கட்சியைச் சேர்ந்த 68 பேரும், நாம் தமிழர் கட்சியைச் சேர்ந்த 24 பேரும் அன்றைய தினம் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த வேளை கைது செய்யப்பட்டிருந்தனர்.


**தமிழக சட்டக்கல்லூரி மாணவர்கள் மறியல் போர்**

இலங்கை இராணு வத்துக்கு தமிழ்நாட்டில் பயிற்சி அளிப்பதை கண்டித்து தமிழக சட்டக் கல்லூரி மாணவர்கள் கடந்த ஓகஸ்ட் 30 ஆம் திகதி வகுப்புகளைப் புறக்கணித்து கல்லூரி வாசலில் ஆர்ப்பாட்டம் செய்தனர். தொடர்ந்து 15 மாணவிகள் உட்பட 50 மாணவர்கள் காட்பாடி ரயில் நிலையத்துக்கு சென்று மறியல் போராட்டத்திலும் ஈடுபட்டிருந்தனர். ★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

■ உடுவில் மானா

# யாழ். மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு ஜனநாயகப் போராட்டத்தில் ஒரு மைல் கல்




மூன்று தசாப்த கால தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர், உரிமைக்கான போராட்டம் புதிய ஒரு திருப்பு முனையைப் பெற்றுள்ளமையை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். விரும்பியோ விரும்பாமலோ தமிழ் மக்கள் ஜனநாயக ரீதியில் தம்முடைய உரிமைப் போராட்டத்தை முன் நகர்த்திச் செல்ல வேண்டிய காலத்தின் தேவையொன்று ஏற்பட்டுள்ளது.

எங்கெல்லாம் அடக்கு முறைக்கு எதிரான உரிமைக்குரல் எழுகின்றதோ அங்கெல்லாம் ஆட்சியாளர் அதனை இரும்புக்கரம் கொண்டு அடக்குவதற்குத் தான் முயற்சிக்கிறார்கள். அதற்காக அவர்கள் தமது கட்டுப்பாட்டில் இருக்கின்ற ஆயுதப்படைகளையோ பொலிஸாரையோ பயன்படுத்துகின்றனர். பலாத்காரமாகவோ அல்லது ஜனநாயகம் என்ற போர்வையிலோ உரிமைப் போராட்டங்களின் குரல்வளையை நெரிக்கவே விரும்புகின்றனர்.

அவ்வாறான சந்தர்ப்பங்களிலெல்லாம் பாதிக்கப்பட்ட தரப்பினர் நீதி வேண்டி நீதிமன்றங்களை நாடுகின்றமையை அவதானிக்கக் கூடியதாக இருக்கும். எனினும் வலுவேறாக்க கோட்பாட்டின் [Separation of Power] அடிப்படையில் தனித்தும் சுயாதீனமாகவும் இயங்கவேண்டிய நீதித்துறையிலும் ஆளுந்தரப்பினர் மறைவான தலையீடுகளையும், நெருக்குதல்களையும் ஏற்படுத்தி நீதிமன்றத்தீர்ப்புக்களை கிடப்பில் போடவோ அல்லது இழுத்தடிப்பு செய்யவோ திரைமறைவு முயற்சிகளை மேற்கொண்ட வண்ணமிருப்பர். இதனை வரலாற்றுப் புத்தகத்தின் கடந்த காலப்பக்கங்களை புரட்டிப் பார்த்தால் அறியக் கூடியதாகவிருக்கும்.

அந்த வகையில் இல்லாமல் மிக நேர்த்தியாய் காலம் பிந்தாமல் அண்மையில் யாழ். மேல் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பொன்று ஜனநாயகத்துக்கான போராட்ட மூச்சை உத்வேகத்துடன் உள்வெடுக்க வழிசமைத்துள்ளது எனலாம்.

மூன்று தசாப்த கால தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர், உரிமைக்கான போராட்டம் புதிய ஒரு திருப்பு முனையைப் பெற்றுள்ளமையை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். விரும்பியோ விரும்பாமலோ தமிழ் மக்கள் ஜனநாயக ரீதியில் தம்முடைய உரிமைப் போராட்டத்தை முன் நகர்த்திச் செல்ல வேண்டிய காலத்தின் தேவையொன்று ஏற்பட்டுள்ளது.

முப்பது வருடங்களுக்கு முன்னர் தமிழ்த் தலைவர்களால் முயன்று முடியாமல் போனதாக கைவிடப்பட்ட அரசியல் ரீதியிலான போராட்டத்தை அவர்கள் மீண்டும் புதிய முனைப்புடனும் அதிக உத்வேகத்துடனும் கையிலெடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

அந்த வகையிலான போராட்டத்திலே ஈழப்போராட்டத்துக்கான ஜனநாயக போரில் முகிழ்விடும் இளைய தலைமுறையினர் நிலத்திலும், புலத்திலும் அதிக முனைப்புடன் செயற்படுவதை அவதானிக்கக் கூடியதாகவிருக்கின்றது. இந்த வகையில்தான் அண்மையில் யாழ். நீதிவான் நீதிமன்ற தீர்ப்பு ஒன்றிற்கெதிராக யாழ்.மேல்நீதிமன்றில் மீளாய்வு விண்ணப்பமொன்று தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மீளாய்வு விண்ணப்பமானது [Revision Application] தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரனால் 18.06.2012 ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நில அபகரிப்பிற்கெதிரான ஜனநாயக ரீதியான எதிர்ப்புப் போராட்டத்திற்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பொலிஸாரால் பெறப்பட்டிருந்த தடையுத்தரவுக்கு எதிராக அந்தக் கட்டளையை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுத் தாக்கல் செய்யப்பட்டது. மனுதாரரின் சார்பில் சட்டத்தரணிகள் மணிவண்ணன், குருபரன், சுகாஸ் ஆகியோர் முற்பட்டனர். இந்த வழக்கில் எதிர் மனுதாரராக யாழ்ப்பாண தலைமையகப் பொலிஸ் பொறுப்பதிகாரி சமன் சிகேராவும் சட்டமா அதிபரும் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தனர். அவர்களுக்காக அரச சட்டத்தரணி வி.திருக்குமரன் முற்பட்டனர்.

மனுதாரர் தனது விண்ணப்பத்தில் நீதிவானால் சொல்லப்பட்ட விடயங்களாகத் தொடுத்துக் காட்டப்பட்ட ''அவலங்கள் மீது அரசியல் நடத்தி மீண்டும் இருண்ட யுகத்திற்கு மக்களை இட்டுச் செல்வதற்கு முயற்சித்தல்; சனநாயக மறுப்பையும், ஆயுதக் கலாசாரத்தையும் மீண்டும் முனைப்புடன் அரங்கேற்றுவதற்கு முயற்சித்தல், மக்களை அரசியல் பகடைக்காய்களாக்கி அவலங்களின் மீது அரியணை ஏற முயற்சித்தல் போன்ற கருத்துக்கள் எவ்வித சட்ட அடிப்படைகளும் அற்றவை. சட்ட ஆதாரங்கள் அற்றவை'' எனத் தெரிவித்தார்.

மேல் நீதிமன்றின் அறிவித்தலின் பேரில் மன்றில் சமூகமாயிருந்த யாழ்ப்பாணப் பொலிஸ் பொறுப்பதிகாரி தான் எவ்வித கட்சிப் பாகுபாடும் அற்றவரென வும் பொதுமக்களின் பாதுகாப்பிலேயே தான் கூடிய கவனமெடுத்தார் எனவும் அதனாலேயே தடையுத்தரவை பெற்றதாகவும் கூறினார்.

யாழ்ப்பாண நகரப் பகுதி சனசந்தடியுள்ள, பரபரப்பான நகரப் பகுதி எனவும் இந்த நடவடிக்கை மூலம் கலகம் ஏற்படக் கூடிய சாத்தியக் கூறு காணப்பட்டதாகவும் தெரிவித்தார். இதற்குப் பதிலளித்த மனுதாரரின் சட்டத்தரணிகள் பொதுமக்களின் வெளிப்பாட்டு சுதந்திரத்தில் தலையிடுவதற்குப் பொலிஸாருக்கு அதிகாரமில்லை. அது அரசியலமைப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மக்கள் அதிகம் கூடுமிடங்களிலேயே இவ்வாறான எதிர்ப்பு நடவடிக்கைகள் மூலம் வெளிப்பாட்டு சுதந்திரத்தை பேண முடியும். கொழும்பில் மக்கள் அதிகம் கூடும் லிப்ரன் சதுக்கம், புறக்கோட்டை, கோட்டை ரயில் நிலையம் போன்ற பகுதிகளில் இவ்வாறான எதிர்ப்பு பேரணிகள் நடத்துவதற்கு பொலிஸார் தடைவிதிப்பதில்லை. அத்துடன் ஜே.வி.பியினர் ஊர்வலம் வந்தபோதுகூட பொலிஸார் தடை விதிக்கவில்லையென வாதிட்டனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மன்றில் பிரசன்னமாகியிருந்த அரச சட்டத்தரணி ''குறித்த கவன ஈர்ப்பு போராட்டம் சம்பந்தமாக போதிய நெறிப்படுத்தல்களை மனுதாரருக்கு கொடுக்க முடியாமல் போன காரணத்தினால் ஒரு தடை உத்தரவைப் பெற வேண்டிய அவசிய ஏற்பட்டிருந்தது. எங்களுக்கு குறுகிய கால அவகாசம் இருந்தபடியால் நடவடிக்கைகளில் தவறுகளை இழைத்து இருக்கிறோம். இனி வரும் காலங்களில் இவ்வாறான கவனவீர்ப்பு போராட்டத்திற்கு சில நெறிப்படுத்தல்களை வழங்குவோம்'' என உத்தரவாதமளித்தார்.

இரு தரப்பு வாதங்களையும் செவிமடுத்த நீதிபதி வழங்கிய தீர்ப்பு மிக முக்கியமானதொன்றாக அமைந்தது. ஆங்கிலத்தில் அமைந்திருந்த அவருடைய தீர்ப்பில் கற்றறிந்த நீதிபதி ''இந்த மீளாய்வு விண்ணப்பமானது நீதிவானால் வழங்கப்பட்ட கட்டளை சட்டரீதியானதா இல்லையா என்பதை தீர்மானிப்பதை விட இந்த நீதிமன்றிற்கு அரசமைப்பின் உறுப்புரைகள் 14[1][அ], 14[1][ஆ] மூலம் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள உரிமைகள் தொடர்பாக வழிகாட்டுதல்களை வழங்க வேண்டிய கடமையை விதித்துள்ளது.

அரசமைப்பின் உறுப்புரை 14 ஆனது, ஒவ்வொரு குடிமகனும் [அ] பேச்சு, வெளிப்பாட்டு, வெளியீட்டு சுதந்திரத்துக்கும்

[ஆ] அமைதி முறையான ஒன்று கூடும் சுதந்திரத்துக்கும் உரித்துடையவர்கள் எனக் கூறுகின்றது.

அரசின் ஓர் அங்கமான நீதித்துறையானது அரசமைப்பினால் அங்கீகரிக்கப்பட்டு பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மதிப்பதற்கும், பாதுகாப்பதற்கும் முன்னேற்றுவதற்கும் கடமைப்பட்டுள்ளது எனத் தெரிவித்ததுடன் யாழ்ப்பாண நீதிவானாக இருந்த கணேசராசாவால் வழங்கப்பட்ட தடையுத்தரவை ஒதுக்கி வைப்பதற்கு அல்லது நீக்குவதற்கும் கட்டளையிட்டார். அத்துடன் வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கும் இந்தக் கட்டளையின் பிரதியை எதிர்கால நடவடிக்கைக்காக அனுப்பி வைக்குமாறும் நீதிமன்றின் பதிவாளரை நெறிப்படுத்தினார்.

ஒரு வழக்கென்ற ரீதியில் பார்க்கும்போது இந்த தீர்ப்பானது வழமையான ஒன்றாகக் காணப்பட்டாலும் இனிவரும் காலங்களில் அரசமைப்பினால் உறுதிப்படுத்தப்பட்டு ஆளுந்தரப்பினால் மறுக்கப்பட்டு வரும் சிறுபான்மையோரின் உரிமைகளை சட்ட ரீதியாகவோ அல்லது ஜனநாயக ரீதியாகவோ பெற்றெடுப்பதற்கான போராட்டத்தில் இந்த தீர்ப்பு ஒரு மைல்கல் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழப் போராளி இயக்கங்களுக்கு இடையில் அன்று சகோதரச் சண்டையை மூட்டியவர் கருணாநிதிதான்

பழ. நெடுமாறன்

தமிழீழ விடுதலைக்காகப் போராடிய அமைப்புகளிடையே சகோதரப் போருக்குத் தூபமிட்டவர் கலைஞர் கருணாநிதிதான் என்று பழ.நெடுமாறன் குற்றஞ்சாட்டியுள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

ஒரே பொய்யைத் திரும்பத் திரும்பச் சொல்வதன் மூலமாக அதை உண்மையாக்கிவிட முடியும் என்று நினைப்பவர்களில் கருணாநிதி முதன்மையானவர். ஈழத்தில் இன அழிப்புப் போர் நடந்த காலத்தில் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தவர் கருணாநிதி.

மத்தியில் தனக்கு இருந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி அதைத் தடுக்கவில்லை என்பது தமிழக மக்கள் அவர் மீது வைக்கும் குற்றச்சாட்டு.

அதற்கு பதில் சொல்வதற்கு முதுகெலும்பு இல்லாத அவர், விடுதலைப் புலிகள் நடத்திய சகோதரச் சண்டை காரணமாகத்தான் இந்த இன அழிப்பு நடந்தது என்று திரும்பத் திரும்பச் சொல்லித் திசை திருப்பப் பார்க்கிறார்.

இஞ்சி இருக்கா என்றால் இல்லை என்று சொல்லாமல், புளி இருக்கு என்று சொல்லும் வியாபாரத் தந்திரமே அவரிடம் இருக்கிறது. தமிழினப் பற்று கொஞ்சமும் இல்லை!

அவர் சொல்லும் சகோதரச் சண்டையை யார் தொடங்கி வைத்தது?

1984ஆம் ஆண்டில் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். ஈழ விடுதலைப் போராளிகள் அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்ற கருத்தை அடிக்கடி வலியுறுத்தி வந்தார். அதற்காக, போராளி அமைப்புகளின் தலைவர்களுக்கு ஒரு பகிரங்கமான அழைப்பையும் விடுத்தார். குறிப்பிட்ட நாளில் தன்னை வந்து சந்திக்குமாறு அனைத்துப் போராளி இயக்கத் தலைவர்களுக்கும் தனித் தனியே கடிதங்களை அனுப்பினார்.


எம்.ஜி.ஆரின் இந்த முயற்சியை முறியடிக்கும் வகையில் தி.மு.க. தலைவர் கருணாநிதி செயல்பட்டார். எம்.ஜி.ஆர். குறிப்பிட்ட நாளுக்கு முதல்நாளில் தன்னைச் சந்திக்கும்படி போராளிகளின் தலைவர்களுக்கு கருணாநிதி அழைப்பு விடுத்தார்.

உண்மையிலேயே போராளிகளை ஒன்றுபடுத்த வேண்டும் என்ற எண்ணம் இவருக்கு இருந்திருக்குமானால். எம்.ஜி.ஆர். அழைப்பு விடுவதற்கு முன்னர் அழைப்பு விடுத்திருக்கலாம். ஆனால், எம்.ஜி.ஆரின் அழைப்பு பற்றிய செய்தி வெளியானவுடன் போட்டிக்காக இவரும் ஓர் அழைப்பு விடுத்தாரே தவிர, உண்மையில் போராளிகளை ஒன்றுபடுத்தும் நோக்கம் இவருக்கு இல்லை.

போராளிகள் அமைப்புகளை ஒன்றுபட விடாமல் பிளவுபடுத்தும் வேலையைத் தொடங்கி வைத்தவரே கருணாநிதிதான்.

கருணாநிதியின் அழைப்பை ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈரோஸ் போன்ற இயக்கங்கள் ஏற்றன. ஆனால், முதலில் அழைத்த எம்.ஜி.ஆரின் அழைப்பை ஏற்பது என முடிவு செய்து விடுதலைப் புலிகள் அவரைச் சந்தித்தனர். இந்தச் சந்திப்பின் விளைவாக, புலிகள் இயக்கத்தின் மீது எம்.ஜி.ஆருக்கு இருந்த மதிப்பு பன்மடங்கு உயர்ந்தது. புலிகளுக்கு இரண்டு கோடி ரூபாய் வழங்க அவர் முன்வந்தார்.

ஆனால், கருணாநிதி தன்னைச் சந்தித்த மூன்று போராளிகளோடு புகைப்படம் எடுத்துப் பத்திரிகைகளில் வெளியிட வைத்து விளம்பரம் தேடிக்கொண்டார். தனது பிறந்த நாளில் உண்டியல் மூலம் திரட்டப்பட்டப் பணத்தில் சில ஆயிரம் ரூபாய்களை இந்த இயக்கங்களுக்கு அளித்ததைத் தவிர, பெரிய அளவில் உதவுவதற்கு அவர் முன்வரவில்லை. அவர்கள் எம்.ஜி.ஆரையும் சந்திக்க இயலாதபடி செய்ததுதான் கருணாநிதியின் சாதனையாகும்.



1985ஆம் ஆண்டு ஏப்ரல் 10ஆம் திகதி விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன், ரெலோ இயக்கத் தலைவர் சிறீ சபாரத்தினம், ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் பத்மநாபா, ஈரோஸ் தலைவர் பாலகுமார் ஆகியோர் ஒன்றுகூடிப் பேசி சிங்கள இராணுவத்துக்கு எதிரான ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளை இணைந்து மேற்கொள்வது என முடிவுசெய்து அறிக்கையும் வெளியிட்டனர்.

1985ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் நடைபெற்ற திம்பு மாநாடு வரை இந்த ஒற்றுமை நீடித்தது.

திம்பு மாநாட்டில் அனைவரும் ஒன்றுபட்டு முன்வைத்த கோரிக்கைகளை இந்திய அரசு விரும்பவில்லை. எனவே, போராளி இயக்கங்களை மிரட்டிப் பிளவுபடுத்தத் திட்டமிட்டது.

இதற்கான சதித் திட்டத்தை 'றோ' உளவுத் துறை வகுத்தது. 'றோ' விரித்த வலையில் முதலில் டெலோ இயக்கமும் அதற்குப் பிறகு ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கமும் விழுந்தன.

புலிகளுடன் மோதும்படி இந்த இயக்கங்களுக்கு 'றோ' உளவுத் துறை ஆயுதங்களை அளித்துத் தூண்டிவிட்டது.

புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த கப்டன் லிங்கம் என்பவரை ரெலோ இயக்கத்தினர் படுகொலை செய்தனர். இதன் விளைவாக யாழ்ப்பாணத்தில் இரு தரப்பினருக்கும் இடையே மோதல் வெடித்து இறுதியில் சிறீசபாரத்தினம் கொல்லப்பட்டார்.

அவருக்காக சென்னையில் இரங்கல் கூட்டத்தை கருணாநிதி நடத்தினார். அதில் பேசும்படி என்னை அழைத்தபோது, புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த கப்டன் லிங்கத்துக்கும் சேர்த்து இரங்கல் கூட்டம் நடத்துங்கள் என்று நான் கூறினேன். அதை அவர் ஏற்கவில்லை. எனவே, நான் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள மறுத்தேன்.

கருணாநிதி போன்ற ஒரு தலைவர் போராளி இயக்கங்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டபோது இரு தரப்பையும் அழைத்துப் பேசி சுமுகமாக்கி இருக்க வேண்டும். ஆனால் அவர், புலிகளுக்கு எதிராகவும் ரெலோ இயக்கத்துக்கு ஆதரவாகவும் நடந்து கொண்டார்.

இரங்கல் கூட்டத்திலும் அதற்குப் பிறகும் விடுதலைப் புலிகளைக் குற்றம்சாட்டிப் பேசுவதற்கு அவர் கொஞ்சமும் தயங்கவில்லை.

ராஜீவ் - ஜெயவர்த்தனா உடன்பாடு கையெழுத்தாகி போராளிகள் ஆயுதங்களை ஒப்படைத்தனர். புலிகளும் ஓரளவு ஆயுதங்களை ஒப்படைத்தனர். ஆனால், பிற இயக்கங்களுக்கு நவீன ஆயுதங்களை 'றோ' உளவுத்துறை கொடுத்து நிராயுதபாணிகளாக நடமாடிய புலிகளை ஒழித்துக்கட்ட ஏவிவிட்டது.

22 புலிகள் படுகொலை செய்யப்பட்டனர். புலிகள் எடுத்த பதில் நடவடிக்கையின் விளைவாக ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கங்கள் முற்றிலுமாக முறியடிக்கப்பட்டு அவர்களிடம் இருந்த ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. 'றோ' உளவுத் துறையின் சீர்குலைப்பு வேலைகள் வெற்றி பெறவில்லை.

ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப்., புளொட் ஆகிய இயக்கங்களில் இருந்து விலகியவர்களை ஒன்று சேர்த்து ஈ.என்.டி.எல்.எப். என்ற ஓர் அமைப்பை 'றோ' உளவுத் துறை உருவாக்கியது. இதற்குத் தலைவராக பரந்தன் ராஜன் என்பவர் பொறுப்பேற்றார்.

இந்த அமைப்புக்கும் ஆயுதங்கள் வழங்கி தமிழீழப் பகுதியில் புலிகளுக்கு ஆதரவாக இருக்கக்கூடிய மக்களை மிரட்டவும் படுகொலை செய்யவும் 'றோ' உளவுத் துறை பயன்படுத்தியது. இதை நான் சொல்லவில்லை அப்போது 'றோ' உளவுத் துறையின் தலைவராக இருந்த ஏ.கே.வர்மா பிற்காலத்தில் எழுதி உள்ளார்.

கடந்த 20 ஆண்டு காலத்துக்கும் மேலாக தமிழர்களுக்கு உள்ள தலைமை பிரபாகரன் ஆவார். தமிழ் மக்கள் அவர் மீது அளவு கடந்த நம்பிக்கை வைத்துள்ளனர்.

இந்த உண்மையைப் புரிந்து கொள்ளாதது இந்தியா செய்த மாபெரும் தவறாகும். புலிகளுக்கு எதிராக போட்டிக் குழுக்களை ஊக்குவித்தது.

இறுதியில் இந்திய இராணுவத்துக்கும் புலிகளுக்கும் இடையே மோதலை ஏற்படுத்தி விட்டது என்று அவர் சொல்லியதையும் கருணாநிதி கவனிக்க வேண்டும். இவை அவருக்குத் தெரியாதவை அல்ல.

'றோ' உளவுத் துறையின் இந்தப் பிளவு வேலைகளை முதலமைச்சராக இருந்த கருணாநிதியே சட்டமன்றத்தில் பகிரங்கமாகக் கண்டித்தார். சட்டமன்றப் பதிவேட்டிலும் இது பதிவாகி உள்ளது. ஆனால் இப்போது, தான் கூறியதற்கு மாறாக சகோதரப் போரால் தான் ஈழத்தில் அழிவு ஏற்பட்டிருப்பதாகவும் அதற்குப் புலிகளை [illegible] திரும்பத் திரும்பச் சொல்வது பச்சைப் பொய்!

1991ஆம் ஆண்டில் இலங்கையின் ஜனாதிபதியாகப் பிரேமதாசா பதவியேற்ற போது இலங்கையில் இருந்து இந்தியப் படைகள் வெளியேற வேண்டும் என வற்புறுத்தத் தொடங்கினார். இதன் அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த முன்வந்தார்.

பிரேமதாசாவுடன் புலிகள் பேச்சுத் தொடங்கினால், உலக அளவில் தன் மரியாதை அடியோடு போய் விடும் என ராஜீவ் காந்தி பதை பதைத்தார். இதை எப்படியும் தடுக்க வேண்டும் எனத் துடி துடித்தார்.

பிரேமதாசாவுடன் புலிகள் பேச்சு நடத்தாமல் இருந்தால், அவர்களுக்குத் தேவையான சகல உதவிகளையும் செய்யத் தயாராக இருப்பதாக அவர் கூறினார். புலிகளிடம் கூறி அவர்களை ஒப்புக்கொள்ள வைக்கும் பொறுப்பை அப்போது தமிழக முதல்வராக இருந்த கருணாநிதியிடம் ஒப்படைத்தார்.

கருணாநிதியின் அழைப்பை ஏற்று புலிகளின் அரசியல் ஆலோசகர் பாலசிங்கம் சென்னைக்கு வந்து அவரைச் சந்தித்துப் பேசினார். அப்போதுகூட பிரதமர் வி.பி.சிங் தனக்கு முழு அதிகாரம் அளித்திருப்பதைப் பயன்படுத்திப் பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்திருக்கலாம். ஆனால், புலிகளுக்கு எதிரான உள்ளம் படைத்த அவருக்கு அவ்வாறு செய்ய விருப்பம் இல்லை. மாறாக, வரதராசப் பெருமாள் தலைமையில் உள்ள வடக்கு - கிழக்கு மாகாண அரசில் சரிபாதி இடங்களை புலிகளுக்குப் பெற்றுத் தருவதாகவும் இதை ஏற்றுக்கொண்டால் இந்திய அரசின் உதவியும் கிடைக்கும் எனவும் கூறினார்.

மக்களிடம் செல்லாக்காசாய்ப் போன வரதராசப்பெருமாள் அரசில் அங்கம் வகிக்க பாலசிங்கம் மறுத்தார். மீண்டும் ஒரு தேர்தல் நடத்தப்படுமானால் புலிகள் பங்கேற்கத் தயார் என்றார். தான் விரித்த வலையில் புலிகள் சிக்காததன் விளைவாக கருணாநிதி இந்தப் பிரச்சினையில் தன்னால் முடிந்ததைச் செய்தாகி விட்டது எனக் கூறி ஒதுங்கிக் கொண்டார்.

தொடர்ந்து, புலிகளுக்கு எதிரான காழ்ப்புணர்ச்சி அவரிடம் இருந்து மறையவில்லை. தமிழீழத்தில் படுகாயமடைந்த போராளிகளை தமிழகம் கொண்டுவந்து தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை அளிப்பது குறித்து முதல்வர் கருணாநிதிக்குத் தெரிவித்து அவரின் சம்மதத்தைப் பெற்ற பிறகே போராளிகள் தமிழ்நாடு வந்தனர். ஆனால், சிகிச்சை பெற்றுவந்த அந்தப் போராளிகளை தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்து சிறையில் அடைத்தார் கருணாநிதி.

இதுகுறித்து, பிரபாகரன் 19.3.1998ஆம் ஆண்டு எனக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு வேதனையுடன் குறிப்பிட்டுள்ளார்:

எமது போராளிகளில் பலர் அதுவும் காயமடைந்து, ஊனமடைந்தவர்கள் இன்னும் தமிழக சிறைகளுக்குள் அநியாயமாக அடைப்பட்டுக் கிடப்பது எமக்கு ஆழ்ந்த வேதனையைக் கொடுக்கிறது. 90இல் கலைஞரின் காருண்யத்தை நம்பி அவரது வேண்டுகோளின் பேரில் அனுப்பப்பட்ட போராளிகள் தொடர்ந்தும் சிறைகளில் பூட்டி வைக்கப்பட்டிருப்பது மனிதாபிமானமற்ற அநீதியான செயல்.

இதற்கு முன்பாக 23.7.1997 அன்று எனக்கு அவர் எழுதிய மற்றொரு கடிதத்தில், மருந்துப் பொருள்கள் எடுப்பதற்காக அங்கு வந்த எமது போராளிகள் பிடிபட்டு இதுவரை 50 லட்சம் வரையான பணம் தமிழ்நாட்டுப் பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டுள்ளது. எமக்கிருக்கும் எவ்வளவோ பணக் கஷ்டத்தின் மத்தியிலும் மருந்துப் பொருள்கள் வாங்க அனுப்பிய பணம், தமிழ் தமிழ் என முழங்கும் கலைஞரின் ஆட்சியிலே பறிக்கப்படுவதுதான் வேதனையைத் தருகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

வீரம், ஆற்றல் உட்பட அனைத்திலும் யாருக்கும் சளைக்காதவர்களாக ஈழப் போராளிகள் இருந்தும் இறுதிப்போரில் தோல்வியுற்றனர். போரில் ஈடுபட்ட தலைவர்கள் பலரும் மடிந்தனர்.

இதற்குக் காரணம் ஈழப் போராளிகளிடையே ஒற்றுமை இல்லாததுதான் என 24.8.2012 அன்று சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் கூறியுள்ள கருணாநிதிதான் கடந்த காலத்தில் இப்படிச் செய்தவர்.

1987க்குப் பிறகு, புலிகளைத் தவிர மற்ற இயக்கங்கள் ஒவ்வொன்றாகச் சிதறி விட்டன. சிங்கள அரசின் கைக்கூலிகளாக மாறிவிட்டன. சிங்கள அரசை எதிர்த்து இவர்கள் ஒருபோதும் போராடவில்லை. சிங்கள இராணுவத்துடன் இறுதி வரை போராடியவர்கள் விடுதலைப் புலிகள் மட்டுமே. அதை மறைத்து கருணாநிதி பேசி இருக்கிறார்.

1990இல் இருந்து 2008ஆம் ஆண்டு வரை நடைபெற்ற அத்தனை போர்களிலும் புலிகள் வெற்றிவாகை சூடி இருக்கிறார்கள். 18 ஆண்டு காலமாக சிங்கள இராணுவத்துடன் நடைபெற்ற போர்கள் குறிப்பிடத்தக்கவை.

யாராலும் வெல்லப்பட முடியாதது எனக் கருதப்பட்ட ஆனையிறவு இராணுவ முகாமை அழித்து வெற்றிக்கொடி நாட்டியவர்கள் புலிகள்.


ஆனால், 2009 ஆண்டில் அவர்களின் தோல்விக்கு சகோதரச் சண்டை காரணம் அல்ல. மாறாக, இந்தியா, சீனா, பாகிஸ்தான் உட்பட 20க்கும் மேற்பட்ட நாடுகள் ஒன்று கூடி சிங்கள இராணுவத்துக்குத் தேவையான இராணுவ உதவி உட்பட சகல உதவிகளையும் செய்தமையே காரணம்.

இந்தியாவின் ஓய்வுபெற்ற தளபதியான லெப். ஜெனரல் சதீஷ் சந்திரா, சிங்கள இராணுவத்தின் ஆலோசகர் பொறுப்பை ஏற்றார். இந்தியக் கடற்படை இலங்கையைச் சுற்றிலும் நிறுத்தப்பட்டு புலிகளுக்கு ஆயுதம் ஏந்தி வந்த 13 கப்பல்களை மூழ்கடித்தது. இந்தக் காரணங்களினால்தான் புலிகளால் வெற்றி பெற முடியவில்லை.

இந்த உண்மைகளை மறைத்து கருணாநிதி பேசுகிறார். சிங்கள அரசுக்கு எல்லா வகை ஆதரவும் அளித்த இந்திய அரசையும் அதற்குத் துணையாக நின்ற தனது செயலையும் மூடி மறைப்பதற்காக சகோதரப் போரால்தான் ஈழத்தில் அழிவு ஏற்பட்டதாக முழுப் பொய்யைக் கூசாமல் சொல்கிறார். என்னதான் இவர் உண்மைகளை மூடிமறைக்க முயற்சி செய்தாலும் அது, ஒருபோதும் வெற்றிபெறாது.

புலிகளைக் குற்றம்சாட்டுவதற்கு அவருடைய குற்ற உணர்வே காரணம்! ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரு தலையுடன் பாம்பு இருப்பதை கேள்விப்பட்டிருக்கிறோம். தற்போது 2 தலையுடன் கூடிய அதிசய கடல் ஆமை ஒன்று உக்ரைன் நாட்டில் கீவ் நகரில் உள்ள அறிவியல் அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.
அது மட்டுமல்ல இந்த ஆமை வேறு சில புதுமைகளுடன் காட்சி அளிக்கிறது. அதாவது சுமார் 5 வயதுடைய இந்த ஆமையின் மேற்பகுதி ஓடானது இதயம் போன்று காணப்படுகிறது. 6 கால்கள் இருக்கின்றன. இதனை ஏராளமான மக்கள் அதிசயத்துடன் பார்க்க செல்கி...




SOLCO

உங்கள் குளிர் பிரச்சினைக்கு
ஒரு சூடான தீர்வு!

சொல்கோ ஹைபிரிட் சூரிய சக்தியிலான நீர் சூடாக்கி ஒரு புதுவித அனுபவத்தை தருவதுடன் எந்தவொரு பிரச்சியையும் இல்லாமல் உங்களுக்கு தேவையான நேரத்தில், தேவையான இடத்தில் சுடு நீரை பெற்றுத்தரும்.




சொல்கோ ஹைபிரிட் சூரிய சக்தியிலான நீர் சூடாக்கிகளாவன:
• பாரம் குறைவு • எளிதாக பொருத்தக் கூடிய தெரிவுகள் • உறுதிமிக்கது, நீண்ட காலம் பாவிக்கலாம்
• சிறந்த உட்பொருட்களையே உற்பத்தியாளர்கள் பயன்படுத்துகின்றனர் • மெல்லிய வடிவத்துடன் கவர்ச்சிமிக்கது.
• சூரிய சக்தியை சேகரிக்கும் பகுதிக்கு சூட்டினை உறிஞ்சும் சிறந்த கறுப்பு நிற செப்பு தகடு பொருத்தப்பட்டுள்ளது.
• நீரை சேகரிக்கும் பிளாஸ்டிக் / துரு பிடிக்காத இரும்பு நீர்த்தாங்கிகளுக்கு பாவிக்கப்படும் புதுவித தொழில்நுட்பத்துடன் சுடு நீரின் வெப்ப நிலையை அதிக மணித்தியாலங்களுக்கு தக்க வைத்துக் கொள்ள முடியும்.

S-lon PE+ PREMIUM WATER TANK


பீ ஈ ப்ளஸ் (பிரைவட்) லிமிடெட்
32, மினுவங்கொடை வீதி, ஜா-எல. தொலைபேசி: 0117866800-1 பெக்ஸ் 0117866810
மின்னஞ்சல்: peplus@slon.maharaja.lk
ஹொட்லைன் - 077 2070265 077 3097994

ரூ. 84,588 தொடக்கம்
100, 150, 200 & 300 லீற்றர் அளவுகளில்

ashok™ STEEL

உறுதித்தன்மையுடன் கூடிய தயாரிப்பு

அசோக் முறுக்குக் கம்பிகள்
கட்டட நிர்மாணத்தின் மூலவுறுதி




SLS 375

இல.. 48, 8 மாடி, IBM கட்டடம் நவம் மாவத்தை கொழும்பு 02.
தொ. பேசி: 555 3215/8, 738 8940/3 தொலைநகல்: 231 4970 மின்னஞ்சல்: ashoksteel_ipl@sltnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக சலுகைகள் வழங்கும்
நிலையான வைப்பு
அதிக நம்பிக்கை
அதிக சலுகைகள்
அதிக பாதுகாப்பு
16.5% வ.மொ.வ.வீ. நிலையான வைப்பு
17.5% வ.மொ.வ.வீ. சிரேஷ்ட பிரஜை நிலையான வைப்பு
லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ்
(ஒரு LOLC குழுமக் கம்பனி)
லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் பிஎல்சி
இல. 100/1 ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய.
தொலைபேசி: 5880880, தொலைநகல்: 2865602
ஈ-மெயில்: lofin@lankaorix.com
இணையத்தளம்: www.lankaorix.com
துரித அழைப்பு
0773815602

# பூமியின் வயது என்ன....?

பூமியின் தோற்றம் பற்றி புதிய ஆய்வு ஒன்றை அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழக அறிவியலாளர்கள் மேற் கொண்டிருக்கிறா ர்கள். பூமி தோன்றி 500 கோடி ஆண்டுகள் ஆகியிருக்கும் என்பதுதான் இவர்கள் வெளியிட்டிருக்கும் புதிய செய்தி. அறிவியல் மற்றும் சுற்றுச் சூழலில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கொண்டு இதைக் கண்டறிந்துள்ளதாக இவர்கள் கூறியுள்ளனர். இந்த ஆய்வின் முடிவில் தெரியவந்துள்ள செய்திகள்: பூமி தோன்றிய உடனே அதில் உயிரினங்கள் தோன்றிவிடவில்லை. பூமி தோன்றி பல கோடி ஆண்டுகளுக்குப் பின்னரே உயிரினங்கள் தோன்றியிருக்க முடியும். இந்த உயிரினத் தோற்றமும் இப்போது உள்ளது போல இருந்திருக்க முடியாது. பூமி தோன்றி ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்குப் பின்னரே முதன்முதலாக கடல் நீரில் பாசி போன்றவை தோன்றின. அக்காலத்தில் காபன் கூட்டுப் பொருள்கள் அதிகமாக இருந்ததால், பாசி தோன்றியிருக்கக் கூடும். இதற்குப் பின்னர் 50 கோடி ஆண்டுகள் கடந்த பிறகுதான் உயிரினங்கள் தோற்றம் பெறத் தொடங்கின. அதுவும் கூட பலவித மாறுதல்களை அடைந்தன. கிளிஞ்சல்கள் போன்ற திடமான கூடுகளில் உயிரினங்கள் வசிக்க ஆரம்பித்தன. இதனையடுத்து 50 கோடி ஆண்டுகள் கழித்து படிப்படியாக சில உயிரினங்கள் தோன்றி வளர ஆரம்பித்தன,என்று கலிபோர்னியா அறிவியலாளர்களின் புதிய ஆய்வு முடிவு கூறுகிறது. என்றாலும் இது முழுமையான முடிவுகள் அல்ல; இன்னும் முக்கியமான சில ஆய்வுகளைச் செய்யவேண்டியுள்ளது என்று அவர்கள் கூறியுள்ளனர்.







**NNO முதல் தர அசல் தயாரிப்பு நொரிஷிங் நைற் ஒயில் தற்போது இலங்கையில்!**

NNO என்பது சருமத்துக்கு தேவையான ஈரலிப்பையும், புத்துணர்ச்சியையும் மற்றும் பளபளப்பையும் வழங்கும் வகையில் ஜொஜோபா எண்ணெய் மற்றும் விற்றமின் ஈ கொண்டு விசேடமாக தயாரிக்கப்பட்ட தயாரிப்பாகும். சருமத்தில் இயற்கையாகவே காணப்படும் எண்ணெயின் அளவை பேணி, சருமம் வரட்சியடைவதை தடுக்கிறது. அத்துடன் கண்களின் கீழ் தோன்றும் உறுதியான படலங்களை அகற்றுகிறது.

**NNO உங்கள் சருமத்தை எவ்வாறு பாதுகாக்கிறது?**

- வரட்சியான சருமத்துக்கு.தேவையான ஈரலிப்பை வழங்குகிறது
- கண்களுக்கு கீழ் காணப்படும் கரும்புள்ளிகள், கரும் படலங்கள் மற்றும் கரும்பைகளை அகற்றுகிறது.
- உறுதியான அடையாளங்கள், தளும்புகள் மற்றும் புள்ளிகளை அகற்றுகிறது.
- வயது முதிர்வு, சூழல் காரணிகளால் ஏற்படக்கூடிய சரும வரட்சியை தடுக்கிறது.
- UV கதிர்கள், வேலைப்பளு, மாசு, வயது முதிர்வு போன்றவற்றால் சரும கலன்களில் ஏற்படக்கூடிய பாதிப்புகளிலிருந்து பாதுகாக்கிறது.

**NNO வின் விசேடத்துவம் என்ன?**

NNO சிறந்த பெறுபேறுகளை வழங்கும் வகையில் சரியான அளவில் ஜொஜோபா எண்ணெய் மற்றும் விற்றமின் ஈ சேர்மானத்தை கொண்டுள்ளது.

NNO சருமத்துக்கு ஈரலிப்பை வழங்கி, வரட்சியிலிருந்து பாதுகாக்கிறது.

NNO உறுதியான தளும்புகள், படலங்கள் மற்றும் கண்களுக்கு கீழ் ஏற்படும் கருமையான வளையங்கள் போன்றவற்றிலிருந்து பாதுகாக்கிறது.

NNO சருமத்தின் நெகிழ்ச்சித் தன்மையை அதிகரித்து, உறுதியடையச் செய்கிறது.

NNO பாதுகாப்பானது என ஆய்வுகளின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

NNO சுகாதாரமானது, பாவனைக்கு உகந்தது, சிறந்த நறுமணத்துடன் கூடிய இலகுவான முறையில் கிடைக்கிறது.

நாடு முழுவதுமுள்ள முன்னணி பாமசிகள் மற்றும் சுப்பர் மார்க்கட்களில் விற்பனைக்குண்டு.

அனுமதி பத்திரம் வழங்கியவர்
தொலைபேசி: +94 11 4305366, +94 11 4366576, +94 773 410071
www.megawecare.lk/nno
MEGA We care Human Wellness

நாடெங்கிலுமுள்ள சுப்பர் மார்க்கட்களிலும் பார்மசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம் |A. Baur & Co.(Pvt) Ltd 1897 ஆம் ஆண்டிலிருந்து இறக்குமதி செய்து விநியோகித்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
02/09/2012

# மாரடைப்பைத் தடுக்க இஞ்சிப்பால்



**ஒல்லியா ஆகணும் என்று நினைப்பவர்கள் தொடர்ந்து குடிக்கலாம். இரத்தக் குழாய்களில் அடைப்பு ஏதும் இருந்தாலும் நீக்கி விடும். அதனால் மாரடைப்பைத் தடுக்கும் சக்தி இதுக்கு உள்ளது.**

உடம்பு ஒல்லியா சுறுசுறுப்பாக இருக்க வேண்டும் என்றால் இஞ்சிப் பால் எடுத்துக் கொள்ளுங்கள்.

ஓர் அளவான துண்டு இஞ்சியை எடுத்துத் தோலைச் சீவி நல்லா நசுக்கி பிறகு முக்கால் குவளை தண்ணீர் எடுத்து அதில் நசுக்கிய இஞ்சியை போட்டு நல்லா கொதிக்க விடணும். தண்ணீரில் சாறு முழுவதும் இறங்கி விடும். பிறகு வடிகட்டி சாறை எடுத்துக் கொள்ளுங்கள்.

அதன் பின்னர் அரைக் குவளை காய்ச்சிய பால் எடுத்து அத்துடன் வடிகட்டிய சாறைக் கலந்து கொள்ள வேண்டும்.

அத்துடன் தேவையான அளவில் தேன் அல்லது பனங் கற்கண்டு அல்லது சர்க்கரை இனிப்புச் சுவைக்காகச் சேர்க்கலாம். அவ்வளவுதான் இஞ்சிப்பால் தயார். இந்த இஞ்சிப் பாலை காலையில் வெறும் வயிற்றில் குடிக்க வேண்டும். நுரையீரல் சுத்தமாகும்.

சளியை ஒழித்துக் கட்டிவிடும். வாயுத் தொல்லை என்பதே வராது. தேவையில்லாத கொழுப்புப் பொருளை கரைத்து விடும். தொப்பை வயிற்றுக்காரர்கள் தொப்பைக்கு விடை கொடுத்துவிடலாம்.

அதிகமாக எடை இருந்தா படிப்படியாகக் குறைந்துவிடும். ஒல்லியா ஆகணும் என்று நினைப்பவர்கள் தொடர்ந்து குடிக்கலாம். இரத்தக் குழாய்களில் அடைப்பு ஏதும் இருந்தாலும் நீக்கி விடும். அதனால் மாரடைப்பைத் தடுக்கும் சக்தி இதுக்கு உள்ளது. தினமும் இதைக் குடித்து வந்தால் உடம்பு சுறு சுறுப்பாக இருக்குமாம்.




# நீரிழிவு நோய்க்கு கொவ்வைக்காய்

நீரிழிவு நோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகி வருகிறது. கொஞ்சம் நம்முடைய உணவுப் பழக்க முறைகளில் கூடுதல் கவனம் செலுத்தினால் நீரிழிவு நோய் வராமல் தப்பித்துக் கொள்ளலாம். சாதாரணமாகக் கிடைக்கக் கூடியதுதான் கொவ்வைக்காய். கொஞ்சமாய் துவர்ப்புச் சுவையுடைய இந்த கொவ்வைக்காய் பொரியல், வற்றல், கூட்டு, சாம்பார் செய்து உணவில் சேர்த்துக் கொள்வதுண்டு.

மற்றும் கொவ்வைக்காய் பச்சடி சிறந்த மருத்துவ குணமுள்ள உணவு. சிறு சிறு துண்டுகளாக நறுக்கிய கொவ்வைக்காயுடன் மோர், மிளகுப்பொடி, சீரகப்பொடி, இஞ்சி சிறிது சேர்த்து தேவையான அளவு உப்பு கலந்து விட்டால் அவ்வளவுதான் கொவ்வைக்காய் பச்சடி தயார்.

இதனை வாரம் இரண்டு நாள் பகல் உணவில் சேர்த்தால் வாய்ப்புண் குணமாகும். நீரிழிவு நோயாளிகளின் இரத்தத்தில் சேரும் சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்தும்.

ஆனால் நிறையப் பேர் பாகற்காயை ஒதுக்குவதுபோல் கொவ்வைக்காயையும் உணவில் சேர்த்துக் கொள்ளாமல் ஒதுக்கி விடுகிறார்கள். நாக்கு சுவையை மட்டுமே கருதாமல் உடல் நலத்தையும் கருத்தில் எடுத்துக் கொண்டால் எல்லா உணவுகளுமே விருப்பமுடையதாகத்தான் ஆகும்.

இதனைப் பொதுவாக எல்லோருமே சாப்பிடலாம். பரம்பரையாக நீரிழிவு நோய் இருப்பவர்கள் கொவ்வைக்காயை 35 வயது முதலே உணவில் சேர்த்துக் கொண்டால் நல்லது. நீரிழிவு நோய் வராமல் தடுக்கலாம்.

பச்சையாகவே கொவ்வைக்காயை மென்று துப்பிவிட்டாலே வாய்ப்புண் ஆறிடும். வயிற்றுப்புண் இருப்பவர்கள் வாரம் இரண்டு நாள் கொவ்வைக்காய் சேர்த்துக் கொள்ளலாம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## English Language Development Programme

- A three-month English course for School leavers/Job seekers.
- The course content comprises the four skills - Listening, Speaking, Reading & Writing.
- Evaluation & Award of certificate at the end of the programme.
- Free Handouts.

Commencement 10th Sept 2012

Lessons on Weekdays from 3.30 - 5.45 p.m.

Application Forms could be obtained at the College office.

English Language Teaching Unit
St. John's College, Jaffna

(c/2305)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், தெல்லிப்பழை K.K.S.றோட்டை முகப்பாகக் கொண்ட 7 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. வங்கிகள், ஹோட்டல், மருத்துவசாலை, பெட்ரோல் செட் நிறுவனங்கள், காரியாலயங்களுக்கு உகந்த இடம்.

(சி/2669)(6-7-8) தொடர்பு : 077 6220065, 077 6122341

## கல்வி

அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் Local A/L Combined Mathematics (English Medium), London A/L (Coremaths, Mechanics, Statistics, Futher Pure Mathematics) கற்பிக்கப்படும்.

(சி/2672)(6-7-8) வசந்தகுமார் (Eng) 077 6120859

## வீடுவிற்பனைக்குண்டு

கோயில் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள காணியுடன் சகல வசதிகளுடனுமான வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 77 95243, 077 0169842

(சி/3018)(6-7-8)

## நீண்டகால வேலை வாய்ப்புகளுக்கு தனியார் நிறுவனத்தில் நிரந்தரமான வேலை வாய்ப்புக்கு

Havey, Light சாரதிகளும் கென்ரைனர் ஊழியர் JCB எஸ்க்கலேட்டர், நொலர், பொக்கேட், Forclft Operator செய்யக் கூடிய ஆள்கள் வெகு விரைவில் தேவைப் படும். இலங்கை முழுவதும் வேலை செய்ய முடியும்

- தொழில் தகுதிகளுக்கேற்ப 20,000-45,000 வரை உணவு, தங்குமிடம் உண்டு.
- வயது 18-55

சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். அநுராதபுரம்.

(20870)(5-6-7) தொடர்பு: 071 346 0295

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ். மாநகர எல்லைக்குள் மானிப்பாய் வீதியை அண்மித்த இடத்தில் 3 அறைகளுடன் 2 கோல் மற்றும் சகல வசதிகளுடன் (நல்ல தண்ணீர் கிணற்றுடன்) விசாலமான வீடு வாடகைக்கு உண்டு.
(வாகன தரிப்பிட வசதி இல்லை)

தொடர்பு : 077 587 7179

(22370)(6-7-8)

## விசேட வகுப்புக்கள்

சமஸ்கிருதம் (வடமொழி)
ஆரம்பத்திலிருந்து A/L மற்றும் B.A மாணவர்களுக்குமான சமஸ்கிருத வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
விபரங்களுக்கு:
சோ. பிரசன்ன சர்மா M.A
இணுவில் ஸ்ரீ பரராஜ சேகரப்பிள்ளையார் கோயிலடி
தொடர்பு: 021 224 1709, 075 042 1411

(22405)(5-6-7)

## BBC ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலை

11 வது வருடத்தில்

| Play Group | Montessori | Pre School |
|---|---|---|
| வயது 2+ முதல் வயது 3+ வரை | வயது 3+ முதல் வயது 4+ வரை | வயது 4+ முதல் வயது 5+ வரை |

கற்பித்தல் முறை:

- ★ சர்வதேச ரீதியாக அங்கிகரிக்கப்பட்ட Dr. Maria Montessori + Canadian ECE Method
- ★ தமிழ் கட்டாய பாடம்.
- ★ ஆங்கில மொழி மூல கற்பித்தல்
- ★ சிறார்களின் திறமைகளை வெளிக் கொணரும் நிகழ்ச்சிகளில் சகலரும் பங்கு பெறுவார்.
- ★ விளையாட்டுப் போட்டி. English Concert, முத்தமிழ் விழா. சித்திரக்கைவேலைக் கண்காட்சி, Graducation Ceremony.

பாலர் பாடசாலை வளாகங்கள்

| | |
|---|---|
| **நல்லூர்** 140, கோயில் வீதி. | **நீர்வேலி** 1வது மைல் கல் இராச வீதி |
| **கோப்பாய்** பருத்தித்துறை வீதி கோப்பாய் மத்தி | **சாவகச்சேரி** சாவகச்சேரி Hindu Collgee Primary School அருகாமை |
| **மானிப்பாய் 1** 252, ஆலடிச்சந்தி, யாழ் வீதி. | **அச்சுவேலி** ஆதார வைத்தியசாலை அருகாமை |
| **மானிப்பாய் 2** சங்கரப்பிள்ளை வீதி. (மானிப்பாய் இந்துக்கல்லூரி வீதி) | **சங்கானை** பிரதேச செயலகம் அருகாமை (நிகர வைரவர் கோயிலடி) |
| **சுன்னாகம்** Lakshmi Cottage புதிய நீதிமன்றம் அருகில் K.K.S வீதி | **புலோலி** ஸ்ரீ பத்மநாதன் இல்லம் மந்திகை |

## சனி, ஞாயிறு மற்றும் வார நாட்களில் ஆங்கில வகுப்புகள்

- **Certificate in English** — இலக்கணம், பேச்சுத்திறனை வளர்ப்பதற்கு
- **Diploma in English** — G.C.E (O/L), (A/L) பூர்த்தி செய்தோர் ஆங்கில அறிவை வளர்ப்பதற்கு
- **ESOL A1, A2** — Sponsor Scheme ஊடாக வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு
- **IELTS** — உயர் கல்வி கற்கவும், வெளி நாடு செல்ல விரும்புவோருக்கும்

பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகள்

- ★ Pre Foundation
- ★ Foundation
- ★ Level 1,2,3,4

பாடசாலை பாடத்திட்டத்திற்கமைய ஆங்கில பாடநெறிகள்

British Council இனால் அங்கிகரிக்கப்பட்ட பரிட்சை பதிவு நிலையம்.

(சி/2969)(6.7.8)

**BRITISH BUSINESS COLLEGE**
140, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
Tel:021 222 5796, 077 362 7055

Where Students Come First

## Sunny & Shears

### Beauty & Hair Dressing Academy & Service Centre

Sunny Shears

- நீங்கள் அழகுக் கலைத்துறையில் தகுதி வாய்ந்தவராக வர விரும்புகிறீர்களா?
- சர்வதேச அங்கீகாரம் உடைய அல்லது உள்ளூர் அங்கீகாரம் உடைய அழகுக்கலை சான்றிதழ் பெறவிரும்புகிறீர்களா?
- வெளிநாடுகளில் அதிக வருமானத்தை ஈட்டக்கூடிய இத்துறையில் தொழில் வாய்ப்பை பெற விரும்புகிறீர்களா?
- உள்ளூரில் அழகுக்கலையில் உங்களுக்கென ஒரு தொழில் வாய்ப்பை பெற விரும்புகிறீர்களா?

யாழ் நகரில் தனித்துவமான நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய அழகுக்கலைபயிற்சி நிலையம்

சர்வதேச சான்றிதழ் (UK, Australia) அங்கீகாரம் உடைய பயிற்சி நெறிகள் வழங்கப்படுகின்றன.



IVQ in Hairdressing
- Level 1 IVQ Certificate in Hairdressing
- Level 2 IVQ Diploma in Hairdressing
- Level 3 IVQ Advanced Diploma in Hairdressing



**Short Courses**
- Certificate in Nail technology
- Certificate in Beauty Therapy
- Diploma in Beauty Therapy
- Advanced Diploma in Beauty Therapy

எமது நிறுவனத்தினால் வழங்கப்படும் சேவைகள்

| | |
|---|---|
| சிகை அலங்கரிப்பு (Hair Dressing) | தலை மசாஜ் (Head Massage) |
| பேசியல் அலங்கரிப்பு (Facial) | நக அலங்கரிப்பு (Nail Art) |
| புருவ அலங்கரிப்பு (Eyebrow Threading) | பாதம், கை பராமரிப்பு (Pedicure, Manicure) |
| தலைமுடி நிமிர்த்தல் (Hair Straightening) | தலை முடிக்கு வர்ணம் பூசுதல் (Colour Dye) |

குறைந்த கட்டணத்தில் சேவைகள் வழங்கப்படும் (22385)(6.7.8)

No.19, Thanaraja Building, 3rd Floor, Stanly Road, Jaffna. Hotline : 077 7172660

30.09.2012 க்கு முன் விண்ணப்பித்து உங்களுக்கான சந்தர்ப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்

## AFTER GCE A/L STUDY IN UK

அனைத்து தடைகளையும் தாண்டி July/August இல் UK பயணமான மாணவர்கள் சிலர்




**நீங்கள் ஏன் Exponet ஐ தெரிவுசெய்ய வேண்டும்**

- 2012 A/L எடுத்த மாணவர்களுக்கு விசேட சலுகைகள்
- இலவச IELTS or City & Guillds வகுப்புக்கள்
- மிகக்குறைந்த கல்லூரிக் கட்டணக்கள்
- மிகச்சிறந்த UK பல்கலைக்களகங்கள் மற்றும் கல்லூரிகளில் அனுமதி பெற்றுத் தரப்படும் (HTS College)
- 4 வருட விசா உத்தரவாதம்
- 20 மணித்தியாலம் வேலை செய்யும் வசதி
- O/L தகைமை போதுமானது

UK Student Visa க்களில் பலவிதமான மாற்றங்கள் ஏற்பட்டிருப்பினும் அதற்கு ஏற்ற விதத்தில் மாணவர்களை தயார்படுத்தி வெற்றி கண்டுள்ளோம்.

எமது நிறுவனத்தின் அதிபர் யாழில் மாணவர்களை சந்தித்து உடனடி அனுமதிகள் வழங்க இருப்பதால் உங்கள் அனுமதிக்கு முந்துங்கள்

| | |
|---|---|
| காலம் | : 02/09/2012 & 03/09/2012 |
| இடம் | : EXPONET Jaffna Branch அரசடி வீதி, யாழ்ப்பாணம். |
| நேரம் | : 10.00 am - 3.00 pm |

பதிவுகளுக்கு Colombo-011 7 555511/14 Fax-011 7 555517 Jaffna-021 7538395 / 021 2227230

EXPONET Overseas Consultants

Head Office : 379 - ½, Galle Road, Colombo 06.
Jaffna Branch : 127, Arasady Road, Jaffna. (Between Kanthamadam Junction & Hindu Ladies College)
London Branch : 56, The Gardens Harrow Middlesex, HA1 4EY, UK.

(சி/3033)(6.7.8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
# அறிவித்தல்

### வாக்காளர் இடாப்பு காட்சிப்படுத்தல்

30.06.2012 உடன் முடிவுறுத்தப்பட்ட வாக்களிக்கத் தகுதியுடைய வாக்காளர் இடாப்பின் பிரதி 03.09.2012 தொடக்கம் 10.09.2012 வரை கிளை நிலையங்களிலும், தலைமை அலுவலகத்திலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இதில் ஆட்சேபனைகள், திருத்தங்கள் இருப்பின் 10.09.2012 ஆம் திகதிக்கு முன்னர் சங்கச் செயலாளருக்கு எழுத்து மூலம் அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சி.தாரணி
செயலாளர்.
(22317) (6,9,10)

## கையடக்க தொலைபேசி திருத்தும் பாட நெறி
## Mobile Phone Repairing Course



கைநிறைய சம்பாதிக்க சரியான வழி

SEPTEMBER 07 காலை 9.00 முதல்
07,08,09,10 நான்கு நாள்கள்

**புதிய பரிமாணத்துடன் 21 ஆவது பிரிவு ஆரம்பம்**

உங்கள் எதிர்காலத்திற்கு மாதம் 100 000 க்கு மேல் வருமானம் பெறும் நிரந்தர தொழில்வாய்ப்பு

கையடக்க தொலைபேசி திருத்தும் துறையில் 6 வருட அனுபவம் கடந்த வருடத்தில் 500 க்கு மேற்பட்ட மாணவர்களை உருவாக்கிய பெருமை தொடர்ந்தும் முதல் தர ஆசிரியராக

No.1 ஆசிரியர் **Ganesh . K**

நீங்கள் பாடசாலை கல்வியை இடை நிறுத்தியவரா ? சுயதொழில் ஒன்றை செய்ய எதிர்பார்ப்பவரா ? வேலை செய்து கொண்டு பகுதி நேரமாக வருமானம் ஈட்ட வேண்டுமா ? அப்படி என்றால் இப்பாட நெறியை நிறைவு செய்த பின் மிக குறைந்த முதலீட்டில் சுயமாக தொழில் ஒன்றை ஆரம்பிக்கலாம்.



- Housing கழட்டுதல்
- IC கழட்டுதல்
- IC மாற்றுதல்
- IC களை கண்டறிதல்
- IC களில் வரும் பிரச்சினைகளை கண்டறிதல்
- போனில் வரும் பிரச்சினைகளை கண்டறிதல்
- உதிரிப்பாகங்களை பரிசோதித்தல்
- உதிரிப்பாகங்களை மாற்றுதல்
- சைனிஸ் டிஸ்பிளே ஒட்டுதல் / கழட்டுதல்
- Hot airgun பாவிக்கும் முறை
- Resetting பண்ணும் முறை
- ஆரம்பம் முதல் சரளமாக கற்பித்தல்
- உங்கள் அனைத்துக் கேள்விகளுக்கு சரியான பதில் பதிவுகளுக்கு விரையுங்கள்

SUN British Business Management College
No. 26, Station Road, Vavuniya. T.P : 075 0650084
(20865)(6.7.8)

## விற்பனைக்கு

Sharp (சார்ப்) போட்டோ கொப்பி மெசின் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 44, மார்ட்டின் லேன், யாழ்ப்பாணம்.
(22379)(6.7.10)

## விற்பனைக்கு

350 டீசல் CANTER வாகனம் நீலநிறம் China NPLH xxxx FAW விற்பனைக் குண்டு.
தொடர்பு :
077 1622 631, 077 8781323
(22190)(6.7.8)

## றூம் வாடகைக்கு உண்டு

இல.55, ராணி வீதி, கல்வியங்காடு, நல்லூர் (ஒரு றூம், இரு பெண்கள் விரும்பத்தக்கது)

T.P: 077 4318711 (22194) (6,9,10)

## இறைச்சிக்கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு விற்பனையாகின்றது. தினமும் காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை திறக்கப்படும்.

நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்
யாழ்ப்பாணம்
(22203)(6.7.8)

## காணி விற்பனை

உரும்பிராய் இந்துக்கல்லூரிக்கருகில் யாழ் - பலாலி வீதி, கிழக்குப்பக்கம் 50 யார் தூரத்தில் 2 ஆம் காணித்துண்டு பிரத்தியேக பாதை, கிணறு தண்ணீர் ராங்கி பங்கு. பெறுமதிமிக்க மரங்கள், வீடு கட்டிக்குடியிருக்க நல்ல சூழல் விற்பனைக்குண்டு. விலை பரப்பு 7 ½ லட்சம் காணிக்கு 2¾ பரப்பு, 5½ பரப்பு வீதம் இரு உறுதிகள் வரை படங்களுண்டு. காணி உறுதிபார்க்க.

தொடர்பு : T.P : 021 3201167,
021 2225848, 011 2738310
(22200)(6-7-8)

## தென்னிந்திய ஐஸ்வர்யா

மகளிர் மருத்துவமனை & கருத்தரித்தல் மையம்
கலந்து சிறப்பிக்கும்

## குழந்தையில்லா தம்பதியருக்கான ஆலோசனை முகாம்

**The Most Successful IVF Team From India**

இனி உங்களுக்கும் குழந்தை

DR.K.VELUSWAMY MBBS.,MD (AIIMS).,FCCP.,M.HSc CHIEF DOCTOR
DR.S.CHANDRALEKHA MBBS.,DGO.,MRCOG(LONDON).,ART(SINGAPORE)., CHIEF DOCTOR
CHENNAI : Adayar 0091 98420 71999 / COIMBATORE : Gandhipuram 0091 98421 59809
PALANI : Dindigul road 0091 98422 05194 / MADURAI : SBI Colony 0091 88833 02777



இடம் : கொழும்புத் தமிழ்ச் சங்கம்
# 7, 57th Lane, Wellawetta, Colombo-06.
திகதி : 09.09.2012 நேரம் : 9.00am - 3.00pm

Organized by — Sponsered By:
Mighty Health Club of Colombo — A Friend in Need MEDICAL MISSION INDIA — HOME NURSING CENTRE WELLAWATTA

இலவச முன் பதிவுகளுக்கு: 0777 56 93 82
- 5000க்கு அதிகமான குழந்தைகள் IUI முறையில் பிறந்து சாதனை.
- 3000க்கு அதிகமான குழந்தைகள் IVF/ICSI முறையில் பிறந்து சாதனை.

## வாழ்க்கையை வெற்றிகொள்ள எம்முடன் வந்து கைகோருங்கள்

சம்பளம் 20,000 - 35,000


எங்களது தலைநகரத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அதி நவீன தொழிற்பட்டறைகளில் ஜாம், பிஸ்கட், சொக்லேட், கோடியல், PLC, கிளவுஸ், சிமெந்து, ஐஸ்கிறீம், பால்மா, போஸ்லென் போன்ற உற்பத்திகள் பலவற்றிற்கு உற்பத்தி/பொதிசெய்தல் / லேபல் ஒட்டுதல் போன்ற பிரிவுகளுக்கு 17 - 55 வரையான ஆண்கள், பெண்கள் தேவைப்படுகின்றனர். உணவு தங்குமிட வசதிகளுடன் அனைத்து வரப்பிரசாதங்களும் கொடுக்கப்படும். நண்பர்கள் கூட்டமாகவோ அல்லது திருமண தம்பதிகளாகவோ ஒரே கம்பனியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

கப்பலில் தொழில்புரிய உங்களுக்கு விருப்பமா ? நிரந்தரமான வேலை வாய்ப்பிற்கு தனியார் துறைமுகத்தில் கப்பல் புனர்நிர்மாண வேலைக்கு பயிற்றப்பட்ட / பயிற்றப்படாத சாதாரண சேவையாளர்கள், மேசன், வெல்டர், இலக்ரீசியன் மற்றும் பாரமான வாகன சாரதிகளும் தனியார் விமான நிலையத்தில் துப்புரவு செய்தல்/கெடரின் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் 18 - 55 வயதிற்குட்பட்டோர் தேவைப்படுகின்றனர்.

திறமைகளின் அடிப்படையில் சம்பளம் 18,000 - 50, 000 வரை உணவு தங்குமிட வசதிகளுடன் கொடுக்கப்படும். பயிற்சியுடன் அனைத்து வரப்பிரசாதங்களும் கிடைக்கப்பெறும்.

தொடர்புகளுக்கு : 071 3460295
(20869)

## யாழ் மாணவர்களுக்காக நாம்....
# மாபெரும் புலமைப்பரிசில் திட்டம்



யாழ் நகரில் தடம் பதித்து எமக்கெனதனியான ஒருபாதையில் திறம்பட பிரயாணித்துக்கொண்டிருக்கும் எமது கல்லூரியின் முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு "யாழ் மாணவர்களுக்காக நாம்" எனும் தொனிப்பொருளில் மாபெரும் புலமைப்பரிசில் திட்டத்தை முன்வைத்துள்ளோம்.

எமது தகுதிகாண் பரீட்சையில் **80%** சித்தியெய்தும் மாணவர்களுக்கு **100%** பூரண கட்டணச் சலுகை வழங்கப்படும்.

60%சித்தியெய்தும் மாணவர்களுக்கு **75%** கட்டணச் சலுகை வழங்கப்படும்.

40%சித்தியெய்தும் மாணவர்களுக்கு **50%** கட்டணச் சலுகை வழங்கப்படும்.

வயதுக்கட்டுப்பாடின்றி அனைத்து தரப்பினர்களும் இணைந்து கொள்ளலாம்.

கட்டணச் சலுகைவழங்கப்படும் அலகுகள் விண்ணப்பப்படிவத்தில் இணைக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் தமது விருப்பத்திற்கேற்ப ஆகக்குறைந்தது ஒரு அலகு தொடக்கம் ஆகக் கூடியது மூன்று அலகுகள் வரை தெரிவு செய்து கொள்ளலாம்.

இப் புலமைப்பரிசில் திட்டத்தில் இணையவிரும்பும் மாணவர்கள் தங்கள் விண்ணப்பங்களைதபால் மூலமாகவோஅல்லது SMS மூலமாகவோ அல்லது எமது இணையத்தள முகவரி ஊடாகவோ எமக்கு அனுப்பி வைக்கலாம்.

## COURSE DETAILS

### ENGLISH COURSES

**CERTIFICATE COURSES.**
- Certificate in Spoken English
- Certificate in English.

**DIPLOMA COURSES.**
- Diploma in English.
- Diploma in Spoken English.
- Diploma in Business English

**INTERNATIONAL COURSES.**
- IELTS - Academic And General
- City & Guilds (A1 to C2 )
- City & Guilds Young learners Programme.

### IT COURSES.

**CERTIFICATE COURSES.**
- Certificate in MS.Office 2010 .
- Certificate in DTP.
- Certificate in ICT.
- Certificate in web designing .
- Certified in java Programming .
- Certified in vb.net Programming.
- Certified in C# Programming.

**DIPLOMA COURSES.**
- Diploma in Computer Studies.
- Diploma in Hardware & Networking.
- Diploma in Website Design.
- Diploma in Graphic Design.
- Diploma in Accounting Package.
- Diploma in Software development.
- Diploma in Website Development.
- Diploma in 3D Modeling & Animation.
- Diploma in Advance Multimedia.
- Diploma in Computer Programming.

**PROFESSIONAL DIPLOMA COURSES.**
- Professional Diploma in Graphic Design.
- Professional Diploma in Website Development.
- Professional Diploma in Software development.
- Professional Diploma in Computer Hardware.
- Professional Diploma in Networking.
- Professional Diploma in Computer Programming.

**Jaffna-021 7538395 / 021 2227230**

(கி/3032) (6.7.10)

LONDON METROPOLITAN COLLEGE

197,
Arasady Road,
Jaffna.
Between Kantharmadam Junction & Hindu Ladies College

**SCHOLARSHIP APPLICATION FORM**

Full Name : ..........
Address : ..........
Mobile Number : ..........
Home Phone : ..........
Select Courses : ..........


Mailing address :
**No 197, Arasady Road , Kanthermadam, Jaffna .**

SMS அனுப்பும் முறை Full name SPACE Select Courses Names
SMSஅனுப்பவேண்டிய இலக்கம் 0774765990

Web Application : http://www.lmcjaffna.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூட்டுவலி நீக்கும் முடக்கத்தான்!



பொதுவாக வயது ஆக ஆக மூட்டு வலி பெரும்பாலானவர்களுக்கு வந்து விடுகிறது. அதற்குப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. ஆனால் எல்லா வயதினருக்குமே மூட்டுக்களில் ஏற்படும் உபாதைகள் இயல்பான ஒன்றாகி விட்டது. இதற்குக் காரணம் மூட்டுகளில் தங்கிய யூரிக் அமிலம், புரதம், கொழுப்புத் திரட்சி சுண்ணாம்பு, பாஸ்பரம் படிவங்கள்தான்.

இவைகளைத் கரைத்து வெளியேற்றும் சக்தி முடக்கத்தான் கீரைக்கு உண்டு.

சாதாரணமாகக் காய்கறிச் சந்தையில் இந்தக் கீரையும் கிடைக்கும். அதுசரி, இந்த கீரையை வாங்கி வந்து எப்படி சமையலில் பயன்படுத்துவது என்று தானே கேட்க்குறீங்க?

ஒரு நபர் சாப்படும் அளவுக்கு முடக்கத்தான் சாறு எப்படி தயார் செய்வது?

இரண்டு கைப்படி அளவு சிறுசிறு துண்டுகளாக நறுக்கிய முடக்கத்தான் கீரையை எடுத்துக் கொள்ள வேண்டும். தண்டு, இலை எல்லாவற்றையுமே பயன்படுத்தலாம். பூண்டு நான்கு பல், இஞ்சி சின்னத் துண்டு, [illegible] காயம் ஒன்று, மிளகு அரை தேக்கரண்டி, சீரகம் அரை தேக்கரண்டி. இவைகளை ஒரு தேக்கரண்டி சமையல் எண்ணெய் விட்டுவதக்கி எடுக்க வேண்டும்.

பிறகு இரண்டு குவளை நீர் ஊற்றி நன்றாக வேக வைக்கவேண்டும். கீரை நல்லா வெந்து அதன் சாரம் நீரில் இறங்கிய பிறகு வடிகட்டி எடுத்தால், முடக்கத்தான் சாறு தயார். மூட்டுகளில் தங்கிய எல்லா எதிரிகளும் கரைந்து இருந்த இடம் தெரியாமல் ஓடிவிடும்.

முதுகு தண்டுவடம் தேய்மானம் இருப்பவர்கள், மாதவிலக்கு நின்ற பறகு பெண்களுக்கு ஏற்படக் கூடிய எலும்புத் தேய்மானம், எல்லா விதமான மூட்டுவாதம் மூட்டுவலிகளைக் குணப்படுத்தும். இந்த நோய்கள் வருவதற்கு முன்பே சாப்பிட்டால் வராமல் தடுக்கலாம். 40 வயது தொடங்கியவர்கள் தொடர்ந்து சாப்பிட்டு வருவது நல்லது.

இதனைச் சாப்பிடத் தொடங்கும்போது முதல் ஒன்று இரண்டு நாட்களுக்கு சிலருக்கு மலம்பேதி போன்று போகும். ஆனால் பயப்படத் தேவையில்லை. தொடர்ந்து சாப்பிடலாம்.

அப்புறமென்ன ஓடி ஆடலாம். சின்னக் குழந்தை போல் துள்ளிக் குதிக்கலாம். உடனே முடக்கத்தான் கீரை வாங்க கிளம்பீட்டீங்க போல இருக்கு!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூக்கம் குறைந்தால் புற்றுநோய் பெண்களைத் தாக்கும்



பெண்களுக்கு தினமும் 6 மணி நேர தூக்கம் அவசியம். சரியாகத் தூங்கா விட்டால் மார்பக புற்றுநோய் தாக்கும் அபாயம் அதிகம் என்று எச்சரிக்கின்றனர் மருத்துவர்கள். பெண்களின் தூக்கம் குறைவதால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாக அமெரிக்காவின் ஒஹியோ மாநிலத்தில் உள்ள கேஸ் வெஸ்டர்ன் ரிசர்வ் மருத்துவ பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் செரில் தோம்சன் தலைமையில் அண்மையில் ஆய்வு நடத்தப்பட்டது.

மார்பக புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள 40 தொடக்கம்50 வயதுப் பெண்கள் 412 பேரின் மருத்துவ விவரங்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. முக்கியமாக, இரவில் அவர்கள் எவ்வளவு நேரம் தூங்குகின்றனர் என்ற தகவலும் பெறப்பட்டது. ஆய்வில் தெரிய வந்த தகவல் பற்றி செரில் தோம்சன் கூறியதாவது:

பொதுவாகவே, எல்லோருக்கும் தினமும் 6 மணி நேர தூக்கம் அவசியம். வேலைப்பளு, மன உளைச்சல் போன்ற காரணங்களால் பல பெண்கள் போதிய அளவு தூங்குவதில்லை. இரவுத் தூக்கம் 6 மணி நேரத்தைவிட குறைந்தால், எதிர்காலத்தில் பல பாதிப்புகள் ஏற்படும். தூக்கம் சரியாக வராவிட்டால் மருத்துவ பரிசோதனை செய்ய வேண்டியது அவசியம்.

**உடல் எடையை அதிகரிக்க.. சில வழிகள்..**

வெப்ப காலத்தில் உடல் எடை அதிகமாக இருப்பதால், அதனை குறைக்க பலரும் முயற்சி செய்கின்றனர். அதே சமயம், சிலர் என்னதான் உணவுகளை உண்டு உடல் எடையை அதிகரிக்க நினைத்தாலும், எடை மட்டும் கூடாமல் இருக்கும். ஆகவே அவ்வாறு எடையை அதிகரிக்கத் தேவையற்ற ஆரோக்கியமில்லாத உணவுகளை எல்லாம் உண்டால், எடை கூடாது. எடையை அதிகரிக்க அதிக அளவு கலோரி நிறைந்த உணவுகளை உட்கொள்ள வேண்டும். ஏனெனில் சரியான அளவு ஊட்டச்சத்துக்கள், புரோட்டீன், கார்போஹைட்ரேட் மற்றும் கொழுப்புகள் உடலுக்கு கிடைத்தால்தான், விரைவில் உடல் எடையை கூட்ட முடியும்.

புரோட்டீன் அதிகம் இருக்கும் உணவுப் பொருள்களான இறைச்சி, மீன், முட்டை போன்றவற்றை அதிகம் தினமும் உணவில் சேர்த்து வந்தால், உடல் ஆரோக்கியமாக இருப்பதோ, உடல் எடையை அதிகரிக்க நினைப்போருக்கு ஒரு நல்ல வழியாகும். அதிலும் சோயா பொருள்களை அதிகம் சேர்த்துக் கொண்டால் நல்லது

**கார்போஹைட்ரேட்**

ஓட்ஸ் மீல், தானியங்கள், பரட் போன்றவற்றில் கார்போஹைட்ரேட் அதிகம் உள்ளது. மேலும் பழங்களில் மாம்பழம், அப்பிள், செர்ரி, திராட்சை, பீச் போன்றவையும் காய்கறிகளில் கரட், வால் மிளகு, முள்ளங்கி போன்றவையும், பிஸ்தா, சிவப்பு அரிசி உணவுகள், கொண்டக் கடலை போன்றவற்றையும் தினமும் உணவில் சிறிது சாப்பிட்டு வந்தால் உடல் நன்கு இருக்கும். மேலும் உடலுக்கு தினமும் குறைந்தது 40% கார்போஹைட்ரேட் தேவைப்படுகிறது, அதற்கு இந்த உணவுகளை உண்டால், விரைவில் உடல் எடையை அதிகரிக்க முடியும்.

**கொழுப்புகள்**

பாதாம் பருப்பு,ஓலிவ் ஓயில், சூரிய காந்தி எண்ணெய், நல்லெண்ணெய், முந்திரி பருப்பு, வேர் கடலை, வெண்ணெய், பால் போன்ற அனைத்திலும் கொழுப்புகள் அதிகம் நிறைந்துள்ளன. ஆகவே இதற்கான உணவுக்குறைப்பில் இருக்கும் போது, தினமும் உடலில் 10% கொழுப்பு சத்தானது உடலில் சேர வேண்டும். இவை அனைத்துமே ஆரோக்கியமான கொழுப்புகள் தான்.

மேலும் உடல் எடையை அதிகரிக்க அடிக்கடி ஏதேனும் சாப்பிட்டுக் கொண்டிருப்பீர்கள். அவ்வாறு ஏதேனும் ஒன்றை சாப்பிடுவதற்கு, உடலுக்கு ஆரோக்கியத்தை தரும் வகையில் இருக்கும் , அப்பிள், புரொட்டீன் , உருளைக்கிழங்கு சிப்ஸ் போன்றவற்றை சாப்பிடுவது நல்லது. அதிலும் சீஸ் மற்றும் காய்ந்த பழங்களை சாப்பிடுவதும் உடல் எடையை அதிகரிக்கச் செய்யும் உணவுகள் ஆகும். அதுமட்டுமல்லாமல் சொக்லேட்டில் கூட அதிக கலோரிகள் நிறைந்துள்ளன.

ஆகவே இத்தகைய உணவுகளை உண்டால், உடல் எடை அதிகரிப்பதோடு, உடலும் ஆரோக்கியமாக இருக்கும். முக்கியமாக உடனே உடல் எடையை அதிகரிக்க வேண்டும் என்று எதையும் அதிக அளவில் ஒரே நேரத்தில் சாப்பிட்டால், அந்த அமிர்தம் கூட நஞ்சாக மாறிவிடும்.

## பயனுள்ள மருத்துவக் குறிப்புக்கள்

**காலில் பித்தவெடிப்பு மறைய**

காலில் பித்தவெடிப்பா? கவலையை விடுங்கள். தேனையும், சுண்ணாம்பையும் ஒன்றாய்க் குழைத்து பித்தவெடிப்பில் தடவி வந்தால் பித்தவெடிப்பு இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும். தொண்டை வலிக்கு பால் இல்லாத தேநீருடன் கொஞ்சம் எலுமிச்சை சாறு விட்டு குடித்து பாருங்கள் தொண்டை வலி நீங்கு

**இருமல் தொல்லைக்கு**

தூங்கப் போகும் முன் ஒரு கப் சூடான தண்ணீரில் ஒரு கறண்டி உப்பு போட்டு வாயை கொப்பளிக்கவும். இது இருமல் தொல்லையையும் நீக்கும்.

**கண்ணாடி துண்டினால் காயம் ஏற்பட்டால்**

கண்ணாடி துண்டினால் காயம் ஏற்பட்டால் வாழைப்பழத்தோலை அந்த காயத்தின் மீது வைத்துக் காட்டுங்கள். இரத்த போக்கு நின்று காயம் விரைவில் ஆறும். அதற்கு முன் காயத்தை நன்றாக வெதுவெதுப்பான நீரால் கழுவவேண்டும்.

**இருமல் சளிக்கு**

தூதுவளை இலை 15 கிராம் அளவில் சேகரித்து 500 மில்லி தண்ணீரில் போட்டு 200 மில்லியாக காய்ச்சி வடிகட்டி 30 முதல் 40 மில்லி வரை ஒரு நாளைக்கு மூன்று வேளை இந்த கஷாயத்தைச் சாப்பிட்டு வந்தால், இருமல், இரைப்பு, சளியுடன் கூடிய காய்ச்சல், குணமாகும்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org